282

SOUVENIR of the GOLDEN JUBILEE

OF THE
CONGREGATION OF THE
SISTERS OF THE IMMACULATE CONCEPTION,

MADURAI

1911 – 1961

SOUVENIR OF THE GOLDEN JUBILEE

OF

THE CONGREGATION OF THE

SISTERS OF THE IMMACULATE CONCEPTION,

MADURAI

1911 — — 1961

மதுரை

அர்ச். அமலோற்பவமாதா கன்னியர் சபை

பொன் விழா நினைவு மலர்

Qb:65.2195
N64
144423

இம்மலரிலே....

	பக்கம்
நன்றிப் பா ...	4
இவரே நம் திருப் பெரும் குரு! ...	5
பங்குகளின் பரிசு ...	6
Our Archbishop's Message ...	7
Messages ...	10
From the Pereira Family ...	18
அன்னை அமலியின் கன்னியர் குழுவே ...	20
சபையின் வரலாறு ...	22
The Growth of the Congregation ...	28
அமல அவை அலங்காரம் ...	30
Our Congregation ...	31
எமது அன்புத் தந்தை ...	35
Ever Remembered Benefactor ...	38
சபைக் குடும்பம் ...	41
வாழ்த்துகின்றோம்! ...	43
Its Origin and Early Life ...	45
ஞானவான்கள்... பிரகாசிப்பார்கள்! ...	49
சுந்தரி வாழி ...	54
நாற்பத்தோராண்டுகள் நவகன்னியருடன் ...	55
கூரைக் குடிசையும் கொண்டல் தழுவும் மாளிகையும் ...	56
ஓடிவா! உள்ளே தலையை நீட்டிவிடாதே! ...	59
உண்மை நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டு ...	60
சேவையில் உறுதுணை ...	64
நான் கண்ட அமல அவை ...	66
Milestones ...	68
" துள்ளித்திரிகின்ற காலத்திலே " ...	70
ஆண்டவனுக்காக உழைப்பது ஆட்சிபுரிவதிலும் மேல்! ...	72
எம் களிப்பின் காரணமே, வாழி! ...	74
தந்தை ஜே. பிளான்ச்சார்டு, சே. ச. ...	76
எமது வாழ்க்கைத் தீபம் ...	77
Statistics of the Congregation ...	78
சபைப் பாடல் ...	82



பொன் விழா நிகழ்ச்சிகள்

I. முதல் நாள்

பக்கம்

ஆண்டுகள் ஐம்பது கண்ட அரும் சபை ... 83

சின்னஞ் சிறுவர் மத்தியில் ... 85

தலைமை உரை ... 87

II. இரண்டாம் நாள்

Welcome Speech ... 89

போற்றுவோம் பொற்புறு கன்னியரை ... 90

நாட்டுப் பணியில் நமது கன்னியர் ... 93

Presidential Address ... 95

வாழ்த்து இதழ் ... 96

III. மூன்றும் நாள்

இன்னவர் நோக்கமும் இனிய பணியும் ... 98

இல்லற அப்போஸ்தலத்துவத்தில் கன்னியர் பங்கு ... 100

தேவ அழைத்தலைக் கண்காணிப்பது எப்படி ? ... 103

பொன்னுரை ... 105

பாண்டியம்பதியில் பகலொரு மூன்று ... 110

இரு பெரும் கண்காட்சிகள் ... 112

Greetings ... 114

இருதய நிறைவால் நாவு பேசும் ... 115

நன்றிப் பா.



1. என் ஆத் - துமம் ஆண் டவ - ரை மகிமைப் படுத் - - து கின்ற - து

2. என் மீட் பராம் - இறை வனி - டம் என் மனம் மகிழ் கின்ற - து

5. அவ - ருடை ய கிரு பை - யும் தலைமுறை தலைமுறையாய் | அவருக்குப் பயந்து நடப்போர்க் - கே!

6. தன் கரத் தின் வலி - மைகாட் - டி, இருதய சிந்தனையில் | கர்வமுள்ளோரை சித - றடித் - தார்.

9. தம் கிரு பையை நினை - வுகூர்ந் - து தம் தாசராம் இஸ்ராயேலைக் காத் - திட் - டார்.

0. நம் அரும் பிதாப் - பிதாக் க - ளாம் ஆபிரகாமுக்கும் ஊழியுள்ள காலம் | அவரது வித்திற்கும் அவர் தந்த வாக்குறுதி அது - வே - யாம்.

2. — ஆ - தியில் இருந் தது போல் இப்பொழுதும் எப்பொழுதும் | அநாதி சதாகாலமும் இ - ருக்கும் படி - யே. - - - - - - ஆ - மென்

தன் அடி மைத் தாழ் மையி னை அவர் கருணைக் கண் கொண்டதினால் இதோ எல்லாத் தலைமுறைகளும் இனி என்னைப் பாக் கிய - வதி என் - பார்.

என் எ - னில் வல் லப - முள்ளவர் எனக் குப் பெரியன புரிந் தார்; அவர் பெயர் புனி தம் ஆ - ன - தாம்.

வல் லப - மே உள் ளோ - ரை அவர் இருக் கையி - லிருந்து தள்ளி, தாழ்ந் - தோ ரை உயர் த்தி - னார்.

பசித் தே - தான் இருப் பவ - ரை அவர் நன்மைக - ளால் நிரப்பி தனவான்களை வெறுமை - யா - க அனுப்பி - னார்.

பிதா வுக் - கும் சுத னுக் - கும் திவ் - ய இஸ்பிரீத்து சாந்துவுக்கும் - - - - - - தோத் திரம் உண்டா - க!

M. A. T

சமர்ப்பணம்

வெண்தூசே சிரம்மூட மீன்கணமே முடிசூட,
மென்நீலப் படாம்மேவ மிடைகச்சை இடைநால,

மண்தீண்டாத் திருமேனி வாலாடை தான்பொதிய,
வரம்பாயு மிருகரமே சுடர்வீசி விரிந்தியங்க,

விண்மதிதாள் விளங்கவஞ்ச விடநாகம் குதியழுங்க,
புன்முறுவல் இதழரும்ப பொலிகருணை விழிசொரிய,

வெண்ணைமுற மண்ணகமே வாழநிற்கும் எம்மன்னையே !
நின்மலர்த்தாள் இம்மலரை நேர்ந்திட்டோம் ஏற்றருளே!

O MARY CONCEIVED WITHOUT SIN PRAY FOR US WHO HAVE RECOURSE TO THEE





Pope John XXIII



His Excellency

The Most Rev. James Robert Knox,

Archbishop of Melitene & Apostolic Internuncio in India.

"Cordial Felicitations Prayerful Blessings
to Mother General and Community
Happy Occasion Golden Jubilee
Flourishing Religious Family."

His Eminence Valerian Cardinal Gracias,
Archbishop of Bombay.

" I warmly bless the Sisters of your Congregation, and sincerely encourage their educational and apostolic endeavours. "



Our Beloved Pastor, His Grace the Most Rev. Dr. J. P. Leonard S. J.
Archbishop of Madurai

இவரே நம் திருப் பெரும் குரு!
(Ecce Sacerdos Magnus)

இராகம் : சங்கராபரணம்]　　　　[**தாளம் :** ஆதி

எடுப்பு

இவரே நம் திருப் பெரும் குருவாம்!
இறைவன் பணியில் என்றும் சிறந்த　　　　(இவரே)

துணை எடுப்பு

'இனிது வருக!' என்றிசைப் போம்
என்றும் இவரின் ஆசீர் பெறுவோம்　　　　(இவரே)

தொடுப்பு

1. ஆண்டவன் சத்தியம் புரிந் திவர்க்கு
கோத்திரம் தன்னில் மகிமை தந்தார்;
ஆசீரை எல்லா மக்களும் அவர்க்கே
கோதின்றி தரவே உறுதி செய்தார். (2)　　(இவரே)

2. உன்னத குருவாம்; உதவும் நல் ஆயராம்
புண்ணிய மேரு! புலமையி னேறு!
பன்னெடுங் காலம் பரமன் ஆசீரை
பாங்குறச் சிரமதில் தாங்கி நிற்கும். (2)　　(இவரே)

M. A. T.

போதகர் சொல்வாக்கைப் புந்தி பணிந்துகொளல்
நாதனுரை கேட்பதாம் நம்பு. — (லூக்காஸ் 10 : 16)



அர்ச். அமலோற்பவமாதா கன்னியர் சபைக்கு

பங்குகளின் பரிசு

கடுகின் சிறுவிதை கான்மர மாகிப்
பறவை யடையிடமாம் பார். — (மத்தேயு 13 : 32)

ARCHBISHOP'S HOUSE

Madurai—2

My Dear Sisters,

THE Golden Jubilee of your Congregation, while filling your hearts with a holy joy, and a keen sense of gratitude, cannot fail to stir up within you a sincere desire to prove yourselves worthy of your high calling and to realise effectively that noble ideal of personal sanctity and of selfless service which your vocation holds out to you.

1. It is a day of **rejoicing**. There is joy in the thought that you have been called to become in a very real sense "Christ's own,' to join those privileged souls whom He deigns to draw to a life of greater intimacy by the bonds of virginal love.

You belong to those whose destiny it is to form that chosen company of virgins who in heaven attend on the Lamb wherever He goes and sing a new song which none else may learn to sing. (Apoc. 14/1-5).

There is joy also in the thought that even here on earth you are called to live in close communing with the Lord, in His overshadowing Presence. You may well say with the Psalmist: "I rejoiced at the welcome sound, We shall go into the house of the Lord." (Ps. 121, 1) Is not the religious house especially consecrated to the praise and service of God? And should not its inmates find happiness in sharing the same vocation, the same aspirations, the same exercise of devotion, the same works of zeal and charity "How blessed, Lord, are those who dwell in Thy house!" (Ps. 83. 5)

2. It is a day of fervent **thanksgiving**. The joyful realisation of the grace of your vocation will prompt you to return

தேவ வுதவியின்றிச் செய்யவுன் சத்துவத்தால்
ஆவதொன் றில்லை யறி. — (அருளப்பர் 15 : 5)

fervent thanks not only for the initial gift of the religious call, but also for that endless chain of spiritual blessings which the good God has been pleased to lavish on each one of you individually and on the congregation· as a whole. The growth and development of the Institute during the last fifty years must be referred primarily to the Divine Goodness and to the fostering care of Mary Immaculate. In the words of the Psalmist: "Vain is the builder's toil, if the house is not of the Lord's building; vainly the guard keeps watch, if the city has not the Lord for its guardian." (Ps. 126. 1). It is fitting, therefore that your celebrations should centre in a solemn thanksgiving service in honour of the Lord who has been so good to you, and that you should make your own the sentiments of your heavenly Mother in her hymn of praise and gratitude.

"My soul magnifies the Lord; My spirit has found joy in God, Who is my Saviour, because He has looked graciously upon the lowliness of His handmaid...because He who is mighty, He whose name is holy– has wrought for me His wonders." (Luke I. 46-50)

3. A day of **generous resolves**. Gratitude ends in love and love is proved by deeds. The fruit of this celebration on your part, should be a strong resolve to live up to your vocation, by fidelity to the Rules and an earnest striving after religious perfection. You profess to take Mary Immaculate for your patroness, model and guide. True devotion lies in imitating her virtues, her spotless purity, her love and dedication, her spirit of prayer and sacrifice, her humility and obedience, her zeal for men's salvation.

Let then her spirit of consecration and surrender which we find crystallised in those beautiful words of hers "Behold the handmaid of the Lord: let it be done unto me according to thy word" (Luke I. 38) be your inspiration and guidance, your strength and consolation!

Look at her! What did God require of her? Hers to do the holy will of God; Hers to bear and foster the Son of God made

கடவு ளுதவியாற் கைகூடு முன்னால்
முடியாக் கிருத்திய முன். — (மத்தேயு 19 : 26)

Rev. Fr. Augustine Pereira

Founder of the Congregation

OUR BELOVED MOTHER PATRICE

Novice Mistress: 1911 — 1952
Died on 22 June 1952

Pereira family

15—5—61

Pereira family members in Ceylon offer sincerest congratulations on Golden Jubilee. Deeply regret not possible any of us participating celebrations. All of us present with you in spirit join in thanksgiving and begging Almighty continue showering His choicest blessings hereafter always on congregation.

□ □ □

F. X. J. Pereira, Quilon

16—5—61

We send our hearty congratulations and wish you and the whole community many more years of good and fruitful service for the greater glory of God.

□ □ □

Mr. and Mrs. J. M. B. Roche

16—5—61

Our prayerful wishes on the Golden Jubilee of Immaculate Conception Congregation. Congratulations.

□ □ □

Philip and Lily Motha, Colombo

12—5—61

May your work prosper with everyday and may the blessings of God be upon you all.

□ □ □

Stephens, Madras

16—5—61

Wishing the function every success.

□ □ □

R. Emmanuel, D. E. O., Ramnad at Mathurai

10—5—61

I pray God to give full help to celebrate the function in a fitting manner and give a success.

□ □ □

Thyneraj, Manager, Ochanthattu

17—5—61

Wishing the function every success,

உபவாசத் தாலன்றி யோடா சிலபேய்
செபமு மொறுத்தலுஞ் சேர். (மத். 17 : 20)

FROM THE PEREIRA FAMILY

Message to the Mother General and the members of the Congregation of the Sisters of the Immaculate Conception, with their mother house at Madurai, South India, on the occasion of the Golden Jubilee of their foundation.

ON behalf of the Pereira family resident in South India and Ceylon, it gives me much pleasure to address this message of welcome to the Very Revd. Mother General and members of the Congregation of the Sisters of the Immaculate Conception.

Affectionately called the "Blue Nuns" in our family circle, this congregation was started by my maternal grand uncle, the late Revd. Father Augustin Pereira of affectionate and revered memory, fifty years ago, at Panjampatty, which was the main seat of his life's activities. Unfortunately, Father Augustine did not live long enough to see the fruits of his labours in founding this congregation, as he died soon after in October, 1911.

Thereafter, the Pereira family, headed by my deceased father, Chevalier I. X. Pereira, continued to foster and nurture this infant congregation, along with the help of several Bishops, priests and nuns, most of whom have now gone to their eternal reward. My father was fully helped in this task by his four brothers, and today the present generation of Pereiras endeavour their utmost to continue their patronage by helping and supporting this congregation to the best of their ability.

From very small beginnings fifty years ago, the congregation has since then been recognized by the Holy See, and today, if I am not mistaken, is flourishing in no less than three Dioceses, viz: Madurai, Trichinopoly and Tuticorin, with 52 houses and a total complement of 452 nuns. I understand they conduct 2 High Schools, 29 Higher Elementary Schools and a Training School. All this is no mean achievement. My authority for these figures is a booklet published in 1957, and since then I am aware their numbers have increased, including a new Novice House opened in January this year. Verily the mustard seed has grown. Witness the magnificent pile of imposing buildings at the mother house and at St. Theresa's Convent.

Thanks be to God and His Blessed Mother, the congregation today attracts increasing vocations from all classes of life and communities, and had several Graduates, besides nuns trained in teaching as well as in the fine arts.

Those grand souls who are no more present with us today and have gone to their reward and were pillars of

A lamp can never light another lamp unless it continues to burn its own flame.



Mr. J. Augustine Pereira
Mr. Timothey Pereira
Mr. Ignatius Xavier Pereira
Mr. Louis Pereira
R. Gomez Pereira



Pereira's Family

strength to this congregation, that I am personally aware of, are names like Fathers Planchard and G. J. Gomez, and the Novice Mistress Mother Patrice, besides veteran nuns of the congregation like Mother Augustine Marie, who was I believe one of the very first to be enrolled by Father Augustine himself. These great souls and others, are being fittingly remembered on the second day of our celebrations, at a Requiem Mass by His Excellency the Bishop of Tiruchirapalli.

To the Pereira family which has been so closely identified and associated with the congregation for the last fifty years, it is indeed a source of great consolation, pride and happiness, that on the occasion of the Golden Jubilee, the good Revd. Mother General is commemorating this red letter day in their annals, by the opening of the "Revd. Father Augustine Cottage Industries", where I understand there will be a small printing press, including book-binding and the manufacture of slate pencils. I have not the slightest doubt that the opening of this institution will fulfil a longfelt need and be of considerable help to many in the Dioceses of Madurai, Trichinopoly and Tuticorin, to whom the Blue Nuns have brought not only the precious gift of faith, but also a sound elementary and high school education.

It will be a serious dereliction of duty on my part if I do not make use of this occasion to pay a well deserved tribute to the Very Revd. Mother General and her assistant, Mother Sophie, who are responsible to a great extent for the present flourishing and efficient state of the congregation. I know how hard these two in particular, as well as many others, have worked recently in order to celebrate the Golden Jubilee in this fitting manner.

The Pereira family is united with the congregation in offering thanks to the Almighty for this great blessing of fifty golden years, and pray that this congregation now well in its stride, may long continue to flourish with increased laurels in all the years to come, with the help of a Merciful Providence and the blessing of Our Heavenly Mother under whose special protection they are.

It is most disappointing for me not to have been able to participate in this celebration personally, but this has been due to circumstances over which I have had no control. I am however determined during this Golden Jubilee Year to make a visit to the mother house in Madurai and offer my own good wishes and that of the Pereira family to the Blue Nuns in person.

Long live the Congregation of the Nuns of the Immaculate Conception and God's blessings be always with them in abundance.

Glory follows those who flee from it, and flees from those who persue it. God brings down insolent pride but raises humility to glory.

— *St. Hillary*

அன்னை அமலியின் கன்னியர் குழுவே!

மன்னும் புகழ்மிகு முத்தமிழ் வளர்க்கும்
தென்னவன் பதியாம் மதுரையைத் தேர்ந்தே
அன்னை அமலியின் எழிற்கர அணைப்பில்
உன்னத சேசுவின் ஒப்பிலாப் பணியை,
உலகினில் தோன்றிய வாழ்க்கையின் உயர்ந்த
இலக்கெனக் கொண்ட கன்னியர் குழுவே!
தண்டமிழ் மணக்குந் தரையெலாஞ் சேசுவின்
வெண்குடை பறக்க வேட்கை மேவிட,
அமலோற் பவசபை ஆங்காங்கு நிறுவி,
அவளொரு புதல்வனின் அருட்கொடி யேந்தி,
புனிதமே பிறர்பணி யனைத்தின் வித்தென
இனிதுற உணர்ந்து தம்மையே திருத்தி,
இந்த உலகின் மக்களின் கதியைச்
சந்தத மூங்கள் தலைமேற் கொண்டு,
தம்மையே ஒறுத்துத் தரணிக்கு மரித்து,
செம்மையில் நடந்து செபங்கடைப் பிடித்தே,
உம்மையாட் கொண்ட உம்பர்கோன் வழியை
அன்புறப் பிணித்து, மனத்தில் வினையில்,
புனிதம் என்னுமோர் புதுமலர் சிரிக்க
நனியுடை சேவைபல் நாளும் இயற்றுவீர்.

முந்தினர் பிந்தினர் பிந்தினர் முந்தினராய்
அந்தநா ளாவ ரதி. (19:30)

ஆரே அறியார் ஆற்றுநற் சேவையை ?
ஆரே அளியார் அகம்நிறை நன்றியை ?
காரும் வெட்கிடக் கருணைபல் லாற்றுவீர் ;
பாருங் கண்டவை பரவசம் எய்திடும்.
அன்பும் பண்பும் அறிவும் ஞானமும்
இன்பநற் குணங்கள் யாவு மிலங்கிடக்
கல்விச் சாலையிற் கலைகளைத் தருவீர் ;
நல்லதோர் வழியில் நங்கையர் நடந்திட
உயர்தரப் பள்ளிகள், உட்பிள்ளை மடங்கள்,
செயலறி வீந்திட சிறுகைத் தொழில்கள் ;
கல்லா மாதர், கருத்திலாச் சிறுவர்,
பொல்லா வழியினர், புன்மையி லுழல்வோர்
வறியர், முதியர், வாழ்விலா மகளிர்
அறிந்து நாடி அமலனை நண்ணிட,
மோனம் செபமுறை இன்மொழி வாயிலாய்
ஞானம் உரைத்து நல்வழி காட்டுதிர்.
குறுமொழி பேசும் சிறுபா லகரும்
இறைவன் சேசுவை இதயத் தேந்திட
என்று மவருளம் இதழ்விரி மலராய்
நன்றே விளங்கிட ஆவன நல்குதீர்.

மன்னவன் சேசுவும் உம்மிடை மகிழ்ந்திட,
அன்னவன் தாயும் அகங்களிப் புறுகிருள் ;
விண்ணவர் வாழ்த்துவர், மென்மலர்க் கோதைகாள் !
மண்ணவர் புகழுவர் வழுத்தியுஞ் செயல்களை ;
இருணிறை உலகில் ஒளிர்ந்திடும் விளக்காய்
உருண்டன ஐம்பான் ஆண்டுகள் பணியில்
நீல வானிடை நீந்திடும் மீன்களாய்
ஓல மொழியாத் துன்ப உலகினில்
தண்டமிழ் நாட்டிலும் தாரணி முழுவதும்
மண்டிடச் சேசுவின் மாண்புயர் பெயரைக்
கொண்டே ஏகுவீர், கன்னியர் குழுவே,
தண்மதி மிதித்த தாயவள் நிழலில் !

மறைத்திரு பிரான்சிஸ் முருயிஸ், சே. ச.
பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல்.

சபையின் வரலாறு

'அமல உற்பவமாதா சபை' என அரும் பெயர் கொண்டிலங்கும் எம் சபையின் தோற்றமும், வளர்ச்சியும் அந்நாள் முதல் இந்நாள் வரை பல சேசு சபைக் குருக்களின் ஆர்வமிக்க உதவியையும் ஒத்துழைப்பையும் கொண்டது. எனினும், தொடக்க முதல் முழுப் பொறுப்புடன் பங்கு கொண்டவர் மதிப்பிற்குரிய மறைத்திரு அகுஸ்தீன் பெரைரா அவர்கள்.

1890-99—வித்து உருவாதல்: தமிழக வரலாற்றில் அக்காலத்திலேயே சிறப்பிடம் பெற்றது திண்டுக்கல். இதையடுத்து சுமார் 5 கல் தொலைவில் தென் மேற்கில், இயற்கை வனப்பின் சூழ்நிலையில் அமைந்திருப்பது, பஞ்சம்பட்டி எனும் கிராமம். இக்காலை இஃது ஒரு பேரூராகக் காட்சி அளிப்பினும், சபை வரலாறு தொடங்கும் அக்காலை அது ஒரு சிற்றூரே. அவண், கனம் அகுஸ்தீன் சுவாமியவர்கள் (இன்னும் குருப்பட்டம் பெறாதவர்) ஆத்தும ஈடேற்ற ஆவலால் ஒரு சந்நியாசியாக வாழ்ந்து, பங்குக்குரு கனம் சேசு சபை ஜூலியட் லார்மி என்பவருக்கு அப்போஸ்தல அலுவலில் வலதுகரம்போல் நின்று, செயலாற்றி வந்தார். அகுஸ்தீனரை நன்கறிந்த லார்மி சுவாமியார், அவரைக் குருத்துவப் பதவிக்கு உருவாக்கி வந்தார். இந்த அகுஸ்தீன் சந்நியாசியாரின் சாதனையோடு கூடிய போதனையைச் செவியுற்ற அப்பங்கு மாந்தரில் நான்கு பெண்மணிகள், குறிப்பிட வேண்டியவர்— அன்னம்மாள், சவரியம்மாள், வியாகம்மாள், விசுவாசத்தம்மாள். புனித ஆஞ்சலாவின் சரிதையை இச்சந்நியாசியாரின் வாயிலாகக் கேட்ட இவர்கள், இல்லறத்தில் ஈடுபடாது கன்னிப் பெண்களாய் வாழத் திட்டமிட்டனர். இத்திட்டத்தைத் தம் ஞானத்தந்தை லார்மி சுவாமிகளிடமும், அந்த அருங்குணச் சந்நியாசியாரிடமும் வெளியிட்டு அகுஸ்தீனர் தங்களுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்கவும் கேட்டனர்.

1899—வித்து பரிபக்குவம் அடைதல்: தேவ குரல் அவர்களை அழைக்கிறதென்பதை பங்குக் குருவும் சந்நியாசியாரும், உணர்ந்தனர். அகுஸ்தீன் சந்நியாசியார் பங்குக் குருவின் ஆலோசனைப்படி அப்பெண்களை இறைவனின் இனிய அழைப்பிற்குத் தயார் செய்வதில் ஈடுபட்டார். இதற்கிடையில் உலகப் போக்கிற்கு மாறான இத்திட்டத்திற்கு எதிராக, இவர்கள் பெற்றோர் கொதித்தெழுந்தது மட்டுமல்ல, அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய இம்மை உதவிகளை அளிக்கவும் மறுத்து விட்டனர், தேவ பராமரிப்பின் வழியை யாரே அறிவர்? இறைவனுக்காகத் தம்மை மறப்பவரை, இறைவன் மறப்பரோ? அகுஸ்தீன் அண்ணல் தனம் படைத்த குடும்பத்தினர். தமது குடும்பத்தின் உதவியால் இந்நால்வருக்கென ஓர் இல்லத்தை வாங்கி '**அமலோற்பவியின் இல்லம்**' எனப் பெயரிட்டு, அதற்கோர் சுற்றடைப்பும் அமைத்து, அதை ஒரு சிறு மடமாக்கினர். ஞானக்கல்வி மட்டுமல்ல, அவர்கள் பணிக்கு வேண்டிய ஏட்டுக்கல்வியையும் இவ் அகுஸ்தீன் அண்ணல் கற்றுக்கொடுத்தார். இளஞ்சிறார்களுக்கு ஏட்டுக் கல்வி கற்பிப்பதோடு, ஞான உபதேசம் கற்பித்தல், தேவதிரவிய அனுமானங்களுக்கு மக்களைத் தயாரித்தல், சுற்றுக்கிராமங்களுக்குச் சென்று வியாதிக்காரரைச் சந்தித்து, மருந்து கொடுத்து, மரணத் தருவாயிலிருப்பவர்களுக்கு ஞான உதவி புரிதல், ஆகியவைகளை இவர்கள் தம் பணிகளாக ஏற்றுச் செய்தனர்.

சித்தந் திருத்திச் சிறுவர்போ லாகார்வான்
முத்தி யடையாரா முன். (மத். 18 : 3)



'அமலோற்பவியின் இல்லம்'
2 பெப்ரவரி 1899

சபையின் முதல் கனிகள்



சகோதரி அகுஸ்தீன்மரி (+8—6—1960)
சகோதரி லூயிஸ்மரி (இன்றைய ஜூபிலி நாயகி)
சகோதரி கத்ரீன்மரி (+19—4—1943)
சகோதரி சேவியர்மரி (+27—10—1944)
சகோதரி தெரஸ்மரி (+9—1—1950)
சகோதரி ரோஸ்மரி } நவ சங்நியாசத்திலேயே
சகோதரி யாகம்மாள்மரி } மரித்தனர்.

அக்கனிகளை உருவாக்கிய
நவகன்னியர் இல்லம்

பெரைரா குடும்பத்தின் மற்றொரு
அன்புச்சின்னம்

ஆண்டவருடைய பேருபகாரங்களை என்றும் நினைவு பூண்டு அவர் நமக்குப் பொழிந்த திரளான நன்மைகளுக்காக அவருக்கு துதிபாடுவோம் — இசை 63 : 7.

ஜூபிலி

நாயகி

சகோதரி லூயிஸ்மேரி
2 ஜூலை 1911

ஞான

உபதேசப்



பயிற்சி

முகாம்

10, 11, 12, மே 1960.

பொன்னையும் வெள்ளியையும்விட மேலானது பயனுள்ள யோசனை—சர்வ-40:25

தங்கள் வாழ்க்கைக்கு உதவி அளிக்கக்கூடிய சில சிறு தொழில்களையும் மேற்கொண்டனர்.

வித்து முளைத்தல்–1899 பெப். 2-ம் நாள் மாதா வின் சுத்திகரத் திருநாள், சபை வரலாற்று ஏட்டில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள். கனம் லார்மி சுவாமிகள் ஏற்பாட்டின்படி அந்நால்வரும் ஏனைய பெண்கள் போல, ஆனால் வெண்ணிறச் சேலை உடுத்து, எரியும் திரிகளைக் கரத்தேந்தி, கிராம மக்கள் புடை சூழ அச்சிறிய மடத்தினின்றும் ஊரின் பெரும் தெருக்களினூடு பவனி சென்று, கோவிலை யடைந்து, பீடத்தின் முன்னிலையில் தம்மை முற்றும் இறைவனுக்கு வாக்களித்து நேர்ந்தனர். இன்று முதல் அந்நால்வரும் '**அமலோற்பவ மாதா சபைச் சகோதரிகள்**' என அழைக்கப்பட்டனர். புனித ஆஞ்சலாவின் ஒழுங்குத் திட்டங்களையே, இவர்கள் தமதாகக் கடைப்பிடித்தனர். வியாகம்மாள் நால்வரில் தலைவியாக நியமிக்கப்பட்டாள்.

1900 ஜனவரி 14-ம் தேதி அந்நால்வருக்கும் மற்றுமோர் நன்னாள். உத்தம சந்நியாசி அகுஸ்தீன் அண்ணல், நித்திய தேவனின் உத்தம குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். சபையின் முதல் சுவிசேடர் நால்வரும் தூத்துக்குடி மாநகரில் நடைபெறும் தம் தந்தையின் புனித நாள் வைபவத்தில் கலந்து கொள்ள, அவண் சென்று மீண்டனர். இந்நாள் வரை, கனம் லார்மி சுவாமியவர்களின் உதவியுடன், இச்சிறு குழுவை நடத்திய சுவாமி அகுஸ்தீனர், இது முதல் இம்முளையை வளர்ச்சியுறச் செய்யும் முழுப்பொறுப்பையும் பெற்றார். தங்கள் அன்றாடப் பணியால் தம் வாழ்விற்கு வேண்டியவைகளைச் சேர்த்தனர். ஏனையவர் போல் இவ் அலுவலிலே மிகு கவனம் செலுத்தின், சபை ஏற்பட்ட நோக்கம் பாதிக்கப்படும் என்று கருதிய அகுஸ்தீன் சுவாமிகள், தம் குடும்பத்திற்கோர் வேண்டுகோள் விடுத்தார். சுவாமியின் சகோதரர் திரு. F. X. பெரைராவால் அன்னவருக்கென 'கல்லடிப்பட்டி' என்னும் கிராமத்தில் சில ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கி உரிமை செய்யப்பட்டது. இம்மட்டோடு நில்லாது, கன்னியரின் நலன் கருதி, இவ்வுதவி தொடர்ந்து நடைபெறுமாறு மாதா மாதம் சிறு தொகை கொடுக்கவும் ஏற்பாடு செய்தார். இத்திட்டம் இற்றை நாள் வரையில் குடும்பப் பொருளாதார நிலை, என்னதான் ஏற்றமும் இறக்கமும் காட்டினும், இடையறாது நடந்து கொண்டிருக்கிறது. பள்ளிகளின் மூலமும் நோக்கத்தைச் சிறப்புடன் நடத்த எண்ணி, மேற்கூறியவரில் இருவரை திருச்சினாப்பள்ளி அனுப்பிப் போதனாமுறை பயிலச் செய்து வெற்றியும் கண்டார். அவர்கள் பஞ்சைப்பதி திரும்பியவுடன், உபாத்திமாருடன் சேர்ந்து அங்குள்ள தொடக்கப் பள்ளியில் கல்விப்பணியும் புரிந்தனர். ஓய்வு நேரங்களிலும், விடுமுறையிலும் ஞானப்பணி ஆற்ற சுற்றுக்கிராமங்கள் சென்று மீண்டனர்.

27-5-1909—முளை தளிர் விடுதல்: இந்நால்வருடன் வேறு சில பெண்களும் கன்னி வாழ்வுக்குத் தம்மை நேர்ந்தனர். பஞ்சையிலிருந்து சுமார் 12 மைலில் உள்ள சிலுக்குவார்பட்டியில் ஒரு கிளை மடம் தோன்றியது. சகோதரி அன்னம்மாள் தலைமையில் வேறு மூவர் அவண் பணியாற்றத் தொடங்கினர். இவ்வருடம் மதுரை மிஷனைச் சந்தித்து விசாரணை செய்த பாப்பரசரின் பிரதிநிதி, பஞ்சம்பட்டியில் முளைத்த இச்சிறு குழுவையும், அதன் சேவைகளையும் கண்டு மகிழ்ந்தார், ஆசீரளித்தார், பாப்பரசரிடம் இவர்களைப்பற்றிப் பேசுவதாகவும் கூறிச் சென்றார். வாக்கின்படியே தந்தை **10-ம் பத்திநாதர் பாப்பரசரிடம்** இப்புதிய சபையைப்பற்றித் தெரிவிக்க, அவரும் மனமுவந்து ஆசிக் கடிதம் ஒன்று வரைந்தனுப்பினர்.

2-7-1911 — முளை ஆணிவேர் விட்டு வளர்ச்சியுறல்: 1906-ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டினின்றும் வந்து, மதுரையம்பதியில் மடத்தை

சிலுவை தனைச்சுமந்து சேசைப்பின் செல்லார்
வலவற் கினியரல வாம். (10 : 30)

நிறுவிப் பணியாற்றி வந்தனர், புனித சூசை யப்பர் சபைக் கன்னியர். இவர்களில் ஒருவர் சகோதரி ரதுகோந்த், தமது சபையின் வளர்ச்சியிலும், செழிப்பிலும் குறிக்கொண்ட மறைத்திரு அகுஸ்தீன் தந்தை, மேற்படி அமலோற்பவ மாதா சபையினரில் 7 பேரைத் தேர்ந்தெடுத்து, மதுரைக்கு அழைத்து வந்து ரதுகோந்த் தாயார் பொறுப்பில் நவசந்நியாசம் மேற்கொள்ளச் செய்தார். ஒரு சில மாதங்களில் நவகன்னியர் விசாரணைத் தாயார் சுகவீனப்பட, சபையை நாளொரு மேனியும், நாழிகைக்கோர் வண்ணமுமாக சுமார் 41 ஆண்டுகள் வளர்த்த அருமை அன்னை பத்ரீஸ் நவகன்னியர் விசாரணையை ஏற்றார்.

கன்றுக்கோர் சூருவளி: ஜூலை மாதம் மதுரை சென்று மீண்ட அகுஸ்தீன் தந்தை, அதே ஆண்டு 21-10-1911-ல் அமலோற்பவ மாதாவுக்கு நேர்முகச் செய்தி கூற விண்ணுலகுக்குப் பறந்தார். மக்கள் கொண்ட துயரை நாம் மனத்தாலும் உணர்தல் கடினமே. சான்று வேண்டுமோ? சில திங்களில் நவ கன்னியரில் இருவரும் தந்தையைக் காண விண் பறந்தனர். அவர் மறைந்தாலும் புலனுக்கெட்டா வகையில் உடனிருந்து பணியாற்றுகின்றார் இற்றைவரையில். இறைவனது வழிகள் இப்படித்தானே. நேருக்குநேர் காணும் விண்ணவரிடம் ஒளிந்து விளையாடுதல் கூடாது. ஆதலின் ஊனக்கண்ணும் கொண்ட நம்மிடையன்றி எவரிடம்தான் கண்டொளித்தல் கூடும்? 1904 முதல் அவ்வமயம் பஞ்சம்பட்டியில் பங்குக் குருவாயிருந்தவர் சேசு சபை நெஸ்புளூஸ் சுவாமிகள். இதுவரை பங்குக் குரு என்ற முறையில் கண்பார்வை செலுத்திய இவர், இப்போது சபையின் முழுப் பொறுப்பையும் தாங்கி, அதனை உறுதிப்படுத்தி வளர்ச்சியுறச் செய்வதில் இணையிலாக் கரிசனையும் உழைப்பும் கொடுத்து உற்ற தந்தையானார்.

8-9-1913—கன்னியர் ஐவரும் மதுரையில் மூன்று வார்த்தைப்பாடுகள் நேர்ந்து பஞ்சம்பட்டி திரும்பினர். இவ்வாண்டே திருச்சியில் ஆயராயிருந்த வந். பார்த் ஆண்டகை அவர்களால் அமலோற்பவ மாதா சபை அங்கீகரிக்கப்பட்டு, முக்கிய ஒழுங்குகளை மட்டிலும் அடக்கிய, ஒரு சிறு ஒழுங்குப் புத்தகமும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.

1914—இளங்கன்றின் எழிலும் செழுமையும்: முறைப்படி நவசந்நியாசம் பயின்ற ஐவருள் ஒருவரான அகுஸ்தீன் மரி என்பாரே அதிசிரேஷ்டத் தாயாராகப் பதவி ஏற்றார். கால நீட்சியில் இவரது பதவிக்காலம் 23 ஆண்டுகள் எனின் அவரது குணசீலத்திற்குப் பிற சான்றுகள்? இவ்வமயம் திருச்சி மாவட்ட சிரேஷ்ட குருவாயிருந்த சேசுசபை கோரியாக் சுவாமிகளின் தூண்டுதல்படி மங்கிய செந்நிறத்தில் ஒரே வகையான சேலையுடுத்தினர். சபை நாயகி அன்னை அமலோற்பவியின் விழா (டிசம்பர் 8) முதல் முறை வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப்பட்டது. கன்னியர் அனைவரும் மதுரைக்கு வந்து 8 நாள் தியான ஒடுக்கம் செய்து திரும்பினர். இந்நாள் வரையில் அவ்வழக்கம் நடைமுறையில் இருப்பினும், சபையின் வளர்ச்சிக்கேற்ப இட வசதியையும், பள்ளி ஆண்டுக்கு ஏற்ப அலுவல் பரிமாற்றத்தையும் சமாளிக்க கிளை மடங்கள் எல்லாம் ஒன்று கூடுதல் மே மாதத்தில் இடம் பெறுகிறது.

1917—கனம் நெஸ்புளூஸ் அடிகளுக்குப் பதில் கனம் அந்தோனி பெர்னாண்டஸ் பங்குக் குருவாகப் பணியாற்றினார். கனம் பெர்னெதெத் மரித் தாயார் 29-7-1917-ல் இரண்டாவது அதிசிரேஷ்டராகப் பதவி ஏற்றார். சபை வளர்ச்சிக்கு ஏற்ப பஞ்சம்பட்டி மடம் தன் பரப்பிலும், கட்டட அமைப்பிலும், விரிந்து அருகிலேயே ஒரு தோட்டத்தையும் வாங்கி இணைத்தது. அம்மட்டோ, மடத்தின் சிறிய கோவிலிலே நற்கருணை நாதரும் உடனுறையக் கருணை கூர்ந்தார்.

ஏரினும் வைத்து பின் விட்டவன் வானுலகு
சேர வுரியனல செப்பு (8:62)

Mother Augustine
1914 — 1917
1924 — 1940

Mother Bernadette
1918 — 1923

OUR MOTHER GENERALS

Mother Sophie
1941 — 1952

Mother Helena
1953

கடுகு மணியின்

அன்றும்

' அது முளைத்து...



இச்சிறியோரில் ஒருவனுகிலும்
பரமண்டலங்களிலிருக்கிற உங்கள்

...வளர்ந்து



உவமையைக் காண்பீர் !

இன்றும்

சேதமாய்ப் போகும்படி
பிதாவிற்குச் சித்தமில்லை. (மத். 18 : 16)



...செழித்துத்

...தழைத்தது'

இவர்களைப் பார்ப்பவர்கள் எல்லோரும் ஆண்டவர் ஆசீர்வதித்த சந்ததி இவர்கள்தான் என அறிந்துகொள்வார்கள். (இசை. 61 : 9.)

Mother Patrice
1911 — 1952

Mother Anne Florence
1953—1956

Mother Sesuvin Rita
1956—

OUR
NOVICE MISTRESSES

The Novitiate — "Loretto House"

3-1-1922—முதன்முதலாக சபைக் கன்னியர் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்கும் வைபவம் பஞ்சம்பட்டியில் நிறைவேறியது. அவ்வமயம் **வந். பிரான்சிஸ் திபூர்ஸியுஸ்** ஆண்டகையே அதனை நடத்தி வைத்தவர். 8-12-1921-ல் **வந். அகுஸ்தின் பெசாந்தியர்** ஆண்டகையின் முகவுரை தாங்கி அங்கீகாரம் பெற்ற முழு ஒழுங்குகளும் அமைந்த **ஒழுங்குப் பிரதி** இச் சமயம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டது.

23-12-1923—சிறு கன்று தன் செழுங் கிளை நிழலைத் **தமிழ் நாட்டின் பிற பகுதிகளிலும் பரப்புதல்**—சபையின் தாய்மடம் மதுரைக்கு மாற்றப் பெற்று அர்ச். வியாகுலமாதா பங்குக் கோவில் அருகில் கீழ வாசலில் இடம் பெற்றது. இச்சமயம் மதுரை மாவட்ட விசாரணைக் குருவாயிருந்த சேசு சபை கனம் **ஜாலி சுவாமிகளே** சபையின் இயக்குநராக அமர்ந்தார். அகுஸ்தீன் தாயார் மறுமுறை அதிசிரேஷ்டத் தாயாராகப் பதவி ஏற்று 1940 வரை பணியாற்றினார். புனித வியாகுல அன்னை கோவில் பங்குக் குரு சேசு சபை கனம் G. கோமஸ் சுவாமி அவர்களது என்றும் நினைக்கத்தகும் இணையில்லாப் பேருதவியும் ஒன்று கூடியது. மறுவருடமே கொசவபாளைய சாலையில் தற்போதுள்ள இடத்திற்குத் தாய் மடம் மாறியது.

1924—மக்களோடு வேறுபாடின்றி ஊடாடி நலம் புரியவே சாதாரணப் பெண்கள்போல, ஆனால் ஒரே நிறத்தில் சேலை அணிந்திருந்தனர். எனினும் உலகத்தைத் துறந்தவர் என்பதைப் பிரித்துக் காட்டும் முகத்தான், முக்காடிடுதல் நலமெனக் கருதப்பட்டதால், வந். அகுஸ்தீன் ஆண்டகையின் ஆலோசனையுடனும், அனுமதியுடனும் கன்னியருக்குரிய முறையில், சேலையின் நிறத்திலேயே தகுந்தவகையில் முக்காடும் (Veil) அணிந்தனர். இதே வருடம் போதனை முறை கற்பவரை சபைக்காக உருவாக்கும் நோக்கத்தால், திருச்சியில் **"நசரேத்"** மடம் என்ற பெயரில் ஒருசிறு இல்லிடம வந். ஆண்டகை அவர்களால் கொடுக்கப்பட்டு, 1947வரை சபைக் கன்னியர் பாதுகாப்பில் இப்பணி நடந்தது.

5-7-1930 பிணியுற்றோர்க்குத் தனி இடம்-நோய்வாய்ப்படும் சகோதரிகட்கு வசதியளிக்கக் கருணை உள்ளங்கொண்ட தந்தை சேசு சபை கனம் கோமஸ் சுவாமிகள் உதவியால், மதுரையின் வடக்கே கோசாகுளத்தில் (லூர்துநகர்) லூர்தன்னையின் திருத்தலத்தின் அருகே, ஒரு விடுதி அமைக்கப்பட்டது.

1932—கன்றின் செழுமையில் கவினுறு மறுமலர்ச்சி—உலகம் வாயு வேகத்தில முன்னேறுகிறது. பொதுப்படக் கூறின் வெளிக் கவர்ச்சியும் பலரால், குறிப்பாய் படிப்பில் உயர்வு பெற்றோரால் வேண்டப்படுகிறது. ஆதலின் காலத்திற்கு ஏற்க கன்றுச் சபை நன்மை புரிந்து வளர்ச்சியுற, உடை மாற்றம் தேவை என்பது பல பெரியோரால் கருதப்பட்டது. இக்காலை சபை இயக்குநராயிருந்த, காலம் சென்ற சேசு சபை **சுவாமி ஜோசப் குயினி** அவர்கள், இதை மிகுதியும் உணர்ந்தாரில் ஒருவர். மதுரையை விட்டு நீங்கியபின்னும், மரணம் வரையில் சபை வளர்ச்சியில் சளையா முயற்சியும் ஆர்வமும் கொண்டிருந்த மேதை. இவரது முழு முயற்சியாலும் ஒத்துழைப்பாலும், ஆண்டகை அனுமதியுடன் அமல அன்னையின் அருஞ்சின்னங்களில் ஒன்றான கண் கவரும் **விண் நீல உடையை 8-12-1932-ல்** அனைவரும் அணிந்தனர். அன்று வானகமும் வாய் திறந்து நின்றது, மற்றோர் வானகம் மண்ணகத்தில் தோன்றியது கண்டு. கூறுவானேன், கருதியபடியே பட்டதாரிகளும் படித்த மேதைகளும் கூட்டங்கூட்டமாகச் சபையின் அங்கங்களாயினர்.

1941—தந்தையன்புமட்டுமல்ல, தாயன்பும் விளங்க சபை இயக்குநராய் சபையின் வளர்ச்சியிலும், முற்போக்கிலும் பெருங்கவலை கொண்டு

அருஞ்செயல்கள் புரிந்த **சுவாமி, அமலோற்பவம் சேசு சபை** அவர்கள் சடுதியில் மறைந்தார். உலகமே கோர யுத்த விளையாட்டில் திளைத்து நின்றது. வந்தார் வைர நெஞ்சமும் வாஞ்சையும் கொண்ட இயக்குநர் ஒருவர் இரண்டாம் முறை. சபை ஒழுங்குகளில் மற்றும் சில சேர்த்து பரிசுத்த பிதாவுக்கு அனுப்பி அவரது அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதில் முனைந்து நின்று வெற்றி கண்டார். அவர்தான் **சேசு சபைகனம் J. பிளாஞ்சார்டு சுவாமிகள்.** உயிர் பிரியும் வரை மட்டுமல்ல, இன்றும் சபையுடன் உறவு கொண்டு உதவி புரிகின்றார் இவர்.

1942—பரிசுத்த தந்தை **12-ம் பத்திநாதரின்** அங்கீகாரம் பெற்ற எம் சபைத் திரு ஒழுங்குகள், எமது அன்புத் தந்தையும் அதி சிறந்த பரிபாலகருமான மிக வந். J. P. லெயோனார்டு சே. ச. அதிமேற்றிராணியார் ஆண்டகை அவர்களின், வார்த்தைக்கு வார்த்தை கருத்து வனப்புச் செறியும் முன்னுரை ஏந்தி, இரண்டாம் முறையாக அச்சேறி மலர்ந்தது.

1947—நீண்ட நாட்களாக சபை மிக ஆர்வத்தோடும், ஏக்கத்தோடும் எதிர்பார்த்த போதனாமுறைப் பள்ளி யொன்று "**புனித தெரெசாள் போதனாமுறைப் பள்ளி**" எனும் பெயருடன் தாய் மட வளாகத்திலேயே தொடங்கப்பட்டது.

1950—போதனா முறைப் பள்ளியில் செக்கண்டரி கிரேடு பகுதியும் இடம் பெற்றது. இட நெருக்கடி அதிகம். இடையறா வேண்டுதல் வான் கதவைத் தட்டியது. அமல அன்னை சுட்டிக் காட்டினாள். தாயகத்தின் கிழக்கே, சிறந்த வசதிகளும், பரந்த இடமும் கொண்டு இராமநாதபுரம் சாலையில் நின்ற ஜமீன்தார் மாளிகையை, அன்னையின் உதவியாலேயே பெருந்தொகையில் அம்மாளிகை சபைக்கு உரிமையாக்கப்பட்டது. மறு ஆண்டே போதனாமுறைப் பள்ளியும், பாத்திமா தொடக்கப் பள்ளியும், தெரெசாள் மடம் எனப்படும் அம்மாளிகையில் இடம் பெற்றன. தொடங்கின ஆண்டு முதல் இந்நாள் வரை, பெரும்பாலும் நூற்றுக்கு நூறு இன்றேல் 98 விழுக்காடு என்ற விகிதத்திலேயே தேர்ச்சி காணுகின்றது எம் போதனாமுறைப் பள்ளி.

1954—அமல அன்னையின் நூற்றாண்டு அமலோற்பவமாதா சபைக்கும் ஒரு சிறப்பான ஆண்டு. முதல் முறையாக அமலோற்பவ மாதா சபையின் வரலாற்றுச் சிறு நூல் ஒன்று "**அமல அவைக் கன்னியர்**" என்ற பெயருடன் மலர்ந்து **அன்னைக்குச்** சமர்ப்பணமாக்கப்பட்டது. இதே ஆண்டில் தெரெசாள் மடத்து எல்லைக்குள் **நிர்மலா நடுநிலைப்பள்ளி** ஒன்றும் தொடங்கப்பட்டது.

1955—நிர்மலா வனிதைக்கு '**அமலி**' என்ற ஒரு தங்கை இருதயகுளத்தில் தோன்றினாள். 'கருவிலே திருவுடையாள்' என்பதுபோல் அந்நங்கை ஓரே ஆண்டிலே ஒன்று முதல் நான்கு பாரங்களை ஏக காலத்தில் தொடங்கி நடத்தும் ஆற்றலுடன் மிளிர்ந்தாள். இந்த ஆற்றலுக்கும் ஏற்றத்திற்கும் அருந்துணையாக நின்றவர் சுவாமி இக்னேஷியஸ் இருதயம் சேசு சபை அவர்கள்.

1958—சகோதரிகள் இருவரும் (நிர்மலா, அமலி) S. S. L. C. இறுதித் தேர்வுக்குத் தம் குழந்தைகளை அனுப்பினர். அடேயப்பா! முதலிடம் வகிப்பதில் இருவர் குழந்தைகளும் போட்டியிட்டனர். முதல் தர வெற்றி எனச் சொல்லவும் வேண்டுமா? நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல், நூற்றுக்கு நூறு என்ற முறையில் வெற்றி முரசு கொட்டினர்.

1961—இன்ப நிகழ்ச்சிகளை ஏந்தி மலரும் இனிய ஆண்டு. 50 ஆண்டுகளாக கோசவ பாளைய சாலையில், சபையின் அரும் இளங்

உறவினர்க்குத் தாமே யுபசாரஞ் செய்தல்
அறமல வஞ்ஞான மாம். (மத். 5 : 47)

குஞ்சுகளை ஏந்தி வளர்த்துக்கொண்டிருந்த நவ கன்னியர் இல்லம், கண்ணை ஈர்த்து விண்ணைக் காட்டும் கவினுறு கட்டிடமும் அதிமேற்றிராணி ஆண்டகை அவர்களின் இல்லத்திற்கு அருகிலேயே அமைந்திருப்பதுமான "லொரெத்தோ" நிலையத்திற்கு மாற்றப்பட்டது. (ஏனைய இன்ப நிகழ்ச்சிகளைத்தான் இம் மலரே மணத்துடன் பகிர்கின்றதே) காலத்திற்கேற்ற சேவைக்கும் 'குடிசைத் தொழிலகம்' தாயக வளாகத்திலும் "லெயோனார்டு மருத்துவ நிலையம்" கோசாகுளம் ஊர்து நகரிலும் திறக்கப்பட்டன. மருத்துவப் பயிற்சி பெற்ற கன்னியர் இருவர், மருத்துவத்தின் பல துறைகளிலும் தேர்ச்சியுற அரசினர் மருத்துவ நிலையத்தில் புகுந்து பயிற்சியும் பணியும் ஆற்றுகின்றனர்.

அம்புரோஸ்: (8 வயது; ஓடிவந்து) அம்மா! இந்தா எங்க மாமாச் சாமியாரு பாருங்க!

சகோதரி பெலிசித்தாஸ்: எப்போ எடுத்த படம்? உனக்கு மாமாவைப்போலிருக்க ஆசையா?

அம்பு: ரொம்ப ஆசை. நானும் சாமியாராத்தா போவேன்.

சகோ: தெரசாள்! (அம்புரோஸ் தங்கை) நீ என்னைப்போலிருப்பாயா?

தெரஸ்: ஆத்தாடி மாட்டேன். நா எங்க அம்மாளுக்கு வேணும்.

* * * * *

சகோதரி மரி எம்மே: (சந்தடி செய்யும் பிள்ளைகளிடம்) சத்தம் போடாதிங்கப்பா. (அடுத்த வகுப்பைக் காட்டி) அவர்கள் பாடம் படிக்கவேண்டும்.

ஒரு சிறுமி (5 வயது): அம்மா! எல்லா வகுப்புலேயும் ஒவ்வொரு அம்மாங்க படிச்சுக் குடுக்கிறுங்களே! நான் அம்மாங்களா வந்தா படிச்சுக்குடுக்க வகுப்பு இல்லையே.

* * * * *

சகோதரி: பாப்பா என்ன வேணும்? யாரைப் பார்க்கிறாய்?

அமலி: இல்ல, இதிலே தாயாரு யாருன்னு பார்க்கிறேன்.

சகோ: தாயாரு யாருன்னு எப்படி தெரியும்?

அமலி: கண்ணாடி போட்டிருப்பாங்கல்ல.

உன்போற் பரரை யுருக்கமா நேசித்தல்
முன்கற் பனைநிகர் முன். (மத். 22:39)

The Growth of the Congregation

YEAR	SISTERS
1913 —	★★★★★
1914 —	★★★★
1915 —	★★
1916 —	★★★
1917 —	★★★★★
1918 —	★★★★
1919 —	★★
1920 —	★★★★
1921 —	★★★★★★
1922 —	★★★★★★★
1923 —	★★★★★★★★★★ ★★★★★
1924 —	★★★★★★★
1925 —	★★★
1926 —	★★★★★★★★★★

YEAR	SISTERS
1927 —	★★★
1928 —	★★★★★★
1929 —	★★★★
1930 —	★★★★
1931 —	★★★★★★★★★★
1932 —	★★★★★★★★★★
1933 —	★★★★★★★★★★ ★★★★★★★★★★
1934 —	★★★★★★★★★★ ★★★★★★
1935 —	★★★★★★★★★★ ★★★
1936 —	★★★★★★★★★★ ★★★★★★★★★
1937 —	★★★★★★★★★★ ★★★★
1938 —	★★★★★★★★★★ ★★★★★★★

கடுகு விசுவாசங் கன்மலை பேர்க்கத்
திறமுள தென்னத் தெரி (மத். 17:19)

YEAR	SISTERS
1939—	★★★★★★★★★★
1940—	★★★★★★★★★★ ★★★★★★
1941—	★★★★★★★★★★ ★★★★★
1942—	★★★★★★★★★★ ★★★★★
1943—	★★★★★★★★★★ ★★★★
1944—	★★★★★★★★★★ ★★★★★★★★★★
1945—	★★★★★★★★★★ ★★★★★★★★
1946—	NIL
1947—	★★★★★★★★★★ ★★
1948—	★★★★★★★★★★ ★★★★★★★★★★ ★★★★★★★★★★
1949—	★★★★★★★★★★ ★

YEAR	SISTERS
1950—	★★★★★★★★★★ ★★★★★★★★★★
1951—	★★★★★★★★★
1952—	★★★★★★★★★★ ★★★★★★★
1953—	★★★★★★★★★★ ★★★★★
1954—	★★★★★★★★★★ ★
1955—	★★★★★★★★★★ ★★★★★★
1956—	★★★★★★★★★★ ★★★★★★★★★★ ★
1957—	★★★★★★★★★★ ★★★★★★★★★
1958—	★★★★★★★★★★ ★★★
1959—	★★★★★★★★★★ ★★★★★★★★★★
1960—	★★★★★★★★★★ ★★★★★★★

நீர்மேற்குமிழி நிழலி கரைத்தொழிக்கும்
கார் நேருன் ஞாயிநிலை காண்

அமல அவை அலங்காரம்

1.	ஆழியைத் தூரத்தும் அறிவது எதனுல் அமலவைக் குறியீடு தெரிவது எதனுல்	நீலத்தால்
2.	சேசுவின் வரலாறு திகழ்வது யாரால் காசினி இச்சபை கண்டது எவரால்	நால்வரால்
3.	அருள்மறை மேதையுள் ஒருவராம் யாரே அமலவை தோன்றச் செய்தவர் யாரே	அகுஸ்தீனர்
4.	திருக்குடும்பம் அன்று வதிந்தது எதிலே திருக்கன்னியர் ஆங்கு உறைந்தது எதிலே	குடிசையிலே
5.	முத்தமிழ் முகிழ்த்து வளர்ந்தது எங்கே நத்திடும் இச்சபைத் தாயகம் எங்கே	மதுரையிலே
6.	பாதத்தில் அரவந்தனை மிதிப்பவள் யாரே பாரிலே சபைக்கணியாய் இலங்குபவள் யாரே	அமல உற்பவி
7.	அன்னையின் கரந்தனில் தவழ்ந்தது எதுவோ மின்னியே உடைதனில் தொங்குவது எதுவோ	ஜெபமாலை
8.	தேவனே பூமியில் தேடியது யாது காவலாய்க் கன்னியர்க்கு அமைவது யாது	தரித்திரம்
9.	தாயினும் மிகுமேன்மை தருவது யாது பேயினம் அஞ்சவன்மை ஈவது யாது	கன்னிமை
10.	நசரேத்தில் சேசு போதித்தது எதுவோ இசைவுடன் கன்னியர் சாதிப்பது எதுவோ	கீழ்ப்படிதல்
11.	அறமிகப் பெருகித் தழைப்பது எதனுல் அமலவை தினமும் வளர்வது எதனுல்	அன்பால்
12.	சவரியார் அலைதாண்டி வந்தது எதற்கு சபைமடம் பலப்பல நாட்டுதல் எதற்கு	சேவை செய்ய

Mother Therese Angel

உள்ளேயசுசி செய்வதுவா யுட்புகுவ தன்று
வெளிவருவ தர்க்கும் வெறு. (மத். 15 : 11)

OUR CONGREGATION

In our search concerning the Origin of the Congregation of the Indian nuns of the Immaculate Conception, the Mother House of which is at Madurai, we must dismiss our hopes of finding the outstanding figure of a Foundress. But, as early as in 1898 we find, bending with fatherly solicitude over its cradle, first, Fr. Julius Larmey, Parish Priest of Panjampatti. He died at Trichinopoly, 30 January 1901, aged 65. The next Parish Priest was Fr. Visuvasam. We are sorry to find very scanty record about him. His stay at Panjampatti was a couple of years. Then came Fr. E. Nespoulous, born 12 July 1863,—ardent and pushful. His reign was of 13 years duration. By general consensus, he is the accredited Founder of the Congregation. But he was not single handed. From the year 1898 down to the year 1911 when he died, Fr. Augustin Pereira was the soul of the nascent Congregation. He laboured at it most strenuously, first as the mere catechist that he had chosen to be till after the advent of Fr. Amirthasamy. At that time, "Vox populi", gathering volume, obtained for him the grace of the Priesthood.

It is always the same cry that echoes down the centuries "Messis quidem multa"—The harvest is plentiful. Dismayed at the hugeness of the Parish and at its unwieldiness, Fr. Larmey cast about for youthful labourers. As his luck would have it he dropped his concern into the ear of his beloved and devoted catechist. There was no further need even of the semblance of pushing, such, as, "Insta, opportune, importune" — (2 Tim. 4 : 2) "Welcome or unwelcome, say the same thing, insist, insist." since Fr. Augustin was all on fire. Little by little a small gathering of youthful enthusiastic maidens was forming: which was baptised "The little daughters of the Immaculate Mother of God." If later on, in the time of Fr. Nespoulous, we have a look at it, we find it is eleven strong. One day good Fr. Augustin queried his Superior: 'Father, suppose our girls wish to join one or other of the existing Congregation, will it not be good on our part to acquiesce ?"—"No, but wait a bit,—answered Fr. Nespoulous who proved to be a man of vision, if they wish to go let them go, and they will do well, and I shall be the first to give them my blessing. But my *idea of their future is other*. Theirs must be a very ordinary life-after the example of Holy Family—Ordinariness in life ought to be their great guide. Jesus lived so among us with no distinction about Him, no

உனக் யலான் செய்யநீ புன்னுவ தன்னுன்
தனக்குநீ செய்தல் சரி. த் 7 : 12

claim of any dignity whatsoever He was a servant of all. It is my dream—indeed my fond hope that our young girls will follow Mary along the tortuous and filthy lanes of Bethlehem and Nazareth and in the sun burnt Exile of Egypt. Without complaint,—nay with joy.

Their life will have to be largely outside the walls of the Convent—of course *always under the strictest and most scrupulous obedience*, after our master: *Jesus was obedient unto them*. This is if not the words, the exact answer which Fr. Augustin obtained.

The obedient assistant lost no time. He profited by a pastoral visit of Dr. A. Faisandier to obtain his episcopal sanction of a new Congregation of nuns. The affair was well thrashed out, and it was finally decided between His Lordship Fr. Nespoulous, Fr. Augustin and the sisters of St. Joseph of Lyons that the New Congregation of Indian nuns would start a novitiate, at Madurai, under the auspices of the missionary Sisters, upstairs in a separate building which the good missionaries graciously offered within their own little compound. Before the seven happy candidates left for Madurai under the leadership of their Director Fr Augustin, Fr. Nespoulous had already taken good care that his children should get a thorough intellectual formation Out of the three girls that he sent to Trichinopoly 2 succeeded very well.

The novitiate began on the 2nd of July 1911. The sight of his seven novices sent Fr. Augustin into rapture. But we will not spoil his joy by insisting on it. It was his "Nunc dimittis.„ He went back to Panjampatti, a very happy but dying man. Every effort to preserve the precious life proved futile; he passed away on 21 October 1911. To Fr. Augustin and his generous family the Congregation of the Immaculate Conception is deeply and heavily indebted. Great was the grief of Fr Nespoulous when he lost his precious and dear assistant. Without Fr. Augustin, so he humbly admitted, dear Congregation of the Immaculate Conception would never have seen the day. He would never have been able to start this Congregation single handed.

Mother Radegonde was the first Mistress of Novices; but her work was of short duration. She was succeeded by Mother Patrice in 1911. At the end of their novitiate that year 5 novices took their vows. Then also a very important step was taken in the choice of Mother Superior. Up to that time there seems to have been some sort of figure head as Superior. Her name, Viagammal, is not included in a long list of our 450 nuns, in the year 1958. The seal of sanctity

அயலான் தவறி லவனைத் திருத்தல்
நயமுங் கடனுமாம் நாடு. (மத். 18 : 15)

MOTHER JOSEPH HELENA

Mother General



MOTHER SOPHIE
Assistant Mother General
(Mother General : 1941 – 1952)

usually is on the cradle of a religious institute. Mother St. Augustine who was twice superior during 23 years was a very saintly religious whose characteristic seems to have been walking the little way, after Our Lord Himself Who says (John 4:34) "My meat is to do the will of Him Who sent me" A propos of the "Little Way", Dr. Leonard would have our nuns tread the little way, in a very conspicuous preface that he wrote in our Book of Rules in the year 1942. Rev. Fr. Kuney the then Superior could not fail to come and visit the dear novices who had left his district two years before. Looking at them, he smiled and said that he would be even happier if it were found possible to give them a uniform that would put them clearly apart from the world. Was this a departure from the austere line chosen by Fr. Nespoulous? Not necessarily. A habit — i.e., a uniform was chosen whereby each nun sank differences and looked like the other four nuns. In colour and shape the very decent habit did not separate them from the lay women of Madurai. As years wore on one or two timid attempts were made to bring about a difference without success.

Suddenly in the year 1932 our Institute, now a thriving babe of 125 nuns in 25 houses, sprang a big surprise. There was great activity everywhere. Bundles of Navy Blue cloth were being sent to every house, and habits were being stitched for every one. By the beginning of October every one was making for Head Quarters, for the annual Retreat. The retreat over each one donned the new habit—a habit never to be modified. "The religious habit is a cloister; the cloister goes with the religious that goes with it. Every one that looks at him or her who wears it knows him or her for what he or she is, a person consecrated to God and human souls. He or she cannot possibly disguise or hide the profession. In the biggest crowd in the busiest street a religious is conspicuous, seen, known, reverenced by the good, depised by those who hate." (Fr. Daniel A. Lord S. J.)

To-day, as we take a comprehensive view of the past fifty years—years of up hill work, of struggle, of poverty, of failure and also of success—(our large number, 410 members, — our houses 50, and about the same number of schools, are a proof)—our eyes rest finally on Loretto House. It is a grand achievement. From Loretto House will issue forth many generous souls burning with the missionary spirit so ardently desired by the Venerable Founder and his saintly Assistant. Just as we have, due to circumstances, laid stress on education we shall turn with great energy to the new work before us. Times are changing. All religious institutions

are facing serious danger. To-morrow we may be ousted from everywhere. Even in the class room, the spirit of our vocation it was that sustained us. What will the morrow be? It will leave us intact and even very much improved in the spirit of our vocation which will urge us to follow the Holy Family in the by-ways and lanes of Bethlehem, Nazareth and in the deserts of sunburnt Egypt.

Rev. Fr. Augustine Turlan, S.J.

Hail! Pillar of Purity:

Hail! Gate of safety;

Hail! tent of the God & Word;

Hail! holy beyond all holy ones;

Hail! ark gilded by the Holy Ghost;

Hail! unfailing treasure-house of life;

Hail! precious diadem of Godly sovereigns;

Hail! worshipful honour of a worthy priesthood;

Hail! Church's unassailable tower;

Hail! of the kingdom indestructible wall;

Hail! whereby war-trophies are set up;

Hail! whereby foes are stricken;

Hail! my body's healing;

Hail! my soul's saving;

Hail! bride unbrided.

[*Byzantine*]

வானவனை மண்ணில் மறுத்தார் வருநாளில்
ஈனமுறச் செய்வனிகழ்ந்து. (மத். 10 : 33)

எமது அன்புத் தந்தை

அமல உற்பவ மாதா சபைக்கு அடிப்படை நாட்டி அதை உருவாக்குவதில் முதல் பங்கு கொண்டவர் பஞ்சம்பட்டி பங்குக்குரு சேசு சபை சுவாமி ஜூலியட் லார்மி அவர்கள். சபை வரலாறு கூறுகிறபடி இக்குருவுடன் ஒத்துழைத்து அவரது ஆலோசனைப்படியும், அவருக்குப் பின் சபைக்கு உறுதுணைபுரிந்த சேசு சபை சுவாமி நெஸ்புளுஸ் அவர்களின் திட்டங்களின் வழியிலும் சபையை உருவாக்கி வளரச் செய்தவர் சுவாமி அகுஸ்தீன் பெரைரா அவர்கள். ஆதலின் இவரே சபையின் தந்தை எனப்படுகின்றார்.

இளமை : பண்டு முதலே உள் நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தால் செல்வம் கொழித்துச் சிறப்புடன் திகழுவது தூத்துக்குடி மாநகரம். இங்கு திரு. F. X. பெரைராவெனும் உத்தம கத்தோலிக்கக் குடும்பத்தில் 11-2-1854-ல் தோன்றியவர் அகுஸ்தீன். பெற்றோருக்கு இவர் இரண்டாம் புதல்வர். பாலியன் அகுஸ்தீன் அவ்வூரில் தமது தொடக்கக் கல்வியை முடித்தார். வணிகத்தால் செல்வம் திரட்டும் நோக்குடன் 15 வயது நிரம்பிய இளைஞன் அகுஸ்தீன் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். இறைவனின் திருவுளம் வேறு. தொழிலில் அவர் திறமை காட்டவில்லை. தூத்துக்குடிக்கு திரும்ப அனுப்பப்பட்டார். அவரை, அவரது தந்தை பங்குக்குரு லார்மி சுவாமியிடம் காட்டி முறையிட்டார். பையனின் பக்தியையும், நற்பண்புகளையும் கண்ட குரு அவரைத் தம்முடன் வைத்துக்கொண்டார். குரு நாகபட்டினம் சென்றபோது சேசு சபைக் கல்லூரியில் இவரைச் சேர்த்துவிட்டார், 1876-ல் பஞ்சம்பட்டிக்குப் பங்குக் குருவாக நியமிக்கப்பட்டதும், தன் பிரிய மாணவனையும் பஞ்சம்பட்டிக்கே அழைத்துக்கொண்டார்.

பஞ்சையின் நிலை :—இவர் கால் வைத்த காலை அப்பஞ்சம்பட்டியில் எழுத வாசிக்கத் தெரிந்த ஆடவர் எவரேனும் இல்லை எனின், பெண்டிரைப்பற்றி பேசுவானேன். ரூபாய் நோட்டுக்கும் சாதாரண தாளுக்கும் வேறுபாடு அறியக்கூடாத நிலையில் இருந்தனர் பலர். பஞ்சம்பட்டிப் பங்கு, தெற்கில் இராயப்பன்பட்டியையும், வடக்கில் மணப்பாறையையும், மேற்கில் பழனியையும் கிழக்கில் நத்தத்தையும் எல்லையாகக் கொண்டிருந்தது. ஒரே குரு ஆண்டு முழுதும் சுற்றினும் பங்கு முழுதும் சுற்றிப் பார்க்க இயலாது; அக்காலப் போக்குவரத்து வசதிக் குறைவும் இந்நிலைக்கு முக்கிய காரணமாயிற்று.

பங்குக் குருவின் வலது கரம் :— ஆழ்ந்த பக்தியும், அரிய குணங்களும் பெற்றிருந்த அகுஸ்தீன் இளவல் திருமணத்தைத் துறந்து, தனிப்பட்ட விரத்தத்துவ வாக்கால் தன்னை இறைவனுக்கு நேர்ந்து, ஆத்தும ஈடேற்ற ஆவலில் அயராது உழைப்பதில் ஈடுபட்டார். கூடுமான போதெல்லாம் சிறியவருக்கும் பெரியவருக்கும் ஞானோபதேசம் கற்பித்து, விசுவாச ஒளி சுடர்விட்டு ஒளிரச் செய்தார். பகலில் சிறுவருக்கும் இரவில் பெரியவருக்கும் கல்வி கற்பித்து அறிவை வளர்த்தார். கிராம மக்கள் தங்கள் உத்தம சகோதரனின் குணங்களைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். ஆடவரிலும், பெண்டிரிலும் பலர் அவரைப்போல் வாழத் திட்டமிட்டனர். தனது பங்குக் குருவுக்கு தமிழ் மொழியை நன்கு பேசவும், எழுதவும் உதவிபுரிந்தார். மக்களின் விளங்காத பேச்சை குருவுக்கு விளக்கவும், குருவின் கருத்தை மக்கள் உணர்ந்து அவருடன் நெருங்கி உறவாடவும் சிறந்ததோர் கருவியானார். திருப்பலி நிறைவேற்றல், பாவப் பொறுத்தலளித்தல் இவ்விரண்டும் தவிர மற்ற ஆன்ம சரீர சம்பந்தமான எல்லா அலுவல்களிலும் ஈடுபட்டார். பங்குக் குருவும் இவருக்கு லத்தீன் மொழி கற்றுக் கொடுத்தார் கருத்து ஒன்று உள்ளே கொண்டு.

அக்காலை தாது வருடப் பஞ்சம் ஆரம்பித்தது. பஞ்சையிலும், குக்கிராமங்களிலும் பஞ்சப்பாட்டுப்

இருதயத்திற் றூய்ச்சி யெழிற்சாந்த முற்றோர்
வருபூ பெறுவர் மகிழ்ந்து. (மத். 5 : 4)

பாடும் மக்கள் குவிந்தனர். அள்ளி இறைத்தார் தன் வீட்டின் அரதனங்களை, மக்கள் பசிபோக்கும் மதுர உணவுக்காக. வீடு வீடாய்ச் சென்று உதவினர். 'தேனில் ஒட்டிய ஈக்கள்' போல மக்கள் அகுஸ்தீனரிடம் ஒட்டிக்கொண்டார்கள்.

ஆன்ம தாகம் :— 'காலமறிந்து வலைவீசின் கனத்த மீன்பாடு கிட்டு'மன்றோ? பெண்களை ஈடேற்ற பெண்களே சிறந்த கருவி என்பதை உணர்ந்து பெண்களுக்கும் கல்வி கற்பித்தார். அமலோற்பவமாதா சபையைத் தோற்றுவித்தார். தன் பிரிய சீடன் தோன்றியது 1854-ம் ஆண்டு. அவரால் தோற்றுவிக்கப்பட்ட சபைக்கும் அதே அரிய நாமம். மகிழ்ச்சியில் திளைத்தார் லார்மி சுவாமிகள். பங்கு முழுவதும் ஆங்காங்கே பள்ளிகள் முளைத்தன. எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து, கல்வியும் திருமறை அறிவும் வளர்ச்சியுறப் பாடுபட்டார். தமது சீடனின் உழைப்பும், உத்தம ஒழுக்கமும், ஆன்ம ஈடேற்ற ஆவலும் பங்குக் குருவின் மனதை நீண்டகால மாகவே கவர்ந்திருந்தது. உதவிக் குரு சின்னப்பர் சுவாமியும் மாற்றப்பட்டுவிட்டார். அகுஸ்தீனரைக் குருவாக்கினல் மக்கள் மிகுந்த நலன் பெறுவர் என்பதை எண்ணினர். தம் கருத்தை வந். பார்த் ஆண்டகைக்குத் தெரிவித்தார். அனுமதியும் கைமேல் வந்தது. 1899-ம் ஆண்டு டிசம்பர் ஒரு ஞாயிறன்று பங்கு மக்களெல்லாம் கோவில் முன் கூடினர். அகுஸ்தீன் ஐயா, சுவாமியார் உடையுடன் வந்தார். கண்கள் நீர் பொழிந்தன. 23 ஆண்டுகள் தன் தாய் வீடென ஒன்றுபட்டு வாழ்ந்தவர், பிரியா விடையுடன் திருச்சி சென்றார். 15 நாட்களில் ஆறு பட்டங்கள் பெற்று சனிக்கிழமை தன் பிரிய மக்களிடம் வந்தார். மூன்று நாட்களின் பின் மக்கள் நாற்பதின்மரும், உரிமை மக்கள் அமலவையின் வித்துக்கள் நால்வரும் சூழ தூத்துக்குடி ஏகினர். அங்கு 14—1—1900-ல் உன்னத தேவனின் குருவாக அபிடேகம் பெற்றார். தேவ பராமரிப்பு அவரைத் திரும்பவும் பஞ்சம்பட்டிக்கே கொண்டு வந்தது. தன்னலம் துறந்த தியாகி லார்மி சுவாமி, சிலுக்குவார்பட்டியைத் தன் கிளைப் பங்காக்கி நம் சுவாமிகளை அனுப்பினர். மக்கள் கண்ணீர் உகுத்தனர். தான் வாரம் ஒருமுறை வந்து செல்வதாக வாக்களித்தார். வாக்குறுதிப்படி வந்தும் சென்றார். அங்கும் தன் மக்களுக்குப் புது இல்லம் அமைத்துக் குடியேற்றி நன்மைகள் பல செய்தார். அதே ஆண்டு லார்மி சுவாமியவர்கள் பிணியுற்று திருச்சிக்குக் கொண்டுபோகப்பட்டு விண்ணுலகம் சென்றார். தந்தையின் மறைவால் வருந்தும் பங்கு மக்களையும் அமல சபைக் குழந்தைகளையும் முன்னிலும் பன்மடங்கு அன்புடன் விசாரிக்கத் தொடங்கினர். 1904-ல் பஞ்சம்பட்டிக்குப் பங்குக் குருவாக வந்தார் லார்மி சுவாமிகளின் பிரதிபிம்பமாய் சேசு சபை சுவாமி நெஸ்புளூஸ் அவர்கள். இருவரும் பங்கில் உருவாகும் அமலோற்பவமாதாவின் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்தனர். பஞ்சம்பட்டியில் அமல அவைக் குழந்தைகள் 23 ஆகியிருந்தனர். அவர்களை ஒரு சட்ட திட்டத்திற்கு உட்பட்ட சபையாக்கும் நோக்கம் லார்மி சுவாமி காலமுதலே வேரூன்றியிருந்தது. நெஸ்புளூஸ் சுவாமிகளது ஆவலும் அதுவே. ஆதலின் 1911-ம் ஆண்டு திருச்சி சென்று, வந். அகுஸ்தீன் ஆண்டகையிடம் தம் கருத்தை விண்டுரைத்தார். நெடுநாட்களாகவே அச்சிறு குழுவின் சிறப்புமிக்க திருப்பணிகளைக் கேட்டிருந்த ஆண்டகை உடனேயே அனுமதி அளித்தார். பஞ்சம்பட்டி வந்த புனித வீரன் சபை வரலாற்றில் கண்டபடி அமலோற்பவமாதாவின் குழந்தைகளில் ஏழு பேரை மதுரையில் 2-7-1911-ல் நவசந்நியாசம் பயிலச் செய்தார்.

இறுதிக் காலம் :—நவசந்நியாசத்தில் சேர்த்தபின் மகிழ்வுடன் ஊர் திரும்பினர். உழைப்பு மிக்கவரே, ஆனல் என்றுமே மிக நொய்ந்த உடலுடையவர். ஓயாத தலைவலியாலும் வேறு சில உடல் நோய்களாலும் நாளடைவிலே நலிவுற்று வந்தவர். அவரது தேவ நேசத்திற்கு எல்லாம் விறகாய் இருந்தனவேயொழிய தடையாய் அமையவில்லை. இருப்பினும் அன்பிற்கில்லையே அடைக்குந்தாழ். சில திங்களில் உடலெல்லாம் ஒரே வீக்கம். மருத்துவத்திற்காக தூத்துக்குடி கொண்டு சென்றனர். பயனில்லை. குணப்படாது என்பது தெரிந்தது. தான் உயிரினும் நேசித்த பஞ்சம்பட்டிக்கே தன்னைக்

சுத்த விதயத்தார் தூய மகிமையுள
கத்தனைக் காண்பார் களித்து. (மத். 5 : 8)

கொண்டு செல்ல கேட்டுக்கொண்டார். தனது சிறிய தகப்பனாரின் வார்த்தையைத் தட்டாது திரு. I. X. பெரைரா அப்படியே செய்தார். அசையக்கூடாத வீக்கம் கொண்ட உடல் நிலையில் அங்குக் கொண்டு வந்தனர். கடைசி வேளையில் கண்கலங்கிய தன் சிற்றப்பாவிடம் பரிந்து காரணம் கேட்டார் கோமகன் திரு. I. X. பெரைரா. "மகனே! நம்மோடு அமல அவையின் தொடர்பு அற்றுப்போகலாகாது. என்றும் அவர்களுக்கு ஓர் உதவி நடைபெற நவகன்னியருக்கென மாதா மாதம் ஒரு தொகை உதவவேண்டும்" என்று கூறினார். என்னே! அவரது தந்தை உள்ளம்! வாக்களித்தார் வாஞ்சையுடன். ஆயுள்மட்டும் கடைப்பிடித்தார், அவ்வுத்தம புதல்வன். இன்றும் அவ்வுதவி தொடர்கின்றது.

அன்று 21—10—1911 சனிக்கிழமை. நாள் முழுவதும் மக்கள் கூட்டம், வாடிய முகத்துடன் சுவாமியார் இல்லத்தைச் சூழ்ந்திருந்தது இரவு 9 மணி. அனைவரும் 'ஓ' வென்றலறினர். அகுஸ்தீன் தந்தையின் ஆன்மா, தான் ஆவலுடன் தேடிய இன்ப வீட்டிற்கு ஏகிவிட்டது. மறுநாள் ஞாயிறு 4–30 மணிக்கு சுற்றுக்கிராம மக்கள் எல்லாம் சூழ்ந்த பெரும் கூட்டத்தில் வள்ளலின் உடல் ஊர் முழுதும் பவனி வந்து, கோவிலின் கிழக்குப் பக்கத்தில் அடக்கப்பட்டது.

Hail most high, most humble one:
Above the world! below Thy Son
Whose blush the moon beauteously mars
And stains the timorous light of stars.
He that made all things had not done
Till He had made Himself thy son.
The whole world's Host would be thy Guest
And board Himself at thy rich breast
O boundless hospitality
The feast of things feeds on thee.

[*Queen of Heaven: Richard Crashaw*]

EVER REMEMBERED BENEFACTOR

THE eldest of the five sons of the late Mr. F. X. Pereira was born at Tuticorin, South India on the 26th April 1888. His four brothers are the late Messrs. R. G., J. E. A., & J. L. Pereira, & Mr. J. R. T. Pereira.

He received his early education at St. Francis Xavier's High School, Tuticorin, and later at St. Benedict's College, Colombo, where he passed the Junior and Senior Cambridge Examinations.

On the death of his father in 1906, he took charge of the family business of F. X. Pereira & Sons, Colombo, (established in the year 1889) at the very early age of 18 years with the guidance of very able and reliable Managers like the late Messrs. Remigius Mel, Gabriel Vaz and M. S. Pillai. In February 1909 he married Kanikaiammal, youngest daughter of the late Mr. Xavier Motha, Vakil and Municipal Chairman, Tuticorin. His wife predeceased him in July 1920. He married again in August 1923 Margaret, daughter of the late Mr. M. G. Gomez of Balangoda, Ceylon who was a brother of the late Rev. Fr. G. P. Gomez O. M. I. and an uncle of the late Rev. Fr. G. J. Gomez S. J. of Madurai.

Chevalier I. X. Pereira had eleven children of whom nine are surviving today. He died on the 21st of July 1951 at Colombo.

In 1924 he was elected as the first Indian member in the Ceylon Legislative Council. In the first State Council of 1929 he was nominated to represent Indians in Ceylon and continued to be nominated in that capacity in successive Councils up to 1947 when he retired from politics.

In the year 1946 for almost six months he officiated as Minister for Labour, Industry and Commerce in the Ceylon Government. Papal honours conferred on Mr. Pereira include the *"Pro Ecclesia et Pontifice"* in 1934 and the *"Knight Commander of the Order of St. Sylvester"* in the year 1947.

The Indian Government conferred on him the title of Diwan Bahadur in the year 1935 and which he renounced in August 1947 when India attained its independence.

Chevalier Pereira went on deputation to the Secretaries of State for India and Colonial Affairs at London in the year 1930 to press the claims of Indians in Ceylon obtaining their franchise.

Offices that Chevalier Pereira has held include the following: Vice-

காயத் தழகுபலங் காத்திரஞ் சௌக்கியம்
நோயாற் குலையு நொடி.—ஞானி

Our Ever Remembered Benefactor
Late **Chev. Ignatius Xavier Pereira**

Our Unforgettable Benefactor

Late Rev. Father Gabriel Gomez S. J.

மறக்கமுடியாப் பேருபகாரி. மதுரை, புனித வியாகுல அன்னை பங்குக் குருவாக இருந்த இவர், வெகு ஆரம்ப நிலையிலிருந்தே சபையை எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற, தொடக்கமுதல் அரும் முயற்சிகள் கொண்டார். நோயாளி சகோதரிகளுக்கு கோசாகுளத்தில் தம் குடும்பச் செலவில் ஓர் இல்லிடம் வாங்கிக் கொடுத்தார். கொழும்பு சென்று, தர்மநிதி திரட்டி, மதுரையின் கிழக்கே 4 மைல் தொலைவில் ஒரு தோப்பு வாங்கி சபைக்கு உரிமையாக்கினார்.

president of the Catholic Union of Ceylon, Founder president of the Ceylon Indian Association, President for two terms of the Indian Mercantile Chamber of Ceylon, President of the Ceylon Textile Chamber, Vice-president of the South Indian Catholic Association, President of the Indian Club, Vice-president of St. Benedict's College Old Boys Union, besides many posts in several other organisations and bodies. He was a member of the Colombo Port Commission for nearly twenty years.

From 1906 till the year 1945 he was the Senior partner and head of the firm of F. X. Pereira & Sons, Colombo. From 1945 till his death in 1951 he was the Chairman and Managing Director of F. X. Pereira & Sons Ltd., Colombo.

He was the acknowledged leader of the Indian community in Ceylon, besides being the trusted friend and guide of successive Raj Agents and Indian High Commissioners in Ceylon from the year 1924 up to his death in 1951.

Chevalier Pereira was also a popular and highly successful businessman well known for his integrity and high principles. Solely through his efforts he has brought the firm of F. X. Pereira & Sons Ltd., Colombo to that important position it to-day holds in the Dominion of Ceylon.

Chevalier Pereira was a philanthropist whose benefactions were given frequently yet largely and unostentatiously. His benefactions spread throughout Ceylon and South India. No worthy cause did he refuse.

Chevalier Pereira was first and foremost a real and live Catholic. He practised his faith fervently. His humility was so great that up to the present day very few people other than his family members are aware that in the year 1934 he received the Papal Medal of "*Pro Ecclesia et Pontifice*".

He was a devoted husband and affectionate father, a model employer and above all a loyal Catholic true at all times to his faith and country.

His Lordship the late Rt. Rev. Mgr. F. T. Roche, S. J. Bishop of Tuticorin and his life-long friend could have selected no fitter words when he referred to Chevalier Pereira in his stirring panegyric at the Requiem Mass at St. Mary's Church, Bambalapitiya before the funeral as "Beloved of God and beloved of man and his memory is held in benediction."

In the year 1949 he acquired Ceylonese citizenship. It was his paternal uncle the late Rev. Fr. Augustine Pereira of revered memory who founded the Congregation of the Sisters of the Immaculate Con-

ception with their mother house at Madurai and whose Golden Jubilee is being celebrated this year.

Not only in his family but among so many Priests, Nuns, Brothers, the Bharatha Community, Indians in Ceylon and so many other souls who so freely enjoyed his bounty, is his name still kept in fragrant memory and please God it continues to be so in all the years to come.

Francis Xavier Pereira
24—2—61

Death came through Eve,
but life has come through Mary. [*Queen of Heaven : St. Jerome*]

★ ★ ★

Spell Eva back and Ave shall you find.
The first began, the last reversed, our harms.
An Angel's witching words did Eva blind,
An Angel's Ave disenchants the chains.
Death first by woman's weakness entered in :
In woman's virtue life doth now begin. [*Bl. Robert Southwell*]

உத்தமன் சாயலுக் கொத்த வுருகொள்ளச்
சித்தத்திற் றுழ்தல் திடன். — பெர்னார்து

சபைக் குடும்பம்

"பாரிற் பரனுக்காப் பல்லவைவிட் டார்க்குவான்
நூறு மடங்காம் நுவல்"

என்ற நமது ஆண்டவரின் வாக்கு எல்லாத் துறவற சபைக்கும் பொருந்தும். எனினும் விட்டுவிட்ட ஒரு குடும்பத்திற்குப் பதில் உலகிலேயே சபைக் குடும்பத்துடன், மற்றுமொரு உலக குடும்பத்தையும் விடாத் தொடர்பாய்ப் பெற்ற துறவற சபைகள் உளவோ எனின், அறிந்த அளவில் இல்லை என்பது தான் விடையாகும். அமலோற்பவ மாதா சபைக்கு இறைவன் இந்தக் கிருபையையும் அளித்துள்ளார்.

19-ம் நூற்றுண்டின் இறுதி (1890) அமல அவை வித்து கருவாகத் தொடங்கியது. சுவாமி அகுஸ்தீன் அவர்களால் பெரைரா குடும்பத்தின் செலவிலேயே முந்த சிறிய விடுதியும், பின் சிறு பள்ளியொன்றும் அமைக்கப்பட்டது. 1899-ல் கல்லடிப்பட்டியில் நன்செய் நிலம் வாங்கியளிக்கப்பட்டது. இன்று சபை மகிழ்வுடன் கொண்டாடும் பொன்விழாக் கணிக்கப் படுவதும், சட்டதிட்டப்படி தொடங்கிய நவசந்நியாச வாழ்க்கைக்கு உரியதாயிருந்த அழகிய கட்டிடத்தை உருவாக்கியதும் அக்குடும்பமே. எம் தந்தை தம் இறுதி நேரத்தில் கலங்கிய கண்களுடன் குடும்பத்தின் உதவி சபைக்கு விடாத் தொடர்பு கொண்டிருக்க, நவகன்னியருக்கு மாதாமாதம் ஒரு தொகை அனுப்பவேண்டு மென்பதாக விருப்பம் தெரிவித்தார். மறுப்பு ஏதுமின்றி இசைவதாக மனம் உவந்து பதில் அளித்தார், சபையின் அருமைச் சகோதரர் I. X. பெரைரா. மற்ற சகோதரர் நால்வரும் - (திருவாளர் R. கயத்தான் பெரைரா, அகுஸ்தின் பெரைரா, லூயிஸ் பெரைரா திமோத்தே பெரைரா) மனமுவந்து ஏற்றனர் மனுவை. அந்நாள் 1911 அக்டோபர் 10. இந்நாள் வரை குடும்பப் பொருளாதார நிலை ஏற்றமோ, இறக்கமோ, எந்நிலை காணினும், எவர் விரும்பினும், வெறுத்தாலும் அவ்வுதவி இடைவிடாது நடைபெறச் செய்ததன்றி தன் வாரிசும் அதைக் கடைப்பிடிக்கக் குறித்தே வைத்து விட்டார் அருங்குண வள்ளல் திரு. I. X. பெரைரா. சபைக் குழந்தைகள் வளர்ந்தனர். இடவசதி தேவைப்பட்டது. எழுந்தது பக்காக் கட்டிடமும், அருகிலோர் தோட்டமும் பஞ்சம்பட்டியில் இவர்களது உதவியிலேயே. பெரிய தந்தையின் விருப்பப்படி பணம் அனுப்புவதோடு விட்டுவிடவில்லை. தெற்கினின்றும் வடக்கே செல்லச் சமயம் வாய்க்கும்போது தம் தாயகம் செல்பவர் போல் மதுரையில் இறங்காது செல்லார் சகோதரர் யாவரும். ஆண்டுக்கு ஒரு முறை பஞ்சம்பட்டி ஏகி, அருமைத் தந்தையின் கல்லறையைச் சந்தித்து தம் உரிமைச் சபை இல்லத்தில் ஒரு மணி நேரமாவது தாமதித்து உல்லாசங்கொள்ளவும் மறவார் திரு. I. X. பெரைரா. ஏனைய சகோதரரும் அத்தன்மையவரே.

அன்று தந்தை அகுஸ்தீனுரையும், குடும்பத்தையும் நேரில் கண்டு, இன்று உயிருடன் வாழ்கின்ற பஞ்சம்பட்டிப் பெரியார் ஒருவர் கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி 'இதன் ஒவ்வொரு

செங்கல்லும் சொல்லும் பெரைரா குடும்பத்தாரின் பெருமனதை' என்று கூறுகின்றார். குடும்பத்தில் ஏதோ பெருநாள், வருவாயில் ஏதோ துண்டுத் தொகை, உடனே நினைப்பது அமலோற்பவ மாதா சபையையே. பிறந்த வீட்டு வெகுமதிபோல் ஓடிவரும் மின்னல் வேகத்தில் நன்கொடை மதுரைக்கு. "வாழ்வில் நேசித்தவரை சாவிலும் நேசிக்கின்றார் அவர்" என்ன கூறினாரோ இறுதிக் காலத்தில், தந்தைக்கு ஏற்ற தனயன் பிரான்ஸிஸ் சேவியர் பெரைராவிடம். தந்தையின் வழியைச் செயலில் பின்பற்றும் இந்தச் செம்மல், பொன் விழா என்ற சொல் என்று கேட்டதோ, அன்று முதல் அஞ்சல்மேல் அஞ்சல்: கொண்டாட்டம் எப்போது? குறிப்பான நாட்கள் எவை? திட்டங்கள் என்ன? தேவைகள் யாவை? தெளிவாக எழுதுங்கள்! என்னே களிப்பும் கரிசனையும்!

குடும்பத்தில் ஏதோ இன்னல், தொழிலில் ஓர் இடையூறு, பறந்து வரும் கடிதம் மதுரைக்கு; தொடர்ந்து செல்லும் ஜெப உதவி நிமிடத்தில். இம்மலரில் இடம் பெற்றுள்ள வரலாறு அன்னவரின் உத்தம கத்தோலிக்க வாழ்க்கையை ஒரு சிறிது சித்தரித்துக் காட்டுகிறது. செல்வத்திலும், பட்டம் பதவிகளிலும் எவ்வளவுக்கு உயர்ந்திருந்தாரோ அவ்வளவுக்கு, வாழ்வின் உயிராம் திவ்ய பூசையை நாடித்துடிப்பாகக் கொண்டு உன்னத, உத்தம, பிறருக்கு எடுத்துக்காட்டான கத்தோலிக்க வாழ்வு வாழ்ந்தார் எம் சகோதரர் திரு. I. X. பெரைரா. 'அவர் ஞானத்தைப் பிரசைகள் சொல்லிக்காட்டுவார்கள், பரிசுத்த சபையும் அவன் புகழ்ச்சியைக் கொண்டாடும்' என்ற சர்வ. 39:14 வசனம் இவருக்குப் பொருந்தும்.

அண்ணலின் மறைவு கேட்டதும் சபையே உருகியது. ஆனால் தூய ஆன்மா வாழ்வின் சிறையில் எத்தனை காலம் அடங்கிக் கிடக்கும்? விண்சென்றும் மண்ணிலும் மேலாய்த் தன் சபையை அவர் அன்புக் கண்கொண்டு பார்த்து இடையறு உதவியளிக்கிறார், மறைவிலும் வெளிப்படையிலும். இதோ தந்தையின் பேரால் திறக்கப்பட்டுள்ள குடிசைத் தொழிலகமும் அதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

எம் இனிய குடும்பத்திற்கு எமது நன்றியை எங்ஙனம் காட்டவல்லோம்? சபையின் உபகாரிகளுக்கெல்லாம் எமது ஜெபத்தில் பங்குண்டெனினும், சபையின் ஒவ்வொரு மடமும் அந்நாள் தொட்டு இந்நாள்வரை, பெரைரா குடும்பத்திற்கென தினமும் குறிப்பிட்ட வேளையில் ஒரு தனி வேண்டுதல் புரிகின்றது என்பதை அன்புடன் தெரிவிக்கின்றோம்.

அண்ணலின் மறைவுபற்றி வந். ரோச் ஆண்டகை தம் சொற்பொழிவில் கூறியபடி 'அவர் சர்வேசுரனுக்கும், மனிதருக்கும் பிரியப்பட்டவர். அவரது நாமம் என்றென்றைக்கும் போற்றப்படும்'. அமலோற்பவமாதா சபை உள்ளளவும், அவரதும் அவரது குடும்பத்தவரதும் நாமம் போற்றப்படும். இறைவனது ஆசீரும் வரம்பின்றிப் பொழியும்.

வாழ்க பெருந்தன்மையும், பேரிதயமும் கொண்ட பெரைரா குடும்பம் வாழையடி வாழையாக!

Sr. Regina Mary

மனிதருரைக்கும் வீண் வார்த்தைக்கு மோர்நாள் கணக்கிறுக்க வேண்டுமாங் காண். (மத். 12:36)

வாழ்த்துகின்றோம் !

1. அன்னை மரி லூர்து பதியன்றோர் நாளே
   அமலவன்னை நாமே யென்றுரைத்துச் சென்றாள் :
பின்னொருநாள் பாத்திமாவில் காட்சி தந்து
   பாவிகட்காய்த் தபசு செய்ய விழைந்து நின்றாள் ;
தன்னிகரில் ஆண்டவனைத் தள்ளியோடும்
   தனயரெலாந் தன்னிடத்துக் கொணரத்தேவன்,
இந்நாளில் மாமரியை அனுப்புகின்றான் ;
   இது காலம் மாமரியின் காலமாமே.

2. அன்னையமலோற்பவத்தின் அன்பு தூண்ட
   அவள் தனையே வாழ்க்கையிலக்காகக் கொண்டு
மன்னிய இவ்வுலக வழி வெறுத்து நாளும்
   மாபரனின் திருவழியைக் கடைப் பிடித்து
நண்ணு துறவினை விரும்பும் வனிதையோர்க்கு
   நல்லதொரு துறையெனவோர் சபையைக் கண்டார் ;
எண்ணுயர்ந்த இச்சபையின் ஐம்பான் ஆண்டே
   இன்று நிறைபெற்றதுவுங் களித்தற்பாற்றே.

இல்லாத நன்மை யிருப்பதாகக் காண்பித்தல்
பொல்லாத கர்வப் புரை.

3. ஆயிரத் தொள்ளாயிரத்துப் பதினொன்று மாண்(டு)
அரும்பதி பஞ்சம்பட்டி தனிலே தோன்றி
மேவுதமிழ் மதுரையிலே வளர்ந்து நின்று
விரவுபுகழ்த் தமிழக மெங்கணுங் கிளைத்துப்
பாவையரின் ஒழுக்கமொடு கல்வி யெல்லாம்
பரிந்தோம்பிக் கிறித்துவத்தை வளர்க்குமுந்தம்
சேவையினைக் கண்டு களித்து வந்தோமந்தத்
திருப்பணியில் எந்நாளும் வளர்க மாதோ!

4. தரணிதரும் பல்வகைத்துத் தனங்களின் மேல்
தரித்திரத்தைத் தமதுயர்ந்த தனமாய்க் கொண்டே,
உரிமைகட்காய் யாவரும் போராடும் நாளில்
கீழ்ப்படிதல் உரிய சுதந்திரமாய்ப் பேண,
விரத்தத்துவத்தை யணிகலனுய் விரும்பிப் பூண்டு
விண்மலரும் புனித வழிதனையே போற்றிப்
பரித்தியாக வாழ்க்கையினை வாழ்ந்து நிற்கும்
வநிதையரின் தவ வாழ்க்கை செப்பற்பாலோ!

5. ஆயவளம் அத்தனையுஞ் செறிந்து நின்றும்
அமலபரன் ஒரு வழியை அறியா நிற்கும்
தாயகத்தைத் திருப்பரனின் பதத்திற் சேர்ப்பத்
தம்முடலோடுயிர் யாவும் தத்தஞ் செய்த
தூயதொரு வாழ்க்கையினை வாழும் நீவீர்
சுடர் விளக்காய்த் தமிழகத்தின் இருளை நீக்கித்
தாய் மரியின் தண்ணருளின் நிழலில் நாளும்
தழைத்தோங்கி வளர்ந்திடவே வாழ்த்துகின்றோம்!

மறைத்திரு. பிரான்சிஸ் முருயிஸ், சே. ச.

Rev. Fr. Joly S. J. 1919 — 1924



Rev. Fr. J. Planchard S. J.
1912 — 1918
1941 — 1959

Rev. Fr. Mahe S. J.
1925 — 1930

OUR DIRECTORS

Rev. Fr. J. Kueny S. J.
1931 — 1937

Rev. Fr. Marianus Amalorpavam S. J.
1937 — 1941

Our Present Director Rev. Fr. R. Gnanapregasam S. J.
with His Excellency
The Rt. Rev. James Mendonça
Bishop of Tiruchriapalli



Rev. Fr. Augustine Turlan S. J.
Our Religious Instructor
from 1917 onwards

THE CONGREGATION OF THE "IMMACULATE CONCEPTION" MADURAI-ITS ORIGIN AND EARLY LIFE

Inscrutable are the ways of Providence. The truth of this saying is amply illustrated in the origin and early life of the Congregation of the Immaculate Conception, Madurai— Normally convents and congregations are started in big Catholic towns which are the headquarters of Bishops and Priests. But in the case of this congregation, everything started from a small obscure village called Panjampatti, a few miles away from Dindigul Town and far away from Trichy where the Bishop resides. The following is a brief account of the interesting story how this congregation came into being in Panjampatti and developed far and wide.

It is seen from the recorded history of the parish that as early as 1835 Panjampatti was one of the villages under the Goanese Fathers in Mettupatti. It was in 1835 that a resident priest Fr. Mousset was sent to Panjampatti. Subsequently in 1842 the Jesuits took over the administration of this parish, with the saintly Fr. St Cyr (இஞ்ஞாசியார்) as its first Parish Priest. At this time the area of the parish was coterminous with the civil division of the Sub Collector, Dindigul and extended from the Palani hills on the west to the Sirumalai on the east.

The history of the congregation which is now celebrating its golden jubilee began in the last decade of the last century 1890—1899 when Fr. Larmey (அமிர்தநாதர்) was the Parish Priest. During his regime it was that four young women of this village got the inspiration to remain celibate and devote their life to acts of charity. It was a happy coincidence that at this time there was in the presbytery a lay brother past middle age (called Sanniyasi) Rev. Br. Augustine Pereira, who was preparing himself for priesthood under the able guidance of Fr. Larmey, and who was assisting him

in apostolic works like teaching catechism, attending the sick and all other matters connected with Parish administration. Br. Augustine was a scion of an aristocratic family of Tuticorin, the late Mr. F. X. Pereira being his younger brother, who had extensive business in Colombo. The four aspirants approached Br. Augustine to help them to study and expressed their desire to remain single. Br. Augustine by his studies and training under Fr. Larmey, was well qualified to guide them. By means of gentle probes and prods he discovered that the four women had a call to become Religious and so he taught them the 3 R's, encouraged them in their aspiration and eventually prepared them to embrace the religious life. The parents of these women wanted them to marry and even refused to support them if they remained single. Br. Augustine got over all obstacles by making the women work for their living and with the financial help of his brother in Colombo, he purchased a house for them, erected a compound round it and did everything to stabilise their vocation. Finally on 2nd February 1899 the feast of the Purification of Our Lady the four women (hereafter called sisters) started their secluded life in the convent. This was preceded by a solemn procession when the sisters went round the streets clad in white with candles in hand and accompanied by villagers. They went to the church and dedicated themselves and their lives to the service of God. The names of these four sisters were Srs. Yagammal, Visuvasam, Annammal and Savariammal.

Br. Augustine was ordained a priest in Tuticorin in 1900 and now became the regular Director of the small community of sisters. He worked heart and soul for its spiritual and material progress. Like St. Paul he became all in all to the sisters. Rev. Fr. Augustine is therefore regarded as the Founder of this congregation. But I may say on the authority of the recorded notes of the late Fr. Kuney S. J., Superior of Madurai District, and later Director of this convent, that Fr. Augustine did everything under the direction and approval of his GURU Fr. Larmey who was Parish Priest from 1876 to 1901. It was Fr. Larmey who gave the sisters the name of "BEATES" on the model of the "BEATES" of central France.

These were devout women in secular dress founded by Mother Martel and trained by the Teaching Ladies (Dames de L' Instruction) at Le Puy. Their duties were teaching catechism, nursing the sick, training women in craft work and all other christian works of mercy.

இமைத்துன்பிற் சீரு திதயத்தைக் காத்தல்
அமைதி யெனும் பொறுமை யாம்.—போனவெந்த்

In due course however the congregation was given the name of the Immaculate Conception. In fairness to Fr. Larmey, he must be considered the Co-Founder of this congregation.

To meet the material needs of the sisters Fr. Chinanppar, Asst. Parish Priest, collected alms and invested it on some sheep. I have heard my mother say that it was my father the late Antonimuthu Ubadesiar (Catechist) who did the actual work of purchase, upkeep and disposal of the sheep. This became the nucleus of a fund which was generously supplemented by the late Mr. F. X. Pereira and later on by his sons and grand-sons. A permanent endowment was also made by the Pereira family by the purchase of wet lands for their maintenance.

In 1904 Rev. Fr. Nespoulous became the Parish Priest of Panjampatti. He was a great scholar and a man brought up in the liberal school. Under his guidance and leadership the congregation reached a higher stage of stability and progress in secular education and spiritual formation. By this time many more had joined the convent and some of them were sent to the Teachers' Training school at Trichy. With the permission of the Bishop, Fr. Nespoulous negotiated with the nuns of the St. Joseph's European convent at Madurai to start a Novitiate for the sisters and to train them as novices for religious life. Under this arrangement Fr. Augustine led the first batch of 7 sisters to Madurai and left them in charge of Rev. Mother Patrice. This was on 2—7—1911 and it is this event fifty years ago that marks the first important land mark in the history of the congregation for reckoning 50 years of life and celebrating its Golden Jubilee now.

Good Fr. Pereira was called to his eternal reward on 21—10—1911. The nuns were grieved beyond measure but Fr. Nespoulous consoled them assuring them of all help. The late Rev. Fr. Kuney says in his notes on the congregation "that Divine Providence saw to it that Rev. Fr. Nespoulous took great pains to promote the interests and continue to foster the new congregation. It was he who gave it a real shape and guided its first steps and who had the largest share in its spread." Rev. Mother Patrice the Novice mistress was well qualified for the task entrusted to her. Of a kindly and genial temperament Mother Patrice spent all her life in shaping and forming not only the novices but also was a source of great help in the administration of the several branches by her constant advice and unfailing sympathy.

Five nuns took their first vows on 8—9—1913. In course of time, the

Mother House also was transferred to Madurai. Like the mustard seed that fell on good soil the congregation has grown from strength to strength and in the course of these 50 years it has developed into 52 convents and one Novitiate with a total strength of about 500 members spread over the four districts of Madurai, Tiruchy, Ramnad and Tirunelveli.

The chief and special characteristic of these sisters is their simplicity. They are mostly drawn from villages, retain their simple habits of living, and, work unostentatiously among the poor and common people. They run two high schools and a Training school in Madurai, have numerous Higher elementary schools and Elementary schools, teach catechism, prepare people, especially women and children, for the sacraments and assist Parish Priests in numerous other ways and works of mercy. They are clothed with the blue robe, the mantle and emblem of our Lady of the Immaculate Conception who is their model and pattern.

Their simple ways have endeared them to the people wherever they go as much so that people move with them as their own kith and kin and derive untold benefits for body, mind and soul. No wonder this congregation has spread so rapidly and is still in great demand.

The Catholics of the southern part of South India, especially the poor and the common people, join the jubilarians on this auspicious occasion and pray to God Almighty to bless them with still more abundant graces; and they gratefully join the chorus in singing the "MAGNIFICAT" recalling the words of Our Lady: "He hath regarded the humility of his handmaid, for behold from henceforth all generations shall call me blessed."

Crescat! Floreat!!

May the Congregation grow and flourish!

Tiruchendur
9—3—61

P. A. Antony,
Retired Dy. Collector

மற்றோர் மொழியை மனவமைதி யாக்கேட்டுக்
குற்ற மிலாவுரை கூறு. — ஞானி



தேவனே ! என் தேவனே விடியற்காலம் விழித்து நான் உம்மைத் தேடுகிறேன், என் ஆத்துமம் உமதுபேரில் தாகம்கொண்டது. (தாவீ சங். 62 : 1)

ஆண்டவரை அவருடைய
செய்கைகளில் தோத்தரியுங்கள்.
(சர்வ. 39 : 19.)

ஆண்டவரே, உமது வீட்டில்
வாசம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் !
(சங். 83 : 4)

அவர் திருநாமத்தைக் கீர்த்தனம்பண்ணி
உங்கள் தோத்திரத்தால் அவரது
மகிமையைக் கொண்டாடுங்கள். (சங். 65 : 1)

துறவிகளின் மகிழ்ச்சியை உலகம்
அறியுமானல் !

His Grace with the Postulants

உத்தம னாகுதற்(கு) உள்ளவை தானமிட்டுக்
கத்தனைப்பின் பற்றக் கடன். (மத். 19 : 21)

Vestition

அவர் எனக்கு இரட்சணியத்தின்
வஸ்திரத்தைத் தரித்து
நீதியின் உடுபாவனையால்
என்னை ஜோடிப்பார். (இசை. 61 : 10)

In the Novitiate



கடினமான வேலைகளை
வெறுக்காதே. (சர்வ. 7 : 16)

தேவா உன் கருணையை என்றும்
என்றும் நினைந்து, தூய உன் திருவடி
பணிந்து மகிழ்வேன் என்றும்.

First Vows



ஞானவான்கள்

ஆகாய மண்டலத்தில் நட்சத்திரங்களைப் போல் என்றென்றைக்கும் பிரகாசிப்பார்கள். (*தானி*. 12:3)

1. அன்னை அகுஸ்தீன்மரி

அமலவை ஈன்ற முதற் கனிகள் ஐந்தனுள் தவத்திரு அன்னை அகுஸ்தீன்மரி ஒருவர். அப்பெருந்தகையார் பஞ்சம்பட்டியை அடுத்த சூசைபட்டியில் 21—5—1887-ல் தோன்றினர். இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் திருவடிகளையே உறுபொருளாக எண்ணி உலகியற் பொருட்களில் உள்ளத்தைச் செலவிடாது வாழ்ந்தவர்.

அன்னார் துறவுநிலை பூணும் தூய எண்ணத்தோடு பஞ்சம்பட்டியில் கருவாகிக்கொண்டிருந்த அமலோற்பவமாதா கன்னியர் குழுவில் 1904-ல் சேர்ந்தார். வரலாற்றில் காணுமாப் போல் 1911-ம் ஆண்டு மதுரையில் முறைப்படித் தொடங்கப்பட்ட நவசந்நியாசத்தில் புகுந்து 1913-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ம் நாள் மூன்று வார்த்தைப்பாடுகளால் தம்மை இறைவனுக்கு நேர்ந்தார். 1914-ம் ஆண்டு பஞ்சம்பட்டியில் மறைத்திரு. நெஸ்புளூஸ். சே. ச. அடிகளின் தலைமையில் சபையாருக்குள் நடந்த முதல் தேர்தலில் சபையின் முதல் அதிசிரேஷ்டத் தாயாராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்று வருடங்கள் அப்பதவியில் அவண் இருந்து அச்சீரிளங்கன்றுச் சபைக்குத் தம் பேருழைப்பால் ஆற்றிய தொண்டுகள் பல. சூழ வாழ்ந்த மக்களுடன் அன்போடு பழகி, ஞான உதவிகள் அளித்ததுடன் கன்னியராகும் ஆர்வம் கொண்டிருந்த சிலரை ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு அனுப்பினர். கிளைமடங்கள் தழைத்தன. அவர்களைக்கொண்டு பள்ளிகளை அமைத்து சிறுவர் சிறுமிகளுக்கும், ஓய்வு நேரங்களில் வயது வந்த பெண்மணிகளுக்கும் கல்வியறிவை ஊட்டி வந்தனர்.

மீண்டும் 1923 முதல் 1940 வரை தொடர்பாக சபையின் அதிசிரேஷ்டத் தாயாராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதே அன்னவரின் குணப் பெருமைக்கு மற்றுமோர் சிறந்த சான்றாகும். 1923-ல் தாய்மடம் மதுரைக்கு மாற்றப்பட்டது. அன்னையின் இருப்பும் மதுரையே ஆயிற்று. இவர் ஆளுகையில் உருவான கிளைமடங்கள் 25. இவருட்பட 5 அங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட சபை 249 அங்கங்களுடன் விளங்கியது. சபைக் கன்னியர் உடையிலும் படிப்படியான மாற்றம் கொண்டது இவர் காலத்திலேதான். அன்னையின் புனித வாழ்வின் அருந்தனங்கள் பல. என்றும் எளிய வாழ்வு, ஆழ்ந்த தாழ்ச்சி, எவருக்கும் இன்முகம் கொடுத்துப் பேசும் பண்பு, குற்றம் புரிவோரைக் கடுஞ்சொல் இன்றி அன்புடன் கண்டிக்கும் பெருந்தன்மை, நன்றியுள்ளம் விசேடமாய் சபை உபகாரிகளிடம், குறிப்பாய் பெரைரா குடும்பத்திடமும். என்றுமே நொய்ந்த பலக்குறைவான உடலுடையவர், எனினும் போக்குவரத்து வசதிகள் மிகமிகக் குறைந்த அக்காலத்தில் எங்கெங்கும், குறிப்பாய் கால் அங்குல மழைக்கும் கழுத்தளவு சகதி ஏறும் சூராணப் பகுதிகளிலும் சுற்று விசாரணை செய்யப் பேரார்வம் உந்தும் மனவலியும், கடமையில் கருத்தும் கொண்டவர். அவரது சாதனைகள்தான் சபை மக்களுக்குப் பெரும் போதனையாயிருந்ததல்லாமல் பெருங் கூட்டங்

சற்றநல்லி காண்பிக்குங் கண்ணாடி யாமபொறுமை
மற்றோர் வசையை மறந்து. — ஞானி சாலமோன்,

களில் சபைமக்களிடம் கூடப் பொதுவில் அதிகம் பேசக் கேட்டறியோம்.

அன்று சில செம்படவர்களைக் கொண்டு யேசு பெருமான் தம் திருச்சபையைத் தொடங்கினார். அதன் செழுமையைக் காண்கின்றோம். இன்று பாண்டியத்தில் குறைந்த ஆனால் அவரது திவ்ய வரங்களை வீண் செய்யாது பயன்படுத்தும் பாங்குவம் நிறைந்த ஐவரைக்கொண்டு தன் தாயின் பொன்னுமம் புனைந்த சபையைத் தொடங்கினார். இறைவனே அமைத்த அடிப்படையல்லவா? இதோ குறுகிய 50 ஆண்டில் அதன் குளிர் நிழல் தமிழகமெங்கும் விரிந்து எங்கிலையில் உள்ளார்க்கும் இதம் புரிய முன்னிற்கிறது.

பதவியில் விடுதலை பெற்றதும் கோசாகுளம் கிளைமடத்தில் சில ஆண்டுகள் தாயாராகப் பணியாற்றினார். உடல் வலு மிக மிகக் குறைந்தது. ஓய்வெடுக்கும்படி பஞ்சம்பட்டிக்கு அனுப்பப்பட்டார். உழைத்த கட்டைக்கு உழைப்பே ஓய்வுதரும் ஆதலின், அங்கு சின்னஞ் சிறு பாலருக்குக் கல்வி கற்பிப்பதையும் எஞ்சிய நேரத்தில் தோட்டப் பணிகளில் ஈடுபடுவதையுமே ஓய்வாகக் கொண்டார். பதவி வகித்த கால முதலே இருதயத் துடிப்பு எனும் நோய் ஒவ்வோர் சமயம் தலைக்காட்டும். பிற்காலத்தில் அடிக்கடி தலைக்காட்டி அல்லல்படுத்தியது. நோயால் அல்லலுறும் வேளை தவிர பிற சமயங்களில் பொது வாழ்வில் ஈடுபடவும், வழக்கம் போல் தன் பணிகளை ஆற்றவும் மறந்தவரல்லர். ஞான முயற்சிகளுக்குக் குறிக்கப்பட்ட நேரங்களில் இறுதிநாள்வரை முதல் ஆளாய் இருந்தார். பிறரைப் பற்றி யாரேனும் குறை கூறின் ஒன்றில் மௌனியாகிவிடுவார் அல்லது மெதுவாய் அவ்விடத்தினின்றும் நழுவி விடுவார். ஒரு நிமிடத்தையேனும் வீணில் கழியாது ஏதேனும் ஒரு கைவேலையில் ஈடுபட்டிருப்பார்.

1960, சபையின் பொன்விழா இன்னிசை தூரத்தில் ஒலித்தது. முதற்கனியன்றோ, எத்தகைய ஆர்வமிருந்திருக்கும்! மதுரை வருவோம், விழாவை மாண்புடன் கொண்டாடுவோம் என மகிழ்ச்சிக்கடலில் நீந்தினார். வார்த்தையிலும் வெளியிட்டார். ஆனால் இறைவனின் திட்டம் வேறாக இருந்தது. மண்ணில் அவையைத் தொடங்கியவர் விண்ணில் மின்னும் அவைக் கன்னியர் அனைவருடனும் பொன்விழா விருந்தைச் சுவைக்க வருமாறு தேவன் அழைப்பு விடுத்தார். விண் அழைப்பு வந்த மண்ணின் அக்கடைசி நாளிலும் (8–6–1960) மாலை $5\frac{1}{2}$ மணி வரை வழக்கம்போல் தன் வேலைகளைச் செய்தார். ஆறு மணிக்கு ஏதோ ஒரு மாதிரி வருகிறதெனத் தனது சகோதரிகளில் ஒருவரிடம் சொல்ல, சற்று ஓய்வெடுக்கும்படி சகோதரி கூறினார். சிறிது தூரம் சென்றவர், மேலும் செல்ல முடியாது தாழ்வாரத்திலேயே படுத்து விட்டார். முதலுதவிகள் புரிந்து படுக்கையில் கிடத்தினர். வைத்தியரும் வரவழைக்கப்பட்டார். சுமார் 7 மணிக்கெல்லாம் நிலைமை மோசமானது. இறுதித் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று அமைதியாய் ஆண்டவரிடம் ஏகினார்.

Sr. Fatima Rosary.

2. சகோ. பெனடிக்தா மேரி :

1941-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ம் நாள் பெரிய வியாழன்: ஆலயத்தில் நற்கருணைப் பேழை முன் ஒரு கூட்டம் ஆராதனை செலுத்த, மற்றொரு கூட்டம் கோசாகுளம் வியாதிக்காரர் மடத்தில் உயிரற்ற ஓர் உடலைச் சுற்றி வேண்டுதல் செய்து கொண்டிருந்தது. அவ்வுருவின் பருத்த தோற்றமும், முகமும் காட்டின அவ்வுருவம் உயிரோடிருக்கையில் எத்தகைய வேதனைக்கு உள்ளாயிருந்தது என்பதை. இதுதான் தன்னலம் துறந்து பிறருக்காக வாழ்ந்த சகோதரி பெனடிக்தா மேரியின் உடல். இவர் பிறந்த இடம் சபையின் அண்டமாம் பஞ்சம்பட்டி. தோன்றிய நாள் 21–10–1903. 1923-ல் சபை

யில் சேர்ந்தார். சபையில் அவரது வாழ்வு மிகக் குறுகியதே. ஆனால் நீண்ட காலத்தை நிறைவு காட்டியவர். அவரிடம் கற்ற மாணவியர் அவரது தாயன்பை இன்றும் கூறிப் போற்று கின்றனர். வியாதியோடு போராடிக்கொண்டே தொழில் புரிந்தார். வைத்தியரின் ஏவலால் ஓய்வுக்காக வியாதிக்காரர் மடத்திற்கு அனுப்பப் பட்டார் சில ஆண்டுகள். ஓய்வுக்காக என்பது பெயர், ஆனால் நோயுற்றோர்க்கு ஆறுதலின் பாத்திரமாய் விளங்கினார் அங்கு. தன்னை மறந்து வியாதியால் அல்லலுறும் சகோதரிகளுக்குப் பணிபுரிந்தார். எத்தகைய இழிந்த வேலைகளையும், உவந்த மனதுடன் தானே வலியச்செய்தார். தாழ்ச்சியும், பிறர்சிநேகமும் அவரிடம் போட்டியிட்டுப் பொங்கி வழிந்தன. வியாதிக்காரர் தம் வேதனையை மறந்து உல்லாசங் கொள்ள நகைச் சுவை ததும்பும் பேச்சுக்கள் பேசி, விளையாட்டுக்கள் காட்டுவார். இரவில் தூக்கக் குறைவிருந்தும் பகலில் பிறர்பணியையே இளைப்பாற்றுதலாகக் கொண்டார். இறுதியில் தூர்ப்பலமுள்ள மாமிசம் அசையக் கூடாத அளவு வீங்கி படுக்கையில் கிடத்திவிட்டது. இப்போதாகிலும் வேதனையைக் காட்டவேண்டுமே. என்றும் சிரிப்பு நடமிடும் அதே முகம். கால்களின் வீக்கம் எவ்வளவு மிகுந்ததென்றால் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டனவாம். இந்நிலை கண்டும் இந்த வீரக் கன்னி மனம் கலங்கவில்லை. விகடப் பேச்சுக்களால் உதவி புரிபவர்க்கு மகிழ்ச்சியளித்தார். காலமும் தபசுகாலம், ஆறும் வெள்ளி, வியாகுலமாதா திருவிழா வன்று காலை $9\frac{3}{4}$ மணி முதல் $11\frac{3}{4}$ வரை கண் மூடியிருக்க மயக்க முற்றிருந்தாராம். தெளிவடைந்தபின் எப்படியிருந்ததென விசாரணைச் சகோதரிகளில் ஒருவர் கேட்க (இவர் உயிருடன் இருக்கின்றார்.) சொல்வதற்குச் சிறிது காலம் தாழ்த்தினார். வற்புறுத்தலின்மேல் "நமது ஆண்டவர் அடிபட்டு இரத்தம் கசியும் உடலுடன் முண்முடி சூட்டப்பட்ட முறையில் காணப்பட்டதாகக்" கூறினாராம். இந்நிகழ்ச்சிக்குப் பின் சுமார் ஒரு வாரம் முன்கூறிய வேதனைகளை அநுபவித்து 9—4—41 பெரிய வியாழன் காலை 8-30 மணிக்கு அமைதியுடன் தன் அன்பரிடம் ஏகினார். இவரது உடன் சகோதரிகளில் மூவர் இன்றும் இதே சபையில் இறைவனுக்குப் பணியாற்றுகின்றனர்.

தனக்கு எத்தகைய இன்னல் செய்பவரையும் மன்னித்து அன்புடன் உதவி செய்யும் பெரு மனம் கொண்டவர் என்பதை கண்கண்ட சாட்சிகள் கூறுகின்றனர்.

Sr. Mary Immaculata

144423

3. சகோதரி தெரஸ் மேரி

புனிதவாளர் சரிதையில் காண்பது போல், அவர்களைப் புனிதராக்க இறைவன் காட்டும் வழிகள் பலதிறத்தவை. அன்னவற்றில் சகோதரி தெரஸாவிற்குக் காட்டியதும் ஒன்று. அமல அவை வித்து உருவான பஞ்சம்பட்டியில் 1—5—1881-ல் தோன்றியவர். வித்து உருவாக்கப்பட்ட அந்த நாளிலேயே அச்சிறு குழுவுடன் சின்னாள் வதிந்த இவரின் சிறந்த குணம் நவசந்நியாசம் முதன் முதல் தொடங்கிய எழுவரில் ஒருவராக எண்ணிடச் செய்தது. இருவர், நவசந்நியாசத்திலேயே விண்வீடு செல்ல நவசந்நியாசம் முடித்து அவைக்கு முதல் மணிகளாக ஒளிவீசிய ஐவருள் ஒருவராய் 8—12—1913-ல் வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தார். 2—6—1920-ல் தொடங்கப்பட்ட மலையடிப்பட்டி மடத்தில் தாயாராகப் பணியாற்றினார். இயல்பிலே கடின வேலைகளைக் களிப்புடன் செய்வார். உழைப்பில் ஆர்வமும் பொறுப் புணர்ச்சியும் மிகுந்த இவர் நல்ல தேகக் கட்டும் கொண்டிருந்தார். மடத்திற்காக ஒரு கிணறு வெட்டப்பட்டது. அதில் கற்களை வாங்கிக் கொட்டுவதில் ஈடுபட்டிருந்தார். தவறி பாறைப்பாங்கான பள்ளத்தில் விழுந்தார். பெருங் காயத்துடன் மூட்டுகள் சிதைந்தன. கடின

144423

சிகிச்சையின் பயனுக உயிர் பிழைத்தார். ஆனால் வாழ்நாளெல்லாம் நடமாட முடியாது, முடக்கி உட்கார்ந்த நிலையிலேயே இருக்கவேண்டிய நோயாளியானுர். இடுப்பிற்குக்கீழ் உணர்ச்சியும் அற்றுப்போயிற்று. இந்நிலையில் உயிர் வாழ்ந்த காலம் 27 ஆண்டுகள். இக்காலம்தான் அவரிடத்தில் மறைந்துகிடந்த மாணிக்கங்கள் ஒளிவீசின. தனது நிலைமை பற்றி முறையிடாது தேவ திரு உளத்திற்குப் பூரண பணிவுடன் இருந்தார். இருந்த நிலையிலேயே இடையரு உழைப்பு. 1932-ம் ஆண்டு முதல் அவர் மரிக்கும் காலம் வரை சபைக் கன்னியர் அனைவரும் இடுப்பில் அணியும் ஜெபமாலைகள் (முரட்டுக் கம்பியால் ஆனவை) அத்தனையும் அவராலேயே கட்டப்பட்டன. பீடங்களை அலங்கரிக்கும் விதவிதப் பூக்களை மிகுதியும் உற்பத்தி செய்தவை அவரது கரங்களே. ஒரு நிமிஷமும் ஓய்ந்திரார். இவரது நிலைகண்டு பிறர் வருந்தினும், இவர் என்றும் மலர்ந்த முகத்துடன் தோன்றுவார். சபையைத் தன் உயிரென நினைத்து நேசித்து இடையருது உழைத்தார். ஓர் தள்ளுவண்டியில் வைத்தே இவரைக் கோவிலுக்குக் கொண்டு செல்வர். தன்னால் பிறருக்கு ஏற்படும் சிரமத்தை நினைத்து மனம் வருந்தினும் மழையோ, குளிரோ நாள் தவருது திவ்ய பலியில் பங்கேடைவார். பல சமயங்களில் கால்கள் இரண்டும் வீங்கிப் புண்ணாகிவிடும். இவ்விதம் சொல்லொண்ணு வேதனையை அநுபவித்த இப்புண்ணியவதி 9—1—1950-ல் அமைதியுடன் தன் அன்பரிடம் ஏகினுர்.

Mother Mary Bernard

4. சகோதரி ஞானப்பிரகாசி:

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்குச் சில கல் தொலைவில் உள்ள பிரபுக்களூரில் 2—7—1960-ல் இவர் பிறந்தார். ஆசிரியப் பயிற்சி முடித்து சில ஆண்டுகள் பணியாற்றிய பின் 1934-ல் அவையில் சேர்ந்தார். முதல் வார்த்தைப்பாடுகள் கொடுத்தபின் புதிதாய்த் தொடங்கப்பட்ட சிங்கம்பாறை மடத்தில் சேவையாற்ற அனுப்பப்பட்டார். அயராது சேவையாற்றிய இவருக்குச் சில ஆண்டுகளிலேயே அயர்ச்சி மேலிட்டது. மதுரைக்கு அனுப்பப்பட்டார். மருத்துவருக்கும் வியாதியின் உண்மை நிலை புரியவில்லை. வெளித் தோற்றத்தையே காணும் உலகம், அனுதாபமற்ற முறையில் வார்த்தைகளைக் கொட்டியதால், நோயின் கொடுமையிலும் இக்கொடுமையால் சகோதரி மிக வேதனையுற்ருர். எனினும் பொறுமையைப் பெரும் மருந்தாக அருந்தி இறைவன் திரு உளத்திற்கு அமைந்திருந்தார். வருடமும் ஓடியது. வாதனையும் கூடியது. இக்காலத்திற்ருன் மருத்துவர் அறிந்தனர் குடற்காசம் என்பதனை. சகோதரியின் வியாதித் தன்மையும், அவரது பொறுமையும் மருத்துவரையே வியப்பிலாழ்த்தியது. இறுதியாக நோயாளிகள் மடத்திற்கு அனுப்பப்பட்டார். சில நாட்களின்பின் உடம்பெல்லாம் ஒரே வீக்கம். அசையக்கூடாத நிலை. முந்த அவரை அலட்சியம் செய்தவர் மனம் உருகினர். வாட வாட மருவின் மணம் மிகுந்து பரவுவது போல், வியாதியின் கொடுமை அதிகரிக்க அதிகரிக்க இவரது புனிதத்தின் வாசமும் மிகப் பெருகியது. இவரைக் கவனித்த சகோதரி கூறினுர்: "ஒரு வேதசாட்சியின் வேதனை அனுபவித்தார்" என்று. இறுதியாக 13-12-1938-ல் இறைவன் தனக்குத் தயாரித்திருக்கும் எழில் முடியைப் பெறப் பறந்து சென்ருர். மாணத்தின்பின் அவர் வழியாய்க் கேட்ட சில விண்ணப்பங்களிலும் வெற்றிகண்டதாக சகோதரிகள் கூறுகின்றனர்.

Sr. James Amali Therese.

5. சகோதரி லூயி பிலிப்பெர்ட் மேரி:

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கொசவபட்டியில் 10—9—1925-ல் தோன்றியவர். இளமை முதலே குதூகலம் மிகுந்த இவ்விள

குக்கன் செவிபற்றுங் கொள்கையே மற்றவர்
சச்சரையிற் போய்க்கலத்தல் தான். — ஞானி சாலமோன்.

நல்லாள் தன் உயர்நிலைப் படிப்பு முடிந்தவுடன் 1945-ல் அவையில் சேர்ந்தார். வயதிற்கேற்ற சுறுசுறுப்பும், துடுக்குத்தனமும் உடையவராதலின் ஓடியாடி அலுவலாற்றுவதில் மிக மிக ஆர்வமுள்ளவர். வார்த்தைப்பாடு கொடுத்தபின் சுமார் 6 ஆண்டுகள் கிராமங்களில் பணியாற்றினார். இறைவன் அவருக்கனுப்பிய இனிய சிலுவை வாதநோய். தொடக்கத்தில் நோயுடன் போராடிக்கொண்டே அலுவலும் ஆற்றிவந்தார். நாளாவட்டத்தில் படுக்கையானார். தானே ஏதும் செய்ய இயலாத நிலை. நாளில் பல முறை கை கால்கள் இசிவுபோல் வெட்டும். எத்தகைய வேதனை! ஆனால் அவ்விளங் கன்னி தான் படுக்கையில் கிடப்பது பற்றியோ, இசிவின் வாதனை பற்றியோ முறையிடாது, சிரிப்பும் குதூகலமும் நிறைந்த முகத்துடன் வேதனையைத் தன் அன்பருக்காக ஏற்ற வகைதான் அனைவருக்கும் பெரும் போதனையாக இருந்தது. அவர் இன்னலுறுகையில் காண்பவர் கண்களில் நீர் துளிக்கும்; அவர் முகத்திலோ புன்முறுவல் தவழும். சபையில் அவர் வயது மிகமிகக் குறுகியது, எனினும் நோயில் குறிப்பாய்ப் படுக்கையில் வேதனை அடைந்த $1\frac{1}{2}$ ஆண்டும் அவர் ஆற்றிய சேவை நீண்ட காலத்தை நிரப்பியதெனின் மிகையன்று. அவரது வயது 33. 10-10-1958-ல் இச்சின்னஞ்சிறு மலர் இறைவனின் இல்லத்தை அலங்கரிக்கப் பறித்துச்செல்லப்பட்டது.

Sr. Regina Philibert.

Mother! Whose virgin bosom was uncrossed
With the least shade of thought to sin allied;
Woman! above all women glorified,
Our tainted nature's solitary boast;
Purer than foam on central ocean tost,
Brighter than eastern skies at daybreak strewn
With fancied roses, than the unblemished moon
Before her wane begins on heaven's blue coast,
Thy image falls to earth. Yet some, I ween,
Not unforgiven, the suppliant knee might bend
As to a visible power, in which did blend
All that was mixed and reconciled in thee
Of mother's love with maiden purity,
Of high with low, celestial with serene.

— *Wordsworth.*

This is indeed the blessed Mary's land,
Virgin and mother of our dear Redeemer!
All hearts are touched and softened at her name
Alike the bandit with the bloody hand,
The priest, the prince, the scholar and the peasant
The man of deeds, the visionary dreamer
Pay homage to her as one ever present!

And if our faith had given us nothing more
Than this example of all womanhood,
So mild, so merciful, so strong, so good,
So patient, peaceful, loyal, loving, pure,
This were enough to prove it higher and truer
Than all the creeds the world had known before.

— *Longfellow* (Golden Legend)

அதிமகிமை சண்டை யகற்றல் மதிகே
டதிற்காலத்த லாகும் அறி — ஞானி சாலமோன்.

சுந்தரி வாழி

1

ஆதியில் ஏதும் தோற்றுமுன் நாதன்
அகந்திகழ் அன்பின் உருவே அன்னே!
நீதியில் வழுவிய ஏதனின் தீவினை
பாதியாத் திருவே மாதவப் பொன்னே!
பாதகக் கூளியைப் பாதமே நசுக்கும்
வீர்நிறை ஏவையே தாவிதன் மின்னே!
மேதகு நின்றன் அமல உற்பவம்
வாழிய வாழிய வாழி அம்மே!

2

பழுதிலாக்கன்னி; பரமனின் அன்னை;
பாவிகள் தஞ்சம்; வரம்பிலா வரங்கள்
வழிந்திடும் வாய்க்கால்; வானவர் அரசி;
ஞானியர் வேதியர் நாயகி; நன்னெறி
நழுவினோர்க் குறுதி; நலிவோர்க் காறுதல்;
நனிபல சிறப்பால் ஒளிருதல் எல்லாம்
'முழுமையு மழகி' யெனுமருட் கடலில்
மூளைத்தபல் முத்துக்க ளன்றோ வாழி!

3

தேனிலு மினிமை மேவிடுந் திகட்டா
சேசுவின் திருநல் நாமத்தை விடுத்து,
வானிலும் மண்ணிலும் வம்புக்கு மிணையிட
வல்லதோர் பேருதான் இலையே; என்னே,
கோனுறு மதியால் பிரிவினை கொண்டும்
கூடியே என்றும் துதிக்கிறார் இப்பேர்,
கூனுறு பிறைதவழ் தாள்மலர் அமலி!
கொஞ்சியே போற்றுவோம் நின்நாமம் வாழி!

4

இனித்திடு கனிகளுங் கண்டுந் தேனும்
எடுத்தெடுத் தூட்டினும் ஏங்கிடு குழவி,
விழித்திரை தாய்முகம் பட்டிடக் கணத்தில்
திளைக்குமே மகிழ்வில்; தீஞ்சுவை யாவும்,
செழித்திடு கலைகளும் சேர்ந்தொளிர் உருவாய்,
சிந்தனை வாக்கெலாம் விஞ்சிடும் எழிலாய்
தழைத்திடு தாயெமை அணைத்திட வழிவழி
நிலைத்ததே களிப்பும் நின்நாமம் வாழி!

5

பெர்னார்ட் போலவுன் புகழ்பாட அறியோம்;
போமாண்ட் எபிரேம் புலமையுந் தெரியோம்;
அக்வினஸ் சௌத்வெல் ஆற்றலும் இல்லோம்;
மைக்கேல் நிகரோம் மாணுருத் தீட்டோம்;
கற்றதன் மகவின் கருத்துறு மடலினும்,
சிற்றிளம் குழவியின் பொருளிலா மழலை,
பெற்றவள் பேரின்பம் என்பதால் சின்மொழி
சொற்றனம் பற்றேடும் சுந்தரி வாழி!

Sr. Stanislaus

அக்கினிக்குக் கட்டையே யாகாரங் கோபிக்குச்
சச்சரை யாமெனச் சாற்று. — ஞானி சாலமோன்.

நாற்பத்தோராண்டுகள் நவகன்னியருடன்

" எனக்காக மாத்திரமல்ல, நன்மார்க்கத்தைத் தேடும் சகலருக்காகவும் உழைத்தேன் " (சர்வ. 33 : 18)

அன்னை பத்ரீஸ் என்ருலே சபைக் கன்னியர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓர் தனியன்பு துளிர்க்கிறது. ஏன்? தன் வாழ்நாளெல்லாம் அன்பைக் கொட்டி, பண்பை ஊட்டி அரவணைத்துக் காத்தாள் அமல அவைக் கன்னியரை.

புனித சூசையப்பர் சபையைச் சேர்ந்த, பிரான்சு நாட்டுக் கன்னியான இவர், ஆத்தும ஈடேற்ற அலுவலாற்றப் பாண்டியர் தலைநகரமாம் மதுரையம்பதியை அடைந்தது 1906-ம் ஆண்டு. 1911-ல் அமல உற்பவ மாதா சபையின் நவ கன்னியரைக் கண்காணிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நாளில் இருந்து கடைசி மூச்சுவரை சுமார் 41 ஆண்டுகள் தன்னையே அமலோற்பவ மாதா சபையின் நலத்திற்கும், வளர்ச்சிக்கும் அர்ப்பணித்தார் அந்த நல்ல தாய்.

வரலாறு கூறுவது போல் தொடக்கத்தில் மொழிப் பயிற்சியும், தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களும் அவர்களுக்கு எவ்வளவோ வேறுபட்டவை. அதனல் பின்னிடாது நவ கன்னியருக்கு ஞானக் கல்வியோடு, பிற தொழில்களையும் பயிற்றுவிக்க அரும் பாடுபட்டார். அவர்களது சொற்ப அபிவிருத்தியில் இதயம் பூரித்து அவர்களை மேலும் ஊக்குவித்தார். சகோதரிகளின் குற்றங் குறைகளில் கண்டிப்பும் காண்பித்தார்.

நவ கன்னியரைக் கவனித்தல் மட்டும் தன் கடமை என இருந்துவிடவில்லை. அவ்வக் காலங்களின் அதிசிரேஷ்டத் தாய்மாரின் முதன்மையான ஆலோசகராக இருந்து, சபையின் ஆட்சி முறையிலும் பொறுப்பு ஏற்றுப் பேருதவி புரிந்தார். தென்னிந்திய நாட்டின் வெம்மையையும், காடுமுரடான வழிகளையும் பொருட்படுத்தாது காடுமேடுகளிலும், சகதியிலும் மாட்டு வண்டிகளில் கிராமங்களில் வாழும் சகோதரிகளைச் சந்திக்க, அதிசிரேஷ்டத் தாயாருடன் ஆவலோடு சென்ற அவரது பிரயாணங்களைச் சற்றே சிந்தித்தால், "தேவ சிநேகம்" ஒன்று தவிர வேறெதுவும் அவரைத் தூண்டவில்லை என்பது தெளிவாகப் புலப்படும். ஒவ்வொரு சகோதரியுடனும் தனித்துப் பேசி, மகிழ்வாரோடு மகிழ்ந்து, துன்புறுபவருக்கு ஆறுதலும், மகிழ்ச்சியும் கொடுத்து, அவர்கள் ஞான வழியில் ஊக்கமாய் நடக்கத் தன்னல் ஆவன செய்வது இவரது அலுவல்களில் ஒன்று.

நல்ல தேவன் அந்தந்த அலுவலுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கையில் அதற்கு வேண்டிய உத்தம குணங்களையும் அவரவரிடம் நிறைத்து வைக்கிருர் என்பதற்கு ஓர் அரிய சான்று எங்கள் அருமை அன்னை பத்ரீஸ் தாயார். அவரது அந்திய காலத்திலுங்கூடத் தன் நோவை நோக்காது தன்னைச் சந்திக்க வருபவர் ஒவ்வொருவரிடமும் அவரது நலத்தை விசாரிப்பதே கன்னியரிடம் அவர் பேசிய பிரியாவிடைப் பேச்சாக இருந்தது.

1952 ஜூன் திங்கள் 17-ம் நாள் வேலைக் களைப்பு என்று தலை சாய்த்தார். ஐந்தே நாட்கள். ஜூன் திங்கள் 22-ம் நாள் ஞாயிறு 8 மணிக்கு அவரது 71-ம் பிராயத்தில் நித்திய வீட்டில் புகுந்தார். எமது அன்பும் நன்றியும் அவருக்கு என்றும் உரித்தாகுக. தாராளத்தில் தோற்கக் கூடாதவரான தேவனே அவருக்குத் தகுந்த சன்மானம் வழங்க வல்லவர். அன்னையின் ஆன்மா சாந்தியுறுவதாக!

Sr. Brigit Mary

வெளிப்புல வுட்புல வேட்கை யாற் றூய்மை
களங்கமுருக் காத்தலே கற்பு. — ஞானி சாலமோன்

கூரைக் குடிசையும் கொண்டல் தழுவும் மாளிகையும்

முன்னுரை :

வனப்பு மிக்க நீலநிற ஆடை அணிதலால் 'நீலக் கன்னியர் அவை' எனப் பெயர் பெற்றிலங்கும் அமல அவை தோன்றி, 50 ஆண்டுகள் ஆகின்றன. அந்த அவையின் பொன் விழா நினைவு வெளியீட்டு மலருக்குக் கட்டுரை வரையும் வாய்ப்பு எனக்கும் அளிக்கப் பெற்றமையை ஒரு பெறுதற்கரிய பேருகவே கருதுகின்றேன். நம் தண்டமிழ் நாட்டிலே மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் இக்கன்னியர் ஆற்றும் நற்றொண்டே இவர்கள் பெருமையைப் பறைசாற்றும். எனினும், இவர்களின் உயர்ந்த தொண்டினைக் குறித்துச் சில கூறுவது இம்மலருக்கு ஏற்றமுடையதாகும் என எண்ணுகிறேன்.

மரியன்னையின் வழியிலே

நாசரேத் சிற்றில்லத்திலும், ஜெருசலேம் மாநகரிலும் மரியன்னையின் பணி அன்று இடம் பெற்றதே போல, கூரை வேயப்பெற்ற குடிசைகளை உடைய சிற்றூர்களிலும், நாகரீகமும், நாகரீகம் அற்ற தன்மையும் கலந்து உறவாடும் மாளிகைகள் துலங்கும் நகரங்களிலும் இன்னவர் பணியும் இடம் பெற்றுப் பெருகி வருகிறது. மக்களுக்கு நன்மை புரியும் நன்னோக்கத்தைக் கொண்ட உள்ளத்தைப் பெற்றவர் அமல அவைக் கன்னியர். அவர்கள், 'நித்தியம்' ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, கிறீஸ்துபெருமான் ஈட்டித் தந்த இன்பப் பூமியை, ஏழை, செல்வர், கற்றோர், கல்லாதவர் என்னும் எல்லோரும் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு வாழுமாறு இவர்களிடை வேறுபாடின்றிப் பணியாற்றி வருகின்றனர். சுருங்கக் கூறின் தமிழ்நாட்டின் குக்கிராமங்களில் இவர்கள் பாதம் படாத இடங்களும், பார்வை செலுத்தாத ஏழைக் குடிசைகளும் இல்லை எனலாம்.

"மரியாள் தெரிந்து கொண்டது உத்தமமான பங்கு." மரியன்னையின் மக்களாம் இக்கன்னியரும் அப்பங்கையே தேடி தம் உத்தம பணிக்கு உதவியாம். தியானத்தையும், செப வழிபாடுகளையும் நாடித் துடிப்பாகக் கொண்டு, மக்களையும் அவ்வழியில் பயிற்றும் சிறப்பு மிக்கவர்கள்.

கல்விப் பணியும், கடவுட் சாட்சியும்

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது உயர்ந்ததோர் கொள்கை. ஆதலாலே இவர்களுள் பெரும்பாலோர் நாளின் பெரும் பகுதியில் கல்விப் பணியாற்றி, தாம் பெற்ற இன்பத்தை பிறரும் நுகருமாறு செய்து வரும் ஆசிரியர்மார். கல்வி, குழந்தைகளுக்கு இன்றியமையாதது அல்லவா? குழந்தைகள் பெறும் உலகியல் கல்வி அறிவால் மட்டும் அவர்கள் வாழ்வுக்கு உரிய முழு நலன்களையும் அடைய இயலாது. ஆதலின் நமது கன்னியர் தேனிலே பால் கலந்த கலவைபோல் கல்வியுடன் கடவுள் பற்றையும் ஒழுக்கத்தையும் ஒருசேர இன்பமுடன் பயிற்றுவிக்கின்றனர். இளம்

மானிடரிற் சற்பையொரு மாசிலாக் காப்பவன்
வானவருக் கொப்பாம் வழுத்து.

அநேகரை நல் வழியில் திருப்பினவர்கள்
நட்சத்திரங்களைப்போல் என்றென்றைக்கும் பிரகாசிப்பார்கள். (தானி. 12 : 13)



சமாதான சுவிசேஷத்தையும்

நன்மையின் சுவிசேஷத்தையும்

அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள்
எவ்வளவோ அழகாயிருக்கின்றன. (உரோ. 10 : 15)

மேஜையிலிருந்து விழும் அப்பத்துண்டுகளும்
நாய்களுக்குக் கிடைக்குமே.

பாலர்களை நம்மிடம்
வரவிடுங்கள். (மாற்கு 10 : 14)

என்னுடைய மிகவும் சிறிய சகோதரராகிய இவர்களில்
ஒருவனுக்கு நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள். (மத். 25 : 40)

நான் வியாதியாய் இருந்தேன்
என்னை சந்திக்க வந்தீர்கள்.

மோட்ச இராச்சியம்
இத்தகையோருடையது

கடவுள் மருந்து வகைகளின்
சாஸ்திரத்தை மனிதருக்குக்
கொடுத்தார். (சர்வபிர. 38 : 6)

நோயாளிகள் சேசுவின்
வேதனைப்படும் உறுப்புகள்

எளியோருடைய மன்றாட்டுக்கு
செவி கொடு.

உள்ளங்களிலே இறைப்பற்று என்னும் நல் விதையினை விதைத்து, அது இனிமையாக முளைத்து ஓங்க அன்னையினும் சாலப் பரிந்து அணைத்துப் பாதுகாத்து வருகின்றனர். இக் கன்னியர்கள் நடாத்தும் கல்விக் கூடங்கள், அறிவு, ஒழுக்கம், கடமை மறவாமை, கட்டுப் பாடு என்னும் நற்பண்புகளுக்கு உறைவிடமாக அமைந்து, முதன்மை பெற்று இலங்குகின்றன. இஃது நாம் மட்டுமன்று, சிந்துவும், கங்கையும் பாயும் இந்திய நாட்டின் மத்திய மாநில அமைச்சர்களும் இன்னவர் கல்விக்கூடங்களை சான்றாக எடுத்துக்காட்டியுள்ளமைபால் வெள் ளிடை மலையென விளங்குகிறது. ஆண்டுத் திட்டங்கள் வகுத்து அரசியலார் நாட்டு நலனுக் குரியவற்றைக் கனவிலும் காணு முன்னேயே, சமூகத் தொண்டை நடைமுறையில் சாதிக்கத் தொடங்கிய தியாகிகள் இந்த அமல ஆவைக் கன்னியர். "எமக்கு உள்ளன யாவும் இறைவன் ஈந்தனவே ஆகும்" என்ற பேருண்மையைக் கடைப்பிடிப்பவர்கள். தமக்கு உதவிய இறை வனுக்குத் தமது நன்றியறிவைப் புலப்படுத்தி நிற்பவர்கள். தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாகக் கொள்ளும் பண்பு அமைந்த வர்கள். இறைவனைப்பற்றிய இனிய அறிவை இளங் குழந்தைகளுக்கு ஊட்டியும், முதியவர் களுக்கு முத்தி நிலைக்கு வழிகாட்டியும் ஒப்பற்ற தொண்டினை ஆற்றி வரும் இயல்பு அமைந்த வர்கள்.

மருத்துவப் பணியின் மாட்சி

இவர்கள் ஓய்வுக்காலங்களிலே சிறு மருந்து களுடன் சிற்றூர்களுக்குச் சென்று, ஆங்குப் பிணியால் நைந்து, வறுமையால் மருத்துவ வசதி இன்றிக் குடிசைகளிலே வாடிக்கிடந்து உழலும் பிணியாளர்க்கு ஏற்ற உதவிகள் நல்கித் தொண்டுகள் ஆற்றுகின்றனர். இவர்களுடைய அரும்பணியால், இன்னுரையால் நோயாளி களின் உடல் நோவை ஒழித்து, அவர்களைத் தம்பால் ஈர்க்கின்றனர். நோயாளிகள் மருந்து உண்ணும்பொழுதும், வேதனை தாங்கமாட்டா மல் அல்லல்படும்பொழுதும், அவர்கள் கடுஞ் சினத்தால் அள்ளிக்கொடுக்கும் தூற்றுதலைப் போற்றுதலாகவும், வசைமொழிகளை வாழ்த்தா கவும் கொண்டு, பொறுமை என்னும் பூணைப் பூண்டு, ஏவல் செய்து, அருள் வடிவினராய்க் காட்சி நல்குவதை யானே பன்முறை நேரில் கண்டுள்ளேன். வேதனையுறும் நோயாளிகட் கும், மரிக்கும் நிலையிலிருப்பவருக்கும் இறைவ னின் அருள்தன்மைகளை அறிவுறுத்தி, அவர்கள் உள்ளத்தில் அமைதியும், மகிழ்வும் குடிகொள் ளச் செய்வர்.

ஞான அருள் நல்கும் தூதுவர்

பல்வேறு வகைப்பட்ட பழக்க வழக்கங் களும், கொள்கைகளும் கொண்ட மக்களிடை குருக்கள் சென்று பணியாற்றுதல் என்பது பல அமைப்புக்களில் இயலாததாகிறது. அந்நிலை யில் இக்கன்னியர்கள், அயலவர் அகத்திலே அன்பர்களாக - துன்புறும் பிறசமயத்தார் நடு விலே துணைவர்களாக - அமைதி இன்றி வாழும் அறிஞர் அருகிலே அமைதி நல்குபவராக- செல்வமிக்க செல்வர்களது உப்பரிகையிலே ஆரமுதமாக அன்போடும், பண்போடும் பழகி யேசு அன்பும், பண்புமாம் செல்வத்தினை அளிக் கும் கற்பக மரங்களாக, திருச்சபையின் இணை யற்ற சீடர்களாக நற்பணியாற்றி வருகின்றனர். இம்மாண்புமிக்கப் பணி மதிக்கவொண்ணா சிறப் புடையது அன்றோ!

ஞானோபதேச நற்பணி

பள்ளியில் பயிலும் சிறுவர்கட்கு மட்டும் பரம னின் பண்புகளைப் புகுத்தி உணர்த்துவதோடு, இக்கன்னியர்கள் மன நிறைவு கொள்வது இல்லை. ஓய்வு நேரத்திலும், விடுமுறைக்காலங் களிலும் சிற்றூர், பேரூர் ஆகிய பல ஊர்களுக் கும் சென்று எழுத்தறிவற்றவர்களுக்கும், ஏடு படிக்க அறிந்தவருக்கும் படங்கள், வாய்ச்சொற் கள் மூலமும், பத்திரிக்கைகள், நூல்கள் மூல

முட்க ளுரோசாமொட்டை மூடுமே நீயுன்றன்
கற்பைத் தவசிறைக் கா.

மும் ஞானோபதேச நற்பணியை நன்கு ஆற்றி இவ்வழியாய், அறிவினர்க்குக் கல்வியறிவினை ஊட்டி, நாகரீக மற்றோர்க்கு நாகரீக நல்வழியினைக்காட்டி, மனவிருளையும் அகற்றி, புத்தொளி புகுத்தி, அருமறையின் பெருமைகளை எடுத்துக்காட்டுகின்றனர்.

அநாதைக் குழந்தைகளின் அன்னையர்

ஒரு நாட்டிற்குப் பெருமை தருவது மக்கட் செல்வம் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். ஆதலின் இவர்கள் வதியும் இடங்களிலெல்லாம் துணையற்று, வாழ வழியற்று, துன்பமுற்று, நடுக்கமுற்றுத் திரியும் குழந்தைச் செல்வங்களைத் தேடிக் கொணர்ந்து ஈன்ற தாயினும் சாலப்பரிந்து, உணவும், உடையும், அறிவும் நல்கிப் பேணிப் போற்றுகின்றனர். இதற்கெனவே பல இடங்களில் அநாதை விடுதிகளையும் அமைத்து அரும்பணி செய்கின்றனர். பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்காலை நான்கு குழந்தைகளை வைத்துப் பராமரிக்க பெற்றோர் படும்பாடென்ன? இவர்கள் நூற்றுக்கணக்கான மக்களை வளர்த்து உருவாக்கும் பராமரிக்கும் பரிந்து சிந்திக்கற்பாற்று. அவர்கட்குத் தொழில் கற்பித்து, வாழ வழிகாட்டி ஞானக் கண்ணும் திறந்து விடுதல் செயற்கரிய செயல் அன்றோ!

முடிவுரை

பெற்றோர், சுற்றம் அனைத்தும் நீத்து இறைவனின் இனிய தொண்டர்களாய்க் கற்புடைமை, பணிவுடைமை, அருளுடைமை, கடமை உணர்ச்சி என்னும் நல்லணிகளைப் பூண்டு யேசு பெருமானின் இன்னுரையைப் பொன்னுரையாகக் கொண்டு, கூரைக் குடிசையையும் கொண்டல் தழுவும் மாளிகையையும் தம் பணியால் விளக்கமுறச்செய்யும் இந்தச்சபை இறைவன் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க எண்ணும் இளம் நங்கையருக்கு ஏற்ற ஒரு சிறந்த சபை. இச்சபை ஆல்போல் தழைத்து வளர்ந்து அருங்கிளைகள் தாங்கிச் செழித்து வாழ்க! தமிழ் நாட்டில் மட்டுமென்ன? பாரதமெங்கும் பரவி நாட்டிற்கு நற்றொண்டு செய்க! இதன் இன்னருள் நிழலிலே மக்கள் இனமெல்லாம், என்றும் நிலைக்கும் இன்ப வாழ்வைக் காண எல்லாம் வல்ல ஏசுபரன் அருள் புரிக!

வளர்க அமல அவை!! ஓங்குக திருச்சபை !!!
வணக்கம்.

சவரி மாணிக்கம்
செயலாளர்
சருகணி வட்டார கத்தோலிக்குச் சேவா சங்கம்

சண்டி யுடலைத் தவத்தா னிணங்குறைத்துக்
கண்டிக்க வற்புறுங் கற்பு. — சின்னப்பர்.

ஓடிவா ! உள்ளே தலையை நீட்டிவிடாதே !

பஞ்சவர்ணக் கிளி : அக்கா, அக்கா ! பச்சைக் கிளி யக்கா !

பச்சைக் கிளி : யாரு? நம்ம பழைய கொசவபாளையத்து தங்கச்சியா? ஏது இன்றைக்கு இவ்வளவு நேரம் தாமதித்துவிட்டாய்?

பஞ். கிளி : இனிமேல் இருக்கையே இங்கேதான் அக்கா.

பச். கிளி : 50 வருடமாக இருந்ததால் பழைய கொசவபாளையம் புளித்து விட்டதாக்கும் !

பஞ். கிளி : அப்படியல்ல. வீட்டுக்குள்ளேயே பள்ளி இரண்டு; சுற்றிலும் ஓயாது ஓலமிடும் ஒலிபெருக்கிகள். அடடா, காது இன்னும் வலிக்குது.

பச். கிளி : குளிர்ந்த வேப்பமரச் சோலையை விட்டு வந்துவிட்டாயே. பழைய இடத்தை விட்டு வருவது......

பஞ். கிளி : அதை ஏன் கேட்கிறே? கண்ணீரெல்லாம் வடிந்து வடிந்து கண்ணும் வரண்டு விட்டது. இருந்தாலும் அமைதியாக இறைவனைத் தியானிக்க இந்த இடம் ஏற்றதல்லவா? அங்கு கட்டிடத்தை விட்டு வெளியே நகர வசதியிராதே எட்டு மணிக்கு மேல்.

பச். கிளி : (சிரித்தல்) இங்கு மட்டும் சந்தடி ஒழிந்ததாக்கும்? நீ இவ்விடம் வருவது தெரிந்துதானோ என்னவோ, உன் வீட்டைச் சுற்றிக் கண்ணைத் திருப்பு. புதுப் புதுக் கட்டிடம், புற்றிலிருந்து ஈசல் வருவதுபோல் பதுங்கி விட்டதே பத்து மாதங்களில்.

பஞ். கிளி : இருக்கட்டும். மக்களுக்கு நலம் புரிய வேண்டுமாயின் அவர்களது தொல்லையும் தொடரத்தானே செய்யும். இன்னலின்றி யேசுவை நேசித்தல் எப்படி? பாரு, பக்கத்தில் அருமைத் தந்தை ஆண்டவர் வீடு அருகில் இருப்பதால் பூசை, நன்மை, போதகம் எல்லாவற்றிற்குமே நல்ல வசதி இந்த இடம். மேலும் இந்தத் தளர்ந்த வயதில் நம்ம அகுஸ்தீன் துர்லான் சுவாமியவர்களுக்கு அலைச்சல் தொலைந்ததே அந்த மட்டில்......

பச். கிளி : அது ஒரு பெரும் ஆறுதல் தான். ஆனால், உன் அருகில் பசுமை என்பது மருந்துக்குக்கூட இல்லையே.

பஞ். கிளி : பாரேன், ஒன்றிரண்டு வருடங்களில் இது பசுஞ்சோலையாகுதா இல்லையா என்பதை. நீயுங்கூட இங்கேயே தங்கிவிட நினைப்பாய். இதமான காற்று, வசதியான கட்டிடம், எழில்மிகு கோவில், நீல வானம், பரந்த இடம், கார்காலம் வரட்டும், எட்டிய தூரத்தில் பசுமை தவழும் வயல்கள், தனிப்பட்ட விடுதி, அதிமேற்றிராசனக் கோவிலே...

பச். கிளி : வரும்போதே கொண்டுவந்து விட்டாயே கோசாகுளத்திற்கு, அதிர்ஷ்டக்காரி நீ. உன் உறவிலே இப்பகுதியில் பக்தி தளிர்க்கட்டும். அன்றைக்குக்கூடப் பார்த்தேன், மூன்று மூன்று பேராய் பாடப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு இந்த நவகன்னியர் ஞானோபதேசத்திற்கு......

பஞ். கிளி : இதோ மணி அடித்துவிட்டது. வரட்டுமாக்கா? நவகன்னியர் பாட்டுப் பழகும் நேரம் இது.

பச். கிளி : அப்படியா, சினிமாப் பாட்டைக் கேட்டுக் கேட்டுச் சீரழிந்த என் காதிலே அந்த தேவகானம் விழுந்து புனிதமாக நானும் சத்தே வருகிறேனே.

பஞ். கிளி : சரி. ஓடிவா ! ஆனால் நீ உள்ளே தலையை நீட்டி விடாதே ! உயிர் போச்சு ! அதோ, அந்தச் செடியில் உட்கார்ந்து கேட்டுக் கொள். ஓடிவா !

Sr. Joan Agnes.

சினேக முளதாயின் தீயசெய லொன்றும்
கனவிலு நில்லாது காண்.

உண்மை நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டு

1. என்னைக் கவர்ந்தவை :

அன்று 1946-ம் ஆண்டு ஜூன் திங்கள் 2-ம் நாள். ஊரே மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. ஏன்? மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த கன்னியர் மடம் அவ்வூரில் ஸ்தாபகமாகிய பொன்னுள் அது. மதுரையிலிருந்து அர்ச். அமலோற்பவமாதா சபைக் கன்னியர் மூவர் அங்கு தங்களது புனித சேவையை ஆரம்பித்தனர். இக்கன்னியரை வரவேற்க ஊர் மக்கள் என்ன, பங்கே திரண்டு எழுந்ததில் வியப்பில்லை என்பதை பின்னர்தான் உணர்ந்தேன். ஏன்? 'கூடைக்குள்ளிருக்கும் மலரை வாடையே காட்டிக் கொடுப்பது' போல் பெரும்பாலும் குக்கிராமங்களில் ஆற்றும் அன்னவர் சேவை திக்கெட்டும் எட்டியிருந்தது. மடம் என்று கூறினும் ஒரு சில அறைகள் கூடியதும், வெப்பமும், குளிரும் தாராளமாய் உடனுறையக் கூடியதுமான அவ்விடத்தில் அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கிப் பணியாற்றத் தொடங்கியதும் ஒரு பொதுநலப் போராவலே.

அச்சமயம் எனக்கு வயது 12. நான் அயலூரில் படித்துக்கொண்டிருந்தேன். இக்கன்னியருடன் நெருங்கிப் பழக எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. எனினும் நான் விடுமுறைக்கு வரும் சமயங்களில் அவர்களுடன் பல சமயங்களில் உரையாடுவதுண்டு. அப்போதும்கூட எனக்கு யாதொரு கவர்ச்சியும் ஏற்படவில்லை. ஆனால் என் குடும்பத்தினரைத்தான் அவர்களது சேவை பெரிதும் கவர்ந்தது. "இத்தகைய தன்னலமற்ற தியாகிகளை நாம் இதுவரையும் கண்டதேயில்லை. ஆன்ம வேட்கை மனப்பான்மையுடன் அவர்கள் செய்யும் அரும்பணி காந்தம் போல் நம்மைக் கவர்ந்திருக்கிறது" என்று கூறிக்கொள்வார்கள். என் குடும்பத்தில் நான் கடைக்குட்டி. என்னை ஒரு துறவியாகக் கண்டு களிக்கவேண்டுமெனும் ஆவல் என் அன்னைக்கு இருந்தது. அதற்கென அவர்கள் செய்த ஜெபம் அதிகம். இக்கன்னியர் எங்கள் ஊரில் கால் வைத்த அன்றே அவர்களின் அன்பு எல்லோரையும் கவர்ந்தது. எனவே அச்சபைக்கே என்னை அனுப்பிவிட வேண்டுமென்ற எண்ணம் என் அன்னையை ஆட்கொண்டது. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவர்களது அன்புச் சேவையைப் பற்றியும் ஆன்ம தியாகத்தைப் பற்றியும் எனக்கு எடுத்துச் சொல்வார்கள். என் சகோதரர்கள், வெயிலிலும், மழையிலும், அவர்கள் ஆற்றும் தொண்டுகளை எனக்கு எடுத்துக் கூறுவர். நானும் எனது பள்ளியிறுதி வகுப்புப் படிப்பை முடித்தேன். என் அன்னையின் வேண்டுதல் வீணாகவில்லை. என் உள்ளத்திலும் தேவனின் அழைப்புக் குரல் ஒலித்தது. ஆனால் அதன் திசையோ வேறு. எனது வகுப்புத் தோழிகளில் இருவரும் தேவன் ஊழியத்திற்கு செல்ல விழைவதாகக் கூறினர். இறைவனை இடையறாது சிந்தித்து, நேசிக்கக் கூடிய கார்மேல் மடத்தின் அடைபட்ட வாழ்க்கையை எங்கள் மனம் நாடியது. அதற்காக பங்குக் குருவின் ஆலோசனையைக் கேட்டோம். அவரும் மகிழ்ந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதாகக் கூறினர். எங்களில் ஒருவர் கார்மேல் மடமும் புகுந்தார். என் பெற்றோரிடம் எனது ஆவலை வெளிப்படுத்தினேன். அதற்கு அவர்கள் மறுப்புக் கூறவில்லை. ஆனால் ஒரு வருடம் வீட்டிலிருந்து உடல் நிலையை வலுப்படுத்திய பின் மடம் போகலாம் என்று கூறினர். நானும் பொறுமையுடன் காத்திருந்து ஜெபித்தேன். இந்த ஒரு வருடத்தையும் நான் எனது சொந்த ஊரிலேயே கழித்தேன். இக்காலத்திற்குள் இச்சபைக் கன்னியர் வாழ்வை

நற்கிரியை யாவுமே நாதன் சிநேகத்தால்
பொற்புயிர் கொள்ளும் புகல்.

நேரில் கண்டு உணர்ந்தேன். வெறும் உணர்ச்சியல்ல. முழுக் கவர்ச்சியும் கொண்டேன். இவர்களில் ஒருவருடன் ஒரு முறை உரையாடுகையில் ' உன்னை மாதா அச்சபைக்கு அழைத்தால் நீ செல்லலாம். நாங்களும் மரியாள், மார்த்தாள் இருவர் அலுவலையும் சேர்த்துத்தான் செய்கிறோம்' என்றனர். இச்சொற்றொடர் என் மனதில் சமயத்துக்கு சமயம் ஒலித்துக்கொண்டேயிருந்தது. இத்தினத்திலிருந்து அவர்கள் வாழ்வை மேலும் கவனிக்கத் தொடங்கினேன். குறிக்கப்பட்ட வேளைகளில் ஞான முயற்சி, சிறிது போழ்து கைவேலை, பள்ளி அலுவல், ஞான உபதேசம். ஞாயிற்றுக்கிழமைகளில் வெயிலோ, மழையோ பக்கத்து ஊர்களுக்குச் சென்று ஞானோபதேசம் கற்றுக்கொடுத்தனர். மதவேறுபாடின்றி நோயாளிகளைச் சந்தித்து உதவினர். பலப் பல சபைகளைத் தொடங்கி நடத்தினர். தங்களது எளிமையிலும் ஏழைகட்கு உதவினர். ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய நாட்களில் காலியாயிருந்த எங்கள் கோவில், இப்போது தினமும் பூசை நேரத்தில் சிறுவரால் மட்டுமல்ல பெரியோராலும் நிரம்பியிருந்தது. மாலையில் தெருவில் முழக்கும் சிறுவர் மணிச் சத்தம் கேட்டதும் மாலைப் பிரார்த்தனைக்கு மகிழ்வுடன் ஓடினர். இவர்களின் இத்தகைய அன்புச் சேவைகளே என்னைக் கவர்ந்தன. கார்மேல் சபையில் அடைபட்ட வாழ்விற்கும் அழைப்புக்கள் தேவைதான். மக்களோடு ஊடாடி நலம் புரியவும் அழைப்புக்கள் தேவையல்லவா? இக்கன்னியர் மூலம் அமல அன்னையே என்னை அழைப்பதாக உணர்ந்தேன். எனது விருப்பத்தைக் கேட்ட எனது பெற்றோரின், முக்கியமாய் அன்னையின் மனமகிழ்ச்சியைக் கூறுவானேன்? அமல அன்னையின் சபையில் சேரும் பாக்கியம் பெற்றேன். சபையில் எனது வார்த்தைப்பாடுகளைக் கொடுத்து அன்னையின் செல்வப் புதல்விபருள் ஒருவளாகப் பணி செய்கின்றேன். எனக்குப் பின் சொற்பக் காலத்திலேயே என் குடும்பத்தினரில் எட்டுப் பேரை இவர்கள் சேவை கவர்ந்திழுத்துள்ளது. அமல அன்னைக்கும் அவள் தம் திருமகனுக்கும் எங்களது அன்பு நிறை தாழ்மை மிகுந்த நன்றி.

(தெரசாள்)

2. மன்னன் அழைப்புக்கு மறுப்பும் கூடுமா ?

எல்லையற்று விரிந்து கிடந்து இறைவன் கருணையை இடையறாது நினைப்பூட்டும் எழில் அலைகள் பொங்கும் கடலை நோக்கிய ஒரு குக்கிராமம் அவளது ஊர்.

சின்னஞ்சிறு வயதிலே உள்ளூர்க் கன்னியர் பள்ளியில் கல்வி ஊட்டப்பட்டாள் அவிலா. கன்னியரின் சாதனை அவளுக்குக் கன்னிமையின் மேன்மையைத் தெற்றென எடுத்துக் கூறியது. 13-ம் வயதில் ' ஒரு கன்னிகையாக வாழ்வேன் ' என அவளுக்குள் நேர்ந்தாள். 17-ம் வயதில் ஆசிரியர் பயிற்சிக்குச் சென்றாள். அங்கு தோழிகள் பலர் ஏற்பட்டனர். ஓய்வு வேளைகளில் அவர்கள் நாவு பலப்பல விடயங்களில் சென்று உலாவுவது இயல்பு. ஒரு நாள் கன்னியர் வாழ்வுபற்றி, வெகு காரசாரமாக உரையாடல் நிகழ்ந்தது. அவரவர் தத்தம் உள்ளக்கிடக்கைக்கு ஏற்ப வெவ்வேறு கன்னியர் அவைகளில் புக நினைத்திருப்பதாக வெளியிட்டனர்.

அவிலாவோ, கன்னியாவேன் ஆனால் எங்கோ தெரியாது என்று முடிக்குமுன், துடிதுடித்த தோழி ஒருத்தி ' இது உன்னால் ஆகும் காரியமா? இப்போதே மாமன், மருமகள் என்று கடிதங்கள் வருகின்றனவே என்று கூட்டத்தில் கட்டுச்சாதத்தை விரித்துவிட்டாள் குறும்புத்தனமாய். அத்தனைபேரும் கொல்லென சிரித்ததுமட்டுமா? அவளைக் கேலி செய்யவும் ஆரம்பித்தனர். எங்கே தனது எண்ணம் பலிக்காதோ என ஏங்கினாள். ஆண்டுகள் இரண்டும்

மின்னலைப்போல் மறைந்தன். ஆன்ம குருவின் ஆலோசனைக்கிணங்க இரண்டாண்டுகள் தந்தைக்கு உதவிபுரிந்து அவரை வசப் படுத்தியபின் மடம் ஏகத் திட்டமிட்டாள். தீட்டிய திட்டம் சிதைந்தது. மனம்குலைந்தாள்; அங்கலாய்த்து அசந்து நின்றாள். ஏன்? தேர்வு வெளியானவுடன் சொந்தக் கிராமப் பள்ளியில் ஆசிரியர்களின் ஆஜர்பட்டியில் அவள் பெயரைப் பதிவு செய்துவிட்டார் அவளது சிறிய தந்தை யாகிய தலைமை ஆசிரியர். அந்தத் தொடக்க உயர்நிலைப் பள்ளியிலேயே அவள் சம்மத மின்றியே அவளது தந்தையால் நிச்சயம் செய்யப்பட்ட வாலிபரும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினர். விஷயம் சற்றுத் தாமதித்தே அவள் செவிக்கெட்டியது. ஆசிரியரோடு பேசா மல் பள்ளிச் செயல்களில் ஈடுபடாமல் இருத்தல் முடியுமா? யாதும் அறியாதவள் போல் நடந்து கொண்டாள். வாலிபரோ தன்னலமற்ற தியாகி, நாளடைவில் அவள் திட்டத்தை அறிந்ததும் அவளுக்கு உதவ முன் வந்தார். இருப்பினும் வெளியில் அவரும், அவர் தந்தையும் வீட்டிற்கு போக, எல்லாம் உல்லாசமாக நடந்துகொண்டி ருந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல, பன்னாட் களாக, சிந்தித்த சிந்தனையின் விளைவாக இறுதி யில் ஓர் எல்லையில் நின்றாள். மலர்ந்தது மன்னாதி மன்னன் யேசுவின் பிறப்பின் விடுமுறை. தய வாகக் கேட்டாள் தந்தையிடம், ஆத்ம குருவைக் கண்டுவர. அனுமதி தடையின்றிக் கிடைத்தது. சென்றாள் குரு இல்லம். தந்தையின் போக்கு களைக் கூறி, அவரது அனுமதி கிட்டுவது கடினம் என்றும், அத்தனை மாமும் ஒரே பக்கம் சாய்ந்து விட்டனவாதலால் தப்பித்து ஓடின லொழிய காரியம் கைகூடாது என்றும் நவின் றனள். குருவும் ஆவிலா விரும்பிய அமல உற்பவமாதா சபையின் அதிசிரேஷ்ட்த் தாயா ருக்கு விளக்கம் தெரிவிக்கப் பதிலும் வந்தது. குறித்த நாளும் விடிந்தது. "மனமோ வேக முள்ளது, மாமிசமோ துர்ப்பலமுள்ளது தானே." உள்ளத்தைத் தாயன்பு ஒரு பக்கம் இழுக்க, அன்பரின் அழைப்பு மறு பக்கம் இழுக்க தவித்தாள். இருப்பினும் திட்டத்தை மாற்றவில்லை. தந்தை வெளியூர் சென்றிருந்தார். சந்தர்ப்பத்தை நழுவவிடாது உதவிக்கொண் டாள் ஆவிலா. உள்ளூர்க் கன்னியர் மடத்தில் பல வேலைகள் இருக்கின்றன என்று காரணம் சொல்லி, இரவு 7 மணிக்கு அம்மாவைத் துணைக்கு அழைத்தாள். மாசுமறுவில்லா அன்புள்ளம் கொண்ட தாய் நடந்தாள் தன் மூத்த குமாரத்தியோடு. கன்னியர் இல்லம் அணுகவே, 'அம்மா நான் இனிமேல் போய் விடுவேன். நீங்கள் வீட்டிற்குப் போங்கள்' என்று கூற அன்னை தன் கண்மணியை விட்டு அகன்றாள். தொழு வழியாகப் புகுந்து எவர் கண்ணுக்கும் தெரியாது சுமார் 4 அடி உயர முள்ள சுற்றுச் சுவரில் ஏறி கன்னியரின் வெளிப்புற அடைப்பில் சுமார் 2 மணி நேரம் தன்னந்தனியே ஜெபித்தாள் தவத்துடன். ஊர் அடங்கியபின் சுமார் 10 மணிக்கெல்லாம் அடுத்த பக்கத்து மதில் சுவரைத் தாண்டினாள், ஆண்மை உள்ளத்துடன். முன்னேற்பாட்டின் படி தன் தோழியைச் சந்தித்தாள் ஒரு சந்துக் குள். முதலில் பயணத் துணைக்கு சம்மதித்த அவள், அன்று பயத்தால் வர மறுத்துவிட்டாள். அந்நள்ளிரவில் என்னதான் செய்வது? ஆனால் அவள் அழவில்லை. கருங்கல்லால் உருவெடுத் ததுபோலும் அவள் உள்ளம்! தன்னந்தனியே வீர நங்கை தீவிரமாகப் பங்குக்குரு இல்லம் சென்று கதவைத் தட்டினாள் நடுங்கிய கரத் துடன். குரு தோன்றினர் புன்முறுவலுடன். ஏனெனில் ஆவிலா பயணத்துக்கு வைத்த ரூ 25 ம் கிறிஸ்துநாதர் அநுசாரமும் அந்த நிச்சயார்த்த இளைஞன் மூலம் குரு அன்று காலையே பெற்றிருந்தார். சிறிது நேரத்தில் தேர்ச்சிப் பத்திரம், சேமித்திருந்த நிதி இவற் றைப் பெற்று அதே வாலிபனுடன் ஆணுடை யில் பயணத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. கிராமமோ குக்கிராமம். சுமார் 10 மைலுக்கப்பா லுள்ளது பஸ் நிலையம். வழியோ சேறும்,

பார்நேயந் தன்னுவையேற் பாரோர் கொடிய
மிருகமன்றி யல்லவே வேறு

சகதியும் நிறைந்தது. இடையிடையே சிறு புதர்கள் நிறைந்த காடு. இக்காட்டில் இரவில் பயணம் செய்ய அவ்வாலிபன் பின்னிட்டான். ஆனால் மன்னன் அழைப்புக்கு மறுப்புக் கூடுமோ? சாவிலும் வலிய நேசம் அவளுக்குத் துணிவு தந்தது.

நான் எப்படியும் போய்விடுவேன் என்று கூறி முழந்தாளில் நின்றாள் குருவின் முன் பெண்ணரசி. ஆசீர்வதித்தார் குரு. இவளது துணிவு கண்டு, வாலிபனின் உள்ளம் துணிவுகொள்ள, அக்கணமே புறப்பட்டான், கலங்கிய கண்களுடன். வந்த அல்லல் பற்றாதா? சுமார் $3\frac{1}{2}$ மணிக்கெல்லாம் வழி தப்பித் தவித்தனர். கால் கடுக்க நடந்தும் பயனில்லாது போனது. அந்த அத்துவானக் காட்டில் தங்கிப் பொழுதைப் பார்த்தவண்ணமிருந்தனர். சிறிது போழ்தில் சேவலின் குரலைக் கேட்டுப் பக்கத்துக் கிராமம் சென்று, சூரியன் உதிக்குமுன் பஸ் நிலையத்தை அடைந்து காலை $11\frac{1}{2}$ மணிக்கெல்லாம் கிளை மடம் ஒன்றில் சேர்ந்தனர். மறுதினமே வந்தனர் இரு சிரேஷ்டர்களும் தெய்வம் போல். இனி என்ன தான் வேண்டியது அவிலாவுக்கு! சென்றாள் சிரேஷ்டர்களோடு. புகுந்தாள் சபையில். இன்று அவள் அமல அன்னையின் அவையில், அவள் அரவணைப்பில் தன் உடன் சகோதரிகள் குழுவில் விண்ணுலக இன்பம் சுகிக்கின்றாள். ஆம் "துறவிகளின் மகிழ்ச்சியை உலகம் அறிந்தால் மதிலேறிக் குதித்துப் புகுந்துவிடுவர்." என அன்று புனித தெப்பாசி மதலேனம்மாள் கூறியதற்கு இஃதும் ஓர் சிறு சான்றாகும்.

(அவிலா)

வாச மலர்களைக் கள்ளித ராதுயர்
மாங்கனி வேம்பு தராதே — நல்ல
மாணிக்கப் பாத்திர மன்றித் தேவா மிர்தம்
மண் கலந் தன்னில் இராதே — ஒரு
மாசில்லான் மாசை வெறுப்பவன் மாசுகள்
மாற்ற வந்தோன் புவி மீதே — ஒரு
மாசில்லாக் கன்னியல்லாது பிறரிடம்
வந்து பிறக்க வொண்ணாதே — பல
தாசர் தொழும் அமலோற்பவியே யெங்கள்
தாய் என்பதற் கின்னம் சாட்சியும் வேண்டுமோ?

— மாயூரம் விற்பன்னர் வேதநாயகனார்.

புறங்குறளை கூறல் பூவர்க்குந் தேவற்கும்
அருவருப்பா மென்றும் அறி. — சின்னப்பர்.

சேவையில் உறுதுணை

சுமார் 28 வருடங்களுக்கு முன் நான் மதுரையம்பதிக்கே ஒரு புதுப் பேர் வழி. நான் ஒரு மருத்துவத் தாதி என்ற முறையில் பலரோடும் பழக வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு அதிகம் உண்டு. பல இடங்களுக்குத் திடீரென்று நான் போகவேண்டிய சமயங்களில் நீல நிற உடையணிந்த கன்னியர் ஏழை எளிய மக்களிடம் அன்பொழுகப் பேசி அவர்களுக்கு உடை, உணவு கொடுத்தும், சிறு சிறு மருத்துவ உதவிகள் செய்தும் வருவதைப் பலமுறை நான் பார்த்து இருக்கிறேன். அக் காலத்தில் இவர்களுடன் நெருங்கிப் பழகியதில்லை. எனினும் அவர்கள் சேவை எனக்கு அடிக்கடி பார்த்துப் பழகியதாக இருந்தது.

1941 ஒரு ஞாயிறு மாலை, அந்தக் கன்னியருள் இருவரும், அவர்களுடன் வேறு இரு பெண்மணிகளும் என் வீடு தேடி வந்தனர். ஆவலுடன் வரவேற்றேன். மறுவாரம் மதுரையில் புதிதாகத் தொடங்கப்படும் கத்தோலிக்க சேவா சங்கத்தில் நானும் ஓர் அங்கமாக அவர்களால் அழைக்கப்பட்டேன். உவப்புடன் இசைந்தேன். அன்று முதல் அடிக்கடி அவர்களோடு பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. நாளடைவில் என் சேவையின்—வாழ்வின் உறுதுணையாளராய் இவர்கள் அமைந்தனர்.

முதலில் எனது மருத்துவப் பணியைத் தெய்வீகம் நிறைந்த பணியாக மாற்றவும், சிறு குழந்தைகள், தாய்மார் இவர்களின் கடைசிக் கட்டத்தில் மோட்ச கதவை அவர்கட்குத் திறக்கவும், எனக்குக் கற்றுத் தந்தவர்கள் இவர்கள். சேவை வளர்ச்சியில்—திடீரென்று ஏழைகள் அகதிகள் அகப்படுவது சாதாரணம். அவர்களை என் வீட்டில் வைக்க வசதி ஏது? ஓடுவேன் கீழவாசல் மடத்துக்கு, உதவி கைமேல் கிடைக்கும். அவர்களுக்கு இன்முகத்துடன் இடமும், உணவும் அளித்து, அவர்களை வேண்டிய இடத்தில் சேர்க்கும் வரையில் அன்புடன் பராமரித்து உதவுவர்.

எனது புறமத நண்பர்களுக்கு அளிக்க அத்தனை ஞானப் புத்தகங்களுக்கு எங்கே போவேன்? அவர்களிடம் வாய் திறப்பின் இல்லை என்னாது எத்தனையோ கிடைக்கும். ஞாயிறுதோறும் மாதர் சேவா சங்கக் கூட்டம் நடைபெறுங்கால் விளக்கமும் ஊக்கமும் அளிப்பவர் இவர்களே. கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இன்முகத்துடன் பதில் அளிப்பர். எங்கள் சங்கப் பெண்கள் மூலமாய், சமூகப் பெண்களுக்கு ஏற்ற பின்னல், தையல் இவைகளைப் பழக்கி, எத்தனையோ பெண்கள் தம் நேரத்தை நல்ல விதமாகவும், பயன்படும் முறையிலும் செலவிட வழிகாட்டுகின்றனர். மதுரையில் இரண்டாண்டுகட்கு ஒருமுறை சேவா சங்க மாநாடு கூடுகிறது. 'மாநாடு கூட்டிப்பார்' என்பார்களே. எங்கெங்கேயோ இருந்து நூற்றுக் கணக்கில் மாதர் வருவர். அத்தனை பேருக்கும் இடம் அளித்து, சாப்பாட்டு வசதிகளைக் கவனித்து, பல்வேறு திறத்தில் வருபவரையும் அவரவர்க்கு ஏற்ற பாங்குடன் உபசரித்து உதவுவது, அமல உற்பவ மாதா சபைக் கன்னியருக்கே உரித்தான ஒரு தனிப்பட்ட குணமாகக் காண்கின்றோம். பெரும் சுற்றுப் பிரகாரமோ, பங்குக் கூட்டங்களோ நடைபெறுகின்றன. இடையிடையே மக்களின் நடுவில் நின்று ஒழுங்குப்படுத்தி வழி நடாத்தும் முறை அவர்களுக்கு வழக்கமான ஒரு பக்திக்கிருத்தியமாக அமையும். அவ்வளவு அழகாக அமைதியாக நடைபெறச் செய்வர். வாரத்தில் ஒரு

கல்லார்க்குக் கல்விமனக் கஸ்தியுற்றோர்க் காறுதல்
பொல்லார்க்குப் புத்தி புகட்டு.

மனிதன் முன்பாக என்னை அறிக்கையிடுகிறவன் எவனோ
அவனை நானும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கையிடுவேன். (மத். 10:32)



சின்னஞ்சிறிய நண்பரே சேசுவே எம் அன்பரே
சிறிது நேரம் கூட நீர் பிரிந்து போகமாட்டீரே.

மாதா சபையினர் மனம் வைப்பின்
மா நிலத்தையே மோட்சமாக்கலாம்.

எழுந்திடுவோம் வீறுடனே !
உழைத்திடுவோம் விழிப்புடனே !

இன்று சேசுவும் நானும் ஒன்றானோம்.



செயலில்லாத விசுவாசம் செத்ததாய்
இருக்கின்றது. (யாகப். 2 : 26)



எழுப்புகின்றோம் எம் இதயங்களை
இளமையின் மகிழ்வாம் இறைவனிடம்!

தேவ பக்தி யாதெனில் துன்ப துரிதத்தில் அமிழ்ந்திய அநாதைப் பிள்ளைகளையும் விதவைகளையும் விசாரிப்பதும், இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தன்னைப் பரிசுத்தமாய்க் காப்பாற்றிக் கொள்வதுமாம். (யாக 1:27)

இவ்வில்லத்தில் வாழ்வதின்
மகிழ்ச்சிதான் என்னே !

களைகளை நீக்குவோம்
மனக்குறைகளைப் போக்குவோம்



ஆயும் நூல்கள் படித்திடுவோம்
பாயும் பின்னி முடித்திடுவோம்.



வண்ணத் தையல் தைத்திடுவோம்
எண்ணத் தூய்மை வளர்த்திடுவோம்.

காடும் மலர் வனம் ஆகிடவே
நாடும் நல்லோரால் மேலிடவே

ராட்டையில் மனம் நாட்டிடுவோம்
வீட்டில் புறணியை ஓட்டிடுவோம்.

நாள் இல்லறப் பெண்களுக்குத் தையல் வகுப்பும் நடத்தினர்.

இன்றும் திடீரென்று ஒரு பிணியாளனைப் பார்க்கவேண்டும், ஒரு வயோதிபரைச் சந்தித்து உதவவேண்டும் அல்லது அடுத்த தெருவில் குழந்தையொன்று கடின வியாதிப்பட்டு விட்டது என்று கேள்விப்பட்டால் உடனே வெயிலோ, மழையோ—அவர்கள் செல்லும் வேகத்தைப் பார்க்கவேண்டுமே! "உள்ளத்தில் எரியும் தெய்வீக நெருப்பின் வேகம் போலும்!" என எண்ணி வியப்படைவேன். மாதர் சேவா சங்கத்தார் வேலை செய்கிறோம். எனினும், சங்கத்திற்கு உயிரளித்து, உள்ளூறச் சேவை செய்பவர் அமல அவைக் கன்னியரே. இன்று ஒரு பெருங் கூட்டம், மேடை அலங்கரிக்கப்பட வேண்டும், வருகிறவர்களை உபசரிக்க என்னென்னவோ பொருட்கள் தேவை............ கொடுப்பவர் யார்? பொறுப்புடன் செய்பவர் யார்? இக்கன்னியரே. இப்படியே மதுரையம் பதியைச் சுற்றி, ஆன்மீக வேலையிலும்—வெளியரங்கமாய்ப் பள்ளி அலுவல்களிலும் அமலோற்பவமாதா சபையார் ஒன்றுக்கு நூறு மடங்காய் விருத்தியடைந்து நிற்கின்றார்கள்.

அன்று நான் புனித சூசையப்பர் மடத்தைச் சார்ந்த கன்னியர் மேல்பார்வையில் 5 வகுப்புள்ள ஒரு தொடக்கப் பள்ளியைப் பார்த்தேன். இன்று மதுரையிலேயே 5 ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளையும், ஒரு போதனாமுறைப் பள்ளியையும், ஓர் உயர்நிலைப் பள்ளியையும் அவர்களே திறம்பட நடத்தப் பார்க்கிறேன். அன்று சுமார் 50 பேரடங்கிய சிறு கூட்டத்தைப் பார்த்த என் கண்கள் இன்று 500-க்கு மேல் நிரம்பி நிற்கும் பெரும் நீலக்கடலைக் கண்டு களிக்கின்றன.

எனது தனிப்பட்ட தேவைகளிலும், ஞான உதவிகள் அக்கன்னியரிடம் ஏராளமாய் அடைந்திருக்கிறேன். இந்தப் பொன் விழா சந்தர்ப்பத்தில் எங்கள் மாதர் சேவா சங்கத்தின் சார்பில் எங்களது மனம் உவந்த வாழ்த்துக்களையும், அன்பு கலந்த நன்றியையும் தெரிவித்து இச்சபை தினமும் செழித்து இன்னும், மிகுதியான நலம் புரிய இறைவனை மன்றாடுகின்றோம்.

வாழ்க அமல உற்பவமாதா சபை!

அன்னமேரி
மாதர் சேவா சங்கத் தலைவி
மதுரை வியாகுலமாதா கோவில் பங்கு



பார்பிழையெங்கும் பரப்புவனேசம்
பிரிப்பன் சண்டாளனிவன் பேர் — ஞானி சாலமோன்.

நான் கண்ட அமல அவை

"அம்மாவும் நீரே அப்பாவும் நீரே
அன்புடனே ஆதரிக்கும்
பண்புக் கன்னியரும் நீரே"

என்று யாரோ கூறுவது கேட்டுச் சுற்றிப் பார்த்தேன். யாருமில்லை. என் இதயத்தின் குரலொலியே அஃதெனத் தெளிந்தேன். விரைவில் வரும் அமலோற்பவ மாதா சபையின் பொன் விழா வைபவத்தைச் சிந்தித்துக் கொண்டே இருந்ததன் விளைவே அது என்பதை உணர்ந்தேன்.

அமல அவைக் கன்னியர் மடமே எனது தாய் வீடெனக் கருதி சுமார் 14 ஆண்டுகளாக வாழ்வதால், அவர்களுடன் நெருங்கிப் பழகப் பலப் பல வாய்ப்புக்கள் கிடைத்துள. அவர்கள் பால் யான் கண்கூடாகக் கண்டவற்றுள்ளும், அங்குமிங்கும் செல்லுங்கால் கேட்டவற்றுள்ளும் ஒன்றிரண்டை இச்சமயத்தில் குறிப்பிடுதல் சாலவும் பொருத்தம் என்பதால் கூறுகின்றேன். பஞ்சை மாநகரில் இச்சபை பச்சிளங் குழந்தையாகத் தோன்றக் காரணமாயிருந்தவர் சுவாமி **அகுஸ்தீன்** பெரைரா அவர்கள். சபைக்கு அங்கிகாரம் அளித்தவர் மேன்மைதங்கிய **அகுஸ்தீன்** பெசாந்தியர் சேசுசபை ஆண்டவர் அவர்கள்; சபையின் முதல் அதிசிரேஷ்டர் **அகுஸ்தீன்** மரித்தாயார்; 1917 முதல் இந்நாள் வரை நவகன்னியருக்கு ஞானப் போதகமும், துறவற விளக்கங்களும் தெளிவுற ஆற்றுபவர் சேசுசபை சுவாமி **அகுஸ்தீன்** துர்லான் அவர்கள்; இப்படி அகுஸ்தீன் அடுக்குகள் சபை வரலாற்றில் அமைந்ததை ஓர் சிறப்பாகவே கருதுகிறேன். அன்று நால்வரைக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறுசபை, இக்குறுகிய காலத்தில் தமிழ் நாடெங்கும் தழைத்து, அறியாமை நீக்கி, அறிவொளி பரப்பித் திகழ்வது சிந்திக்கத்தக்கது.

ஒரு நாள் ஒரு கிராமத்திற்கு நான் பூசைக்காகச் சென்றிருந்தேன். அங்கு யான் கண்ட காட்சி இன்னும் என் கண் முன் நிற்கிறது. வாலிபப் பெண்களும் சிறு பிள்ளைகளும் ஒரு மரத்தடியில் பகுதி பகுதியாக அமர்ந்து ஞானோபதேசம் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு சிறுமி எழுந்து, "அம்மா நீ எங்க ஊரிலே இருந்துக்கோ, அப்போ நான் தினந்தோறும் சுத்தமாயிருப்பேன், பள்ளிக்குப் போவேன், ஜெபம் சொல்லுவேன். ஏன்னு எனக்கு உன் மேலே அதிகப் பிரியம். நீ சொல்றதைக் கேட்க ஆசையாயிருக்கு. அந்த வாத்தியாரம்மா போலே நீ அடிக்க மாட்டில்ல?" இதைத் தொடர்ந்து அப்பிள்ளைகளின் கை தட்டல் பலமாகக் கேட்டது. நான் அருகில் நின்றும் என்னைத் திரும்பிக்கூட ஒருவரும் பார்க்கவில்லை. இச்சம்பவத்திலிருந்து அவர்களின் தன்னலமற்ற சேவையையும் அன்பையும் உணர்ந்தேன். கிராமத்தில் திருநாட்கள் வந்ததோ, உணவையும் மறந்து அவர்கள் செய்யும் வேலைகள் வியக்கச் செய்வன. பங்குக் குருக்களுக்கு பக்க பலமாக நின்று பாவ சங்கீர்த்தனம், புதுநன்மை, சபைகள், தியானங்கள் இவை நடைபெற பெரிதும் உதவுபவர் இவர்களே.

"ஊழியம் செய்வேன், ஊழியம் செய்வேன், ஊழியம் செய்தே உன்னருள் பெறுவேன்" என்பதற்கொப்ப உழைப்பால் உயர்வு அடைந்தவர், அடைகின்றவர் இக்கன்னியர். இவர் உழைப்பின் திறமை அரசாங்கத் தேர்வுகளிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரி

கால மிருக்கையிற் கன்மஞ் செயக்கடன்
ஆலச மாகா தறி. — சின்னப்பர்.

கிறது. பகலெல்லாம் பள்ளியில் அதுவும் 5½ நாட்கள் உழைத்துக் களைத்தவர், மாலை வேளையில், லீவு நாட்களில் கிராமங்தோறும் நோயுற்றவர்களைத் தேடி அலையும் ஆன்ம இரட்சணிய ஆவலை எடுத்தியம்புவது என்றால் ஆகும் காரியமல்ல. நீல உடுப்பைப் பார்த்ததும் ஆவலுடன் ஓடி வருபவர் கத்தோலிக்கர் மட்டுமன்று, படித்தவரும், பாமரரும், இந்துக்களும், இதர மதத்தாரும் இவர்களிடம் அண்டி வருவதற்குக் காரணம் இவர்களது 'அன்புச் சேவை' என்பதைவிட வேறென்ன கூறமுடியும்? பணக்காரரைவிட, பாமரர் நடுவில்தான் அமல அவைக்கு அதிகச் செல்வாக்கு. வஞ்சகமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் இவர்கள். "எளியவர் பணியே இறைவன் பணி" என்று கருதுபவர்.

சமூக நலச் சேவைக்கென நிதி ஒதுக்கி, அவ்வேலை செய்பவருக்குப் பணத்தை வாரி இறைத்து மருத்துவ நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தி, மக்களுக்குத் தொண்டாற்ற அரசாங்கம் வழி வகுக்கும் முன்னே, பாமர மக்களிடை, பட்டிதொட்டிகளில் பணி புரிந்தவர் இக்கன்னியரே. யான் கேட்டது மட்டுமல்ல, பார்த்த ஒன்றையும் கூறுவேன். கால் மணிக்கொரு கார் உற்பத்தியாகிக் காடெல்லாம் சாலைகளாகத் திகழும் இக்காலத்திலும், காரே பாராத மக்கள் வாழும் அந்தச் சூராணத்தில், மணிக்கட்டுக்குக் கீழ் யாதொன்றுமிராத கையுடைய ஓர் பெண்ணைப் பார்த்தேன். 1931-ம் ஆண்டு நடந்த ஓர் அரிய சம்பவத்தைக் கூறினாள் அவள். "ஆ! அந்தப் புண்ணியவதி பேரு வருவதில்லை, ஆள் குட்டையாய்க் கட்டையாய் இருப்பார்கள்." (அவள் கொடுத்த வருணனை) "அவர்கள் இல்லாவிட்டால் என் குடும்பமே குட்டிச்சுவராயிருக்கும். பக்கத்து ஊரில் கருப்பட்டி வாங்கிக்கொண்டு வெட்ட வெயிலில் வந்த களைப்பு நீங்கக் கண்மாய்க்குள் (மடத்தருகில்) இருக்கும் கிணற்று ஓரத்தில் உட்கார்ந்து பக்கத்தில் கிடந்த ஓர் குழாயைக் குச்சியால் குத்தினேன். அம்மா! டபார் என்ற வெடி. மயங்கி விழுந்தேன். எவ்வளவு நேரமானதோ தெரியாது. என் வீட்டுத் திண்ணையில் ஓலமிடும் என் மக்கள் சுற்றத்தின் நடுவில் விழித்தேன். பொறுக்க முடியாத வேதனை. கையில் பெருங் கட்டு. காரணம் வெயிலின் கோரத்தால் சூடேறிக்கிடந்த (வாண வேட்டு) வெடிமருந்துக் குழாய் வெடிக்க என் விரல் நரம்புகள் வெளியே நீண்டு எலும்புகளும் சிதறின. நடந்ததைக் கேட்டதும், மின்னல் வேகத்தில் மருந்துடன் வந்து, என் கைக்குக் கட்டுப்போட்டு முதலுதவி செய்தவர் அந்த மடத்துத் தாயார். பின் மதுரை அரசாங்க வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அந்த முதலுதவி இல்லாவிடில் உயிரே போயிருக்குமெனக் கூறி, கையை மணிக்கட்டுடன் துண்டித்துவிட்டார் டாக்டர்" என்றாள். இதுபோல் போகுமிடம் எல்லாம் எத்தனையோ சான்றுகள்.

இம்முறையில் அமல அவைக் கன்னியரின் அன்பும் அனுதாபமும் இடைவிடாத உழைப்பும், எளியவருக்குத் தொண்டு புரியும் பண்பும் என்னை அதிகமதிகம் கவர்ந்தவை.

அமல அன்னையே! உமது அன்பு வழியில்
அகில மெங்கும் உம் திருமகனின்
அரசு வருக!
உம் ஆசீரை நிதம் பொழிவாய் அம்மா!
வாழ்க அமல அவை!
வளர்க இக்கன்னியர் தொண்டு!

Miss Mary Josephine,
Daughter of Late A. Y. Arulananda Nadar,
Tanjore.

எறும்பின் முயற்சியை யெள்ளளவு வெண்ணிச்
சுறுசுறுப்பு கற்கத் துணி. — ராணி சாலமோன்.

MILESTONES

On the long road of life and achievement there are many milestones—jubilees and centenaries which mark the measure of man's conduct to man, man's contribution to the well-being of his fellow-travellers on life's pathways, man's record of work for his Creator, to justify the purpose of his creation. These are a few signs of goals reached and ideals realised, beacons of blazing hope. To fellowmen travelling along the same long winding road, they serve as encouraging landmarks, since they represent not only things that have been and days long past, but things yet to be and years of promise yet to come. Such occasions, besides giving opportunities for joy and jubilation, carry along with them many significant appendages—they are times of retrospection, and therefore of revaluation. Looking back over what has gone by, men, as a rule, get an idea of both their failures and their successes. It is a rich experience indeed to undertake a spiritual stock-taking on this occasion, amidst the happy, festal celebrations of the Golden Jubilee of the Sisters of the Immaculate Conception, more happily known to the lay public as "the Blue Sisters". By their simplicity and sincerity of purpose, by their strong faith in the Hand that guides them, the Blue Sisters have always held a special place in the hearts of the people they serve.

"No man is an island" says Thomas Merton, and the Gospel goes further to say that men should not consider themselves as insular beings, but regard the people of the whole world in terms of universal brotherhood, and treat them accordingly. One can say without equivocation that the Blue Sisters, among others, have lived up to the ideals which Christ has set before humanity. We are happy and proud to note their increase in number since the founding of their Congregation fifty years ago. The numerous institutions which have sprung up under their fostering care in remote corners of the Districts of Tirunelvely, Ramnad and Madurai now bring light into the lives of the poor and ignorant. It is only God-given wisdom that can inspire a person like their Mother General to translate ideals into action: education, mostly at the elementary level, in faraway villages, dispensaries wherever medical aid is not available, teaching of the fundamentals of reading and writing.

To will always what God wills should be the one subject of all our actions, desires, meditations and petitions.

St. Alphonsus.

Though the Sisters may not be able to eradicate poverty by giving material aid for people to live on, they try to instill in them a spirit of confidence, a sense of the dignity of labour, and a saner outlook on life. The spiritual strength required to believe in an all-powerful God in spite of the material obstacle is the crying need of the day. India, with her rich cultural heritage, possessing one of the oldest of religious traditions in the world, inheritor of a faith in the Infinite, is caught in the whirlpool of the mad craze of the materialistic twentieth century. It is precisely here that one must impart the strong conviction that it is not prosperity but rather steadfast faith in the Supreme Being that will bring peace and happiness to a nation. The need in this country today is for rational human beings, and not for wealthy, selfish men. The presence of the Blue Sisters in the Community, and their work in it, are helping to make the poor and the ignorant come slowly but surely out of the darkness of ignorance and moral degradation.

One Jubilee over, the years will relentlessly fly past, leading the Sisters to yet another jubilee, with the record of their humanitarian work lengthening steadily. Pain, suffering and ignorance will always exist. But to counteract each of these, there should be patience, perseverance, selfless service and unflinching idealism. This is the offer of the "Blue Sisters". Considering this, and the recent past, ordinary wayfarers on the road of life cannot but go on with hearts uplifted in wonder and gratitude to the infinite Mercy of Him who has ordained all things in such a way that this 'blue' section of humanity should take to heart and live by the noble aspirations hidden deep in the beautiful lines of Robert Frost:

"The woods are lovely, dark, and deep.
But I have promises to keep.
And miles to go before I sleep."

Miss N. Shakunthala M. Sc.,
Principal,
Fatima College,
Madurai.

"துள்ளித்திரிகின்ற காலத்திலே"

துள்ளித் திரிகின்ற காலத்திலே என்றன் துடுக்கடக்கிப் பள்ளிக்கு அனுப்ப வில்லையே என்ற நிலையை உணரும் கவலை எனக் கில்லை; எங்கள் அன்புத் தந்தையின் நல்லிதயம் கல்வித் துறையில் தம் மக்களைச் சிறக்க வைக்க வேண்டும் என்ற ஆவலிலே தோய்ந்திருந்தது; முன்னேற்ற வழி காண்பதில் ஈடுபட்டிருந்தது. கல்வி சிறந்த தமிழ்நாடு எனப் பாடி மகிழும் கவிதைக் குயில் பாரதியின் வாக்கினை முழுது முணராத காலம் இருபது ஆண்டுகட்கு முன். சட்டம் சரவை தான் எழுதி, தனிபாய் இலக்கம் தொகை ஏற்றி, திண்ணைப் பள்ளிகளில் மனனம் செய்யும் நிலையையே சிற்றூர்களில் கல்வி பயிலும் முறையெனக் கொண்ட காலமது. மாலை எழுதித்தந்த ஏடுகளின் நினைவோடு இரவு கழிய, காலையில் நெஞ்சும் மனமும் உரைக்க தவத்தின் முன் நின்று உறுத்த, ஆசானின் தோற்றமே அச்சத்தின் சாயலாகக் காட்சிதர, ஒப்புவித்தலே தேர்வின் உரைகல்லாக அமைய, சில ஆண்டுகள் பள்ளிப் படிப்பு என்ற பேரில் கழிந்தன.

'தேடு கல்வி இல்லாத ஊரினைத் தீயினுக்கு இரையாக்குவோம்' எனப் பாரதி முழக்கமிட்டான். அவன் குரல் கேளாத அரசும், அவ் வழிச் செல்லாத மக்களும் நிறைந்த தென் பாண்டிச் சிற்றூர்கள் பல. கல்வி விளக்கினை அரசுக்கு முன், ஏற்ற விழைந்தவர்கள், செயலாற்றியவர்கள் அண்ணல் யேசுவின் திருமறைத் தொண்டர்களே; தமிழகமே கல்வியில் சிறக்க அரும் பணி செய்தவர்கள் அவர்களே; அவர்கள் வழியிலே, இளைஞர்க்குரிய சிறு சிறு பள்ளிகளைத் துவக்கி வெற்றிகரமாக நடத்திய பெருமை அமலோற்பவ மாதா சபைக் கன்னியர்க்கே உரியதாகும்.

அமலோற்பவ மாதா சபைக் கன்னியர் அருட் சேவையில், மேற்பார்வையில் இயங்கிவரும் தூய மரியன்னை உயர்தர ஆரம்பப் பள்ளி (சூராணம்) எனது ஆரம்பப் பள்ளியாகும். ஏட்டுப் பள்ளியிலிருந்து விலகிய பின் பல புதுமையான முறையோடு கல்வி பயிலும் வாய்ப்பினை அங்குதான் பெற்றேன்; அங்கு தான் என் இளமைக் கல்விக் குருத்து மடல் விரித்தது; தந்தையின் தணியாத ஆர்வமும், கன்னித் தாய்மாரின் தகைசான்ற கவனிப்பும், பயிர் செம்மையாய் வளர நீரும் நிலமும் இன்றியமையாது இருப்பதுபோல் என் கல்விப் பயிர் செழிக்க வழி செய்தது. அவர்களிட்ட அடிப்படையே உயர் கல்விக்கும் சிறந்த வலிமை தந்தது; காட்டிய ஒழுக்க வாழ்வே தூய்மைக்கு வேலியாயிற்று; அவர்களின் கடின உழைப்பே முன்னேற்றக் கருவியாய்ப் பணி செய்தது; இளமையில் அவர்கள் காட்டிய பணிவும், கனிவும் என்றும் மாறாத இனிமை நினைவாகப் பதிந்து நிற்கின்றது. கட்டுக்குள் அடங்காது ஆடிக் களித்திடும் செல்வச் சிட்டாகப் பறந்து திரியும் சிறார்களைக் கட்டிக் காக்க அவர்கள் மேற்கொள்ளும் அருள் சார்ந்த மொழியும், அறிவு சான்ற நெறி புகட்டும் வழியும் என்னை மிகவும் ஈர்த்தன. பூ நூலைத் தெளிவு படுத்த அவர்கள் போட்டுக்காட்டும் அழகான படங்கள், அருமையான கட்டங்களிட்டு முக்கியமானவற்றைக் குறிக்கும் திறமை, இவை யாவும்

காலங் கொடுத்தார் கணக்குகோ, பாரீசன்
ஆயுள் வழங்க வறி. — [illegible]



மனிதருக்கு மிகவும் உதவியான மட்டும் திட்டத்தையும்



நீதியையும்

விவேகத்தையும்



பலத்தையும்



இவர்கள் கற்பிக்கின்றனர்.

ஞான. 8 : 7

உண்மையையும் நீதியையும் கண்டுபிடித்து
நீதிமொழிகளையும் நியாயங்களையும் சரமாரியாகப் பொழிகிறார்கள் — சர்வப். 19 : 29.

புனித தெரசாள்
போதனா முறைப்பள்ளி
மதுரை



" அன்புப் பணியில்
அறிவு வளர்க ! "

நிர்மலா உயர்நிலைப் பள்ளி, மதுரை
" தூய உள்ளம் தேவ இல்லம் "



அமலி உயர்நிலைப் பள்ளி, இருதயகுளம்



புனித மரியன்னை சீனியர் பேஸிக் ஸ்கூல்
பஞ்சம்பட்டி



புனித பத்ரீஸியார் உயர்தர ஆரம்பப்பள்ளி,
மதுரை
" அனைத்தையும் வெல்வது உழைப்பு "

எனக்கு உயர் கல்வி பெறுங்காலத்தில்கூட பழமையாகவே காட்சி தரும் எளிமையாக நின்றன. இனிய கதைகளால் நெஞ்சுப் பிணிக்கக் கூறிய வரலாறு, இன்று வரலாறு படைக்கும் ஆற்றலையே அளிக்கின்றது. பரிவோடு தமிழ் மொழியினைப் படிப்பித்த தெளிவே இன்று தமிழ்த் தொண்டு செய்ய வைத்துள்ளதெனப் பெருமைப்படுகின்றேன். இயற்கைப் பாட நூல் இயல்பாகவே இனிக்க, இனிக்க சுவை பெருக சொல்லி வைப்பார்கள்; பூவும், இலையும் பொதிந்து நிற்கும் புத்தகங்களை உருவாக்கியதை எளிதே மறக்க முடியுமா? ஊட்டி வளர்க்கும் அன்னையர் போல ஒழுக்கத்துடன் கூடிய அறிவை ஊட்டிக் காத்தனர் கன்னியர்.

ஆடல், பாடல், அழகுக் கலைகள் அவர்கள் தம் பெரு முயற்சியால் பெருவாழ்வு பெற்றன. சித்திரம், சிற்பம், தையல் போன்ற நுண் கலைகள் பொலிவுற்றன. கன்னியர் யாவருமே கைத்திற மிக்கவர்களே. ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டே இருப்பர். கலைகளோடு மறை முடிவைக் காணும் புது நெறி காண்பவர்கள். இறைவனின் நினைவிலே ஆன்மா தோய, சிந்தை, செயல் யாவும் ஒடுங்க அடிக்கடி அவர்கள் இறை வழிபாட்டில் ஈடுபடும் உயரிய நிலை மிக மிகப் பெருமைக்குரியது. சிற்றூர்களில் வயல் வெளியெல்லாம் அலைந்து பள்ளிக்குப் பிள்ளைகளை அழைத்து வரும் முயற்சிக்கு தமிழுலகு என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஏழை எளியவரோடு இரண்டறக் கலக்கும் நிலை, இறை வழிப்பாட்டின்போது மாணவர்களையும் பொது மக்களையும் நெறிப்படுத்தும் அழகு, தம் மக்கள்போல குழந்தைகளைப் பேணும் முறை, தூய்மையில் காட்டும் ஆர்வம், ஒழுக்கத்தில் கொண்டுள்ள கட்டுப்பாடு, இன்னோரன்ன அரும் பண்புகள் யாவும் அவர்கள் உறைவிடங்களிலும், நடத்தும் பள்ளிகளிலும் சிறக்கக் கண்டு மகிழலாம்.

பாண்டி நாட்டில் பெண்கல்வி சிறக்கப் பெரும் பணிபுரிபவர் அமலோற்பவ மாதா சபையினரே. தமிழகம் முழுதும் அவர்கள் தழைத்துவளர யேசுவள்ளல் அருள்கிட்ட இறைஞ்சுதும். படியாத பெண் உலகில் ஊமை, அவளால் உண்டாகும் தீமை எனக் கூறும் புலவனின் பயத்தை நீக்கியும் போக்கியும் வருபவர்கள் கன்னியர்களே. தாய்மையின் சிறப்பை, தகைமையின் உயர்வினை, தியாகத்தின் பெருமையினை விளக்க வல்ல வழிகாட்டிகளே கன்னியர்கள் தான் எனப் பெருமையோடு கூறலாம். பத்தாண்டு வரை எல்லா மாணவர்களும் பெண்களின் கீழ் படித்தலே உளநூல் வண்ணம் உயர்ந்ததாகும் எனக் கருதும் மேல் நாட்டவர் கூற்று வெற்றி பெற உறுதுணையாக நிற்பவர்கள் கன்னியர்களே.

அமலோற்பவ மாதா சபையினரின் ஐம்பதாவது ஆண்டு நிறை விழாவின் நிகழ்ச்சி நிரல் பெற்றேன். காலத்திற்கு ஏற்ற கருத்துறு நினைவுச் சின்னங்களாக, 'அகுஸ்தீனார் குடிசைத் தொழிலக'மும், 'லெயோனார்டு மருத்துவ நிலைய'மும் திறக்கப்படுவது கண்டேன். வறுமையில் வாடுபவரும், பிணியால் நலிவோரும் ஊதியமும், உடல் நலத்துடன் உள்ளத்தமைதியும் பெற்று மகிழ்வார் என்பது எண்ணி, யானும் இரும்பூது எய்துகின்றேன்.

மங்கையராய்ப் பிறத்தற்கே மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்ற கவிஞன் வாக்கும், தியாகத் தாய்மை தாங்கிய மங்கையர்தம் பங்கயக் கரம் நோக்கியே பாரினில் அறம் சிறக்கும் என்ற கவிஞனின் எதிர் நோக்கும் வெற்றி பெறும் காலம் கிட்டியது. வாழ்க அமலோற்பவ மாதா சபை! வளர்க அவர் தம் தொண்டு! ஓங்குக யேசுவின் அருள்!

ச. பா. அருளானந்தம் எம். ஏ.
லொயோலாக் கல்லூரி,
சென்னை — 31

இளமையிற் றேவனுக் கேவல் புரியில்
அமுழ்ந்துமாம் பத்தி யகத்து.. — ஞானி சாலமோன்.

ஆண்டவனுக்காக உழைப்பது ஆட்சிபுரிவதிலும் மேல்!

அமலோற்பவ மாதா சபையை—சபைக் கன்னியர் பலரைப் பல காலமாக நன்கு அறியும் வாய்ப்பு ஆண்டவனருளால் எனக்கு இருந்தது. தொடக்க நாள் முதலாக அந்தச் சபையின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் ஆர்வமும் அக்கறையும் எனக்கு உண்டு. அதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை.

முதலாவதாக, **அந்தச் சபையைச் சேர்ந்த கன்னியரின் எளிமைத் தோற்றம்:** இல்லறவாசிகளைப் போலவே உடை அணிந்திருந்த அந்தச் சபைக் கன்னியரின் தோற்றம், எளிமைக்கு ஏற்ற சான்றாக விளங்கியது என்பதில் ஐயமில்லை. "இவர்களும் கன்னியாஸ்திரிகளா?" என எவரும் வியப்புடன் கேட்குமளவுக்கு, அந்த எளிமைக் கோலம் நன்கமைந்திருந்தது. அவ்வகை உடையை அமைத்த பெரியோர்களின் நோக்கம், தீர்க்க திருஷ்டி வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. இந்தக் காலத்தில் இவ்வகைக் கன்னியர் சபைகள் உலகமெங்கும் வளர்ந்து வருகின்றன. "உடையில் என்ன இருக்கிறது? அது முக்கியமானதேயல்ல; உழைப்புத்தான், தேவ ஊழியந்தான் வேண்டியது, விரும்பத்தக்கது. மறைந்த நிலையில் ஆற்றும் உண்மைத் தொண்டின் மதிப்பே தனியானதல்லவா?

ஆனால், அந்த நிலை நெடுநாள் நீடிக்கவில்லை. உலகம் பல விதம்! "தனிப்பட்ட உடையில்லாத கன்னியாஸ்திரியும் ஒரு கன்னியாஸ்திரியா?" எனப் பலரும் கூறலாயினர். சபையாரிற் சிலரும் அங்ஙனமே உணரலாயினர்; பெரியோர்களும் அத்தகைய உணர்ச்சியை மதிக்கலாயினர். தனித்ததொரு உடை உருவாயிற்று. யாவரும் மதிக்கலாயினர்; சபையினரும் மகிழலாயினர். அதே நீல நிறம்—அமலோற்பவ அன்னைக்குரிய அழகிய நீல நிறம். மேகமற்ற வானம் போன்ற நீலக் கச்சையைக் கட்டியவளாய்க் காட்சியளித்த லூர்துமாமரி தேர்ந்தெடுத்த நன்னிறம். கற்பின் பெருமையையும், அதற்குக் காவலான அடக்கவொடுக்கத்தையும் குறிக்கும் இணைந்த நன்னீல நிறம், பெயருக்கேற்ற நிறப் பொருத்தம் என்பதில் தடையில்லை.

எனினும் தொலைவிலிருந்து பார்ப்போருக்கு முன்னைய அந்த எளிமைத் தோற்றம் இன்னும் மாறியதாகப் புலப்படவில்லை. அடிப்படை இயல்பு மாறாத வரையில், மாற்றம் பெற்ற உடையும் வரவேற்கத்தக்கதேயன்றோ; எளிமையில் இனிமையைக் காணும் நற்பழக்கம் இந்தச் சபையினரிடம் மென்மேலும் வளர்வதாக!

இரண்டாவதாக, **இந்தச் சபையினரிடம் விளங்கிய சேவை ஆர்வம்** சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம். சேவை என்றால், ஏதோ மடத்தினுள்ளேயே அமர்ந்தவண்ணம், வருவார் போவாருக்கு இரண்டொரு நல்ல வார்த்தை சொல்லிவிட்டுப் போவது மட்டுமல்ல. காலையில் பிள்ளைகளை பள்ளிக்கு அழைக்கச் செல்வது போல், கையில் கட்டிச் சாதத்தையும், மருந்துப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு, ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, வியாதிப்பட்ட குழந்தைகளையும், வயோதிபர்களையும், சந்தித்து ஞானஸ்நானம் கொடுத்தல், மக்களுடன் அந்நியோந்நியமாகப் பழகுதல், அவர்களுடைய சுக துக்கங்களில் பங்கு கொள்ளுதல், ஆறுதலாகவோ, பாராட்டுதலாகவோ, அவ்வப்போது வேண்டியவற்றைக் கூறுதல், ஞாயிறு தினங்களில் சிறு

உலகமுற்று மாளினு முன்னுன்மா கெட்டால்
பலனென் மறுலோகப் பாடு — (மத்தேயு 16 : 26.)



சோம்பலாயிருந்து தன் அப்பத்தைப் புசியாள்—பழ. 31 : 27



அவள் தேவாலயத்தைவிட்டு அகலாமல் ... ... ஊழியம் செய்து கொண்டு வந்தாள்—லூக். 2:37

இதோ மனிதரோடு தேவன் கொண்ட கூடாரம். அவர் அவர்களோடு வாசம் செய்வார்—காட்சி 21 : 3.

கோவில் திருப்பணி

ஒழியாது என் வாழ்நாள்
முழுதும் உன் புகழ்பாடி
ஊழியம் செய்தல் ஒன்றே
வாழ்வின் இன்பம் என்று
கண்டேன்.



தன் கரங்களின் திறமையால் வேலைப்பாடு செய்தாள்—பழ. 31 : 13

வன்மையான காரியங்களுக்குத் தன் கரங்களை இட்டாள்—பழ. 31 : 19

மரியாயின் வழியாக



சேசுவை நாடுவீர்

உங்கள் அப்பத்தை பசியோடு
இருப்பவனுக்குப் பகிர்ந்து கொடுங்கள்.
இசை. 58 : 7

உன் சக்திக்குத் தக்கது கை நீட்டி
எளியவனுக்குக் கொடு.
சர்வப்பிர 14 : 13.

தரித்திரத்தையும் அகதிகளையும் உங்கள்
இல்லிடம் கூட்டிப் போங்கள் - இசை 58 : 7

காலத்தைச் செவ்வழியில் செலவிடக்
கற்றுக்கொள்வீர்.

மியர், கலியாணமாக வேண்டியவர்கள், பெரியோர்கள், முதலானோரைத் தனித் தனியே கூட்டிச் சேர்த்து வைத்து, முறையாக ஞானோபதேசம் கற்பித்தல், ஊரிலிருக்கும் தாறுமாறான மணங்களைக் கண்டுபிடித்து, பங்கு சுவாமியாரிடம் தெரிவித்தல், தபசு கால விசாரணையில் பங்கு சுவாமியின் முன்னோடிகளாய் கிராமங்களுக்குச் சென்று, வருஷப் பாவசங்கீர்த்தனம் நன்மை வாங்க பின் வாங்கும் மக்களைத் தேடி நல்வழிப்படுத்துதல் — ஆகிய உண்மையான வேத போதக அலுவல்களில் இக்கன்னியர் ஆர்வத்துடன் என்னுடன் பல வருஷங்கள் உழைத்ததை நினைத்து இப்போது மகிழ்கின்றேன்.

எவ்வளவு சிக்கலான வழக்கானாலும் சரி, தயங்காமற் சென்று, சாதுரியமாக அணுகி, பக்குவமாகச் சரிப்படுத்தும் திறமை இச்சபைக் கன்னியர்களுக்குண்டு. பங்குக் குருவானவரிடம் முறைத்துக்கொண்டு, வீறாப்பாகச் சென்ற கிராமத் தலைவர்களை முதலாய், எத்தனையோ தரம், இக்கன்னியர் நயத்தாலும், பயத்தாலும் வென்று நலம் பெறச் செய்துள்ளனர். ஒரு நாள் இரண்டு நாளல்ல, ஒரு வாரம் இருவாரம் மட்டுமல்ல. ஆனால் வாரந்தோறும் வருஷந்தோறும் தவறாமல் இத்தகைய அப்போஸ்தல அலுவலைப் பகிர்ந்து வருகின்றார்கள். ஞாயிறு கடன் பூசை தவிர சாதாரண நாட்களில் காலை பூசைக்குச் செல்லுதல், வழக்கமில்லாத மக்களுக்கு, தினசரி பூசைக்குப் போகவும் பாவ சங்கீர்த்தனம் செய்து திவ்ய நன்மை வாங்கவும், கிராம மக்களின் மனதிற்கேற்ப முகாந்தரங்களை எடுத்துரைத்து, தெய்வ பக்தியை வளரச் செய்கின்றனர். ஆடு மாடுகளுக்கு நோய், கொடிக்கால் பயிர் பச்சைகளுக்கு பூச்சி என்று தங்களிடம் சொல்லும் மக்களை உடனே பங்குக் குருவிடம் அனுப்பி பலி பூசைக்குப் பணம் கொடுக்கவும் அப்பூசைக்கு குடும்பத்தார் அனைவரும் வந்து பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை வாங்கவும், கோவிலில் தீர்த்தம் எடுத்துச் சென்று, கொடிக்கால் பயிர்களுக்குத் தெளிக்கவும், ஆலோசனை சொல்லுவார்கள். இவ்வாறாக தன் பங்கு மக்களின் குடும்பங்களுக்காக பலி ஒப்புக்கொடுக்க, குருவானவருக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கின்றது. கிறிஸ்தவ மக்கள் இதர மதஸ்தரிடம் மந்திரிக்கப் போக வழியில்லை. பாவசங்கீர்த்தனம் செய்து நன்மைவாங்க வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆண்டவரின் அருளைப் பெறுவதால் ஆடு மாடுகளுக்கும் பயிர் பச்சைகளுக்கும் வந்த பிணி நீங்குகின்றன.

இத்தகைய "சேவை மனப்பான்மை"யே, இந்தச் சபையாரின் தனிச் சிறப்பியல்பாக விளங்குவதைப் பலரும் அறிவீர். அந்த நிலை என்றும் குன்றாது, குறையாது, மாறாது, மறையாது மேலும் வளர்ந்தோங்கிச் சிறக்க வேண்டும் என்பதே, எனது ஏக ஆவல்; ஒரே வேண்டுகோள்.

மூன்றாவதாக, இன்று நான் இறைவனின் அருட் குருவாக விளங்குகின்றேன் என்றால், ஆண்டவருக்கும், ஞானத் தந்தை பிக்கோ சுவாமிகட்கும் அடுத்தாற போல் இந்தச் சபையைச் சேர்ந்த கனம் தாயாரவர்களின் பிரயாசையும் விடாப்பிடியான வேண்டுதலுமே காரணமாகும் என்றால் அது மிகையன்று. இத்தகைய பணியிலும் சிறந்த திருப்பணி வேறு யாதுளது? இங்ஙனம் வேறு எத்தனை குருமார் தோன்ற இந்தச் சபையார் காரணமாயிருந்தனரோ, அதை இறைவன் ஒருவரே அறிவார்! அறிந்து, அதற்கான சம்பாவனையும் அளிப்பார் என்பதில் ஐயமில்லை.

இன்று இந்தச் சபையார் தங்கள் சபையின் 50-ம் ஆண்டு விழாவை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். அவர்களுடைய மகிழ்வில் நானும் மனமாரப் பங்கு கொள்வதில் உவகை அடைகின்றேன். இன்று இந்தச் சபையினர் பல்வேறு நிறுவனங்களை அமைத்து நற்றொண்டாற்றி வருகின்றனர். மேலும், மேலும் இவர்களுடைய பணி வளர்வதாக! ஆயினும் சபையின் தொடக்க நாட்களில் விளங்கிய அந்தக் கிராமத் தொண்டு உள்ளம்—சேவை மனப்பான்மை—என்றும் நிலவும்படி பார்த்துக் கொள்ள வேண்டுவது இன்றியமையாத கடனாகும். ஆம்; "ஆண்டவனுக்காக உழைப்பது ஆட்சி புரிவதிலும் மேல்"—என்னும் ஆழ்ந்த உண்மையை—தங்கள் உள்ளங்களில் சபையார் ஒவ்வொருவரும் ஆழப் பதிய வைப்பார்களாக!

வாழ்க, அமலோற்பவ மாதா சபை!
வளர்க, அவர்தம் நற்றொண்டு!!

Rev. Fr. A. Thomas

நித்திய கேட்டை நிவர்த்திக்க வுன்றிறத்தால்
சத்தியுறு வீடுளதோ சாற்று

எம் களிப்பின் காரணமே, வாழி!

"ஓ மரியே! உன் நிமித்தம் விவிலியம் எழுதப்பட்டது; உனக்காகவே உலகம் உண்டாக்கப்பட்டது" என்கிறார் எபிரேம்மேதை. முற்றும் உண்மை. அன்னையே! விவிலியம் போற்றும் கன்னியே! உலகை உண்டாக்கியவர் உன்னைக்கேட்டு, உன் இசைவு பெற்று, மனு உருவானார்; உலகை ஈடேற்றினார். நீ இன்றேல் மீட்பு ஏது? மீட்பு இன்றேல் விவிலியம் ஏது? ஆழ்ந்து சிந்தியாதார் விடுக்கின்றார் வினா மரியன்னை வணக்கம் விவிலியத்தில் யாங்குக் குறிக்கப்பெறுகிறதென்று. அந்தோ! அறியாமை, அலசிப்பாராத பெருங்குறை. பழமையும் புதுமையுமாகிய விவிலியத்தின் இருபகுதிகளிலும் நேர்முகமாகவும், உவமை முறையிலும் உன்னைக் குறிப்பிடும், போற்றிப் புகழும் பகுதிகள் பரந்து கிடக்கின்றன. உனது அமல உற்பவத்தைப்பற்றி, 'என் காதலியே, நீ பூரண ரூபவதி. உன்னில் பழுதே கிடையாது". (உன். சங். 4:7) என்றும், உனது கன்னிமையைப்பற்றி, 'இதோ கன்னியானவள் கற்பமாகி மகவைப் பெறுவாள்'. (இசை. 7 : 14) 'அவளுக்குப் பின் கன்னிகைகள் இராசாவிடம் கூட்டிவரப் படுவார்கள்' (சங். 44 : 15) என்றும், உனது வீரச் செயலைப்பற்றி, 'அவள் உன் தலையை நசுக்குவாள். நீயோ அவளுடைய குதிங்காலைத் தீண்ட பிரயத்தனப்படுவாய்' (ஆதி. 3 : 11) 'கர்த்தர்...உன்னைக் கொண்டு எங்கள் சத்துருக்களை பல்வேறு இடங்களில் ஆகமங்கள் பகர்கின்றன.

அன்று பொய்த்தூதன் வாக்கால் புத்தி மயங்கிப் புவியை சாபப் படுகுழியில் வீழ்த்தினாள் அன்னை ஏவை. நீயோ அன்னாய்! அப்பழி, உற்பவத்திலும் உனைச் சாராது, அழகு உருவாய் அருள் நிறைவோடு தோன்றினாய். மெய்த்தூதன் மங்களமொழியால் மனுக்குலத்தின் மதிகேட்டை நீக்கியதோடு, அதை வாழ்வின் ஏணியில் உயர்த்தினாய். இதனாலேயே

" சாதந்த கனியாலே சாபமும் அழிவும்
நீ தந்த கனியாலே நேசமும் உயிரும் "

என இசைஞானி சந்தியாகு சுவாமி பாடித் துதித்தார்.

" மதியிழந்து, மானமழிந்து, மாசு பொதிந்து, பீடையிலாழ்ந்து நின்ற மனுக்குலத்திற்கு, மாபெரும் களிப்பு ஈந்தவள் நீ. ஒரு பெண்ணின் நிலைகேட்டால் உலகில் புகுந்தது மாபெரும் தீமை; மறு பெண்ணாகிய உம் புனிதத்தால் அத்தீமை ஒழிந்தது; மக்களிடை வாழ்வு மலர்ந்தது. சர்ப்பத்தின் தலையை நசுக்கிய போதே எம் ஆன்ம சத்துருவின் வன்மையை அடக்கி ஒடுக்கினாய். அன்று பாலிய தோழரின் பரிவற்ற தன்மையால் சேசு பாலன் தேம்பியழுத கண்ணீரை நின் திருக்கையால் துடைத்த போதே எம் ஏக்கத்தையும் கண்ணீரையும்

சிறையி லடைபடதீ தீர்ப்புப்பெரு வண்ணம்
எதிரி யுறவனை யிங்கு. — (மத்தேயு 5 : 25.)

நிர்த்தூளியாக்கினர்' (யூதித். 13 : 22) என்றும் பீடைகளையும் துடைத்தாய் நீ''. அதனால், "இஸ்ரயேலின் மகிழ்வு நீ! எம் ஜனத்தின் பெருமையும் நீ!" என ஆகமம் அறைகூவுவது ருெத்தம்பாதானே. 'இதோ எல்லாத் தலைமுறை களும் என்னைப் பாக்கியவதியென்று போற்று வார்கள்'' என அன்று தீர்க்கவாக்கு உரைத் தாய். பாக்கியவதியென்று உனைப்போற்றுவது மட்டுமா, எம் நிற்பாக்கியத்தை ஒழித்து, பாக்கியத்துக்கு எம்மையும் ஆளாக்கிய உன் அன்புப் பெருக்கை எண்ண எண்ண மகிழ்ச்சி எல்லை மீறிப் பொங்குகிறது அம்மா! இல்லறத் துறவியே! இணையிலாக் கன்னித்தாயே! உனது வழியும்,மாதிரியும் இருவகை அறத்தினருக்கும் ஏற்ற வழிகாட்டும் கலங்கரை விளக்கமாயிற்று.

"மனுக்குலம் மாசுகொள்ளுமுன் பராபரனை யாம் உன்னைச் சர்வேசுரன் தெரிந்து கொண் டார். அவரது ஆலயத்தில் உன்னை வாசம் செய்யச் செய்தார்—ஆம் தவறும் மனுக்குலத் திற்குத் தகுந்த ஒரு பற்றுக்கோடாக அன்று இறைவன் உனை ஏற்படுத்தினர். இன்றோ இன்னும் ஒரு புதிய மகிழ்வையும் உன்னால் யாம் அடையச் செய்துள்ளார். "வண்ண மலர்கள் குலுங்கும், வலிய வேலியிடப்பட்ட வனப்புறும் தோட்டமாகிய நீ, இதோ முட் புதர்களும், கரம்பு நிலமும் நிறைந்த கிராமப் பகுதிகளை, வளமிக்க தோட்டங்களாக்கி வையகத்திற்கே வாழ்வும், மகிழ்ச்சியும் அளிக் கும் தாயாக விளங்குகின்றாய். உன்னால் தமிழ் நாட்டின் பெரும் பகுதி இறைவன் சேசுவுக்கு மணமிக்க புனித மலர்கள் நல்கும் அவரின் நந்த வனமாக மாறியது. உன் நாமம் கொண்ட இச் சபை இன்றேல், இந்த இன்பக் குழுவில் எத்தனை பேர் விண்ணுலக மகிழ்ச்சியை இம் மண்ணுலகிலேயே கொள்ளும் உரிமை பெறுவர்? செல்வரும், வறியரும் சேர்ந்து மகிழத்தக்க வாய்ப்பு தான் இருந்திருக்குமா? மூலை முடுக்கு களில் ஒடுங்கிக் கிடப்போருக்கு உதவியேது? உவகை ஏது? எல்லாம் உன்னால்! மானிலத் தின் தாய் நீ தான் ஆயினும் தமிழ் நாட்டிற் கோர் தனிப்பெரும் தாயும் மகிழ்வும் நீ. அதிலும் அமலோற்பவ சபைக் கன்னியர்க்கு இணையிடக் கூடாத இனிய தாய் நீ என்றால் இதில் மிகை ஏதோ?

அனைவருக்கும் தாயாம் உனது, இச்சபையின் பொன் விழாச் சுபநாளால் மகிழ்ச்சியுற்றவர், யாம் மட்டுமன்று. பொருட் காட்சிகளால் எத்தனை ஏழைகட்கு வேலையும், ஊதியமும்! அறிவொளி மங்கியவருக்கு எத்தகைய தெளிவு! அறிஞர் பெருமக்களுக்கும் என்னென்ன எழிலுறு காட்சிகள்! திறமை மிக்கோர்க்கு அவர் தம் திறமையை வெளியிட என்னென்ன வாய்ப்புகள்! சிறுமியர் களிப்பு கரை கடந் தோடியதே! கத்தோலிக்கர் மட்டுமன்று, இதர மதத்தினரும் உன்னைப்பற்றி ஏதேனும் ஒரு சிறிது அறிவதற்கோர் வாய்ப்புக்கிட்டியது. இசை ஏக்கம் கொண்டவர் ஏக்கம் தீர இனிய இசை அமுதம் உண்டனர். கொடைப்பயன் அறிந்தார் பயன் பெறும் வழிகண்டனர். இதனாலன்றோ,

"கல்லார்க்குக் கலைக்கடல் நீ,
கடவார்க்கு நிலைத்திறன் நீ,
இல்லார்க்கு இரணியம் நீ,
எல்லார்க்கும் எல்லாம் நீ''

என பைந்தமிழ்ப் புலவர் வீரமாமுனிவர் உனை வியந்து போற்றுகின்றார்.

இவ்விதம் எழுதிக்கொண்டே செல்ல எண்ணம் தூண்டுகிறது. எமக்களித்த மகிழ்வை இக்காலத்திலும், பிற்காலத்திலும் வாழும் இளம் பெண்களுக்கும் நீ அளித்து உன் அரவணைப்பில் உண்மை இன்பத்தை ஓய்வின்றிப் பெற அவர்களுக்கு ஒளியையும், உறுதியையும் பெற்றுக்கொடு அம்மா!

எப்பேற்றிலும் சிறந்ததான உன் அமல உற்பவத்தை, அருள் நிறைவை அத்தூதன் வாக்காலேயே யாமும் புகழ்கின்றோம்.

"வையகம் வைகும் மாதருள் ஆசிவாய்ந்த
துய்யகம் பொலியப் பூத்த சுந்தரி வாழி!''

(தேம்பாவணி)

St. Cecilia.

மின்னல் கிழக்கிலிருந்து மேற்றிசையிற் றோற்றும்வான்
மன்னன் வருகையவ் வாறு. — (மத்தேயு 24 : 27.

தந்தை ஜே. பிளான்ச்சார்டு, சே. ச.

1959 ஜன. 29. காலை ஷெப்பகனூர் திரு இருதயக் கல்லூரி பேசும் அறை அமலோற்பவமாதா அவைக் கன்னியரால் நிரம்பி இருந்தது. அவர்கள் மத்தியில் சேசு சபை சுவாமி பிளான்ச்சார்டு அவர்களின் உயிர் பிரிந்த உடல் கிடத்தப்பட்டிருந்தது. இவருக்காக செபிப்பதற்கு இவர்கள் கூட்டமாக மலை ஏறி வந்தது ஏன்?

இன்று பொன்விழாக் கொண்டாடும் இச் சபை என்று மதுரையில் தோன்றியதோ அன்று முதல் அதனோடு தொடர்புகொண்டவர் இவர். 1912 முதல் 1918 வரை மதுரை மாவட்ட சிரேஷ்டராயிருந்தார். அமலோற்பவ மாதா சபையின் நோக்கத்தை அறிந்தார். உளம் மகிழ்ந்தார். அதன் ஞானவளர்ச்சியில் உறுபங்கு எடுத்தார். அதன் நோக்கத்திற்கு ஏற்ப அதனைச் சேவையில் வளர்க்கவும், ஊக்கவும் சேசு சபை சுவாமி நெஸ்ப்ளூஸ் அவர்களுடன் ஒத்துழைத்தார். அதற்கோர் சிறு ஒழுங்குப் புத்தகத்தை ஆதியிலே உருவாக்கி யளித்தார். இராமநாதபுரம், பஞ்சம்பட்டி முதலிய இடங்களில் முதலில் பங்குக் குருவாகவும், மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் சிரேஷ்டராகவும் பணி ஆற்றியதால் இரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களின் குணப்பான்மையையும், பழக்கவழக்கங்களையும் நன்கு அறிந்திருந்தார். அம்மக்களை உத்தம கத்தோலிக்கராக்க எம்முறைகளைக் கையாளவேண்டுமென்பதை நன்கு உணர்ந்தார். அதற்கு உதவியாகக் கன்னியருக்கு முந்த ஞானோபதேச விளக்கமும், அதைப் போதிக்கும் முறைகளும் ஊக்கமுடன் கற்பித்தார்.

1941 மே மாதம் 25-ம் தேதி சபையைத் தாயன்பு கொண்டு நேசித்த தந்தை சேசு சபை அமலோற்பவம் அவர்கள் சடுதியில் மறைந்தார். உடனடியாக இவர் மறுமுறை மதுரை மாவட்ட சிரேஷ்டரானார். அந்த ஆறு வருடங்களும் பின் வாழ்வின் இறுதிக்காலம் வரையும் .சபையின் இயக்குநராக அரும்பணிபுரிந்த அரிய தந்தை இவர். 1940-ம் ஆண்டிலேயே சபையின் வளர்ச்சிக்கும் ஆற்றும் சேவைக்குப் ஏற்ப ஒழுங்குத் திட்டங்களை மறுமுறை விரித்து முறைப்படுத்தினர். 1941-ல் ரோமைக்கு அனுப்பி பரிசுத்த தந்தையின் அங்கீகாரம் பெற்றுத் தந்தார். லத்தீனிலிருந்த அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, பின் தமிழாக்கம் செய்தற்கும் பேருதவிபுரிந்தார். தனது அயர்ச்சியைப் பாராது வாரத்தில் இருமுறை நவகன்னியருக்கு ஞானோபதேசமும், ஒருமுறை கன்னியர் அனைவருக்கும் ஞான போதகமும் கொடுத்தார். இச்சபை மட்டில் அவருக்கு இருந்த தனிப்பட்ட கவலையும், அன்பும் எத்தகையதெனின் சபையைப் பற்றிக் கூறுகையில் 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே' என்பார். சுவாமி பிளான்சார்டு என்றால் அக்காலத்தில் பலர் அவரிடம் அணுக அஞ்சுவர். ஆனால் எக்காலமும் சபைக் கன்னியர் அவரிடம் அச்சமின்றி அணுகி, ஆன்ம உதவியும் பிற உதவிகளும் பெறுவர். நவகன்னியரை ஞானவழியில் முன்னேற்ற ஞானப் புத்தகங்கள் மூலமும் பேருதவி புரிந்தார். சேசுவின் திரு இருதய பக்தியைக் கன்னியரிடமும், ஏனைய மக்களிடமும் வளர்க்கத் தனது மாதிரிகையாலும், போதனையாலும் ஓயாத் தூண்டுதல் அளித்தார். அதனை நிலைநாட்ட தொசாள் மடத்தில் கட்டப்பட்ட சேசுவின் திரு இருதயக் கோவிலுக்கு அவரால் இயன்ற உதவியும் அளித்தார்.

1957 ஜூலை முதல் ஓய்வுபெற்று, சுமார் $1\frac{1}{2}$ ஆண்டுகள் கொடைக்கானலில் இருந்தபோதும அவரது பேச்சும், பெரும் கவலையும் சபை சாங்கோபாங்கத்தில் வளர்ச்சியுற வேண்டுமென்பதே. இறுதியாக அவர் கடிதத்தில் கூறிய அறிவுரை, "நீங்கள் அனைவரும் கீழ்ப்படிதலிலும், தேவநேசத்திலும் வளர்ந்து விசுவாச ஜீவியமுள்ளவர்களாக இருங்கள், நான் மோட்சத்திற்குப் போனபின் நீங்கள் அனைவரும் அர்ச்சியசிஷ்டவர்களாக ஜெபிப்பேன்" என்பதே. கடைசி மூச்சுவரை அவர் சபையை நேசித்தார் என்பதற்கு இவ்வார்த்தைகளே சான்று. மண்ணில் நேசித்த அவர் விண்ணிலும் மறவாது நேசிக்கின்றார். அவரது விருப்பத்தின்படியே நவகன்னியருக்கு வசதியான தனிப்பட்ட இல்லம் ஒன்றும் உருவாகியது.

எங்கள் அன்புத் தந்தையின் ஆன்மா நித்திய பேரின்பத்தை என்றென்றும் சுகிப்பதாக!

Mother Sesuvin Rita

தேவன் வருநாள் தெரியாய் விழித்தவரைச்
சேவிக்க வென்றுந் தெரி. — மத்தேயு 24 : 42.

எமது வாழ்க்கைத் தீபம்

அம்மா! அம்மா!

உள்ளே வாடா ராஜா. இன்று ஏன் அதிக நேரமாகிவிட்டது?

"வந்துப்மா, இன்னிக்கி அம்மாச்சி ஊருலே யிருந்து இப்பத்தான் வந்தாங்க. இருந்து பார்த்துட்டு வந்தேன். அவுங்க ஊருக்குப் போயிட்டா ஒன்றும் நல்லாவேயில்லம்மா."

ராஜாவை அப்படியே தூக்கி முத்தமிட்டேன் நான். உணவருந்திய சிறிது நேரத்தில் ராஜா படுத்துவிட்டான். அவன் அருகில் உட்கார்ந்தேன். என் சிந்தனை பின்னோக்கிச் சென்றது.

"அம்மாச்சி" என்று என் மகன் குறிப்பிட்டது என் அம்மாவை அல்ல. அமல அவையின் சிரேஷ்டத் தாயாரையே. என் அம்மா எனக்கு எட்டு வயது நடக்கும்போதே இறந்துவிட்டார்கள். அதற்கு முன்பே தந்தையையும் பறிகொடுத்தவள் நான். என் அதிர்ஷ்டத்தில் பங்கு பெற்றவர் என் தங்கைமார் இருவரும். இந்நிலையில் திக்கற்ற எமக்குத் தெய்வமாக வந்தனர் காலம் சென்ற சங். அகுஸ்தீன் தாயாரவர்கள். அன்றிலிருந்தே எம் தாய் வீடு அமல அவை மடமே. எம்மைத் தாயினும் பன்மடங்கு சீராட்டியவர் அமல அவைக் கன்னியரே. எங்கள் துன்பம், இன்பம், சுகம், நோய் அனைத்திலும் பங்கு பெற்றவர் இக்கன்னியர்களே. எனது தங்கை ஒருத்தி சிறிது காலம் புனித சூசையப்பர் மடத்தில் இருந்து கல்வி கற்றாள். நாங்கள் இருவரும் அமல அவை மடத்திலேயே தங்கினோம். மூவரும் S. S. L. C. முடித்தோம் இவர்கள் ஆதரவிலேயே. விடுமுறையில் எம் தாயகம் இவர்கள் மடமே. படித்து தொழிலில் அமர்ந்தோம். எம்மில் எவருக்குமே தேவ அழைத்தல் கிட்டவில்லை. மூவரும் இல்வாழ்வையே தெரிந்து கொண்டோம். தேவ கிருபையால் நல்ல நிலையிலேயே வாழ்கின்றோம். ஒருவரும் கன்னியர் வாழ்வைத் தெரிந்து கொள்ளவில்லை என்று குறை கூறியவர் எவருமே இல்லை. இன்றும் என் பிள்ளைகளுக்குப் பாட்டி வீடு அமல அவை மடம்தான். அறியாப் பருவத்தில் அன்னையினும் பன்மடங்கு ஆதரவு காட்டி எம்மை ஆளாக்கிவிட்டதை நினைத்துத்தான் நான் நன்றி கூறுவதா? அன்று அடிக்காமல் அணைத்து வந்த அன்பை நினைத்துத்தான் நன்றி கூறுவதா? அன்றி இல்வாழ்வுக்கு எம்மை மனமுவந்து ஆசி கூறி அனுப்பிய இவரின் தன்னலமற்ற தொண்டினை நினைத்துத்தான் நன்றி கூறுவதா?

எம்மை உருவாக்கிய தாயே!
அன்புடன் அணைத்த அமல அவையே!
தன்னலமற்ற பண்புள்ளம் கொண்ட
எம் தாய் அகமே!
வாழ்வுக்கு ஒளிகாட்டிய தீபமே! நீ வாழ்க!

உன் சேவை செழிக்க! திக்கெல்லாம் நீ கிளைத்துத் தழைக்க!

நன்றி! என்றும் நன்றி! என் உடல் உயிரை விட்டுப் பிரிந்த பின்னும் என் நன்றி நிலைக்க!

எம் மக்களுக்காவது உன்னோடு ஒன்றி வாழும் பாக்கியத்தை இறைவன் அளிப்பாராகில் எம் மனம் உவகைக் கடலில் மேலும் மூழ்கும். உனது இப்பொன் விழா மகிழ்வில் எமது எளிய வாழ்த்தும் நினக்கு உரித்தாகுக.

Mrs. Mary
Madurai

Congregation of the Sisters of the Immaculate Conception — Madurai.

erial mber	Name of the convent and address	Date of Establishment	School conducted	Staff: Religious	Staff: Secular	Strength: Catholics	Strength: Non-Catholics	Other works Undertaken
1	Mother House Immaculate Conception Convent Old Kosavapalayam Madurai—9	2—7—1911	St. Patrick's Higher Ele. School	22	3	100	606	Needle work - 17
2	East Gate Convent Madurai—9	23—12—1923	R. C. Higher Elementary School	17	13	173	871	Boarding - 22
3	Kosakulam Sanatorium Pudur, Madurai - 7	5—7—1930						
4	Kosakulam Convent Pudur, Madurai - 7	1—6—1933	R. C. Higher Ele. School	12	12	187	631	
5	Holy Rosary Church Convent West Gate, Madurai—1	1—6—1944	Holy Rosary Church Higher Ele. School	8	13	65	560	
6	St. Theresa's Convent, 161. Ramnad Road, Madurai - 9	2—7—1951	(1) St. Theresa's Basic Training School.	7	3	88	92	Boarding - 180
			(2) Nirmala High School	7	9	84	331	Boarding - 144
			(3) R. C. Fatima Senior Basic Sch.	12	14	50	797	Boarding - 5
7	Loretto House (Novitiate) Pudur Madurai - 8	8—1—1961						
8	Panjampatty Convent via Chinnalapatty Madurai Dt.	2—2—1899	St. Mary's Senior Basic School.	10	8	307	101	Orphanage - 103
9	Silukkuvarpatty Convent via Kodai Road Madurai Dt.	21—5—1909	R. C. Higher Ele. School	5	3	250	25	

10	Anandrayankottai Convent Dindigul Taluk, Madurai Dt.	3—2—1913	St. Theresa's Ele. School	3	2	157	12	
11	Kosavapatty Convent via Behambur Dindigul Taluk, Madurai Dt.	1—6—1921	St. Joseph's Ele School	4	2	170	30	
12	Vellodu Convent, Dindigul Taluk, Madurai Dt.	1—6—1927	(1) Little Flower Ele. School	4	2	128	51	
			(2) St. Joseph's Ele. School at Sirunayakkanpatty	4	3	193	27	
13	Marambody Convent Dindigul Taluk, Madurai Dt.	21—6—1928	Little Flower Ele. School	3	2	134	30	
14	Athoor Convent via Chinnalapatti, Madurai Dt.	1—6—1942	Sacred Heart Senior Basic School	7	8	115	226	
15	Sindalacherry Convent via Bodi, Madurai Dt.	1—6—1943	St. Mary's Higher Ele. School	7	5	248	51	
16	Shembaganur Convent Madurai Dt.	3—6—1946	St. Xavier's Ele. School	6		161	27	
17	Natham Convent Madurai Dt.	8—6—1956	Little Flower Higher Ele. School	7	8	21	429	
18	Dindigul Convent Madurai Dt.	16—6—1958	St. Xavier's Senior Basic School	6	14	210	280	
19	Suranam Convent via Paramakudi, Ramnad Dt.	2—8—1922	St. Mary's Higher Ele. School	7	8	191	95	Orphanage–1
20	Soosaiapparpatnam Convent via Kalayarkoil, Ramnad Dt.	18—5—1926	St. Joseph's Higher Ele. School	3	12	263	49	
			Little Flower Ele. School. at Andichoorani	3	2	108	48	
21	Irudayakoil Convent Thiruvarangam P. O., Ramnad Dt.	16—6—1928	St. Theresa's Higher Ele. School	5	7	118	165	Orphanage –
22	Andavurani Convent via Thiruvadanai, Ramnad Dt.	24—6—1929	Little Flower Higher Ele. School	5	10	250	150	Orphanage –

Serial Number	Name of the Convent and address	Date of Establishment	School Conducted	Staff		Strength		Other works Undertaken
				Religious	Secular	Catholics	Non-Catholics	
23	Satharasanpatty Convent via Natarasankottai, Ramnad Dt.	21—9—1931	Sacred Heart Ele. School	3	4	120	89	
24	Karankadu Convent via Thondi, Ramnad Dt.	1—6—1934	St. Theresa's Ele. School	4	4	129	91	
25	Rajakembiram Convent via Manamadurai, Ramnad Dt.	30—12—1934	St. Mary's Ele. School	4	1	70	79	
26	Sundaranachiyapuram Convent via Rajapalayam, Ramnad Dt.	1—6—1936	St. Theresa's Ele. School	3	1	86	33	
27	Savariarpatnam Convent via Manamadurai Ramnad Dt.	1—6—1937	St. Philomena's Higher Ele. School	4	3	119	56	
28	Karaikudi Convent, Ramnad Dt.	29—12—1938	Little Flower Higher Ele. School	5	15	102	547	
29	Kuthalur Convent via Thirupathur, Ramnad Dt.	1—6—1940	St. Sebastiar's Ele. School	5	10	121	239	
30	Salaigramam Convent via Paramakudi, Ramnad Dt.	1—6—1941	St. Mary's Higher Ele. School	9	9	85	415	Orphanage – 9[illegible]
31	Ramanagar Convent Devakottai, Ramnad Dt.	1—6—1942	St. Joseph's Higher Ele. School	5	3	128	145	
			St. John's Ele. School	4	10	45	433	
32	Manamadurai Convent Ramnad Dt.	1—6—1942	St. Cecilia's Ele. School	5	3	35	196	
33	Ramnad Convent	17—6—1944	St. Joseph's Senior Basic School	6	12	81	397	Boarding – 7
34	Puliyal Convent Via Devakottai, Ramnad Dt.	5—6—1950	St. John's Ele. School	4	10	150	270	
35	Kilamudimannarkottai Convent via Aruppukkottai, Ramnad Dt.	1—11—1953	St. John's Higher Ele. School	4	4	207	4	

36	Pudupatty Convent Watrap P. O., Ramnad Dt.	30—5—1956	Christ the King Ele. School	3	2	96	66	
37	Tirupathur Convent Ramnad Dt.	19—8—1959	R. C. Fatima Ele. School	4	4	24	219	
38	Singamparai Convent, Mukkudal P. O., Tirunelveli Dt.	30—12—1934	St. John Bosco's Higher Ele. School	6	7	205	155	
39	Irudayakulam Convent Vikramasingapuram P. O., Tirunelveli Dt.	30—12—1941	Amali High School	7	9	193	154	Boarding - 7
			St. Xavier's Higher Ele. School	8	12	166	402	Orphanage - 9
			St. Theresa's Higher Ele. School	4	13	57	358	Orphanage - 2
40	Tenkasi Convent Tirunelveli Dt	1—6—1942	R. C. Higher Ele. School	6	19	30	697	
41	Viravanallur Convent Tirunelveli Dt.	2—6—1945	R. C. Higher Ele. School	7	8	202	163	Needle Work -
42	Kayatar Convent, Tirunelveli Dt.	21—10—1946	R. C. Fatima Ele. School	5	4	38	189	
43	Keelamudiman Convent Tirunelveli Dt.	10—6—1049	St. Joseph's Higher Ele. School	6	7	40	257	
44	Chidambarapuram Convent Via Kalugumalai, Tirunelveli Dt.	6—6—1951	St. Theresa's Senior Basic School	4	5	65		
45	Ilayarasanendal Convent Via Koilpatty, Tirunelveli Dt.	3—1—1955	St. Theresa's Ele. School	6		43	148	
46	Shermadevi Convent Tirunelveli Dt.	31—12—1957	R. C. Higher Ele. School	6	2	174	133	
47	Karungulam Convent Via Viyampatty, Trichy Dt.	21—12—1914	Little Flower Ele. School	4			30	
48	Malayadipaity Convent Trichy Dt.	2—6—1920	St. Theresa's Ele. School	3	1	114	23	
						117	6	
49	Trichy Convent, Puthur	1—6—1924	Fatima Higher Ele. School	9	12	212	521	

50	St. Joseph's Convent, Sivakasi Post, Ramnad Dist.	6—6—1961	R. C. Ele. School	4	2	49	201
51	Im. C. Convent. St. Joseph's Convent Compound Usilampatti P. O., Madurai Dist.	1934	1. Little Flower Hr. Ele. School. 2. Little Flower Ele. School.	5			
52	St. Martha's Convent St. Joseph's Convent Compound Madurai—9	1916	St. Joseph's H. School.	4			
53	I. C. Convent, St. Joseph's Convent Compound, Gnanaolivupuram, Madurai–10.	1953	1. Holy Family Hr. Ele. School 2. St. Joseph's Industrial School	2 2			

அமலோற்பவ மாதா

கன்னியர் சபைப் பாடல்

இராகம் : காம்போஜி தாளம் : ஆதி

பல்லவி

அமலவை அரசியே! — உமை
அன்னை அன்னை யென்(று)
அன்புடன் அழைக்கிறோம்.

அநுபல்லவி

அமலவை கன்னியர் அனைவர் அமலனின்
அரும்பணி புரிய உறுதியும் கொண்டோம் — அம

சரணங்கள்

1 எம் சபை நோக்கம் என்றும் கைகூட
எளிய உம் மக்கள் இதயத்தைத் தூண்டும்
சேயரெம் வாழ்வில் சேசுவைத் தேடி
சேர்ந்து மகிழ்ந்தே சேவையைச் செய்ய — அம

2 நன்மனங் கொண்டோர் நலம்பெற நாளும்
நரதேவன் வழியைக் கனிவுடன் சாற்றி
உண்மையை உணர்த்தி உலகிருள் போக்க
நன்மையைப் பெருக்கி நாடெலாம் செழிக்க — அம

3 இரட்சண்யத் தொழிலில் பெரும்பங்கு கொண்டாய்
இரட்சகர் போதகம் பழுதறத் தெளிந்தாய்;
அமலியுன் அன்பு வழியினில் நடந்தே
அமலன் பணியை யாம்தினம் தொடர — அம

பொன்விழா நிகழ்ச்சிகள்

முதல் நாள்

" ஆமென், எங்கள் சர்வேசுரனுக்கு துதியும், மகிமைப்பிரதாபமும், ஞானமும், நன்றியறிந்த தோத்திரமும், சங்கையும், வல்லமையும், பலமும் காலா காலங்களுக்கும் உண்டாவதாக, ஆமென்."
(காட்சி. 7 : 12)

15 மே 1961

நன்றியறிதல் நாள்

விழா நிகழ்ந்த இடம்: பெரிய மடம் குயவர்பாளையம்.

காலை 6 மணி: *மதுரை அதிமேற்றிராணியார் மிக. வந். J. P. லெயோனார்டு சே. ச.*
ஆண்டவர் அவர்களின் **ஆடம்பரப் பாடற் பூசை**

7 மணி: சபைக் கொடி ஏற்றுவித்தலும், ஞானோபதேசப் பொருட்காட்சித் திறப்பும்
— மிக. வந். மதுரை அதிமேற்றிராணியார்.

அகுஸ்தீனூர் குடிசைத் தொழிலகத் திறப்பு
— உயர் திரு. F.X.A. பெரைரா.

மாலை நிகழ்ச்சிகள்

இடம்: *புனித தெரேசாள் மடம், இராமநாதபுரம் ரோடு.*

நேரம்: மாலை 5 மணி

பொதுக் கூட்டம்

தலைவர்: **உயர் திரு. Chev. J. L. P. ரோச் விக்டோரியா**

1. *இறை வணக்கம்*
2. *வரவேற்புரை* — **கனம் அதிசிரேஷ்ட தாயார்**
3. *" ஆண்டுகள் ஐம்பது கண்ட அருட் சபை "*
   — **திரு. S. B. X. அந்தோனிசாமி B. A., B. L.**
4. *இன்னிசை*
5. *" சின்னஞ் சிறுவர் மத்தியில் "* — **திரு. V. சந்தியாகு B. A.**
6. *நடனம்*
7. *காலத்திற்கேற்ற கன்னியர்* — **பண்டிதர் ராமகிருஷ்ணன் B. A., B. T.**
8. *தலைவர் உரை*
9. *நன்றி !*
10. *ஜன கண மன.*

அதிமேற்றிராசன விக்கார் ஜெனரல்
மிக. சங். J. சந்தியாகு சே. ச. சுவாமிகளால்
திவ்ய நற்கருணை ஆசீர்

தியாக்கோன்: *சங். சுவாமி A. தாமஸ், திருச்சி*

உபதியாக்கோன்: *சங். சுவாமி R. ஞானப்பிரகாசம் சே. ச. (சபையின் டைரக்டர்)*

மதுரையில்
சிறந்த உணவிற்கும்
ருசியான சிற்றுண்டிக்கும்
சிறந்த இடம்

நாராயணா லஞ்சுஹோம்

(அமெரிக்கன் கல்லூரிக்கு எதிர்ப்புறம்)
அழகர்கோயில் ரோடு, மதுரை

★

நீடித்து நிரந்தரமாக உழைக்கும்
பர்னிச்சர்களுக்கு

ராணி பர்னிச்சர்

21, மேலாவணிமூல வீதி, மதுரை.

வீடு, ஆபீஸ், ஸ்கூல், ஆஸ்பத்திரி,
ஹாஸ்டல் முதலியவைகளுக்கு தேவையான
சகல விதமான மர பர்னிச்சர்களும்,
ஸ்டீல் பர்னிச்சர்களும்
கிடைக்கும்.

மதுரையில்
மிகப் பிரபல்யமான
ஜவுளிகள், சேலைகள்
நிறைந்த ஒரே விலைக் கடை

வாப்ஸன்ஸ்

கிளாத் ஸ்டோர்,

பெரிய விளக்குத் தூண் கீழ்புரம்,
மதுரை

B & C பென்னி மில்ஸ், மேட்டூர் மில்ஸ்,
மற்ற மில் ஜவுளிகள் முத்திரையிட்ட
விலைக்கே கிடைக்கும்

For all kinds of Nickel, Chromium etc.,
ELECTRO PLATING
And for attractive Nickelled and Plastic
HANDLES
Always at your service

STAR INDUSTRIALS

144, North Avanimoola St., Madurai

ஸ்டார் இண்டஸ்டிரியல்ஸ்
எலெக்ட்ரோ பிளேட்டிங் & பிராஸ் ஒர்க்ஸ்
144, வடக்காவணிமூல வீதி, மதுரை

நிக்கல், குரோமியம் முதலிய எலெக்ட்ரோ
பிளேட்டிங் வேலைகள் உத்திரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
பித்தளை நிக்கல் கைபிடிகள், பிளாஸ்டிக்
கைபிடிகள் தங்களுக்கு தேவையான
தினுசுகளில் தயார்செய்து தரப்படும்.

புரோப்ரைட்டர்
A. அந்தோணிசாமி பிள்ளை

முதல் நாள்

ஜூபிலி திறப்பு விழா—எமது அன்புத் தந்தை
மதுரை அதிமேற்றிராணியார் அவர்களால்

போந்திபிக்கல்
பாடற்பூசை
விழாப் பந்தலில்



ஞான உபதேசப்
பொருட்காட்சித் திறப்பு

பொருட்காட்சியில் ஓர் தோற்றம்

ஆண்டுகள் ஐம்பது கண்ட அரும்சபை

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அமல அன்னையின் அன்பு வழியில் இச்சபையை நடத்திச் செல்லும் அதிசிரேஷ்ட தாயார் அவர்களே, ஆண்டுகள் ஐம்பது நிறைவுற்ற இம்மகத்தான சபையின் அங்கத்தினர்களாய் அரும் பணியாற்றிவரும் கன்னியர்களே! இவ்விழாவைச் சிறப்பிக்க வந்த சங்கைக்குரிய குருப்பிரசாதிகளே, ஏனைய அன்பர்களே!

ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில் 50 ஆண்டுகள் நிறைவு என்றால், அவன் தன் வாழ்க்கையின் உச்சிப் பொழுதைக் கடந்து அந்திப் பொழுதை அணுகிக்கொண்டிருக்கிறான் என்றே சொல்லவேண்டும். ஆனால் ஒரு ஸ்தாபனத்தின் வரலாற்றிலே 50 ஆண்டுகள் என்பது குறுகிய காலம்தான். இந்த குறுகிய காலத்திற்குள் நம் அமல அவைக் கன்னியர், யாவரும் போற்றத் தக்க வகையில் மகத்தான சேவைகள் செய்து மக்களது உள்ளங்களிலே நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டார்கள். இன்று அவர்களை அறியாதவர்கள் இல்லை. திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் எந்தக் குக்கிராமத்திற்குச் சென்றாலும் அவர்களைக் காணலாம் அல்லது அவர்களுடைய நற்பணியின் பயனைக் காணலாம்.

அமல அவைக் கன்னியர் என்றதுமே நமது மனக்கண்முன் தோன்றுவது அவர்களது நீல நிற உடை. இச்சபையினர் இந்தக் குறுகிய காலத்திற்குள் வெற்றியுடன் சாதித்திருக்கும் ஆக்க வேலைகளைப் பார்த்தால், அவர்களுடைய நீலநிற உடைக்கே ஒரு தனிச் சக்தி இருப்பது போல் தோன்றுகிறது. ஏன் என்றால், அமல அன்னையின் மேற்போர்வை நீலநிறமல்லவா? அதுமட்டுமல்ல.

கன்னியர் சபைகள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் வேறு எந்தச் சபையினரையும் அவர்கள் அணியும் உடையின் நிறத்தைக் கொண்டு குறிப்பிடுவதில்லை. அமல அவைக் கன்னியரைப் பொறுத்தமட்டில் அவர்களை பொதுமக்கள் "Blue Nuns" "நீல உடைக் கன்னியர்" என்றால் பொதுமக்கள் இக்கன்னியர்பால் கொண்டுள்ள அன்புக்கும் பற்றுதலுக்கும் அதுவே தகுந்த சான்று.

நமது அன்புத் தெய்வம் யேசுக்கிறீஸ்து பெத்லகேம் என்னும் கிராமத்தைத் தமது பிறப்பிடமாகத் தேர்ந்தெடுத்துகொண்டது போல், அதே யேசுவும் அவருடைய அன்னையும் இக்கன்னியர் சபையை, திண்டுக்கல் அருகில் உள்ள பஞ்சம்பட்டி என்ற கிராமத்தில் தோற்றுவித்தார்கள். சவரியம்மாள், அன்னம்மாள், பாகம்மாள், விசுவாசம் என்ற நான்கு பெண்கள்—கல்வி இல்லாதவர்தான்: ஆனால் பக்தியும் பண்பும் உள்ள பெண்கள்—இவர்கள்தான் இச்சபையின் முதல் கன்னியர். 1898-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் உ இச்சபையின் வரலாறு ஆரம்பம். ஆனால் சன்னியாச சபை என்ற ரீதியிலே இயங்க ஆரம்பித்தது 1911-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் உ அன்றுதான்.

இந்தக் கன்னியர் சபையின் ஸ்தாபகர் காலஞ்சென்ற அகுஸ்தீன் பெரைரா சுவாமிகள். அவருடைய அரும் முயற்சியும், ஜெபமும், தியாகமுமே இச்சபையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மூல ஆதாரமாக அமைந்தன. இச்சபையின் பொருளாதார வளர்ச்சிக்கு அன்றுமுதல் இன்றும் குறையின்றி வழங்கி உதவியவர்கள் பெரைரா குடும்பத்தினர்.

1913-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் உ இச்சபையின் ஐந்து கன்னியர் முதல் வார்த்தைப்

மக்களுக்குள் செல்வந்தர்கள் அனைவரும் உமது தயவை நாடி உமக்கு வேண்டுதல் புரிந்துகொண்டிருப்பார்கள். இராசாக்களுடைய குமாரத்திகள் உமது மகிமையில் பின் செல்வார்கள். (சங். 115-16)

பாடு கொடுத்தனர். இந்த ஐவரில் ஒருவர் லூயிமரி அம்மாள் என்பவர் இன்று நம் மத்தியிலிருப்பது மட்டற்ற மகிழ்ச்சிதருவ தாகும்.

அன்று மிகச் சிறிய அளவில் ஆரம்பித்த சபை இன்று சுமார் 50 கிளை ஸ்தாபனங்களைக் கொண்டுள்ளது. இச்சபையின் தீவிர முன்னேற் றத்தின் அடிப்படை, இக்கன்னியருடைய அயரா உழைப்பு. அலுவல் எதுவாயினும் சளைக்கமாட்டார்கள். தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றி காணும்வரை உறுதியான உள்ளத்துடன் உடல் நலனையும் பாராது உழைக்கும் வீரக்கன்னியர்.

இச்சபையினர் சென்ற 50 ஆண்டுகளாக ஆற்றிவரும் நற்பணி மூவகைப்பட்டது—ஆன் மீகத்துறை, கல்வித்துறை, மருத்துவத்துறை.

ஆன்மீகத் துறையில் பங்குக் குருக்களுக்கு பக்கபலமாக நின்று, ஞானோபதேசம் கற்பித்தல், பிள்ளைகளைப் புதுநன்மைக்கு தயாரித்தல், வயோ திகரை நன்மரணத்துக்குத் தயாரித்தல், சீர் கெட்ட குடும்பங்களைச் சீர்படுத்துதல் இன்னும் இதைப்போன்ற பல சேவைகள் செய்து வருகின்றனர்.

கல்வி வளர்ச்சிக்காக இக்கன்னியர் அரும் பாடுபட்டு உழைக்கின்றனர். எவ்வளவோ சிரமத்துடன் எதிர்ப்புகளை வென்று மதுரையில் நிர்மலா பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும், விக்ரமசிங்கபுரம் என்ற இருதயகுளத்தில் அமலி பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் திறம்பட நடத்திவருகின்றனர். இன்னும் போதனை முறைப் பள்ளி ஒன்றும், பல ஆரம்பப் பள்ளி களும் நடத்திவருகின்றனர்.

மருத்துவத்துறையில் நல்லதோர் முன்னேற் றம் காணும் வகையில் கன்னியர் சிலர் மதுரை எர்ஸ்கின் மருத்துவ நிலையத்திலும், திருச்சி குழந்தை யேசுவின் மருத்துவ நிலையத்திலும் விசேஷப் பயிற்சிபெற்று வருகிறார்கள். இப் பொன்விழாவின் மூன்றாவது தினமாகிய 17-5-1961-ல் கோசாகுளம் புதூரில் "லெயோர் ஞார்டு மருத்துவ நிலையம்" ஒன்று உருவா கின்றது.

ஐம்பது ஆண்டுகள் இச்சபையின் வரலாறு, வளர்ச்சி இவற்றைப்பற்றி சிந்திக்கும்பொழுது, ஆரம்ப காலத்திலிருந்தே இச்சபைக்காக உழைத்த காலஞ்சென்ற **பத்ரீஸ் தாயார்** அவர் களையும், இச்சபையின் சிரேஷ்ட தாயார்களான **பெர்நதெத் மரியம்மாள்,** (காலஞ்சென்ற) **அகுஸ்தீன் மரியம்மாள், சோபிதாயார், ஜோசப் ஹெலனா தாயார்,** இவர்களுடைய ஆற்றல் மிக்க பணியையும், ஆட்சித் திறனையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்தப் பொன்விழா சமயத்தில் நாம், இல்லற வாசிகள், நம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி—இம் மகத்தான கன்னியர் சபைக்கு நாம் என்ன செய்திருக்கின்றோம்? என்ன செய்யப்போகிறோம்? இது நமது சபை! நமது மத்தியில் தோன்றி, வளர்ந்து பணியாற்றி வரும் சபை. நாம் இக் கன்னியரை ஊக்குவித்து அவர்களுக்கு நம்மாலான உதவியளிப்பது நமது கடமை. முதலாவதாக ஜெபத்தால் உதவி; அடுத்தாற்போல் பொருளுதவி. அனைத்திற்கும் மேலாக நமது குடும்பங்களில் தேவ அழைத்தல் என்னும் வரம்பெற்று ஒவ்வொரு குடும்பத்தி லிருந்தும் ஒரு குருவானவரை ஒரு கன்னியை நாம் திருப்பணிக்கு வழங்க வேண்டும் என்பதை நமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

கடந்த ஐம்பது ஆண்டுகள் நம் கன்னியர் நற்பணியாற்றியதுபோல் இன்னும் பல்லாண்டு நமது நாட்டில் அவர்கள் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு வேண்டிய வர மும், செல்வமும், வெற்றியும் அருள்வாராக. அமல அன்னை நம் கன்னியரை அவளது அன்பு வழியில் நடத்திச்செல்வாளாக. வாழ்க அமல அவைக் கன்னியர்!

S. B. X. அந்தோனிசாமி B. A., B. L.
வழக்கறிஞர், மதுரை.

மகளே கேளும். கண் திறந்து உம் செவிசாய்த்துக் கேளும்,
ஏனெனில் மன்னன் உம் அழகை விரும்புவார். (சங். 44 : 11-12)

சின்னஞ் சிறுவர் மத்தியில்

:O:

ஆமலோற்பவமாதா சபையின் இப்பொன் விழா வைபவத்தில் சிறுவர் மத்தியில் கன்னியர் ஆற்றும் அரிய சேவையைப் பற்றி ஒரு சில கூற எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்கின்றேன். பள்ளிச் சிறுவர் மத்தியில் பல வேளைகளில் அன்பின் அன்னையாகவும், கண்டிப்பின் கன்னியாகவும், வியாதிக்காரச் சிறுவர் மத்தியில் இரக்கமுள்ள வைத்தியராகவும் நமது அமல அவைக் கன்னியர் காட்சியளிக்கின்றனர். இவ்வாறு பலவிதத் தோற்றங்களில் காட்சியளிப்பினும், அறிவை வளர்க்கும் ஆசிரியராக விளங்கும் தோற்றமே பெரும் எண்ணம் கொண்டது. அதுவே சிறந்தது. அதனால்தான் வள்ளுவர்,

> 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை'—

என்றார். ஏன்? பங்காளிகளால் பங்கு கொள்ளவும், கள்வரால் கொள்ளை கொள்ளவும் முடியாததால் இதற்குக் கேடில்லை. இதனை ஆற்றும் ஆசிரியரின் சிறப்பு என்ன? நிலை என்ன? மாணவரின் அறிவை வளர்க்கும் அரண்; கலைக்கும் கண்காட்சிக்கும் காவல் அரண்; காவியத்திற்கும், கல்விக்கும் கண்கள்; பணிக்கும் பண்புக்கும் பரணிகள்; வாழ்க்கையின் வழிகாட்டிகள். இத்தன்மை வாய்ந்த தொண்டிலே அமல அவைக் கன்னியர் 'கல்விப்பணியே கடவுள் பணி'யெனக் கொண்டு பெரும்பாலோர் ஆசிரியர் பணி புரிகின்றனர். வாழ்க்கைக்கு வழிபற்ற உலகுக்கு உதவாதவர்தான் இத்தொழிலை ஏற்பதாக குறுகிய நோக்கமுடைய உலகம் கருதுகிறது. இது பெருந்தவறு. அன்பு இருந்தால் மட்டுமே சேவை மிளிரும். தேவ அன்பினாலேதான் அமலதாயின் மக்களது ஆசிரியச்சேவை மிளிர்கிறது. சிறுவர் பெற்றோரைவிட கன்னியரிடம் அதிக நம்பிக்கை கொள்கிறார்கள். காரணம் அவர்கள் காட்டும் தாயன்பு. பிளாட்டிங் பேப்பர் தன்னிடம் மையை உறிஞ்சி எடுத்துக்கொள்வதுபோல் அவர்களும் அவர்களது அன்பு உரையால் செயலால் சிறுவர் சிறுமிகளைத் தம் வசம் இழுத்து நம்பிக்கை கொள்ளச் செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, என் வீட்டின் அருகில் உள்ள ஓர் இந்துக் குடும்பத்தில் ஒரு பையன் இக்கன்னியரிடம் பயின்றான். தன் தந்தை கணக்கு சொல்லிக்கொடுக்க அச்சிறுவன் தன் தந்தையின் முறையில் நம்பிக்கை கொள்ளாது என்னுடைய சிஸ்டர் இப்படித்தான் சொல்லிக் கொடுத்தார்கள். இப்படியே செய்வேன் என்றான். இவ்வாறாக அன்பு என்னும் வித்தில் தோன்றிய இந்நம்பிக்கை அக்குடும்பம் முழுவதையும் பிற்காலத்தில் சத்தியமறைக்கு மாற்றி அவர்களில் ஒரு பெண்ணை தேவ ஊழியத்திற்கும் அர்ப்பணிக்கச் செய்தது. தாயன்பு கொண்ட சகோதரத்துவமே அவர்களது சேவையில் அதிகப் பலனைக் கொடுக்கிறது.

அவர்களது கிறிஸ்துவப் பணி—சிறுவரை கோவிலுக்கு அழைத்துச் செல்லல், ஞானோபதேசம் கற்பித்தல், பெண்களது வாழ்வை உருவாக்குதல், இவை மிகவும் மகத்தானவை. இதையே மேற்கொண்டுள்ளனர். வாவு நாட்களில் இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து வியாதியஸ்தரைச் சந்திக்கச் செல்வதைப் பார்ப்பது ஓர் இனிய காட்சி. பல இடங்களில் விடுதிகள் வைத்து, பிள்ளைகளைப் பிற்கால வாழ்க்கைக்கு தயாரிக்கும் பெரும் பணியை ஏற்றுள்ளனர். இளமையில் பதியும் நல்லெண்ணங்கள் மாறாது, வாழ்வில் பயன் நல்குமே.

இக்காலத்திலேயே இதுநாள்வரை செய்தவற்றுடன் இனி ஆற்றவேண்டிய சேவையையும் 'சிந்தனை செயலுக்குப் பிதா' என்பதை நினைவிலிருத்தி மேற்கொள்ளல் நலம் பயக்கும். மற்றவர்கள் புகழ்ந்தாலும் மற்றவர் இரைச்சலைப் பொருட்படுத்தாது, குறித்த இடம் நோக்கி ஓடும் பந்தயக்காரனைப்போல போற்றுதலையும், தூற்றுதலையும் பொருட்படுத்தாது மேலும் ஆற்றவேண்டிய சேவைகளில், மருத்துவம் போன்றவைகளில் முன்னேற முனைய வேண்டும். 'சிந்தனையில்லாத ஆன்மா குடியில்லாத வீடு' என்கிறார் ஒரு சாஸ்திரி. நமது தேகம் அடுப்பிலிருக்கும் ஒரு பானை போன்றது. அதைத் தொட்டால் சுடும். சூட்டிற்குக் காரணம் பானையுமல்ல, பானையிலுள்ள பொருட்களுமல்ல. நெருப்பே காரணம். அதுபோல் நமது தேகத்தில் பல தத்துவங்கள் இருப்பினும் அவைகளைச் சேவையில் புகுத்த தேவனருள் தேவை. இதனால் மட்டுமே சிந்தனை ஜெயம் பெற்றுச் செயல் நடத்த முடியும். "நாங்கள் உமக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். உம்மில் எம் இதயம் தங்கும்வரை இளைப்பாற்றி இல்லை" என்கிறார் புனித அகுஸ்தீன். ஆகையால் அவரைப் பலமாகக்கொண்டு அவரில் வாழ்ந்து செயல் புரிவோமாக.

வாழ்க, அமலோற்பவமாதா கன்னியர் சபையும் சேவையும்!

திரு. V. சந்தியாகு B. A.
புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி,
மதுரை.

எல்லா மனுப்புத்திரரிலும் நீர் சௌந்தரியமுள்ளவர், உம்முடைய உதடுகளிலே வரப்பிரசாதம் பொழியப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்வேசுரன் உம்மை நித்தியத்திற்கும் என்றென்றைக்கும் ஆசீர்வதித்தார். (சங். 44 : 3)

முந்திரிகைச் செடியைப்போல வாசனையின் சுகந்தத்தை வீசச்செய்தேன். என்னுடைய புஷ்பங்களோ பெருமையினுடையவும், யோக்கியதையுடையவும் கனிகள். நன்னெறியுடையவும், உண்மையினுடையவும் அழகெல்லாம் என்னிடத்தில் உண்டு. (சர்வப் பிர. 24 : 23-25)

ஷெவாலியர் J. L. P. ரோச் விக்டோரியா K. G. S. அவர்களின்

தலைமை உரை

:O:

மேன்மை தங்கிய ஆண்டவர் அவர்களே, சங்கைக்குரிய குருப்பிரசாதிகளே, சங்கைக்குரிய கன்னியர்களே, பெரியோர்களே, சகோதர சகோதரிகளே—

அளவற்ற சந்தோஷத்துடன் அமல அவைக் கன்னியர் மடத்தின் ஐம்பதாவது வருட பூர்த்தி தங்க ஜுபிலியை இன்று நாம் கொண்டாடுகிறோம். இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்கும்படியான சந்தர்ப்பத்தை எனக்களித்த வைபவக் கமிட்டியாருக்கு நான் மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துகின்றேன். இன்று தலைமை தாங்குவதற்கென்றே இவ்வைபவத்தில் நான் கலந்துகொள்கின்றேன் என்று எவரும் நினைக்க வேண்டாம். தலைமை தாங்குவதை விட இம் மடத்தின் மீது எனக்கு விசேஷ அன்பும், அபிமானமும், கடமையும் உண்டு. ஏனெனில், எங்கள் குடும்பத்தினர்க்கும், இம்மடத்தினர்க்கும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்பே அதற்குக் காரணமென்க.

அமல அவைக் கன்னியர் மடத்தின் கடந்த ஐம்பது வருட அநுபவங்களை இன்று நாம் நினைக்க வேண்டியதாயிருக்கிறது. இம்மடத்தை உருவாக்குவதற்கு இக்கன்னியர்கள் அநுபவித்த கஷ்டநஷ்டங்கள் அனந்தம். எவ்வித கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாது, கருமமே கண்ணாயிருந்து இம்மடத்தைத் ஸ்திரப் படுத்த இரவு பகல் இடைவிடாது உழைத்த காலஞ்சென்ற அதி உத்தம ஆத்ம தேசிகர்களாகிய **சுவாமி (Larmay) அமிர்தநாதர்** அவர்களையும், **சுவாமி அகுஸ்தீன் பெரையரா** அவர்களையும் நாம் என்றைக்கும் மறந்துவிட முடியாது. அன்றைக்கு அவ்விரு குருப்பிரசாதிகளும் ஏற்றிய அமல அவைத் தீபமே இன்றைக்கு எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதென்றால் அது மிகையாகாது. அவ்விரு குருப்பிரசாதிகளின் திருநாமம் என்றைக்கும் வாழ்த்தப்படக்கடவதாக.

உண்மையான நாட்டுப் பற்று நாட்டுக்குச் சேவை புரிவதில்தான் விளங்கும். இதை செய்கையில் நிரூபித்தவர் ஆன்ம ஆர்வமும், தெய்வப் பற்றுங்கொண்ட தமிழர் சுவாமி அகுஸ்தீன் பெரையரா அவர்களேயாகும். வியாகம்மாள், அன்னம்மாள், விசுவாசம்மாள், சவரியம்மாள் எனும் நான்கு கன்னிப்பெண்களைக்கொண்டே இம்மடம் உருவானது. கன்னியர்களின் செபத்தாலும், தபத்தாலும், சேவையாலும், தியாகத்தாலும் இம்மடம் இன்றைக்கு விசேஷ சிறப்படைந்திருக்கிறதென்றால் எல்

லாம் கடவுளின் கருணையேயல்லாது வேறெதுவும் இல்லை.

ஆரம்ப கால முதல் இந்நாள்வரை இம்மடத்தின் வரலாறுகளை அறிவோமாயின் இக்கன்னியர்களின் உணர்ச்சிக்கும், மடத்தின் வளர்ச்சிக்கும் முக்கிய கருவிகளாகத் திகழ்ந்த சங்கைக்குரிய **சுவாமி நெஸ்புளூஸ்** அவர்களையும், இக்கன்னியர்களைத் தாயினும மிக்க அன்புடன் கண்காணித்து வந்த சங்கைக்குரிய **தாயார் பத்ரீஸ்** அவர்களையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. அன்றியும் காலஞ்சென்ற சங்கைக்குரிய ஜாலி, சங். கோமஸ், சங். மாஹே, சங். பிளான்ச்சார்டு, சங். அமலோற்பவநாதர் சுவாமிகளின் இடைவிடாத முயற்சிகளே இன்றைக்கு இம்மடம் உலகம் அனைத்தும் போற்றக்கூடிய விதத்தில் சுடர்மணித் தீபமாக மிளிர்கின்றது நான் முன் சொன்னதுபோல்.

தெய்வ கடாட்சமே இம்மடத்தை இன்று நடத்துகிறதன்றி இம்மடத்திற்கென தனி நிதி எதுவும் இல்லை. செய்கிற சேவை பெரிதல்ல. அதைச் செய்யுங் கருத்தே சிறந்தது என்ற தத்துவார்த்தமான உண்மை ஒன்றையே இச் சபை தனது லட்சியமாகக்கொண்டு அனைவரும் ஆண்டவனின் ஊழியர்களே என்ற தாழ்ச்சியில் சேவை புரிகின்றது. இன்றைக்கு அமல அவைக் கன்னியர் எவ்விடத்தும் பெருகிப் பலுகி பல்வேறு துறைகளில் மக்களது இக பரர்த்த நலன்களைப் பாதுகாக்கும் அன்புப் பணியில் சிறந்து விளங்குவதை அறிய எனக்கு ஏற்படும் ஆனந்தம் அளவிடுந்தரமன்று. இறுதியாக, இம்மடத்தின் முன்னேற்றம் கருதி உழைத்துவரும் சங்கைக்குரிய குருப்பிரசாதிகளுக்கும், மேன்மை தங்கிய உபகாரிகளுக்கும் நான் மிகவே நன்றி செலுத்துகின்றேன்.



உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்.

(ஆதி. 3 : 15)

இறந்ததை விட்டிடு இறைவன் கருணைக்கு!
எதிர்காலம் அளித்திடு அவர்பரா மரிப்புக்கு!
நிகழ்வினைச் செலவிடு அவர் அன்புச் செயலாக!

ஒரு கன்னி கர்ப்பந்தரித்து ஓர் புத்திரனைப் பெறுவாள். அவருக்கு எம்மானுவேல் என்ற நாமமிடுவர், அதற்கு சர்வேசுரன் நம்மோடு என்றர்த்தமாம். (... 1 : 23)

Chev. J. L. P. ரோச்விக்டோரியா தலைமையில்
மாலைப் பொதுக்கூட்டம்



பேச்சாளர்
S. B. X. அந்தோனிசாமி B. A. B. L.
வழக்கறிஞர்

திருமதி வியாகுலமரி ரோச் விக்டோரியா அவர்களால்
தந்தை அகுஸ்தினுர் படத்திறப்பும் குடிசைத் தொழிலகத் திறப்பும்



குடிசைத் தொழிலகத்தின்
ஒரு பகுதி

இரண்டாம் நாள்

"பாலர்களை நம்மிடத்தில் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதேயுங்கள். ஏனெனில் சர்வேசுரனுடைய இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையதாய் இருக்கிறது." (மாற்கு 10 : 14)

16 மே 1961

குழந்தைகள் நாள்

இடம்: புனித தெரேசாள் மடம், இராமநாதபுரம் ரோடு.

காலை 6 மணி: **சபையில் மரித்தோருக்காகவும், மரித்த உபகாரிகளுக்காகவும்** *திருச்சி மேற்றிராணியார் சரி. வர். ஜேம்ஸ் மெண்டோன்சா ஆண்டவர் அவர்களால்* **திவ்விய பலி பூசை.**

7 மணி: **பாப்பரசர் கொடி ஏற்றுவித்தலும், தொழிற் கல்வி பொருட்காட்சித் திறப்பும்** — *திருச்சி மேற்றிராணியார்*

9 மணி: **குழந்தைகளின் விளையாட்டு விழா.**

தலைவர்: ஜோசப் ஆல்பெர்ட் தாயார்

புனித சூசையப்பர் கன்னியர் சபையின் இந்திய மாகாண டிரெக்டர்

மாலை நிகழ்ச்சிகள்

மாலை 5 மணி: **திவ்ய நற்கருணை ஆசீர்** — *திருச்சி மேற்றிராணியார்*

5-30 மணி: **பொதுக்கூட்டம்**

தலைவர்: உயர்திரு. சீத்தாராம ராவ், B. A., B. L.,

மாவட்ட நீதிபதி

1. இறை வணக்கம்
2. வரவேற்புரை — டாக்டர் G. P. ராயன்
3. "நாட்டுப் பணியில் நமது கன்னியர்" — திரு. ரம்போலா மாஸ்கரேனஸ், M. A.
4. இன்னிசை
5. "போற்றுவோம் பொற்புறு கன்னியரை" — திரு. சேசையா, M. A.
6. நடனம்
7. மதுரைக் கத்தோலிக்கரின் வாழ்த்து
8. கன்னியரின் நன்றி
9. தலைவர் உரை
10. பாப்பரசர் வாழ்த்து

"அமலோற்பவியின் அன்பு வழியில்" — நாடகம்

தலைவர்: **மெண்டோன்சா ஆண்டகை.**

போன்: 681 மதுரை
4890 சென்னை
71068 பெங்களூர்

தந்தி: Javadu மதுரை
Fragrance பெங்களூர்
Javadu சென்னை

சுகந்த மண்டலம் அளிக்கும்

இன்பம் தரும்

31
301
3001

ஜவ்வாது பத்திகளை வாங்கி உபயோகியுங்கள்

★ தயாரிப்பாளர்கள் ★

S. V. பழனிமலை & S. V. ரெங்கசாமி

மதுரை ★ மதராஸ் ★ பெங்களூர்

BIG DAY

Enjoy it in a Big Way

by wearing a Saree purchased at

RUBY STORES

20 AMMAN SANNATHI
MADURAI

Welcome Speech

—:(o):—

Mr. President, My Lord, Rev. Fathers, Sisters, Brothers, Ladies, Gentlemen and Children

Sometimes, the ways of Mother Superior are quite incomprehensible to poor mortals like us. A few days ago when I called on the Mother General she showed me a manuscript, which, on further scrutiny, was found to be the proof copy of the Golden Jubilee programme. You can imagine my consternation when I saw that my name was put down for welcoming the guests on the second day. Noticing my confusion she very sweetly remarked that she herself wanted me to speak on this occasion

Having moved with her closely for over eight years, I have come to regard her slightest wish as a command. Amending Milton slightly, I also believe in the adage, "Just are the ways of a Mother General and justifiable to men." Hence it is that I stand before you to-night.

First, it is a privilege to welcome our revered President, Mr. Sitharama Rao, who found it possible to be with us tonight, despite his frequent trips to Madras and Kodaikanal. We are delighted to have in our midst His Excellency the Bishop of Trichinopoly, who has left his flock temporarily to gladden our hearts by his presence. A very hearty welcome to dear Fathers, Sisters and Brothers. We thank you all, dear ladies and gentlemen, for your ready response to join the Congregation of the Blue Nuns thanking God for all the graces and favours showered on them during these fifty golden years.

Dr. G. I. P. Rayen,
Madurai.

The smallest fault may grow large through habit and the smallest desire if unchecked may grow into an overwhelming passion.

"போற்றுவோம் பொற்புறு கன்னியரை"

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து உலக மக்களுக்கு ஒளி வழங்கும் முழுநிலவைப் போல் நீலநிற ஆடை அணிந்து கத்தோலிக்க மக்களுக்கும், ஏனையோருக்கும் ஆன்மீகப் பணி ஆற்றி வரும் அமல அவைக் கன்னியர் தமது ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்ற இந்நன்னாளில், மகிழ்ச்சி கொள்ளாதார் யார்? குழந்தைகள் முதல் கிழவர் வரை பெருமகிழ்வு கொள்ளும் நாள் இந்த நாள்.

அமல அன்னையைப் பற்றி கவிஞர் வோர்ட்ஸ் வொர்த்து பாடிய பொழுது "மாசுநிறை எங்கள் மனுக்குலத்தின் மாசற்ற தனிப் பெரும் திரு விளக்கே" "The solitary boast of our tainted nature" என்று கவி செய்தான். அதே போல், அவள் பெயர் சூடிய இச்சபை யினரை "மதுரை நகரின் மாண்புமிக்க கன்னி யர் அவை, நம் அமல அன்னையின் அவை, எங்கள் பெருமை விளங்கும் தங்கத்திரு அவை" என்று நாம் பாராட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

மதுரையில் இன்று பல மடங்களாக, மா பெரும் உயர்நிலைப் பள்ளிகளாக விரிந்து வளர்ந் திருக்கும் இச்சபையின் தோற்றத்தை அறிந் தால் கல் மனக்கவரும் கண் கலங்குவார். அன்பர்களே! இப்போது, நாம் இந்தக் கூட்டத் தை நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. பெருங்காற்று வீசுகிறது. இடி இடிக்கிறது. பெரும் மழை பெய்யுமோ என்ற அச்சத்தை நம் உள்ளத் திலே ஏற்படுத்துகிறது. ஆனால் அவ்வாறு அடாது மழை பெய்பினும் நாம் கூட்டத்தை விடாது நடத்துவோம். கன்னியரைப் போற்ற கடவுள் யேசுவின் பேரால் இங்கு கூடியுள்ள நாம் கட்டுக் குலையமாட்டோம் நம் கடமை முடியும் வரை. அதுபோல்தான் பஞ்சம்பட்டி யில் விசுவாசத்தம்மாள், வியாகம்மாள், அன்னம் மாள், சவரியம்மாள் ஆன்மீகப் பணி செய்ய ஒன்று கூடினர். அப்போது மற்ற மக்களின் ஏச்சுக்காற்று வீசியது. இடிப்பேச்சு எழுந் தது, ஏளன மின்னல் வெட்டியது. "பாவம் இவர்களால் என்ன இயலும்" என்ற தூற்றல் விழுந்தது. அவர்கள் மனம் தளரவில்லை. அவ்வூர் பங்குக்குரு வணக்கத்துக்குரிய அமிர்த நாதர் (லார்மே) சே. ச. என்பவர் அவர்கட்கு அடைக்கலம் தந்தார். கல்வி கற்பித்தார். தனி யிடம் அமைத்து அவர்களை ஆன்மீகப் பணியில் இறங்கச் செய்தார். அதன் பின் வண. அகுஸ் தீன் பெரைரா என்ற செல்வக் குடும்பத்தைச் சார்ந்த குரு அவர்கட்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து முழுமூச்சாக ஆன்மீகப் பணி செய்ய ஆர்வம் ஊட்டினர். இதனைக் கண்ட மற்றப் பெண்களும் சேர்ந்தனர். நால்வர், பன்னிருவர் ஆயினர். "அமலோற்பவத் தாயின் சிறுபிள்ளைகள்" என்ற பெயரில் அக்கன்னியர் அருந்தொண்டு ஆற்றினர்.

பொற்சரிகைகளில் பலவித ஆபரணங்களைத் தரித்தவள். அவளுக்குப்பின் கன்னிகள் இராஜாவிடம் கூட்டிவரப்படுவார்கள். (சங். 44 : 15)

அப்போது அக்கன்னியர்க்கு இப்போதுள்ளது போல் குறிப்பிட்ட நீலநிற ஆடை கிடையாது. இதுவெல்லாம் மதுரைக்குப் பெரிய மடம் வந்தபின் ஏற்பட்டது.

பாப்பானவரின் அங்கிகாரமும் அதற்குக் கிடைத்தது. இவ்வாறு, முதலில் மக்களின் ஏச்சுக்கும் இழிந்த பேச்சிற்கும் இடையே துன்புற்ற இச்சபை இப்போது மக்கள் போற்றும் அளவிற்கு எதிர்ப்புகளுக்கிடையே வளர்ந்திருக்கிறது என்றால் அது எத்துணை அளவு சேசுவின் மீது நம்பிக்கை வைத்துத் தூய தொண்டு செய்திருக்க வேண்டும்.

துறவியாக இருந்துகொண்டு மக்களோடு கலந்து வாழ்ந்து தூய பணிபுரிவது அவ்வளவு எளிதான செயல் அன்று; கத்தியில் நடப்பது போல், நெருப்புக் குழி மீது சிறு கல்லிட்டு நடப்பது போல் ஓர் அரிய செயலாகும். தவறினால் ஆபத்து.

அமல அவைக் கன்னியர் இப்போது ஐம்பதுக்கு மேற்பட்ட மடங்கள் கட்டி, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் பெரும்பணி புரிகின்றனர்.

ஒரு நாள் மாலை பஞ்சம்பட்டியில் அமிர்தநாதர் உலவிக் கொண்டிருந்தார். அப்போது ஒருவன் ஓடிவந்து, "சுவாமி, அதோ பாருங்கள் அங்கே வருகிற அந்த அம்மா தான் என் பிள்ளைக்கு உயிர் கொடுத்தாங்க, அம்மை ஒட்டிக் கொள்ளும் என்று இவ்வூரார் ஒருவரும் எட்டிப் பார்க்கமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். ஆனால் இவர்களோ, என் வீட்டிற்கு வந்து குழந்தைக்கு மருந்து கொடுத்தார்கள். அவன் பிழைத்துக் கொண்டான். இந்த வேதம் தானே இவ்வாறு செய்யச் சொல்லுகிறது? இவ்வாறு பிறருக்கு உதவி செய்யச் சொல்லும் அந்தத் தெய்வத்தைத் தான் நான் வணங்க வேண்டும்" என்றான். குரு இதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார். ஆம்! அன்பால் பிறருக்குச் சேவை செய்து, அவரை ஆண்டவர் பால் இழுக்கும் அரிய பணியே, அமல அவைக் கன்னியரின் பெரிய பணியாகும்.

தமிழகத்தில் பல பள்ளிகள் நிறுவி, கத்தோலிக்கப் பெண் குழந்தைகளுக்கு அறிவுக் கல்வியையும், ஆன்மீகக் கல்வியையும் அளித்து, ஆன்மீக அமைதியும், மன அமைதியும் அளிக்கின்றனர். இவ்வாறு அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்து, சீரிய தாய்மார்களாக மாற்றுகின்றனர். ஒரு வீட்டில் உள்ள குழந்தைகளிடத்து அதிகத் தொடர்பு கொள்பவள் தாயேயன்றி, தந்தை அல்ல. எனவே, அமல அவைக் கன்னியர் மடத்தில் பயின்ற கத்தோலிக்கப் பெண்கள் தம் பிள்ளைகளைத் தாம் வளர்ந்த விதத்திலேயே வளர்க்கின்றனர். இவ்வாறு குடும்பச் சீரமைப்பிற்கு மறைமுகத் தொண்டாற்றுகின்றனர் நம் மறைக் கன்னியர். இன்னும் ஞாயிற்றுக்கிழமைகளில் அமல அவைக் கன்னியர் இருவர், மூவராக சிற்றூர்களுக்குச் சென்று, சிறுவர் சிறுமியர், பெரியோர் எல்லோர்க்கும் சமயக் கல்வி புகட்டி இறுதியில் மிட்டாய் வழங்குகின்றனர். இவ்வாறு நம் நல்ல தமிழகத்தில் ஐம்பது ஆண்டுகள் தன்னலமில்லாத் தொண்டு செய்து வரும் இவ்வவையினர்க்கு நாம் என்ன செய்துள்ளோம்?

மேனாடுகளில் கத்தோலிக்க இல்லறப் பெண்கள், தமது ஓய்வு நேரத்தின் போது, கன்னியரோடு மருத்துவ விடுதி சென்று பிணியாளிகளுக்கு ஆறுதல் கூறல், சமயக் கல்வி புகட்டல் முதலியன செய்கின்றனர். அதுபோல் நம் பெண்களும் அமல அவைக் கன்னியரோடு சேர்ந்து நற்பணி புரிந்து நல்லமைதி பெறலாம்.

முட்கள் மத்தியில் அழகாய்ப் புஷ்பிக்கின்ற பூவைப்போல் ஆதாமின் குமாரத்திகளுக்குள் சர்வேசுரனுடைய அன்புக்குரியவள் பரிசுத்த மரி. (1854 ல் 9-ம் பத்திநாதர்)

இன்னும், உண்மையிலேயே உள்ளத்திலே தேவ அழைத்தல் உண்டு என்று உணரும் பெண்கள் அதனை மூலையிலே கிள்ளி எறிந்து, தனக்கு ஆண்டவரின் அழைப்பு இல்லை என்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளாமல் அமல அவைக் கன்னியராக ஆகி ஆண்டவரின் அடியவளாக ஆதல் வேண்டும்.

மேனாட்டில், ஒரு கன்னி மரணப்படுக்கையில் இருந்தார். அவர் பெயர் சகோதரி ஆண்ட்ரே என்பது. அவர் வின்சென்ட் தே பால் சபையைச் சேர்ந்தவர். அப்போது, ஒரு குரு அவரைப் பார்த்து, "நீங்கள் ஏதேனும் பற்றிக் கவலைப்படுகிறீர்களா?" என்றார். அப்போது அவர், "இல்லை. குருவே ஆனால் ஒன்று! நான் மக்களுக்காகப் பணி புரிந்த போது அளவு கடந்த மகிழ்ச்சி அடைவது வழக்கம். துறவியாகிய நான் எதிலும் மிதமிஞ்சிய இன்பம் அடையக்கூடாதல்லவா? அது ஒன்று தான் என் மனத்தை வருத்துகிறது!" என்றார். ஆம்! சேவையில் எத்துணை அளவு ஒவ்வொரு கன்னியும் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதை இது எடுத்து விளக்குகிறது.

இவ்வாறு பிறர் பணியில இன்பம் அடைபவர்கள் நம் அமல அவைக் கன்னியர். இறுதியாக என் ஆவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்த ஐம்பதாண்டு கழித்து நம் கன்னியர் தமது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவார்கள். அப்போது நம் அமல அவைக் கன்னியரில் ஒரு நான்கு பேராகிலும் அர்ச்சியசிஷ்டவர்களாக ஆகியிருக்க வேண்டும். சேசு சபையில் சவேரியார் போல், கார்மேல் சபை தெரசாளைப் போல், கேரளத்தின் அல்போன்ஸாவைப் போல் தமிழகச் சபையாகிய இச்சபையிலிருந்து நான்கு பேர் தூய்மைப் பட்டம் பெற்று தமிழகப் பெருமையை வெளிப்படுத்த வேண்டும். அது மற்ற மக்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழும்.

பெற்றவரைப் பிரிந்து, உற்றவரைத் துறந்து மற்றவர்க்காகப் பணிபுரியும் நற்றவக் கன்னியரைப் போற்றுவோம்!

இல்லற இன்பம் வேண்டாம், இறைத் தொண்டே வேண்டும் என்று தன்னலமில்லாத் தனிப் பெருந்தொண்டு செய்யும் அன்னை மரியின் கன்னியரைப் போற்றுவோம்!

தம்மைத் தூற்றுபவரையும் போற்றித் தொண்டு செய்யும் பொற்புறு கன்னியரைப் போற்றுவோம்!

மா. சேசையா, M. A. Dip. in S. Sc.,
லொயோலா கல்லூரி,
சென்னை.

ஜெஸ்ஸேயின் தண்டினின்று ஓர் தளிர் கிளம்பும்,
அதன்வேரில் நின்று ஓர் புஷ்பம் தோன்றும். (இசை. 11 : 1)

ஜெருசலேம் குமாரத்திகளில் மிக்க அழகு சௌந்தரியவதியாகிய இக்கற்பரசி தங்கமய ஆடையை அணிந்து சர்வேசுரனுடைய வலது பாரிசங்களில் பலவிதப் பணிபூண்டு நின்றனள். (சங். 44 : 10)

ஆண்டகை
ஜேம்ஸ்
மெண்டோன்ஸா
அவர்களால்
பொருட்காட்சித்
திறப்பு



பொருட்
காட்சியில்
ஒரு பகுதி.



வரவேற்பு—டாக்டர் G. P. ராயன்
அவர்களால்

திரு. ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்களின்
சொற்பொழிவு



திரு. சீத்தாராமராவ் அவர்களின் தலைமை உரை

சிறுமியர் விளையாட்டு நிகழ்ச்சிகள்





நாட்டுப்பணியில் நமது கன்னியர்

"எந்த நாடு எங்கள் நாட்டுக்கீடு
பேரின்ப ஞான வீடு"

என்று ஆனந்தப் பள்ளுப் பாடுவதிலேயே தங்கள் நாட்டுப் பற்றைக் காட்டுவாரும் பறைசாற்றுவாரும் உண்டு. நாட்டுப்பற்று ஏதோ உணர்ச்சிபற்றியது மட்டுமல்ல. இலட்சியத்தின் அடிப்படையில் எழுவது. கடமைக் கருத்தால் விளைகின்ற உடைமை அது. பற்றென்றால் வெறும் பற்றன்று. வரவுடன் சேர்ந்த பற்று.

இலட்சிய அடிப்படையில் எழும் நாட்டுப் பற்று, கடமைக் கருத்தால் கதித்துவரும் நாட்டுப்பற்று, வரவுடன் இசைந்த வல்லாண்மை மிக்க நாட்டுப் பற்று, ஒற்றுமையை வளர்ப்பது; உயரிய தியாகங்களை உருவாக்குவது; அன்பர் பணிசெய்ய ஆளாக்குவது.

உண்மையான கிறீஸ்தவன் மெய்யான தேசபக்தன். "உன்னைப்போல உன் அயலானையும் நேசி" என்பது நமதாண்டவரின் அன்புக் கட்டளை. இதனைச் சிரமேல் தாங்கிய கிறீஸ்தவ சமூகம் நாட்டுப் பணியை நலமுறச்செய்து வருகின்றது.

பணியைப் பற்றிப் பேசாத நா இல்லை. பேசப்பெறாத மேடை இல்லை. எழுதாத எழுதுகோல் இல்லை. எழுதப் பெறாத ஏடு இல்லை. எல்லோரும் எவ்விடத்தும் எப்பொழுதும் இதைப்பற்றியே பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். பணியாளர் தொகையும் பெருகிவருகின்றது.

கத்தோலிக்கர் செய்யும் நாட்டுப்பணிக்கும் பிறர் செய்யும் நாட்டுப்பணிக்கும் நிறைந்த வேறுபாடு உண்டு. இது அளவுபற்றியது அல்ல, அடிப்படை பற்றியது. தகுதி திறமை பற்றியது அல்ல, தன்மை பற்றியது.

அரசியல் பாணியில் செய்யப்பெறும் நாட்டுப்பணி அதிகாரத் தோரணையில் செய்யப்பெறும் நாட்டுப்பணி அசுர பலத்துடனும் அதி தீவிரத்துடனும் செய்யப்பெறலாம். கத்தோலிக்கர் செய்யும் நாட்டுப் பணியில் உயிர்த் தத்துவம் உண்டு. அதனை வழிநடத்தும் ஆத்ம சக்தி உண்டு. நிரந்தரமாகச் செயல்பட ஸ்தாபன ரீதி உண்டு.

திருச்சபையின் நாட்டுப்பணி புனிதமான ஸ்தாபனத்தின் நிலையான அன்புப் பணி. இறையன்பில் விளைந்த பிறர் அன்பு தூண்ட, இதன் காரணமாகத் தழைத்தெழுகின்ற இனிய நற்பணி.

இப்பணி பட்டம் பதவிகளைப் பார்ப்பதில்லை. தேர்தலைத் தேடுவதில்லை. மனிதரிடத்தும் மன்பதையிடத்தும் கிறீஸ்துபெருமான் வளரவேண்டும். அவரது அருளரசு பரவவேண்டும் என்ற ஒரே நாட்டத்தில் தம்மை மறந்து, தமது விருப்பு வெறுப்புக்களை மறந்து, தமது உற்றார் உறவினர்களை மறந்து, செய்கின்ற பணி திருச்சபையின் நாட்டுப்பணி. நம் கன்னியர் தியாகத்தின் சிகரத்திலிருந்து நாட்டுப் பணி செய்துவருகின்றனர். உலகம் சுகத்தை நாடுகின்றது. இவர்கள் தவத்தை நாடுகின்றார்கள். உலகம் ஆரவாரத்தை நாடுகின்றது, இவர்கள் அமைதியை நாடுகின்றார்கள் உலகம் பதவியை நாடுகின்றது, இவர்கள் பிறர்க்குச் செய்யும் உதவியை நாடுகின்றார்கள். ரயில் பஸ் முதலிய வாகன வசதிகள் எட்டாத குக்கிராமங்களை நாடிச் செல்லுகிறார்கள். எவ்வளவு சௌகரியக் குறைவுகள் இருந்தாலும் சமாளித்துக்கொள்கிறார்கள். தங்களைச் சுற்றியுள்ள மக்களை முன்னேற்றுகிறார்கள். அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதைத் தங்கள் வாழ்க்கைப் பணியாகக் கருதுகிறார்கள். உவகை உள்ளத்தோடு செயலாற்றுகிறார்கள்.

பெருஞ் செல்வர் வீட்டுப் பெண்களும் வறுமை வாழ்க்கையை விரும்பித் தெரிந்துகொள்கிறார்கள்.

மலர்ந்த முகத்துடன் மக்களுக்குப் பணி செய்யும் கன்னியர்களை உலகம் எத்திசையிலும் காணலாம். இவர்கள் மடங்களை நிறுவி சிறுவர் சிறுமியர்க்கும் மகளிர்க்கும் இதமான பணிசெய்து வருகின்றார்கள். இக்கன்னியர்களிலே நோயாளிகளைக் கவனித்துக் குணப்படுத்த ஒரு சபையினர். சமூகத்தால் வெறுத்துத் தள்ளப்பெற்ற குஷ்டரோகிகளை உடனிருந்து கண்காணிக்க ஒரு சபையினர். தொண்டு கிழவர் கிழவிகளைப் பரிவுடன் பரிபாலிக்க ஒரு சபையினர். விதவைகளையும் வாழ்க்கையில் வழுக்கிய வனிதையர்களையும் பேண ஒரு சபையினர். அனாதைகள் ஆதரவற்றவர்கள் இவர்களுக்கு உணவு உடை உறையுள் அளித்துக் கல்வியும் கைத்தொழிலும் கொடுக்க ஒரு சபையினர். குருடர்கள் செவிடர்கள் ஊமையர்கள் முடவர்கள் இவர்களையும் கூட்டிச்சேர்த்து, இவர்கள் வாழ்க்கைக் குறைபாடுடையவர்களாயினும், மகிழ்ச்சியுடையவர்களாக, பயனுடையவர்களாக, வாழ வழிசெய்ய ஒரு சபையினர். பாலர் கல்வி முதல், முதியோர் கல்வி ஈறாக கல்வித்துறையில் பணியாற்றப் பல்வேறு சபையினர். இவ்வாறு நாட்டுப் பணியாற்றும் கன்னியர் சபைகள் எத்தனை ! எத்தனை !!

தமிழ் நாட்டில் இவர்களுடைய சேவையை நன்கு உணர்ந்தறிந்த பெருமக்கள் இவர்களை நாவார, மனதாரப் பாராட்டியுள்ளார்கள். பெண்ணின் பெருமையுணர்ந்த கலியாணசுந்தர முதலியாரவர்கள் இக்கன்னியரின் உயர்வுபற்றிக் கவிபாடிக் களிக்கின்றார்.

கன்னியர் கூட்டம் கடவுள் திருக்கூட்டம்
அன்னவர் தொண்டும் அறம்
கன்னியர் தெய்வக் கருத்தினர் அன்னவர்க்கு
மன்னறத் தொண்டே மதம்
கன்னியர் தொண்டளிக்கும் காட்சியே தெய்வீகம்
உன்ன மனம் போதுமோ ஒன்று.

பஞ்சம்பட்டி என்ற கிராமத்தில் நான்குபேரைக் கொண்டு தொடங்கியது அமல அன்னையின் கன்னியர் சபை. அது இன்று மதுரையம்பதியைத் தலைமை நிலையமாகக்கொண்டுள்ளது. நானூறுக்கு மேற்பட்ட கன்னியரால் நிறைந்து சிறந்து விளங்குகின்றது. இச் சபையினர் ஆலயங்களில் அரும் பணியாற்றுகின்றனர். கோவில் வழிபாட்டிற்குரிய ஆடைகளைச் அழகுபட உருவாக்குகின்றனர்; சுத்தம் செய்கின்றனர். ஆண்டவரைப்பற்றிப் பிறருக்கு அறிவிக்கும் உபதேசிகளாகவும் அமைகின்றனர். சமூகத்திடையே கிறீஸ்தவத் தூய கன்னிமை வாழ்க்கையின் ஒளி வீசி வருகின்றனர். குழந்தைகளை வீடு வீடாய்த் தேடிப் பிடித்து படிப்பென்னும் செல்வத்தைக் கொடுத்து வருகின்றனர். எந்தப் பணியைச் செய்தாலும் அவர்களுடைய வாழ்க்கைக்கு இலட்சிய கீதம் ஒன்றே.

" வந்தென்னை ஆட் கொள்ளும் அரசே ! வானோர்
என்றென்றும் ஏற்றும் எழிலடி நாடினேன்
ஒழியாது என் வாழ்நாள்முழுதும் உன் புகழ்பாடி
ஊழியம் செய்தல் ஒன்றே
வாழ்வின் இன்பம் என்று கண்டேன் "

ரம்போலா மாஸ்கரேனஸ் M. A.,
புனித சூசையப்பர் கல்லூரி,
திருச்சி.

மாசடைந்த மனுக்குலத்தின் மகிமையாம் மரியே! மாதாவே! (கர்தினால் நியூமன்)

இராசாவின் குமாரத்தியான அவளுடைய சகல மகிமையும் உள்ளத்திலிருக்கிறது. (சங். 44 : 15)

நான் நீதியின் பாதைகளிலும், நியாய வழிகள் மத்தியிலும் உலாவுகின்றேன். (பழமொழி 8 : 20)

மெய்யாகவே மாதாவே நீ முற்றும் அழகுள்ளவள். ஏனெனில்
உம்மிடம் யாதொரு பாவக்கறையும் இல்லை. (அர்ச். அபிரோம்)

என் பிரியே! ஆ! நீ எவ்வளவோ சௌந்தரியமுள்ளவள்;
உன் ரூபலாவண்ணியம் எம்மாத்திரமென்பேன். (உ. சங். 4 : 1)

Presidential Address

by

K. S. Rao, District Magistrate, Madurai

Friends,

WE rejoice on this grand day when the Sisters of the Immaculate Conception are celebrating their march during the last fifty years of their formation. From 1911 to 1961, the world saw two wars, and in India we had our successful agitation for freedom. Economic revolutions have blown up the foundations of society in more countries than one; upheavals have taken place, and man has progressed in science even unto his doom.

In this background of world events the Blue Sisters stand out, in contrast, and in direct succession to Martha and Mary raising their voice and their hands in one unison and with one proclamation to make: that the Kingdom of Christ shall be ushered into this land of ours, and that truth will prevail against untruth, and the light of God banish the darkness of ignorance and prejudice that warps up the sight of His crucifixion. For us in India and in Asia and all over the world the Blue Sisters have reminded us that Christ was born an Asiatic and His message came to India even as early as in the first century A. D.; and that it is the duty of every Indian Christian to make his European counterpart to understand that the Christ that we know and love has enshrined Himself in our hearts, giving us the supreme right of speech to speak in His Name to erring Europeans, both in Europe and in Africa, that Christ is one for all nations and for all nationalities, and distinctions based on colour and race are antichrist.

The formation of the Blue Sisters is itself proof that we have intaken the missionary spirit from the Sacred Heart of Christ, and we in India are no longer in need of inculcated teachings from western thinkers; but that we in India have so developed in thought and culture that the spirit of Christ has permeated us, awaken-

· A Religious, who loves her vocation and tries fervently to accomplish all her duties, is sure that she is always doing God's will and she becomes 'blessed' even in this life. — *Bl. Cath. Mechtildis.*

ing us from our slumber and remaining for us, like the last enchantment of our lives pulsating every fibre of our life, making us strive, at every point, to touch the Infinite and Just Christ of ours.

We are proud of your fifty years of dedicated service. You have made it easy for us, by your service, to raise our heads in the comity of Christian nations, that we too, in India, can bring forth our own order of Sisters, unaided by any one from the West. Living like 'saniashinis' of India, in a simple and unostentatious style, ever praying, ever dedicated, you have written for yourself and for my country the brightest chapter in human service. During the last fifty years, in your Congregation, we have seen labour united with prayer, the one giving its support to the other and both combining to engender and sustain a truly Christian life.

May God bless you at all times, and may God keep in us always our pride for what you do, and what you are doing for all the poor, the infirm and the weak people of my country.

மதுரைப் புனித அமலோற்பவ மாதா கன்னியர் சபை

பொன் விழாக் கூட்டத்தின் போது

மதுரை மாநகர் கத்தோலிக்க மக்கள் வாசித்து வழங்கிய

வாழ்த்து இதழ்

சீர்மை தங்கிய அதி சிரேட்டத் தாயாரவர்களே,

பஞ்சைக் கிராமத்தில், படிப்பு வாசனையற்ற நாட்டுப்புறப் பெண்கள் நால்வரைக் கொண்டு நிறுவப்பட்டு, மதுரையம்பதியைத் தாயகமாகக் கொண்டு, தமிழ் நாட்டிலே ஐம்பது ஆண்டுகளாக அருப்பெரும் தொண்டினை ஆற்றிய உங்கள் அவையின் பொன் விழா, இங்கு குழுமியிருக்கும் அனைவருக்கும் மன நிறைவும், மகிழ்ச்சியும் அளிக்கும் ஒரு திருவிழா ஆகும். உங்கள் அவை கடந்த அரை நூற்றாண்டுக்காலமாக, எத்தகைய வேற்றுமையையும் கவனியாது, எல்லா மக்களுக்கும் சிறப்பாகக் கத்தோலிக்க மக்களுக்குச் செய்துள்ள பல்வேறு சேவைகளை இப்பெருநாளில் நாங்கள் மனதிலிறுத்தி, எங்களிடத்தில் நிரம்பியுள்ள நன்றி அறிவைத் தக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

" நான்கு பேர் நாற்பது பேராகவும், நாற்பது பேர் நாலாயிரம் பேராகவும் பலுகுங்கள், திருச்சபையின் திராட்சைத் தோட்டம் செழித்து வளரட்டும்" என்று அந்நாளில் சங்கைக்குரிய நெஸ்புளூஸ் சுவாமிகள் கூறிய கூற்று நிறைவேறி வருவதை இன்று நாம் கண்கூடாகப்

பார்க்கிறோம். இற்றைக்கு அவைக்கன்னியர் 500 ஆக உயர்ந்து, திருச்சி, மதுரை, தூத்துக்குடி முதலிய மேற்றிராசனங்களில் 50க்கு மேற்பட்ட மடங்கள் நிறுவப் பெற்றிருப்பது வியக்கத்தக்கதே. சங். நெஸ்புளூஸ் சுவாமிகளது தீர்க்கத்தரிசனம் முற்றும் நிறைவேறும் நாள் வெகுதூரத்தில் இல்லையென நாங்கள் முழு நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

கண்ணியமிகு கன்னியர் தலைவியரவர்களே !

அமல அவை ஆற்றி வரும் சேவைகள் சொல்லும் தரமுடையனவல்ல. மரணத்தருவாயிலிருப்போருக்கு நல்லுபதேசம் செய்து அவர்களை நல்ல தந்தையின் மோட்ச வீட்டில் சேர்த்துவைப்பதும், ஞாயிறு தோறும் இருவர் மூவராய்க் கிராமங்களுக்குச்சென்று, சிறியோருக்கும் பெரியோருக்கும் ஞானோபதேசம் கற்பித்தலும், தியானம் செய்ய கிறீஸ்தவ மக்களைத் திரட்டலும், இவை போன்ற எண்ணிறந்த ஞானப்பணிகளைச் சலிப்பின்றி ஆற்றி, குருக்களுக்குப் பக்கபலமாக நின்று கிறீஸ்து இராச்சியத்தைப் பரவச் செய்வது கண்டு நாங்கள் உங்களை மனமார வாழ்த்துகிறோம்.

தவிர, பள்ளிகள் மூலம் எம்மதக் குழந்தைகளும் பிற்கால வாழ்வில் உன்னத தேவனை வழிபட அவர்களது இளமனதைத் தக்க விதமாகப் பக்குவப்படுத்துவதும் நீங்கள் ஆற்றிவரும் பணிகளில் உன்னதப் பணியாகுமன்றோ! நீங்கள் ஏற்று நடத்திவரும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள், ஒரு ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, நூற்றுக் கணக்கான தொடக்கப்பள்ளிகள் இவற்றின்மூலம் மக்களது அகவிருளை அகற்றி, அருளொளி வீசச் செய்யும் கல்விச் சேவையை அரசாங்கமும் பொதுமக்களும் போற்றுவதைக் கேட்டும் யாம் பேருவகை பூக்கிறோம். இத்தகைய கல்வித் தொண்டு செய்யும் அமல அவைக் கன்னியர்களால் நடத்தப் பெறும் கல்லூரி ஒன்றைக் கண்ணால் காணும் நாளை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

மக்களது ஞானப்பிணிகளை நீக்கும் பணியில் மட்டும் ஈடுபடாது உடல்பிணிகளையும் குணமாக்கும் பணியில் முனைந்திருக்கக் கன்னியர்களில் சிலர் மருத்துவப் பயிற்சி பெற்று வருவதும், பயிற்சி பெற்ற கன்னியர்களின் சேவை மிளிரப் புதிதாகத் தொடங்க விருக்கும் மருத்துவ மனைத்திட்டமும் காலத்திற் கேற்ற சிறந்த நற்பணியாகும்.

மெய்மறைத் துறவியாகிய சிரேட்டத் தாயாரவர்களே !

இப் பொன்னாளில் உங்கள் அவையை உருவாக்கிய சங்கைக்குரிய பெரையரா அகுஸ்தீன் அடிகளையும், அதனை இளமைப் பருவத்தில் பேணிப் பாதுகாத்த மகா வந்திக்கத்தக்க அகுஸ்தீன் பெசாந்தியர் ஆண்டகை அவர்கள், அருமை அன்னை சங்கைக்குரிய பத்ரீஸியா அவர்கள், சங். அமலோற்பவம் அடிகள், சங். கோமஸ் அடிகள், சங். பிளாஞ்சார்டு அடிகள், இவர்களையும், இப்பொழுது அதனை அன்போடு வளர்த்து வரும் மிகவும் வந்திக்கத்தக்க லெயோனார்டு அதிமேற்றிராணி ஆண்டகை அவர்களையும், ஆரம்ப முதல் பொருள் உதவி அளித்துவரும் பெரையரா குடும்பத்தினரையும் நன்றி கலந்த மனதோடு வாயார வாழ்த்துகிறோம்.

உங்கள் அவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைந்து உலகமெங்கும் பரவி எண்ணிறந்த ஆத்துமங்களை எம்பெருமான் யேசுவிடம் கொண்டு சேர்க்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

மதுரை, 16—5—61.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள,
மதுரைநகர் கத்தோலிக்கப் பொதுமக்கள்.

Phone : 186 Tele : PAINTCO

Head Office : VIRUDHUNAGAR

V. A. M. Rathinam & Bros

44, Amman Sannathi Street,

MADURAI.

Direct Importers of:

Iron and Steel, Stockists in Guest, Keen Bolts & Nuts, Indian Nettlefolds Screws, Sankar Brand Cements, S & L. Galvanised Pipes and Pipe Fittings and also Available

Shalimar, Nagrath & London Varnish & Enamel Co., Ltd. Paints.

Props:

V. A. M. CHIDAMBARA NADAR & SONS.

WORLD TEACHERS ON EDUCATION

Edited by

T. S. Avinashilingam & K. Swaminathan

The Souvenir, prepared and published to commemerate the Silver Jubilee of Sri Ramakrishna Vidyalaya, presents the thoughts on Education expressed by some of the Great Teachers of the World. Besides the utterances of the Masters, Buddha, Jesus, Mohammad, Sri Ramakrishna, Swami Vivekananda and Mahatma Gandhi, passages from great books like the Upanishads, the Gita and Tirukkural have been included. It will be too much to claim that this compilation is either exhaustive or is the best selection that could be made. All we dare to hope is that this effort will be found useful and inspiring to those interested in Education.

B. G. PAUL & Co.,
PUBLISHERS,
MADRAS-1

சிறந்த மலையாள ஆயுர்வேத மருந்துகள்,
தைலங்கள், லேகியங்கள், அரிஷ்ட ஆசவங்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
எல்லா நோய்களுக்கும் நேரில் பரிசோதித்து மருந்து கொடுக்கப்படும்.

எஸ். வேலாயுதர்.
தன்வந்திரி மருந்து ஷாப்,
30, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை.

R. R. & SONS

19, Amman Sannathi Street,

MADURAI

Tel. WATCH Phone No. 569

Direct Importers & Authorised Agents for :

Roamer, Mondia, Pradeep, West End, Favre-Leuba & Co., Ltd. Watches, Time-Pieces & Clocks, His Master's Voice and Columbia Gramaphone Records Remington Rand of India Ltd., Typewriters etc.

DEALERS IN

All kinds of Electrical Novelties, Batteries, Lights, Torches, Bulbs, Incandescent Lamps, Lanterns, Stoves and their Spare Parts etc.,

STOCKISTS OF

All kinds of Shop sundries, Thermosflasks, and Food jars, All kinds of Coffee grinders, Rolled Gold Jewelleries, Plastic fancy goods, Fountain Pens, Pencils, Hair Oil, Fancy scented hair oil, Hair tonic, Face powder & Allied Products etc.,

REPAIRING OF WATCHES Etc.,
UNDERTAKEN WITH FULL GUARANTEE.

மூன்றும் நாள்

''இவர்கள் எல்லாரும் யேசுநாதருடைய தாயாராகிய மரியம்மாளோடும் அவருடைய சகோதரரோடும் ஒரே மனமாய் ஜெபத்தில் நிலைத்திருந்தார்கள்.'' (அப். நட. 1:14)

17 மே 1961

கன்னியரின் நாள்

இடம்: புனித தெரெசாள் மடம், இராமநாதபுரம் ரோடு.

காலை 6 மணி: **சபையின் உபகாரிகளுக்காக** தூத்துக்குடி மேற்றிராணியார் அதி. வந். தாமஸ் ஆண்டவர் அவர்களால் **திவ்ய பலிபூசை.**

9 மணி: சபைக் கன்னியர் கூட்டம்

தலைவர்: தூத்துக்குடி மேற்றிராணியார்

1. *சபைக் கீதம்*
2. *'' இன்னவர் நோக்கமும் இனிய பணியும் ''* — சுவாமி அம்புரோசு சே. ச.
3. *இன்னிசை*
4. *'' இல்லற அப்போஸ்தலத்துவத்தில் கன்னியரின் பங்கு ''* — சுவாமி S. L. உபகாரம்
5. *அமலோற்பவ நாம வாழி*
6. *'' தேவ அழைத்தலைக் கண்காணிப்பது எப்படி ? ''* — சுவாமி மோத்தா சே. ச.
7. *தலைவர் உரை*
8. *பாப்பரசர் கீதம்.*

பகல் 11 மணி: **திருமணி ஆராதனை** *(நடத்துபவர்: தூத்துக்குடி மேற்றிராணியார்)*

மாலை 4 மணி:

கோசாகுளம் புதூர் லூர்து நாயகியின் திருத்தலத்திற்கு சபைக் கன்னியரின் திருயாத்திரை.

மாலை 5 மணி:

கோசாகுளம் புதூரில்

லெயோனுர்டு மருத்துவ நிலையம்

(LEONARD DISPENSARY)

கல் நாட்டு விழா

கல் நாட்டுபவர்: **மதுரை அதிமேற்றிராணியார்**

மாலை 6 மணி:

அதிமேற்றிராசன ஆலயத்தில்

அதிமேற்றிராணி ஆண்டவர்

அவர்களால்

திவ்ய நற்கருணை ஆசீர்

Please step in for your

TOILET & STATIONERY

Requirements

AT

CHOCKALINGAM STORE

GENERAL MERCHANTS

NATHAM P.O. : : MADURAI

Pro: V. S. SUBBIAH

கருணா மெடிக்கல்ஸ்

87, கீழ வெளி வீதி

மதுரை

எல்லாவிதமான இங்கிலீஷ்

மருந்துகளும் சகாயமாய் கிடைக்கும்.

புரோ :— P. சீனிவாச நாடார்.

A. M. D. G.

G. LOORDU & SONS

LEATHER MERCHANTS

"LOORDU-NILAYAM"

A. M. CHURCH St., WEST GATE, MADURAI. (S. India)

Tannings at: DINDIGUL, Tel. Address: PRAKASAME, Madurai-1.

Manufacturers & Dealers in Leathers & Leather Goods.

Gin Washers, Pump & Bucket Washers, Leather Beltings & Leather Laces, Picking Bands, Pickers & Buffers, Mutton Tallow, Calf Roller Skins and Sheep Roller Skins 26" × 22" Etc., Cemented & Un-cemented Leather Aprons, Leather Hand Gloves, Upholstery Leathers for automobiles, Book Binding Leathers & Coloured Leathers Etc., Etc.,

SUPPLIERS TO

Spinning & Weaving Mills, Ginning & Pressing Factories, Rice Mills, Municipalities, Book Binders & Presses, Bus Body Builders & Other Industrial Establishment Etc., Etc.

உபகாரிகளுக்கான பூசையில் பாடப்பெற்ற

புதிய பாடல்கள்

1. நுழைவுக் கீதம்

இராகம் : *மோகனம்* **தாளம் :** *ஆதி*

அனைத்தையும் படைத்தவர் ஆண்டவரே!
வாருங்கள் அவரை வணங்கிடுவோம்.
உலகத்தை மீட்டவர் ஆண்டவரே!
வாருங்கள் அவரை வணங்கிடுவோம்.
உன்னத தேவன் நல்லவரே,
ஒப்புயர்வில்லா வல்லவரே,
பன்னரும் இரக்கம் உள்ளவரே,
பாவிகளைக் காத்தாள்பவரே!
வாருங்கள் அவர்முன் பணிந்திடுவோம்.
வாருங்கள் அவரை வணங்கிடுவோம்!

2. பாவசங்கீர்த்தனம்

இராகம் : *காம்போஜி* **தாளம் :** *திரிஸ்ர ஏகம்*

ஓ தயையுள்ள தேவனே! உமது திருமுன்னே
ஓ கன்னித்தாய் மரியே! தூதர் துதியரே!
நினைவு வாக்கு கிரிகையால் பாவம் செய்தேனே!
பாவம் செய்தேனே! — பெரும் பாவம் செய்தேனே!
பாவி எனைக் கைதூக்குவீர்; பாவம் போக்குவீர்!

3. காணிக்கை ஒப்புக்கொடுத்தல்

இராகம் : *சங்கராபரணம்* **தாளம் :** *ஆதி*

1. ஏழை எந்தன் உள்ளத்தை — ஏந்தித் தட்டில் தாங்கியே
வாழ்வும் செயலும் சிந்தனையும் — வாஞ்சையோடு அளிக்கின்றேன்
ஏற்றருள்வீர் எம் பிதாவே!

2. நீளக்கிண்ண ரசமதிலே — நீர்த்துளிபோலே கலந்தே
நேச யேசின் பாசத்திலே — நிரந்தரமாய் நான் நிலைத்திடவே
ஆசைகொண்டேன் அருள்புரிவீர்!

3. இன்றும் என்றும் உம்மிடமே — இயேசுவே நான் வாழ்ந்திடவே
'இனிமேல் வாழ்வது நானல்ல — இயேசுவே என்னில் வாழ்ந்திடுவார்!'
என்ற வரத்தை எனக்களிப்பீர்!

கடமையைச் செய்தபின் சாகுபெறு நீர
அடிமைநீ யென்றே பகரு. — ([illegible] 17 : 10)

இன்னவர் நோக்கமும் இனிய பணியும்

ஆண்டு 1911. இடம் பஞ்சம்பட்டி. பஞ்சத்தின் புகலிடமோ என்னமோ அந்தப்பட்டி அப்பொழுது. ஆனால் நெஞ்சத்தை நிரம்ப மகிழ்விக்கும் இடமாக நினைவில் நிலவுகின்றது இப்பொழுது இனியதொரு காரணத்தால். ஐம்பதாண்டுகள் பூர்த்தியாகி ஆண்டவன் புகழை அயராது பாடும் அமல உற்பவ கன்னியர் அவையின் நாற்றங்காலாக தேர்ந்தெடுத்தாள் அமல அன்னை அந்தப் பஞ்சப்பட்டியை. நாற்றங்காலில் வித்தை ஊன்றினாள். அஃது செழித்து வளர்ந்தது. வளர்ந்த பயிரை வேரோடு பெயர்த்து தமிழகத்தின் தலை நகரமாம் தீந்தமிழ் இல்லிடம் கூடல்மா நகரில் கொண்டுவந்து கரிசனையோடு நட்டுக் காத்து வந்தாள். அமல அன்னைக்கு உதவியாக அச்செடியை பக்குவமுடன் பேணிக் காத்து வந்தனர் சங். அ. பெரைரா, மேன்மை தங்கிய பெசாந்தியர் ஆண்டகை, பீற்றர் லெயோனார்டு ஆண்டகை, கனம் பத்ரீஸ் தாயார், ஜோசப் ஹெலனா பெரியதாயார், சங். அமலோற்பவநாதர், பிளாஞ்சார்டு சுவாமியார், ஞானப்பிரகாசநாதர் இன்னும் ஏனைய பெரியோர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நலமுடன் வளர்ந்து வளமுடன் கிளையும் கொப்புமாக கனி நிரம்ப காட்சியளிக்கின்றது தனது ஐம்பதாவது ஆண்டிலே ஆண்டவன் சமூகத்துக்கு முன்னாலே—அதற்காக ஆண்டவனுக்கு இன்று கோடி நன்றி, அமல அரசிக்கு எமதன்பான வாழ்த்து.

சபையின் நோக்கம் : தலை சிறந்த நோக்கம்—இயற்கை பாசத்தால் உந்தப்பட்டு பெண்டு பிள்ளைகளைக் காக்கும் நோக்கமல்ல - சுகபோகத்துக்குச் சுருதியேற்ற செல்வம் தேடும் நோக்கமல்ல – உளுத்துப்போகும் இவ்வுடலைப் பேண ஊதியம் தேடும் நோக்கமல்ல. பொருள் திரட்டி பாரிலே புகைந்து போகும் புகழ் பெற வேண்டுமென்ற நோக்கமல்ல - ஆனால் எல்லாம் வல்ல இறைவன் எம்பிரான் இயேசு அரசரோடு உழைத்து அவரது இணையில்லா அன்பை சுகிக்க உலகிலுள்ள அனைவரையும் அவர் பாதம் கொண்டுவந்து சேர்க்கும் சீரிய நோக்கமே அமல அவைக் கன்னியரின் நோக்கம்.

நோக்கத்தின் உயர்வு : உண்மையிலேயே இத்தகைய நோக்கத்தின் உயர்வை விவரிக்க வார்த்தைகள் போதாது, ஏடு அடங்காது, காலம் காணாது. சுருங்கக் கூறின் ஆண்டவன் எத்துணை பெரியவரோ, ஆண்டவன் எத்துணை உயர்ந்தவரோ, ஆண்டவன் எத்துணை சிறந்தவரோ அத்துணை பெரியது, உயர்ந்தது, சிறந்தது அந்த நோக்கம். இம்மாபெரும் உயர்ந்த நோக்கத்தை அடைய பாடுபடுவதில்தான் சபையின் உயிரும் சிறப்பும் உன்னத தன்மையும் அடங்கியுள்ளது. இவ்வைம்பது ஆண்டுகளாக சபை அதற்காகப் பாடுபட்டு வந்திருக்கிறது. சிறப்பாக சிறுவர்களின் உடல், உள்ள ஆன்ம வளர்ச்சிக்காக பள்ளிகளையும் அனாதை விடுதிகளையும், சபைகளையும் ஏற்படுத்தி ஏற்ற முறையில் நடத்தி வந்திருக்கின்றது. கிராம மக்களை அணுகி அவர்களுடன் பழகி நோயாளிகட்கு ஆவன செய்து, எத்தனையோ மரிக்கும் அஞ்ஞான குழந்தைகட்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்திருக்கின்றது. திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கத்தோலிக்கப் பெண்கள் ஏனைய பெண்களைவிட கல்வியிலும் கலைத் துறையிலும், கட்டுப்பாடு ஒழுக்கத்திலும் மேல் வரிசையில் மிளிர்கிறார்களென்றால் அப்பெருமை அமல அவைக் கன்னியர் சபையைச் சார்ந்ததென்றால் இதை எவரும் மறுக்க முடியாது.

இனிய பணி : பல்வேறு நற்பணிகளை சிரமேற்கொண்டு நம் சபை நற்றொண்டாற்றி வந்திருக்கின்றது ஐம்பதாண்டுகளாக—ஆனால் இப்பணிகளைவிட சபையின் பாராட்டுதலைப் பாடும்பணி **ஞான உபதேசப் பணி** — இப்பணிக்கென்றே இச்சபை

என்ன புசிப்பதோ வேதாடை போர்த்துவதோ
இன்ன நினைவாலேங் கா. — (மத் 6 : 25)

பிறந்திருக்கின்றது, செயலாற்றி வருகிறதென்று மக்கள் பாராட்டினால், இதுவே சபையின் தனிப் பெருமை யென்று கூறவேண்டும். தன் வாழ்வின் சுருக்கத்தை திவ்விய யேசு எவ்வாறு உரைத்தார்? தன் இதய தாக உணர்ச்சிகளை யெல்லாம் ஒன்று திரட்டி "உலகம் எத்திசையிலும் சென்று நான் போதித்தவைகளை சகல மக்களுக்கும் போதியுங்கள்" என்று பரலோகத்துக்கு எழு முன்னால் கூறி விட்டுச் சென்றார்—உண்மையிலே அதுதான் அவருடைய ஏக தாகம், இருதய வேகம், உள்ள நிறைவால் அவர் சொன்ன வசனங்கள். "ஞான உபதேசம் போதியுங்கள்" என்பது தான் அவருடைய இறுதி விண்ணப்பம். சிறிது சிந்திப்பின் இந்த ஞான உபதேசப் பணி எவ்வளவு முக்கியமானது என்பதை நன்கு உணரலாம். இப்பணிக்கென்றே அமல அவை பிறந்தது. இப்பணிக்கென்றே அமல அவை வாழ்கின்றது. இப்பணிக்கென்றே ஏனைய பணிகளை யெல்லாம் அர்ப்பணிக்கின்றது. இவ்வரிய ஞான உபதேசப் பணி வாயிலாக கிறீஸ்துவை மக்களுக்குக் கொடுக்கிறோம், கிறீஸ்துவை உலகில் விளங்கப் பண்ணுகிறோம், கிறீஸ்துவின் சிலுவைப் பொக்கிஷத்தின் செல்வங்களை மக்களுக்கு காட்டுகிறோம், கிறீஸ்துவின் ஞானச் சரீரமாகிய திருச்சபையை 'குன்றின் மேலிட்ட தீப'மென ஒளி வீசச் செய்கிறோம் என்பதை கன்னியர்கள் நன்கு உணர்வார்களாக. உணர்ந்து ஞான உபதேசப் பணியை தங்கள் தனி அணிகலமாகக் கொள்வார்களாக. சலிப்பிலும் களைப்பிலும் ஆறுதல் தரவேண்டும் ஞான உபதேசப் பணி. அலுப்பில் ஆனந்தம் கொடுக்கவேண்டும் ஞான உபதேசப் பணி. அர்ச். சின்னப்பரைப் போல் நாமும் ஞான உபதேசப் பைத்தியர்களாக ஆகவேண்டும். பஞ்சம், பட்டினி, பசி, பிணி, பீடை, பேராபத்து இதுபோன்ற ஏனைய கொடிய இடையூறுகளிடையேயும் ஞான உபதேசப் பணி நமக்குப் புத்துயிர் அளிக்கும் தேனமிர்தம் போல் இருக்கும் நிலை என்று வருமோ? அந்நிலையிலிருந்தார் அர்ச். சின்னப்பர் கிறீஸ்து பைத்தியர்.

ஏனைய கல்விப் பாடங்களைப் போல் ஞான உபதேசப் பாடத்தையும் ருசிகரமான வழிகளில் ரசிக்கும் முறைகளில் சொல்லிக்கொடுப்போம். பொருட்காட்சிகள் அமைப்போம், படங்கள் தீட்டுவோம், காட்சிகளை அமைத்துக் காட்டுவோம், பாடல்களால் உணர்த்துவோம், ஆண்டு விழா கொண்டாடுவோம், பிள்ளைகட்குச் சிறந்த பரிசில்கள் வழங்குவோம், அவர்களை ஊக்குவிப்போம். ஞான உபதேசத்தை வாழச் செய்வோம், கிறீஸ்துவை வளரச் செய்வோம்.

சவேரியார் பெரிய பேராசிரியர். பணம் பணமாகச் சேர்த்து புவி புகழோடு உலகில்வாழ ஏதுள்ளவர். ஆனால் 'புவியின் புகழ் புகை' போல் மறையுமென்பதை உணர்ந்தார். ஆன்மாவின் நித்திய அழியா அழகு வாழ்வைப் புரிந்தார். ஆன்மாக்களுக்காகப் பாடுபட கப்பல் ஏறினார்—நம் இந்து தேசமடைந்தார். கோவாவில் இறங்கினார்—அவர் உடனே செய்தது என்ன? பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த அவர் உயர்ந்த பள்ளிகள் கட்ட வேண்டுமென்று எண்ணினாரா? அல்ல. என்ன செய்தார்? கையில் மணி யெடுத்தார். பைத்திய பரதேசியைப்போல் தெருத் தெருவாகச் சென்று மணியடித்தார். சிறுவர்களைக் கூட்டினார். அவர்களுக்கு நித்திய அறிவு கொடுக்கும் ஞான உபதேசத்தைப் போதித்தார் — அன்றாடப் படிப்பாக போதித்தார். நாளடைவில் மக்கள் மனமாற்றமடைந்ததைக் கண்ணுற்றார். இதிலிருந்து நாமும் நல்ல பாடங் கற்றுக் கொள்ளுவோம். கல்விப் பணி நமது சபையின் பிணியாக ஆகிவிடாமல், அது ஞான உபதேசத்தின் துணை அணியாக வளரக் கவனமாக இருப்போம்.

ஞான உபதேசமே எங்கள் தனிப் பணி,
ஞான உபதேசமே எங்கள் சபைப் புகழை
ஒலிக்கும் மணி,
ஞான உபதேசமே எங்கள் சபையை
அலங்கரிக்கும் அன்றாட அணி

என ஞான உபதேசப் பணியை சிரமேற் கொண்டு நடத்துவோமானால் நமது சபையின் அரிய நோக்கமும் இனிய பணியும் அமல அன்னையின் சமுகத்தில் ஒளி பெற்று அழியாப் புகழ் பெற்று விளங்கும்.

சுவாமி ஞா. அம்புரோஸ் சே. ச.

இல்லற அப்போஸ்தலத்துவத்தில் கன்னியர் பங்கு

"இல்லற அப்போஸ்தலத்துவத்தில் கன்னியர் பங்கு" என்ற தலைப்பு ஒரு கேள்வியை எழுப்புகின்றது. இல்லற அப்போஸ்தலத்துவத்துக்கும் கன்னியருக்குமுள்ள தொடர்பு என்ன? இல்லறமும் துறவறமும் திருச்சபையின் இரு பெரும் அணிகள். திருச்சபையின் நலனைச் சார்ந்த எல்லா அலுவல்களிலும் இந்த இரண்டு அணிகளும் ஒன்றுபட்டு உழைப்பது திருச்சபையின் வளர்ச்சிக்கு அவசியம். துறவறத்தார் தனிப்பட்ட முறையில் அப்போஸ்தலத்துவ வேலையில் ஈடுபடுவதோடு இல்லறத்தாரையும் அவ்வேலையில் பயிற்சிப்பது அவர்களுடைய அதிமுக்கிய கடமைகளில் ஒன்று. அப்போஸ்தல திருப்பணியில் துறவறத்தார் இல்லறத்தாருக்கு வழிகாட்டிகள், பயிற்சியாளர்கள்.

திருச்சபை ஒரு தெய்வீக ஸ்தாபனம். ஆன்ம நலனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஸ்தாபனத்தின் கொள்கைகள் உலகக் கொள்கைகளுக்கு முற்றிலும் வேறுபட்டவை. ஆகவே எல்லாக் காலங்களிலும் பிரச்னைகள் பல எழும்பி, திருச்சபையை நசுக்க முயன்றிருக்கின்றன. ஆனால் திருச்சபையின் உயிராக இருந்து அதை வழிநடத்தும் திவ்ய இஸ்பிரீத்து அவ்வப்போது எழுந்த பிரச்சனைகளைச் சமாளிக்க ஏற்ற சாதனங்களை உருவாக்கித் தந்துள்ளார். ஆதித் திருச்சபையை அடியோடு தொலைக்க முயற்சித்த உரோமைப் பேரரசை எதிர்த்துப் போராட எழுந்தனர் வீர வேதசாட்சிகள், ஆணும் பெண்ணுமாக. வேத சாட்சிகளின் இரத்தத்திலே மூழ்கி மடிந்தனர் உரோமைப் பேரரசர்கள். அந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் வித்தாக விழுந்து முளைத்து நூற்றுக்கு நூறு பலன் தந்தது. திருத்தலங்களைச் சூறையாட வந்த துருக்கியரை முறியடிக்க வீர முரசு கொட்டி எழுந்தனர் சிலுவை யுத்த வீரர்கள். கோதுமை மத்தியில் தகளையைத் தூவுவதுபோல் சத்தியமறைக் கொள்கைகளுக்கு மாறான தப்பறைகள் எழுந்தபோது மறை அறிஞர்களும் வேத விற்பன்னர்களும் உருவானார்கள். திருச்சபையைப் பாதுகாத்தார்கள். காலத்துக்கேற்ற ஒரு பாப்பானவர், ஒரு புனிதர், ஒரு சபை, என தகுந்த சாதனங்களைத் தந்து உதவி, திருச்சபையை நரகவாசல் மேற்கொள்ளாது பாதுகாத்து வந்திருக்கிறார் திவ்ய இஸ்பிரீத்து.

நவீன, விஞ்ஞான யுகமென அனைவராலும் அழைக்கப்படும் இந்த இருபதாவது நூற்றாண்டிலே திருச்சபைக்குப் பெரும் பிரச்சனையாகத் தோன்றியிருப்பது ஓர் அஞ்ஞானம், நாத்தீகப் பொதுவுடமை. விஞ்ஞான வளர்ச்சியால் மமதையடைந்த மனிதன் மெஞ்ஞானத்தை இழந்து கடவுளைக் கண்டதார் என்ற அஞ்ஞானத்தைக் கொண்டிருக்கிறான். விஞ்ஞான வளர்ச்சி தந்த சுகபோக வசதி மனிதனை பூலோகத்திலே சுக போக மோட்சத்தைத் தேடத் தூண்டுகின்றது. விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் ஓர் ஆலைத் தொழிற்சாலையாக மாறி வருகின்றது. மனிதனை உயிரற்ற இயந்திரங்களோடு வேலை செய்யும் உயிர் இயந்திரங்களாக மாற்றிவிட்டது. சுகபோக வேட்டையிலே சுயநலப்போக்கிலே மனிதன் மத்தியில் ஏற்றத் தாழ்வு அதிகம் ஏற்பட மனிதர் மத்தியில் சகோதரத்துவ மனப்பான்மை மறைந்து, பகையும், போட்டியும் போரும் எழுகின்றன. உலக

எஞ்ஞான்றும் வேண்டுவ தீச னறிவான் காண்
அஞ்ஞான புத்தி யகற்று. — (மத். 6 : 32)

மக்கள் கணிப்பில் மூன்றில் இரண்டுபாகம் அரை வயிற்றுக் கஞ்சிக்கு அல்லல்படும் தொழிலாளராக இருப்பதால் பூலோக சுவர்க்கத்தை இந்த உலகில் உருவாக்கித் தருவோம் என்று பிதற்றும். நாத்தீகப் பொதுவுடைமைக் கொள்கைகள் பகட்டாகத் தோன்றுகின்றன. அறமும் ஆன்ம வாழ்வும் அப்புறப்படுத்தப்பட வேண்டியவைகளாகக் கருதப்படுகின்றன. நாத்திகப் பொதுவுடைமை தன் நச்சுக் கொள்கையைப் பரப்பக் கையாளும் நூதன சாதனம் "Cell Technique" என்ற "உயிர் அணு அமைப்பு இயக்கம்", "Each one Catch one" "ஒருவன் மற்றொருவனுக்குச் சொல்லட்டும்" என்ற முறையில் வெற்றிகண்டுள்ளது. ஏற்கனவே உலக மக்களில் மூன்றில் ஒரு பாகம் பொதுவுடைமைக் கொள்கையை ஏற்று நடக்கின்றது. இந்த சூழ்நிலையிலே குருக்களும் கன்னியரும் ஆபத்துப் பேர்வழிகளாக, நம்பத்தகாதவர்களாக தொழிலாளரின் விரோதிகளாக வெறுக்கும்படி கற்பிக்கப்படுகின்றனர். அப்படியாயின் பொதுவுடைமைக்கு மாற்று மருந்து இல்லறத்தார் இயக்கம். புனிதர் எனக் கருதப்படும் பாப்பரசர் பன்னிரெண்டாம் பத்திநாதர் கூறியுள்ள வார்த்தைகள் இங்குக் குறிப்பிடத்தக்கவை: "திருச்சபையைப் பாதுகாக்கவும், பொதுவுடைமையை எதிர்த்துப் போராடி வெற்றி காணவும் இல்லற அப்போஸ்தலர் சேனை ஒன்று எனக்குத் தேவை. அதைக்கொண்டு பொதுவுடைமையை எதிர்ப்பேன், போராடுவேன், வெற்றி காணும் வரை சண்டை செய்வேன்" எனக் கூறியிருக்கிறார் அவர். ஆண்டவர் காலம் தொடங்கி தனிப்பட்ட முறையில் செயல்பட்டு வந்த இல்லற அப்போஸ்தலத்துவம் காலத்துக்கு ஏற்றவாறு ஸ்தாபன ரீதியிலே திருச்சபை அதிகாரிகளின் ஆணை வழிப்படி அப்போஸ்தலத்துவ திருப்பணியில் கத்தோலிக்க சேவா இயக்கம் என்ற பெயருடன் இயங்கி திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமென்பது பாப்பரசர்களின் அறைகூவல். ஆலைத்தொழிலாளர் மத்தியில் ஆலைத் தொழிலாளரும், ஆசிரியர் மத்தியில் ஆசிரியரும், இளம் பெண்கள் மத்தியில் இளம் பெண்களும் எல்லாத் துறைகளிலும் இல்லறத்தார் புகுந்து சங்க ரீதியிலே செயல்பட்டு எல்லாத் துறைகளையும் கிறீஸ்துமயமாக்க முயல்வது இருபதாவது நூற்றாண்டில் திருச்சபை கையாளும் சாதனம்.

இல்லற அப்போஸ்தல அலுவலிலே துறவறத்தாருக்குப் பெரும் பங்குண்டு. கர்தினால் பச்செல்லி ஆண்டவர் (பிற்பாடு 12-ம் பத்திநாதர்) வத்திக்கான் ராஜ்ய செயலாளராக செயலாற்றிய காலத்தில் பாப்பரசர் 11-ம் பத்திநாதர் பெயரால் சந்நியாச சபைத் தலைவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அதிலே அவர் கூறுகின்றார்: "திருச்சபையின் நலனுக்காகப் பாடுபடுவதில் சந்நியாச சபைகள் முன்னணியில் நிற்பது பாரம்பரை. அவ்விதமே இருபதாவது நூற்றாண்டிலே திருச்சபையின் அதிமுக்கிய தேவையாகக் கருதப்படும் கத்தோலிக்க சேவையை வளர்ப்பதில் சந்நியாச சபைகள் ஆர்வமும் அக்கறையும் காட்டவேண்டுமென்று பாப்பரசர் கோருகின்றார். அதற்கு முதலில் நீங்கள் பயிற்சிபெறவேண்டும். கல்விக் கழகங்கள், பயிற்சி முகாம்கள் மூலம் கத்தோலிக்க சேவையைப்பற்றிய அறிவை மேற்கொண்டு ஆணும் பெண்ணும் இந்த இயக்கத்தில் சேரும்படியான வழிவகைகளைத் தேடுங்கள். நமது கண்காணிப்பிலிருக்கும் கல்வி ஸ்தாபனங்களிலுள்ள ஆண், பெண் அனைவரையும் பக்தியுள்ள நன்மக்களாக உருவாக்குவதோடு நின்றுவிடாமல் அவர்கள் உள்ளத்தில் அப்போஸ்தல திருப்பணியில் ஆர்வத்தை ஆரம்பத்திலிருந்தே ஊட்டவேண்டும் அவர்களை இல்லற அப்போஸ்தலர்களாக உருவாக்கவேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய கத்தோலிக்க பெருமக்கள் என்பதை மறக்கலாகாது."

புரட்சி நிறைந்த இந்த நூற்றாண்டிலே பெண்களும் புரட்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு சம உரிமை பாராட்டி முன்னுக்கு நின்று செயல்பட்டு வருகின்றார்கள். கல்லூரியிலே, கலைக்கூடங்களிலே, அரசியல் துறையிலே, ஆலைத் தொழிலிலே பெண்களைக் காண்கின்றோம். அதேபோல் அப்போஸ்தலப் பணியிலும் இல்லறப் பெண்கள் முன்னணியில் நிற்க வேண்டுமென்பது தாய் திருச்சபையின் ஆவல். மற்ற நாடுகளில் முன்னணியில் நிற்கின்றார்கள். இல்லற அப்போஸ்தலத் துறையில் பெண்களை உருவாக்

பார்க்குப காரமொன்றும் பண்ணாதவர்க்கு
நரகங்கதி யாகுநம்பு. — (மத். 25 : 41)

144423

குவதற்குத் தகுந்தவர்கள் கன்னியர்களைவிட வேறு யார்? சந்நியாச சபைகளின் கண்காணிப்பாளர்களாக இருந்த கர்தினல் லெப்பிசியரும் கர்தினல் லௌரெந்தினும் கன்னியர் சபைத் தலைவிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கைகளில் நாம் பின்வரும் குறிப்புகளைக் காண்கிறோம்: "பெண்களைக் கண்காணிக்கும் கன்னியர்கள், விசேஷமாக கல்வி ஸ்தாபனங்களை நடத்துபவர்கள் தங்கள் கண்காணிப்பிலுள்ள பெண்களை கத்தோலிக்க சேவையில் பயிற்சிக்க வேண்டும். அவ்விதம் செய்வதால் தங்கள் சபைகளுக்கே தகுந்த உறுப்பினர்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள். இதற்குக் கன்னியர்கள் முதலில் பயிற்சி பெறுவது அவசியம்."

ஆத்தும இரட்சணிய அலுவலில் ஆர்வம்கொண்ட அமல அவைக் கன்னியர்கள் இல்லற அப்போஸ்தலப் பெண்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்ட வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. உங்களுடைய சபையின் கண்காணிப்பில் தற்சமயம் 129 மாதா சபைகள், 69 கத்தோலிக்க சேவா சங்கங்கள், 17 இளம் பெண்கள் இயக்கங்கள், 60 சற்பிரசாத யுத்த சபைகள், 28 பாலர் சபைகள் நடந்து வருகின்றன என்பது மிகவும் பெருமைப்படக்கூடிய காரியம். இந்தச் சபைகள், சங்கங்கள் மூலம் உங்கள் கண்காணிப்பிலிருந்து வரும் சிறுமியர், பெண்களிடத்தில் தியாக மனப்பான்மையையும், அடுத்தவரின் நலனைப்பற்றி எண்ணும் குணத்தையும், ஆத்தும இரட்சணிய அலுவலையும் உருவாக்கவேண்டும். இந்த ஜூபிலி கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளில் ஒன்று விளையாட்டு விழா. இந்த விழாவில் கலந்து கொண்ட சிறுமிகளை எவ்வளவு அழகாகப் பழக்கியிருக்கின்றீர்கள். இதே திறமையை இல்லற அப்போஸ்தல அலுவலிலும் சிறுவர்கள் அடையச்செய்ய உங்களால் முடியும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

இருபதாவது நூற்றாண்டில் உருவான அமல அவைக் கன்னியர் சபை இருபதாவது நூற்றாண்டின் முக்கிய தேவையான இல்லற அப்போஸ்தல இயக்கத்தை வளர்க்கப் பெரிதும் பாடுபடவேண்டும். இதுவே ஆண்டவரின் ஆவல். அமல உற்பவ அன்னையின் அன்புக் கட்டளை.

சுவாமி S. L. உபகாரம்

பெரிய முழக்கத்தில் அரிதே நன்மை;
அரிய நன்மைகள் ஆற்றா பேரொலி!

*   *   *

இறைவன் ஒருவர் எனையறிந்தால்
ஈடிலா உண்மைப் புகழ் எனக்கே;
இறைவன் ஒருவர் துணைபுரிந்தால்
எதிரிலா ஆற்றல் எனக்குண்டே;
இறைவன் என்னுள் உறைந்துவிடில்
எல்லாம் நிறைந்தவன் நான் அன்றோ!

*   *   *

ஆட்சிபுரிதல் கொடுமையும் அன்று;
கீழ்ப்படிதல் சிறுமையும் அன்று.

பரர்க்குப காரம் பலசெய்தார்க் கென்றும்
பரஞசி தானே பலன். — (மத் 25 : 34)

தேவ அழைத்தலைக் கண்காணிப்பது எப்படி?

திவ்ய இரட்சகராகிய நமது யேசுநாதர் மனித இரட்சணியத்திற்காகத் திருச்சபையை ஸ்தாபித்தார். சகல மனிதரும் இரட்சணியம் அடைய வேண்டும் என்பது சர்வேசுரனுடைய விருப்பம். அவரே இரட்சணிய வேலையை ஆரம்பித்தார். அது உலக முடியுமட்டும் தொடர்ந்து நடக்கவும் வழி செய்தார். அதுதான் அவருடைய திருச்சபை. அவருடைய மன்றம். திருச்சபை யேசுநாதரின் தொடர்ச்சியே. இந்த இரட்சணிய வேலையில் நாம் ஒவ்வொருவரும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஆண்டவரின் விருப்பம். அதாவது மனிதனைக்கொண்டே மனிதன் இரட்சணியம் அடைய வேண்டும் என்பது தேவ ஏற்பாடு. ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் உள்ள கடமை இது. இது தனிப்பட்ட வேலை அல்ல. எல்லாரும் சேர்ந்து செய்யும் ஒரு பொது அலுவல்—ஆத்தும இரட்சணிய அலுவல். ஆனால் சிலரைப் பொறுக்கி எடுத்துக் கொள்கிறார். அதாவது ஆண்டவருக்குப் பிரியப்பட்ட ஒருசிலருக்கு தேவ அழைத்தல் என்னும் இலவச நன்கொடையைக் கொடுக்கிறார்.

அப்படியானால் தேவ அழைத்தல் என்றால் என்ன? யார் அழைக்கிறது? யார் அழைக்கப்படுகின்றனர்? எதற்காக அழைக்கப்படுகின்றனர்? என்ற கேள்விகளுக்கு விடை தேடி தேவ அழைத்தல் என்ற அதியுன்னத தேவ நன்கொடையைச் சற்றே புரிந்துகொள்ளலாம்.

அழைத்தல் என்றால் யாரோ ஒருவரால் அழைக்கப்பட வேண்டும். அப்படி அழைப்பதற்கு அவருக்குச் சர்வ அதிகாரமும் இருக்கவேண்டும். அழைக்கப்பட்டவன்மேல் பொறுப்பான கடமைகளைச் சுமத்தவும் உரிமையுள்ளவராக இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர் நமது ஆண்டவரான திவ்ய யேசுவே. அவர் நேரடியாக அழைப்பது அபூர்வம். இவ்விதப் புதுமை அழைத்தலுக்கு உதாரணம் சவுல் பவுலாக மாறியதுதான். யேசுநாதரே அவரைப்பற்றி சொன்னது இதற்குச் சான்று. "அவர் (சவுல்) என்னால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம்" என்பதே. ஓர் வகையில் கடவுள் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் யாருமே ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமே. ஆனால் புதுமையாக திடீரென்று அப்படி அழைக்கிறார் என்று எண்ணுவது பிசகு. ஆனால் சாதாரண வழி எதுவென்றால் ஆண்டவர் அவருடைய பிரதிநிதி வழியாகவும் நமது புத்தியின் யோசனையின் வழியாகவும் அருள் பிரகாசம் கொடுத்து நம்மை இழுக்கின்றார். நமது ஆண்டவர் தேவ அழைத்தலுக்கு ஏற்ற குணங்களையும் வரப்பிரசாதங்களையும் ஓர் ஆத்துமத்திற்கு இலவசமாய் அளித்து அதை அதற்காக முன்கூட்டியே தயார் பண்ணுகிறார். அவருடைய பிரதிநிதியாகிய மேற்றிராணி ஆண்டவரோ, சபை சிரேஷ்டரோ, புத்திமதிகளாலும், அந்த ஆளைச் சோதிப்பதிலும் அவரைக் குருவாகவோ, அல்லது ஓர் துறவியாகவோ, கன்னியாஸ்திரியாகவோ ஏற்றுக்கொள்ளுகிறார்கள். யேசுநாதர் தேவ அழைத்தலைப்பற்றி பலவாறு விவரித்தார். தோட்டத்திற்கு வேலை ஆட்களை அனுப்புகிறதாகவும், வெள்ளாண்மை அறுப்பதற்கும் வேண்டிய ஆட்களை அனுப்புவதாகவும், மந்தையை மேய்க்க ஆயனைத் தெரிந்துகொள்ளுவதாகவும், கடைசியில் வெகு தெளிவாக "நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று திட்டவட்டமாய்ச் சொல்லியதும் தேவ அழைத்தலுக்குக் காரண கர்த்தா நமது ஆண்டவரே என்று உணர்த்துகிறது. ஆகவே தேவ கிருபையால் விழுந்த விதையைக் கண்டு அதை வெளியரங்கமாய் ஏற்றுக்கொள்வது அவருடைய பிரதிநிதியாகிய திருச்சபை அதிகாரிகள் — மேற்றிராணிமார்கள், அல்லது சபை சிரேஷ்டர்கள்.

யார் அழைக்கப்படுகின்றனர் என்று நாம் அத்தகையவர்களின் குணாதிசயங்களை ஆராய வேண்டும். சாதாரணமாய் உத்தம குடும்பங்களிலேயே தேவ அழைத்தல் தோன்றும். இதற்கு அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள் குடும்பம், இங்கிலாந்து தேசத்தில் வான் குடும்பம் உதாரணங்கள். பொதுவாக சில அம்சங்கள் அவர்களிடம் உண்டு. சாதாரண கிறீஸ்துவ ஜீவியத்தைவிட ஓர் மேலான

விதமாய் ஆண்டவர்பால் பற்று. சுவிசேஷத்தில் குறிப்பிட்ட வாலிபனிடம் இது இருந்தது. அவர்களிடத்தில் சாவான பாவத்தின் மட்டில் வெறுப்பு — விழுந்துவிடுவோம் என்ற பயம். அற்பப் பாவங்களை வேணும் என்று செய்யாமலிருக்க பிரயாசை. துஷ்டர்கள் சகவாசத்தை விலக்கி நடத்தல், பரிசுத்த கற்பு என்ற புண்ணியத்தைக் காபந்து பண்ண கவனம் ; படிப்பில் ஊக்கம் கரிசனை — தேக சௌக்கியம், அடிக்கடி திவ்விய பூசை காணவும், தேவ நற்கருணை வாங்கவும் உண்மையான ஆவல், தேவதாயாரின் பேரில் பக்தி, பிறருக்கு உதவி செய்யவும் ஆத்துமாக்களை இரட்சிக்கவும் அவா.

தேவ அழைத்தலுள்ளவர்கள் யார் என்று கண்டு பிடிக்க நாம் விழிப்பாயிருக்கவேண்டும். அவர்களுக்குத் தக்க வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும். எப்படி இல்லற வாழ்வில் சில விவேகமற்ற பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளின் விருப்பத்திற்கு மாறாக தங்கள் பிரியப்படி பிள்ளைகளுக்கு வேண்டாத கலியாணத்தை முடித்து அவர்களின் வாழ்க்கையையே பாழ்படுத்துகின்றனரோ அது போல ஏறக்குறைய சில விவேகமற்ற ஞான அதிகாரிகள், துறவிகள், கன்னியர் சில வாலிபரை தேவ அழைத்தலே இல்லாமலிருக்கும்போது ஏதாவது ஓர் ஆசையைக் காட்டி சபைகளில் சேர வைப்பது மகா தவறான செயல். இது சபையையே பெரிய கேட்டிற்கு இழுத்துச் செல்லும். இவ்வாறு தேவ அழைத்தலில்லாதவர்களைத் தந்திரமான வழிகளால் இழுப்பது பெரிய சதி. ஏனெனில் சபைக்கே கேட்டை தேடிக்கொடுக்கின்றனர்.

இதற்கு மாறாக தேவ அழைத்தலுள்ளவர்கள் என்று தெரிந்தால் அதற்கு வேண்டிய உதவி செய்வதும் உற்சாகப்படுத்துவதும் நியாயம். தேவ அழைத்தல் எந்தப் பிராயத்தில் தோன்றுகிறது என்று ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்காவில் ஒரு குருவானவர் 4000 கன்னியர்களுக்குக் கேள்வி கேட்டு பதில் கேட்டிருந்தார். அதன் முடிவு :

நூற்றுக்கு 9 பேர் 12 வயதில் தேவ அழைத்தலுள்ளவர்களாகவும், நூற்றுக்கு 31 பேர் 13 வயதிலிருந்து 15 வயது வரையுள்ளவர்களென்றும், நூற்றுக்கு 44 பேர் 16 வயதிலிருந்து 20 வயது வரை என்றும், நூற்றுக்கு 16 பேர் 20-21 வயதில் என்றும் தீர்மானித்தனர். இந்த ஆராய்ச்சியின்படி 16 வயதிலிருந்து 20 வயது வரை முக்கியமான பருவம் என்று நாம் அறிகிறோம். இந்த வயதில் தேவ அழைத்தலைப்பற்றி எடுத்துச் சொல்லலாம். நேசம் பொங்கும் இந்த பருவத்தில் யேசுவின் பேரில் அன்பை ஊட்டி வளர்க்க ஏற்ற காலம்.

இந்தச் சபை ஆரம்பிக்கும்போது 7 பேர் இருந்தனர். இப்போது 70 தடவை 7 பேராக ஏறக்குறைய 500 பேராக பெருகியது சபையின் வளர்ச்சிக்கு சாட்சி. எப்படி இவ்வளவு தூரம் பலுகிப் பெருகியது? அந்த 7 பேரும் சரியான அஸ்திவாரத்தில் கட்டப்பட்டனர். தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிதல், தரித்திரம் இவைகளில் அவர்கள் சரியானபடி நிலைநாட்டப்பட்ட அஸ்திவாரமாயிருந்தனர். அவர்களை கண்ணின் கருவிழி போல் பாதுகாத்து உருவாக்கிய புண்ணிய குரு காலஞ்சென்ற சங். அகுஸ்தீன் பெரைரா சுவாமி அவர்களிடமும் மிகச் சிறந்த புண்ணியங்கள் மிளிர்ந்தன. இவர்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் இருந்தனர்? ஆம். ஞானிகளை நாணச்செய்ய சர்வேசுரன் உலகத்தின் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமானவைகளை நாணச்செய்ய சர்வேசுரன் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.

சபையின் ஆரம்பம் இவ்வாறு தாழ்ந்த முறையில் ஆரம்பித்து கடவுள் ஆசீர்வாதத்தால் நாளும் வளர்ச்சி அடைந்து இன்று ஏறக்குறைய 600 அங்கத்தினர்களைக் கொண்டு காட்சி அளிப்பது மகிழ்ச்சியே. சபையின் வலிமை உண்மையான பெருக்கில் இருக்கின்றது. இந்தப் பொன்னான தங்க ஜூபிலியைக் கண்ட உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன். எல்லா வரங்களையும் அளிக்கும் ஆண்டவருக்கு நன்றி புரிகின்றேன், போற்றுகின்றேன். அவருக்கே மகிமை! அவருக்கே பெருமை!!

சுவாமி J. L. மோத்தா, சே. ச.

முடிவு வரையில் முயன்று நிலைப்பர்
முடிபெறுவர் வான்கணத்து முன். — (மத். 10 : 22)

மூன்றும் நாள்



அன்பரின் முன்னிலையில் ஒரு மணி.



ஆண்டகை தாமஸ் பர்னுந்து அவர்கள் கன்னியர் குழுவிற்கு இன்னுரை வழங்கல்.



பொன்விழா வைபவங்களில்!

இன்னிசை முழக்கிய கன்னியர் குழு.



"லெயோனர்டு மருத்துவ விடுதி" கல் நாட்டு வைபவம்

மேன்மை தங்கிய தாமஸ் பெர்னாந்து ஆண்டகை அவர்களின்

பொன்னுரை

முதன் முதலில் உங்களுக்கு மிகுந்த ஒரு தனி மகிழ்ச்சியோடு என் பெயரால் மட்டுமல்ல, திருமந்திர நகர் மேற்றிராசன மக்கள் அனைவர் பெயராலும், சபையிலுள்ள எல்லோருக்கும் மன மார்ந்த, அன்பு கலந்த, ஆசி நிறைந்த, ஜூபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனி மகிழ்ச்சி என்பதற்குக் காரணம், உங்கள் சபையைத் தோற்றுவித்த மகான் தூத்துக்குடியிலே தோன்றியவர். இது எங்களுக்குப் பெரும் மதிப்பும், மிகுந்த பெருமையும் ஆகும். ஆதலால் உங்களோடு சேர்ந்து நானும், என்னோடு சேர்ந்து நீங்களும் ஆண்டவனில் இம்மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்கிறோம்.

இப்போது சொற்பொழிவாளர்கள் அரிய கருத்துக்களை உங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். நான் அதை மீண்டும் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் நீங்கள் படித்த ஆசிரியைகள். ஆனால் ஒரே ஒரு காரியம்தான் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் எல்லோரும் சொன்னது போல், இத்தனை நல்ல பண்பாடுள்ள ஒரு சேவை, ஆண்டவருடைய இராச்சியத்துக்காகவும், அவருடைய அதிமிகத் தோத்திரத்துக்காகவும், நிறைவேறவேண்டுமானால், தொடக்க முதல் கடைசி வரை நீங்கள் நல்ல கன்னியராக இருந்து தீர வேண்டும். அது தவறினால், மற்றச் சேவைகளெல்லாம் எவ்வளவு தூரம் நிறைவேறும், எவ்வளவு தூரம் பயன்படுமென்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கன்னியராக இருக்கவேண்டுமேயானால், அதற்கு அடிப்படையாக நீங்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

இறைவனது போக்கு தனியொரு போக்கு மட்டுமல்ல, நிரந்தரமான போக்குங்கூட. அருள் இயல்பை அழிக்காது. படைப்புக்களின் இயல்பிலே, இறைவன் என்னென்ன நல்ல காரியங்களை அமைத்து வைத்திருக்கிறாரோ, அவைகளைத் தன்னுடைய அருள் கொண்டு அவர் உயர்த்துவார் அல்லாமல் அழிக்கிறதில்லை. ஆகையினாலே, அருள் சேவையிலே ஈடுபட்டு, அருள் வாழ்விலே திளைத்து வருகின்ற உங்களுக்கு, இறைவன் எதையெல்லாம் இயல்பாகவே நற்குணங்களாகத் தந்திருக்கின்றாரோ, அவைகளை அவருடைய அருளாலே பாதுகாத்து அவரில், அவருக்காக, நீங்கள் வளர்த்துக் கொண்டு வரவேண்டும்.

இப்போது, மக்களுடைய மனோதத்துவங்களை உலக முழுவதும் ஆராய்ந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், தமிழர்கள் மக்களுடைய உள்ள நிலையை ஆராய்ந்தறிந்து கூறினதுபோல், வேறு எந்த நாட்டிலும் கூறினதில்லை. மற்றவர்களெல்லாம் Scientific Method அல்லது விஞ்ஞான முறையென்று அழைப்பார்களே, அந்த ஆராய்ச்சி முறையில் அப்படி இப்படி என்று புறப்பொருட்களை எப்படி ஆராய்ந்திருக்கின்றார்களோ, அது போல மனித உள்ளத்தை ஓர் அளவு ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். ஆனால் அது பற்றாது. புறப்பொருட்கள் அத்தனையும் ஒன்றுசேர்த்தாலும் ஒரு சிறு குழந்தைக்கு ஈடாகாது. மனித உள்ளம் படைத்த ஒரு சிறு குழந்தையின் நிலைமை, புறத்திலிருக்கும் பொருள் அத்தனைக்கும் முற்றிலுமே மாறானது. ஆகையினால், புறப்பொருட்களை எல்லாம்

ஆய்ந்து அறிய முடியாது. எனவேதான் சொன்னேன் : தமிழன் தனியொரு முறையோடு மக்களுடைய உள்ளங்களை, இன்று நேற்றல்ல, எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆய்ந்தாய்ந்து பார்த்துக் கூறியிருக்கிறான். இது உண்மையா இல்லையா என்பதற்கு, மனித வாழ்க்கையை அகம் புறம் என்று அவன் வகுத்துவிட்டது ஓர் சிறந்த சான்றாகும். இதை எந்த நாட்டிலும் நீங்கள் பார்க்கமுடியாது. அப்படியானால் ஒவ்வொருவருடைய உள்ளத்தின் நிலைமையானது, ஒன்றில் அகத்தில் இயங்குவதாக இருக்கவேண்டும் அல்லது புறத்தில் இயங்கவேண்டும்.

அந்த முறையிலே புறத்திலே அவனுடைய வீரமும், அகத்திலே அன்பும் வகுத்துக் கூறப்படுகின்றன. அகம் என்பதற்கு அடிப்படையாகப் பெண்ணைத்தான் அமைக்கின்றான் தமிழன். அகத்தை ஆளும் ஆத்தாள் நிலைமைதான் பெண்ணின் நிறைவான நிலை. இது கன்னியராகிய உங்களுடைய வாழ்க்கையிலும் இருந்துதான் ஆகவேண்டும். நீங்கள் என்று பெண்கள் இல்லை என்று ஆகிவிட்டதோ அன்று நீங்கள் கன்னியர்களுமில்லை, ஒன்றுமே இல்லை. உடலமைப்பால் நீங்கள் பெண்மையைப் பெற்றிருந்தாலும், தாய்மையின் அருங்குணங்கள் உங்களிடமில்லாமல் போனால் பெண்களாகப் பிறந்ததன் பயன் யாது? ஆகையினால் உங்களுடைய வாழ்விலே அகமென்பதே சிறந்த இடம் பெறவேண்டும். இன்றைக்குக்கூட உங்களைக் கன்னியர்களென்றோ, சகோதரிகளென்றோ நாம் பலவாறு அழைத்தபோதிலும், எப்படியோ தன்னுடைய ஒரு சிறந்த சாமர்த்தியத்தினாலே தமிழன் உங்களை எல்லாம் "**கன்னித் தாய்மார்கள்**" என்று கூப்பிடுகிறான். இது எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. கன்னித் தாய்மார்கள் என்பது உங்கள் லட்சியம் அத்தனையும் குறிப்பிடும். கத்தோலிக்கர் நமக்குக் கன்னித் தாய் என்று சொல்லும்போது அதற்கு மிகவும் சிறந்த எடுத்துக்காட்டு, ஒப்பில்லாத எடுத்துக்காட்டு யார்? கன்னித்தாய்—பரிசுத்த கன்னிமரியாள் தான் என்பதை நாம் உணர்கிறோம். ஆனால் நமது இந்து சகோதரர்கள் கன்னித்தாய் என்று உங்களை அழைக்கும்போது பரிசுத்த கன்னிமரியைப்போன்ற வர்களென்று நினைப்பதில்லை. அவர்கள் தாய் என்று சொல்லும்போது பொதுவாக பெண் என்ற பொருளில் கூறுகிறார்கள். நீங்களோ உண்மையாகவே கன்னியர்கள்; உண்மையாகவே தாய்மார்கள். இந்த இரண்டும் உங்கள் வாழ்விலும் உங்கள் செயலிலும் பிரதிபலிக்க நீங்கள் நடந்துகொண்டால், உலகத்திற்கு நீங்கள் ஆற்றவேண்டிய நன்மை அத்தனையும் தானே வருமென்று நான் நம்புகிறேன். இவை இரண்டும் அகத்தில்தான் இருக்கின்றன. புறத்திலில்லை. ஆனால் புறத்திற்கு அடிப்படை அகம். இந்த உண்மையைத்தான் சொல்வார்கள்: 'தொட்டிலாட்டுகின்ற கரமே உலகாளும் கரம்' என்று. தொட்டிலாட்டுவது அகம், உலகாள்வது புறம். இவ்விதமாக, பெண்களுக்கே தனி ஒரு பண்பாயிருக்கின்ற அகத்தை ஆளுகின்ற கடமை, அகத்தை ஆளுகின்ற உரிமையோடு கன்னியராம் நீங்கள் ஆண்டவருடைய இராச்சியத்திலே வாழ்ந்து செயலாற்றுவீர்களானால் சமுதாயம் முழுவதுமே மிகுந்த பயனடைந்து இந்த உலகமும் பரலோகமும் ஒன்றுசேர்கின்ற அந்த அற்புதத்தை நாம் காணலாம்.

இந்த அகம் என்ற வாழ்க்கைக்கு உயிர்நாடி அன்பு. நான் பயன்படுத்துகின்ற சொல்லை, தவறாகப் புரிந்துகொள்ளாமல் நல்ல கருத்துடன் கண்டுபிடித்துக்கொள்ளவேண்டும். அகத்திற்கு, அன்பு — அதாவது காதல்தான் அடிப்படை. பெண் காதலுக்கே உண்டானவள். ஆகையால், கன்னியர் வாழ்விலும், ஏதோ ஒருவகையான காதல்தான் அடிப்படைச் சக்தியாயிருந்து சகலத்தையும் இயக்குகின்றது. அதை நிராகரித்து, துறவு துறவு என்போமானால், அத்துறவு அர்த்தமில்லாத ஒரு காரியமாகும். காதலை அடிப்படையாகக் கொண்ட துறவறமே உங்கள் துறவு. அதை நீங்கள் உணர்வீர்களேயானால் வேறு யாரும் உங்களை அசைக்க முடியாத ஓர் சக்தியை நீங்கள் பெறுகின்றீர்கள். அந்தக் காதல் எது? உலகத்திலே தோன்றி மறையும் மனிதன் அல்ல, நித்தியத்திற்கும் அரசராக சர்வ மகிமையோடு விளங்குகின்ற கிறீஸ்துநாதர் மட்டில் உள்ள ஓர் காதல். அக்காதலில் வாழ்கின்ற அகவாழ்வே முதன் முதல் உங்களுக்குத் தேவைப் படுகின்றது. ஏற்கனவே தாவீது அரசன் தன்

பரனை முழுமனப் பற்றுய்நே சித்தல்
திருமறைக் காதி தெரி, — (மத். 22 : 37-38)

சங்கீதத்திலே சொன்னர் : "மகளே, காது கொடுத்து நன்ருக உற்றுக்கேள். அரசன் உனது அழகைக் கண்டு மயங்கி உன்னைக் காதலிக்கிருன். ஆகையினுலே உன்னுடைய தந்தையின் இல்லத்தை மறந்துவிட்டு வந்துவிடு." கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உண்டாகின்ற உறவைப் பற்றி, தாவீதரசன் சொன்ன அந்த வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையில் முற்றும் நிறைவேறுகின்றன. ஆகவே முதன் முதலில் நீங்கள் கிறீஸ்துவுக்கே முற்றிலும் அன்பினுல் அர்ப்பணிக்கப்பட்டவர்கள். அந்த அகவாழ்வு அடிப்படையாக உங்களிடத்திலே இருக்குமேயானுல், மற்றவை அனைத்தும் தானே தழைக்குமென நான் நம்புகிறேன். "கிறீஸ்துவுக்கே நான் சொந்தம்; வேறு யாருக்குமே இல்லை." தன்னையே அர்ப்பணிக்கும் அந்த அகநிலைமை, உங்களிடத்திலே இருக்குமேயானுல், அதனுடைய அடிப்படையிலே புறத்திற்கும் நீங்கள் பயனளிக்கின்ற நல்ல கன்னியர்களாயிருப்பீர்கள்.

உங்கள் வாழ்வும், வெளியே தோன்றி வீரச் செயல்களைப் புரிவது அன்று. நமது நாட்டில் வரலாற்றில் காண்பதுபோல் சந்தர்ப்பமும் அவசியமும் ஏற்பட்டபோது, நாட்டைக் காக்க வீட்டிலே அடைபட்டிருந்த பெண்ணுங்கூட வெளியேறி வாள்வீசிப் போரிட்டிருக்கின்ருள். சத்திய திருச்சபையிலும் வேத கலாபனை தோன்றின நாடுகளிலே ஒன்றுமே தெரியாத கன்னியர்கள் என்று மடங்களில் அடைபட்டிருந்தவர்கள், புறத்திலே தோன்றி ஆற்றிய வீரச் செயல்களை அறிந்து, நாம் பெருமை கொள்கிறோம். விதிவிலக்கான அந்தச் சந்தர்ப்பங்களை நீக்கி, புறத்திலே நடக்க வேண்டிய நல்ல காரியங்களுக்கு நீங்கள் என்னதான் செய்வீர்களென்ருல், எப்படி ஒருத்தி தன்னுடைய பிள்ளைகளை வீட்டிலே கண்காணித்து வளர்த்து வருகின்ருளோ, அப்படியே உங்கள் கண்காணிப்பில் வைக்கப்படுகின்ற சிறுவர், சிறுமிகளை நீங்கள் தாய்க்குரிய அன்போடு —யாருக்காக நீங்கள் வாழ்கின்றீர்கள், யாருடையவர்கள் அந்த மக்கள்; யாருக்காக அவர்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்பதையெல்லாம் உள்ளத்திலே உணர்ந்து—உங்களைத் தியாகம் பண்ணி அவர்களுக்கு அறிவை ஊட்ட வேண்டும். நீங்கள் பள்ளிகளிலே அவர்களுக்கு அளிக்கும் அறிவுதான் நாளைக்கு நாட்டுச் சேவைக்கு மட்டுமல்ல, நமது திருமறைச் சேவைக்குங்கூட, புறத்திலே செய்ய வேண்டிய வீரச் செயல்களுக்கு அவர்களை உருவாக்குகின்றது. அப்படி அவர்களை வீரர்களாய் உருவாக்கும் பொறுப்பு உங்கள் கையில் விடப்பட்டிருக்கிறது.

இவ்விதமாய் இயல்பிலே இறைவன், உங்களுக்குக் கொடுத்த பண்பு, குணம், சக்தி முறை அத்தனையும் நீங்கள் பயன்படுத்தி, மற்றவர்கள், உலகத்திலே, உலக வாழ்விற்காக—உலகத்திலே இருக்கும் ஓர் ஆடவனுக்காக என்று இருப்பதை மாற்றி, கிறீஸ்துவுக்காக, கிறீஸ்துவிலே, அவருடைய மக்களுக்காக என்ற முற்றிலும் வேருன ஒரு வகையை மாத்திரம் கைக்கொள்ளும்பொழுது, நீங்கள்தான் உலகத்திற்கு மிகுந்த நன்மை பயக்கின்ற பெண்மணிகளாகத் திகழ்கின்றீர்கள். இதை நீங்கள் உணரவேண்டுமென நான் மிகவே ஆசிக்கிறேன்.

"நான் கிறீஸ்துவுக்குச் சொந்தம். கிறீஸ்துவுக்காகவே, அவருடைய மக்களை நான் வளர்க்கின்றேன், உருவாக்குகின்றேன்." அவரைத் தவிர வேறு எதுவும் கண்முன் இல்லாத வாழ்வே உங்களுடைய சிறந்த வாழ்வு.

கிறீஸ்துநாதர் உலகத்தை இரட்சிப்பதற்காக வந்தார், தம்முடைய சிலுவை மரணத்தினுல் அதை இரட்சித்தார். அதைப் பரம பிதாவினிடம் 'எனக்கு ஓர் உடலைத் தந்தீர்; உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற இதோ வந்திருக்கிறேன்" என்று உரைத்தார். ஆனுல் மக்களைப் பார்த்து அவர் பேசும்போது என்ன சொன்னர்? "எளியவர்களுக்குப் போதிக்க என்னை அனுப்பினுர்" என்ருர். அதை அவர் செய்தார். எப்படிச் செய்தார்? பலவகையான தொழில் புரிந்து அவர் செய்தார். கிறீஸ்துநாதர் மக்களின் ஆன்ம ஈடேற்ற அலுவலில் ஈடுபட்டபோது, எதெதைச் செய்தாரோ, அவைகளை—அவைகளை மட்டுமே—சத்திய திருச்சபையும்' இன்று செய்துவருகிறது. கிறீஸ்துநாதர் செய்தவைகளுக்கு வெளியே கிஞ்சித்தேனும் சத்திய திருச்சபை செய்கிறதில்லை. ஆனுல் என்ன? கிறீஸ்துநாதரிடத்திலே வித்தாய் இருந்த ஒரு

கன்னத் தடித்தாரைக் காயா மறுகன்னம்
உன்னிக் காண்பித்த உயர்பு. — (மத். 5 : 39)

காரியத்தை, சத்திய திருச்சபையானது மலர்ந்த நிலையில் செய்து வருகிறது.

கிறீஸ்துவிடத்தில் ஸ்தாபன ரீதி அல்லது முறை, வித்தாய் இருந்தது. கிறீஸ்து ஒரு தலைவன் மட்டு மல்ல. அவர் ஒரு சமூகம். கோடிக்கோடி மக்கள் கொண்ட மனுக்குலம் முழுவதற்கும் 'ஆதாம்' என்றால் எப்படி பொருந்துமோ, அதுபோலவே கிறீஸ்தவர்களை கிறீஸ்து என்று அழைத்தல் சரி. அவர் தலைவர், நாம் உறுப்பினர் என்பது மட்டுமல்ல, அவர்தான் கிறீஸ்துவர்கள் என்றாலும் தகும். இந்த ஒருமைப்பாட்டை நீங்கள் சிந்தித்து அறிந்து கொள்ளவேண்டும். நாம் பார்க்கும் உலகத்திலுள்ள மக்கள் அத்தனைபேரையும் தனித்தனி நபர்களாகக் காண்கிறோம். அவர்கள் எல்லோருக்கும் பொது வான மனித சுபாவத்தை, கருதல் அளவையால் அறிகிறோம். ஆனால் கடவுள் மானிடரைப் பார்க் கும்போது ஆதாமையும், பாவக் கறைபிடித்த மாம்சத்தையும காண்கிறார். அவன் வந்தாலும் சரி இவன் வந்தாலும் சரி, இதோ ஆதாம் வருகி றான் அதோ ஆதாம் வருகிறான் என்று கூறக் கூடிய நிலைமையும் இருக்கிறது. ஏனெனில் அத்தனைபேருமே ஆதாமின் வழித் தோன்றியவர் கள். கடவுள் கண்முன் ஆதாம் என்றாலும் சரி, மானிடன் அல்லது மனுக்குலம் என்றாலும் சரி தான். ஆதாம் வித்து, மானிட சந்ததிகள் வளர்ந்து விசாலித்த் விருட்சம். அது போலவே இறைவனுடைய இராச்சியத்திலே சேர்ந்துவிட்ட கிறீஸ்துவர்கள் எல்லோருமே கிறீஸ்துதான். மனுக்குலம் ஒரு பெரிய சமுதா யம். இந்த மனுக்குல சமுதாயம் ஆதாமிலே வித் தாக இருந்து, வளர்ந்து, விரிந்து மலருகின்றது. அதுபோலவே, கத்தோலிக்கத் திருச்சபையும் ஓர் சமுதாயம். அது கிறீஸ்துவில் வித்தாய் இருந் தது; வளர்ந்து, விரிந்து, மலர்ந்துகொண்டே போகிறது. ஆகவே அவர் செய்த ஆன்மீக அலு வல் சத்திய திருச்சபையில் வளர்ந்து விரிந்து கொண்டே போகிறது. அவர் செய்த் அதே இரட்சணியத் தொழிலை, கத்தோலிக்கத் திருச் சபை சமுதாயம் அல்லது ஸ்தாபன முறையில் தொடாந்து செய்து வருகிறது.

கிறீஸ்துநாதர் இரட்சணிய அலுவல் புரிந்த போது முதலில் கடவுளின் இராச்சியத்தைப் போதித்தார். அதுதான் முக்கியமான அலுவல். அதற்கு பக்கபலமாக, அதற்குத் துணையாக நோயா ளிகளைக் குணமாக்கினார்; பசித்தவர்களுக்குப் போஜனம் கொடுத்தார்; தம் அலுவலைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஆட்களைச் சேர்த் தார். அதே காரியங்களையே சத்திய திருச்சபை யும் செய்து வருகிறது. ஆனால் ஸ்தாபன முறை யில் செய்து வருகிறது.

உண்மையைப் போதிப்பதற்காக அநேக நிலையங் களை நிறுவி நடத்துகிறது சத்திய திருச்சபை. பள்ளிகள், கல்லூரிகள், அனாதை மடங்கள் அத்த னையும் எதற்காக? கிறீஸ்துவுடைய அந்தத் தொழிலைச் செய்வதற்காக; அதாவது உண்மை யைப் போதிப்பதற்கு. தனியொரு ஆளோ, உங் களைப்போன்ற ஒரு சபையோ, "இது எனது தொழில், இது எங்கள் ஸ்தாபனம்" என்று மட்டும் நினைத்தால் போச்சு. ஆன்ம ஈடேற்ற சேவை ஆகாது. நாம் செய்யும் ஊழியம், நாம் நடத்தும் ஸ்தாபனங்கள், நமது கல்வி நிலையங்கள் அத்தனை யும் திருச்சபையின் இரட்சணிய அலுவல். இதை யார் உணர்கிறார்களோ, அவர்கள்தான் கிறீஸ்து நாதரின் இரட்சணிய அலுவலிலே பங்கு கொள்கி றார்கள். செயல் பெரிதல்ல, அதன் தன்மைதான் பெரிது.

கிறீஸ்து நோயாளிகளைக் குணப்படுத்தினார். இன்றைக்கு அங்கு, இங்கு என்று எத்தனை மருத் துவ நிலையங்களை சத்திய திருச்சபை வைத்து நடத்துகிறது! அவைகளில் வேலை செய்யும் சகோ தரிகள் 'இதை எங்கள் சபை நடத்துகிறது, அதை உங்கள் சபை செய்கிறதென்றோ, அல்லது நான் செய்கிறேன், அவள் செய்கிறாள்' என்றோ சொன் னால் அதில் பொருட் சிலாக்கியமில்லை. ஆனால் கடவுள் முன்னிலையிலே, அதற்கு ஆன்ம இரட் சணிய அலுவலென்ற தனிப் பண்பு ஏற்படவேண்டு மானால், 'அந்தச் சபை செய்கிறது, இச்சபை செய்கி றது, அந்த அம்மா, இந்த அம்மா' என்ற பிரிவி னைக்கே இடமில்லை. யாவும் திருச்சபையின் அலு வல். கிறீஸ்து செய்துவந்த அலுவலின் தொடர்ச்சி,

தேவனுக்குத் தொண்டு செய்பவர் துன்பமுற
மேவப் பொறையிலேன்டு மே. — (ஞானி சாலமோன்)

மேலும் தேவ ஊழியத்திற்கு ஆட்களைத் தயாரிப்பதற்காக குருமடங்கள், நவசந்நியாசி மடங்கள் முதலியன இருக்கின்றன. இந்த மடங்களில் நம் இளைஞருக்குப் பயிற்சியளிக்கிறது திருச்சபையல்லவா? எவ்வாறு கிறீஸ்து, வித்து அல்லது ஊற்றாய் இருந்தார்? தம்மிலும், தமது செயலிலும் தம்முடைய அருள் நிறைவில் எத்தனையோ பேருக்கு பங்கு அளித்து வருகிறார். ஆதலால் அருள்பெற்ற நம்மில் அவர் வளருகின்றார். அது மட்டுமல்ல, தான் செய்த ஆன்மீக அலுவலை கிஞ்சித்தேனும் அதன் தன்மையும், நோக்கமும் மாறாமலே ஸ்தாபன முறை என்ற ஒரே ஒரு வகையை மாத்திரம் சேர்த்து, தமது திருச்சபைக்கு அளித்தார். இதை நீங்கள் அறிவீர்களேயானால், "நான் யாருக்கு வாழ்க்கைப்பட்டு என்னை அர்ப்பணித்திருக்கிறேனோ, அவரின் அதே செயலை, இன்று நான் செய்யக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கின்றதே! இதற்குமேல் எனக்கு என்ன வேண்டும்? என்னுடைய உடல், பொருள் ஆவி அனைத்தும், அவருக்காக, அவருடைய ஊழியத்திற்காக, நான் ஏன்தான் தரக்கூடாது?" என்று உணர்வீர்கள். சோர்ந்து போகவேண்டிய ஒரு நிலையில் இருக்கும்போதுகூட, "இந்தா வேலை இருக்குது" என்று காதில் விழுந்ததும் கண்ணைத் திறந்து உடனே ஓர் ஆர்வத்துடன் அதைச் செய்யக்கூடிய தூண்டுதல் இல்லாமலா போகும்!

அன்பார்ந்த சகோதரிகளே! அதனால்தான் நீங்கள் எந்நாளுமே நல்ல கன்னியர்களாய் இருக்க வேண்டும். கன்னியர்களாய் இருப்பதற்கு நீங்கள் பெண்களாகவும் இருக்க வேண்டும். இதற்கு அடிப்படை நிறைவேறட்டும். கிறீஸ்து, புறத்திலே எங்களைக்கொண்டு—மேற்றிராணிமார் குருக்களைக் கொண்டு எவ்வளவோ போர்புரிகின்றார். நீங்கள் இருக்கின்ற மடங்கள் நீங்கள் கற்றுக்கொடுக்கும் பள்ளிகளாகின்ற அகத்திலே, இன்புற்றிருக்கக்கூடிய ஒரு நல்ல நிலையை அவர் காண வேண்டும். எங்களோடு சேர்ந்து போராடுகிறார் அவர். ஆனால் "வருங்காலத்து வீரர்கள் என்னுடைய மக்கள் எவ்வாறு இருக்கிறார்கள்" என்று காண விழைந்தால், அவர் எங்கு செல்லவேண்டும்? போரிலேயோ? போர் முனையிலேயோ? போர்க்களத்திலேயோ? அங்கே வளர்ந்துவிட்ட வாலிபர்கள், மீசை வளர்ந்தவர்கள், போராடிக்கொண்டு இருக்கிறார்கள். குருக்களின் அப்போஸ்தலத்துவமும், அதற்குப் பக்கபலமான இல்லற அப்போஸ்தலத்துவமும் நடக்கின்றன. ஒரு சில இல்லறப் பெண்களும்— ஊரிலே கலகம் நடக்கும்போது, கல்லெறிவதற்கு கல் எடுத்துக் கொடுப்பதுபோல் தங்களுக்குரிய ஒரு வகையிலே புறத்திலே சேவை புரிகின்றார்கள். ஆனால், எனது சின்னஞ்சிறு குழந்தைகள் எப்படி இருக்கின்றார்கள்? என்ன பயிற்சி பெறுகிறார்கள் என்று கிறீஸ்து பார்க்க வேண்டுமானால், உங்கள் இல்லத்திற்குத்தான் வரவேண்டும், அங்கே அவர் அன்பைக் காண வேண்டும்; அமைதியைக் காணவேண்டும்; ஒற்றுமையைக் காணவேண்டும்; தன்னுடைய மக்கள் நன்றாக வளர்த்துவிடப்படுகின்றதைக் காணவேண்டும். அல்லது அவர் எவ்வளவு மனவருத்தப்படுவார்? இந்தச் சபையினரைக் கண்காணிக்கும்பொழுது, தனது நேசபத்தினிகள் எவ்வளவு அன்பு, அமைதியோடு வாழ்கின்றார்கள்; சின்னஞ்சிறு குழந்தைகளை எப்படி வளர்த்துவிடுகின்றார்கள் என்பதை அவர் கண்டு மகிழும்படியான நிலைமை உங்கள் சபையாலும், உங்கள் ஒவ்வொருவராலும் ஏற்பட வேண்டுமென்று நான் ஆசிக்கிறேன்.

அன்பார்ந்த சகோதரிகளே! உங்கள் சபை 50 ஆண்டுகள் நல்ல சேவை செய்து சிறப்புற்றிருக்கிறது. மேன்மேலும் ஆண்டவனுக்கு உகந்த நல்லதோர் சபையாக வளர்ந்து, அதிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் அவருக்கு உகந்த நல்ல பத்தினிகளாக வாழ்ந்து, அவருக்காக சேவை புரிவதால் கடவுளின் இராச்சியம், கிறீஸ்துவின் அரசு, தமிழ்நாட்டிலே நாளுக்குநாள் அதிகமாய்ப் பரவி, அநேக மக்களை ஆன்ம ஈடேற்றத்திற்குக் கொண்டுசேர்க்கும் ஓர் நல்ல சபையாகத் திகழும்படி, ஆண்டவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று அவரை நான் உங்கள் சார்பாக மன்றாடி, இக்கூட்டத்தில் தலைமை தாங்கி, என் உள்ளத்தில் எழுந்த ஒரு சில கருத்துக்களை உங்களுக்குப் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பை, அளித்த உங்களெல்லொருக்கும் மனமார்ந்த நன்றிகூறி நிறுத்திக் கொள்கிறேன். ★

கற்பை யிழத்தலின் கல்லடியாற் சாகமணம்
வற்புற்றாள் சூசனுள் மாது. — (தானியேல்)

பாண்டியம்பதியில் பகலொருமூன்று

ஆண்டுகள் ஐம்பது கண்ட அமல அவைக் கன்னியர், 15-5-61 முதல் 17-5-61 முடிய மூன்று தினங்கள், பாண்டியர் கோநகரமாகிய இம்மதுரைப்பதியில் கொண்டாடிய பொன்விழாவின்போது நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள்.

பிறைமதியெனவே தினமும் வளர்ந்துவர, நலன்கள் பல அளித்து, கண்ணின் இமைபோல் காத்துவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொன்னுளாக **முதல் நாள்** கொண்டாடப் பெற்றது.

அந்நாள், காலை 6 மணி அளவில் மஞ்சள் உடையணிந்த மாவீரர்களின் இன்னிபங்கள் முன்னுல் முழக்கஞ்செய்ய, மதுரை அதிமேற்றிராணியார் மிக. வந். J. P. லெயோனுர்டு சே. ச. ஆண்டவரவர்கள், உத்தம குருக்கள், பக்தி வளர் கன்னியர், உறுதியுளம் படைத்த விசுவாசிகள் பன்னூறுயிரவர் புடைசூழ்ந்துவர அழைத்துச் செல்லப்பெற்று, குயவர்பாளையத்து பெரிய மடத்தில் விழாப் பந்தலில் மோட்சவீடென அலங்கரிக்கப்பட்டிருந்த பீடத்தை அணுகினர். பின்பு போந்திப்பிக்கல் பாடல் பூசையானது ஆண்டகையவர்களால் பக்தி வழிபாடுகளோடு நடைபெற்றது. கன்னியர் பாடல் வானவர் கீதமென இனிமை சொட்டியது. எல்லோரும் பக்தியுடன் பலி கண்டு பரவசமுற்றனர். இறுதியில் பாப்பரசரின் பரிபூரண பலனுள்ள ஆசீரும் கிடைத்தது.

7 மணிக்கு அமல அவைக் கன்னியர் சபைக் கொடியானது ஆண்டகையவர்களால் ஏற்றுவிக்கப்பெற்று, அழகிய கம்பத்தின் உச்சியில் பறந்தது. இப்பொன்விழாக் காட்சியை மண்ணவரேயன்றி விண்ணவரும் காண விரைந்து வாரீர் என அழைப்பதுபோல அசைந்தாடிக் கொண்டிருந்தது. கம்பத்தைச் சுற்றி சந்தோஷ தேவரகசியத்தைக் குறிக்கும் வகையில் சிறுவர் சிறுமியர் அணிபூண்டு நின்றனர். அடுத்தபடியாக, ஞானத்தை உபதேசிக்கும் பொருள்கள் நிறைந்த காட்சிசாலைக்குச் செல்வோம்.

அக்காட்சியின் நுழைவாயிலில், செந்தாமரை மொட்டொன்று உயர்ந்தோங்கி நிமிர்ந்து நின்றது. ஆண்டகையவர்களின் நீண்ட கமலக் கையானது அத்தாமரை மொட்டில் பட்ட உடனே, அவ்வழகிய மொட்டானது பகலவனைக் கண்ட செந்தாமரையென மலர்ந்து விளங்க, விமலனை ஈன்ற அமல அன்னை புன்முறுவலோடு அம்மலர் நடுவே நின்று காட்சி தந்தாள். அக்காட்சி கண்டு மகிழ்ந்து உள்ளே சென்றோம். மதிநுட்பம் படைத்த நம் கன்னியர் பணிபுரியும் 52 மடங்களையும், அவர்கள் ஆற்றும் திறம்பட்ட பணிகளையும் கண்முன் காண்பதுபோல் ஏக காலத்தில் கண்டுகளித்தோம்.

அடுத்தபடியாக, நீதிநாயகன் எனப் புகழப்படும் வேதநாயகன் வளர்த்த சித்த வைத்தியத்தின் சிறப்புற்ற பகுதிகளைக் கண்டோம். சித்த வைத்தியத்தில் சிறந்த சித்தர்கள்கூட இக் கன்னியர்களின் வைத்திய முறைகளைக்கண்டால் சற்று அஞ்சுவார்கள் என மதிக்கும்படி, அவர்கள் தயார் செய்து வைத்திருக்கும் மருந்துப் பொருள்களும், விளக்கம் தரும் முறைகளும் எல்லோரையும் பிரமிக்கசெய்கின்றன. அதன் பக்கல் ஓர் மலைக்குகை, அதில் மரியன்னையின் தரிசனம். அம்மலையைச் சூழ்ந்து பல மூலிகைகள் தோன்றும் காட்சிகள், மாதாவின் அருள் பெற்ருல் தீராத நோயும், தேறாத வைத்தியமும் சீராகத் திருந்தும் என்ற உண்மையை விளக்குகின்றன.

தேவனுக்குத் தானஞ் செயுமுனர் சோதரன்
கோவத்தைத் தீர்த்தல் குணம். — (மத். 5 : 23)

பெஸ்கிப் பெரியார், வீரமாமுனிவர் தோண்டாற்றிய பழைய கோவில் எனப்படும் ஜெபமாலைமாதா ஆலயமும், அதன்முன் தோன்றும் பெருமாள் தெப்பக்குளமும் நமக்கு அறிவிக்கும் சரித்திரங்கள் மிகப் பல. அடுத்தபடியாக அகுஸ்தீனுர் குடிசைத் தொழிலகத் திறப்பு, F. X. A. பெரைரா அம்மையார் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. அச்சு இயற்றும் புதிய பொறிகளும், புத்தகம் கட்டும் பாந்த தொழில் நிலையமும் வருங்காலக் கன்னியர்களின் தொழில்திறன்களைக் கண்ணுடிபோல் விளக்குவனவாகும்.

மாலை 5 மணிக்குப் புனித தெரேசாள் மடத்தில், ஷெவாலியர் J. L. P. ரோச் விக்டோரியா அவர்களின் தலைமையின்கீழ், பல அறிஞர்களின் சொற்பொழிவுகள் சிறப்புடன் நடைபெற்றன. இறுதியாக, மதுரை அதிமேற்றிராசன அதிசிரேஷ்டர் மிக. சங். சந்தியாகு சே. ச. சுவாமியவர்களால் திவ்யநற்கருணை ஆசீர் வழங்கப்பெற்று அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பெற்றது. அன்று காலை, 6 மணிக்கு, திருச்சி மேற்றிராணியார் மேன்மை தங்கிய ஜேம்ஸ் மெண்டோன்சா ஆண்டவர் அவர்களால், சபையில் மரித்தோருக்காகவும் மரித்த உபகாரிகளுக்காகவும் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பெற்று, அதன்பின் பாப்பரசர் கொடி ஏற்றுவித்தலும், தொழிற் கல்விப் பொருட்காட்சித் திறப்பும் சிறப்புடன் நடைபெற்றன. கைவன்மை மிக்க கன்னியர்களின் தையல் வேலைப்பாடுகளின் நுட்பங்கள் கண்டோரைத் திகைக்கச் செய்வனவாம்.

பின்பு ஜோசப் ஆல்பெர்ட் தாயார் அவர்கள் தலைமையின்கீழ் குழந்தைகளின் விளையாட்டு விழா ஆரம்பமாயிற்று. நகரிலுள்ள ஐந்து பங்கு மடங்களையும் சார்ந்த பல்வேறு சிறுமியர்கள், சிறுவர்கள் வண்ண உடையணிந்து, ஓடி ஆடிய விளையாட்டுப் போட்டிகள் கண்டோர் கவலை தீர்க்கும் நன்மருந்தாகும். மாலை 5 மணிக்கு ஆண்டகையவர்களின் திவ்யநற்கருணை ஆசீரோடு, மாவட்ட நீதிபதி உயர்திரு. சீத்தாராமராவ் B. A., B. L. அவர்கள் தலைமை தாங்க, பல அறிஞர்களின் சொற்பொழிவுகளோடு, "அமலோற்பவியின் அன்பு வழியில்" என்னும் நாடகம் பெரு மழை பொழிந்தும் பிழையுறாது, பொது மக்களால் கண்டு களிகூற நடைபெற்றது.

மூன்றும் நாள் காலை 6 மணிக்கு சபையின் உபகாரிகளுக்காகத் தூத்துக்குடி மேற்றிராணியார் மேன்மை தங்கிய தாமஸ் பெர்னந்து ஆண்டவர் அவர்களால் திருப்பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பெற்றது. 9 மணிக்கு ஆண்டகையவர்கள் தலைமையின்கீழ் சபைக் கன்னியர் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திறமை படைத்த மெய்மறைக் குருக்களின் நன்மறை வளர்க்கும் பல்வேறு போதகங்கள் நடைபெற்றன.

பகல் 11 மணிக்கு தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் அவர்களால் திருமணி ஆராதனை பக்தியுடன் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு கோசாகுளம் புதூர் லூர்துநாயகியின் திருத்தலத்திற்கு சபைக் கன்னியரின் திருயாத்திரை செல்லப்பெற்று 5 மணிக்கு அவ்வூரில் 'லெயோனுர்டு மருத்துவ நிலைய'த்தின் கல்நாட்டு விழா மதுரை அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களால் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு அதிமேற்றிராசன ஆலயத்தில் ஆண்டகையவர்கள் திவ்யநற்கருணை ஆசீர்வழங்க மூன்று நாள் நிகழ்ச்சிகளும் மங்கலமாக முற்றுப்பெற்றன. மூன்று தினங்களிலும் திருப்பலி நேரத்திலும், திவ்ய நற்கருணை ஆசீர்வாதத்தின்போதும் கன்னியர்களால் பாடப்பட்ட பாக்கள் அனைவரையும் பரவசப்படுத்தும் நிலையில் இருந்தன. மூன்றும் நாள் புதூர், லூர்து அன்னை திருத்தல (அதிமேற்றிராசன) கோவிலில் பாடப்பட்ட 'என் ஆத்துமம்' (Magnificat) எனும் கீத இசை என்றும் மறக்கவொண்ணு வகையில் செவியிலும், உளத்திலும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இசைத்தட்டில் பதிவுசெய்து அகில உலக வானெலிக்கு அனுப்பின், எம்மொழி பேசுவாரும் இசையிலேயே பொருள் புரிந்து கொள்ளக்கூடிய இன்பம் தேங்கியுளது.

பல்லாண்டு வாழ்க பண்புடன் இச்சபை!

ஜி. விசுவாசம்,
தமிழ்ப் பண்டிதர்,
புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி,
மதுரை.

தேவசிநேகந் திருத்தியுற மற்றெலாம்
மேவ லொழுக்க மிதம்.

இருபெரும் கண்காட்சிகள்

அமல அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட அழகிய மே திங்களின் 15-ம் நாள். அமலவைக் கன்னியர் சபையின் பொன் விழா. பொன் விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்தன இரு பெரும் கண் காட்சிகள். ஒன்று வேதபோதகக் கண்காட்சி. மற்றொன்று கல்விக் கண்காட்சி. அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தவே எழுந்தது இச்சிறு கட்டுரை.

1. வேத போதகக் கண்காட்சி

நாட்டில் கல்விப் போதனையில் எத்தனை மாறுதல்கள்! காலத்திற்கேற்ற முறையில் போதனு முறைகள் மாறிக்கொண்டே வருகின்றன. ஆனால் நம் திரு மறைப் பாடப் போதனையில் மட்டும் பல கத்தோலிக்கப் பள்ளிகளில் அன்றும் இன்றும் அதே மனப்பாடம் செய்யும் முறை ஒன்றே பின் பற்றப்பட்டு வருகிறது. இதனை மாற்றி, குழந்தைகள் சிறு வயதிலிருந்தே திரு மறைப் பாடத்தில் தேர்ச்சி பெற்று, நலம் பெறச் செய்ய, கல்விப்பணியில் ஈடுபட்டோருக்கு இவ்விதக் கண்காட்சிகள் மிகவும் பயனளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மே மாதம் 15-ம் நாள் காலை மிக. வந். மதுரை அதிமேற்றிராணி ஆண்டவரவர்கள் வேதபோதகக் கண்காட்சியைத் திறந்து வைத்தது ஒன்றே இக் கண்காட்சியின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு. காட்சிசாலை முன் காட்சியைப் பார்க்க வருவோரை இரு கரம் விரித்து வரவேற்பதுபோல, அமல அன்னையின் திரு உருவப் படம் அமைந்திருந்தது. காட்சிசாலையின் உள்ளே நுழைந்துவிட்டு வெளி வரும்போது பிரமிப்புக் கொள்ளாதவர் யாருமில்லை. காட்சியில் அமைந்திருந்த ஒரு சிலவற்றை மட்டும் இங்கே கூறுவது நன்மை பயக்கும் என நினைக்கின்றேன்.

1. நமது அன்றாட வாழ்வில் கிறீஸ்துவின் வாழ்க்கையை எப்படி பிரதிபலிக்க வேண்டும் என்பதனைக் காட்ட ஆண்டவரின் ஜீவிய சரிதை அழகாக சித்தரிக்கப்பட்டிருந்தது. அதிலே "என் ஆடுகளை நான் அறிவேன்" என்றாரே ஆண்டவர் அவரது ஆடுகளாகிய நாம் அவரை அறியவேண்டாமா என்பதுபோல் இருந்தது விளக்கம்.

2. பத்துக்கற்பனைகளைப் போதிக்கப் பல படங்களைப் பள்ளிகளில் கையாளுகிறோம். ஆனால் இங்கே கன்னியர் கையாண்டிருந்த முறை உண்மையில் மிகுந்த பலன் தரவல்லது. பத்துக்கற்பனைகளை ஆண்டவர் அளித்த வரலாறு, அவை ஒவ்வொன்றிற்கும் விரோதமான காரியங்கள், இவைகளைப் பின்னணிச் சூழ்நிலையாகக்கொண்டு, கட்டளைகளின்படி நடக்கும் வாழ்க்கை வர்ணிக்கப்பட்டிருந்தது.

3. கர்த்தர் கற்பித்த செபத்தை இன்று ஆண்டவரே நம் முன் வந்து கற்றுக்கொடுத்தால் எவ்வித உணர்ச்சி வசப்படுவோமோ அவ்விதமே அம் மந்திரத்தின் வியாக்கியானம் இருந்தது.

இவையனைத்தும் பார்த்துத் திரும்பிய நாங்கள் அடுத்த வரிசைக்குச் சென்றோம். அங்கேதான் எத்தனை வேலைத்திறன்? பதினைந்து தேவ இரகசியங்களின் விளக்கம், அதற்கெல்லாம் கிரீடம் வைத்தாற்போல அன்னை பரலோக பூலோக அரசியாக முடி சூடப்படும் காட்சி கண் கவரும் முறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஜெபமாலை செய்யும் போது இவைகள் மனதில் நிழற்படம்போல் காட்சி அளிக்கவேண்டும் என்பதுபோல அங்கும் காட்சி அளித்தன தண்ணீரில்.

இத்தனை முறைகளைப் பின்பற்றி வேதபோதக அலுவலில் ஈடுபடும் இக் கன்னியர்கள் எவ்விதம் தங்கள் இல்லங்களை அமைத்திருக்கிறார்கள் என்பதை, காலக்கிரமத்தில் வளர்ந்துகொண்டே வரும் அவர்களின் மடங்களை, ஒவ்வொரு ஊரிலும் இருப்

வேத முரைக்கு விதிகட்குக் காரணம்
ஆதிச் சினேகமே யாம். — (சின்னப்பர்)

பதுபோல மாதிரிகள் தயாரித்திருந்தது உண்மையில் ஒரு புதிய முன்னேற்றமே. ஒவ்வொரு மடத்தின் வாயிலின் கதவைத் திறந்தால், அமல அன்னையே அங்கு தோன்றுவதுபோல் அவ்வளவு அழகிய படம் கண் முன் வைக்கப்பட்டிருந்தது. திராட்சைத் தோட்டம் ஒன்று தயாரித்திருந்தனர். அக்கொடியில் தொங்கிய குலைகள் எவை தெரியுமா? ஒவ்வொரு குலையும் ஒவ்வொரு மடத்தைக் குறிக்க அந்தந்த மடத்தில் பணி புரியும் சகோதரிகளின் எண்ணத்தைக் காட்டும் கனிகளே இடம் பெற்றிருந்தன.

இத்தனையும் பார்த்துவிட்டுத் திரும்பிய என் மனதில் Joy என்ற ஆங்கில வார்த்தை ஆழமாகப் பதிந்தது. J = Jesus First. O = Others next. Y = Yourself last. முதலில் ஆண்டவரை நேசி; அடுத்து அயலாரை; இறுதியில்தான் உன்னை! இம்முறை ஒன்றே உண்மையான சந்தோஷத்தை (Joy) அடையும் வழி. இவ்விதமாகவே கன்னியரும் எல்லாச் சேவைகளையும் யேசுவுக்காக, அவரை முன்னிட்டு அயலாருக்காக, அவ்விரண்டிற்கும் தேவையான தங்கள் சொந்த அர்ச்சிப்பிற்காகவும் செய்கிறார்கள். இதனைப் பின்பற்றி நாமும் யேசுவையும் அயலானையும், நம்மையும் முறையே நேசிப்போமாக. இதுதான் ஆண்டவர் கொடுத்த கட்டளைகளில் அதிமுக்கியமானது. இதைத்தான் கண்டேன் இக் காட்சி சாலையில்.

2. கல்விக் கண்காட்சி

16-ம் நாள் காலை நிர்மலா உயர்நிலைப்பள்ளியில் திருச்சி மேற்றிராணியாராகிய மேன்மை தங்கிய ஜேம்ஸ் மெண்டோன்ஸா ஆண்டகை அவர்கள் கல்விக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள். கல்விக் கண்காட்சி கல்விப் பணியில் ஈடுபடுவோர்க்கு மட்டுமல்ல, ஓய்வு நேரங்களைப் பயன்படுத்த நினைப்பவருக்கும் பெரிதும் பயன் தரும் வகையில் அமைந்திருந்தது.

இன்று நம் தமிழ் நாட்டில், மற்றப் பள்ளிகளுக்கும் கன்னியர் நடத்தும் பள்ளிகளுக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் உள்ளன. கன்னியர்கள் கல்விப் போதனையை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு எண்ணற்ற போதனா சாதனங்களைத் தயாரித்து, பாடப் போதனை நடத்தி நல்ல முன்னேற்றம் காண்கிறார்கள். அப்படிப்பட்ட போதனாக் கருவிகள் காலத்திற்கேற்ற முறையில் பல துறைகளிலும் தயாரிக்கப்பட்டிருந்தன.

உழைப்பின் உயர்வைக் காணவேண்டுமானால் இக் காட்சி சாட்சி பகரும். துணிகளில் எத்தனை விதவிதமான வேலைப்பாடுகள், தையல் கலையில் கண் கவரும் முன்னேற்றம். பாய் முடைதல், பாயில் பல வண்ணங்கள் தீட்டப்பட்டவை. ஓலை, மீன் செதிள் இவற்றால் கைத்திறனிற் சிறந்த விதவிதமான வேலைப்பாடுகள் வைக்கப் பட்டிருந்தன. பூ வேலைகளை எடுத்துக்கொண்டால் உண்மையில் உண்டானவையோ என்ற ஐயம். மணிமுத்தாறு அணையை அப்படியே உருவாக்கி வைத்திருந்தனர். விஞ்ஞான சம்மந்தமான பல வேலைப்பாடுகள் இருந்தன குறிப்பிடத்தக்கவை சில. ஒன்று மனிதனின் உடலுறுப்புக்கள் ஆற்றும் அரிய சாதனையை அப்படியே இயந்திரப் பொறிகளாக உருவகித்துப் புதிய முறையில் மாதிரி செய்யப்பட்டிருந்தது. மற்றொன்று பஞ்சையும் துணியையும்கொண்டே மனித உடலை உள்ளுறுப்புக்களுடன் தயாரித்து, திறந்து பார்த்து மூடும் வகையில் இணைத்திருந்தது. "ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போகான்" என்பார்களே, இவர்களின் ஏக நோக்கமான ஞானோபதேசக் காட்சி அங்கும் இடம் பெற்றிருந்தது. இஸ்பிரீத்துவின் வருகை, விண்ணுலகுக்குப் பயணம், பழைய ஏற்பாட்டில் அன்னையின் முன் குறி, கவிஞரும் தேவ அன்னையும் ஆகிய தலைப்புக்களில் கருத்திற்கும் கண்ணிற்கும் விருந்தளித்து வியக்கச் செய்யும் வகையில் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகளும், படங்களும் பார்ப்பவருக்கு என்றும் பயன்படும் திறத்தன.

இவை யாவும் காட்சிப் பொருளாக வைத்திருந்தாலும் கூட, அவை யாவும் அமலோற்பவ சபைக் கன்னியரின் அயரா உழைப்பையும், உழைப்பின் உயர்வையும் எடுத்தோதின. கண்டோர் அனைவரும் இக் காட்சிகள் இரண்டும், மாபெரும் மாநாடுகள் கூடுகின்ற நேரத்தில் அமைக்கப்பட்டிருந்தால்,

சினேகங் கடைப்பிடித்துன் சித்தப் படிச்செய்
மனதைக் கெடுக்காது மாசு. — (அகுஸ்தீனார்)

பலர் பயனடைய வழி உண்டு எனப் பாராட்டினர். பலர் ஏராளமான பணச் செலவில் தயாரிக்கப் பட்டவை என்று பகர்ந்தனர். இன்னும் சிலர் இத்தனை பொருட்களை எப்படித்தான் தயாரித்தனரோ என்றனர். ஆனால், பணம் மட்டுமிருந்தால் போதாது; அமல அவைக் கன்னியரின் உழைப்பும் முயற்சியும் ஒப்பற்ற சாதனைகளை உண்டு பண்ணி விட்டன என்ற உவகை என் மனதில் பொங்க கன்னியரின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது எனக்குள்.

S. அலெக்ஸிஸ்,

தலைமை ஆசிரியர்,

புனித மரியன்னை ஆரம்பப்பள்ளி,

மதுரை.

144423

Greetings

Dear Reverend Mother,

It was very gratifying to attend the function of the Golden Jubilee of your Congregation on the 15th, 16th and 17th of May, 1961.

Only those who witnessed the beginning of this Congregation can judge of the splendid work achieved and the great improvement made within the past fifty years.

Reverend Mother Henri Xavier, Superior General of the Sisters of St. Joseph of Lyons, France,—whose name can still be read on the Foundation Stone of the chapel of your Old Kosavapalayam Convent, — is the one who sent to Madurai, among the first six Sisters of St. Joseph, our beloved Mother St. Patrice, who was in charge of you all, from the cradle days of your Novitiate till she breathed her last. How they both must rejoice in Heaven to see the numerous "Blue Sisters" gathered together from all their convents in the villages to take part in the Golden Jubilee Celebrations!

The function was indeed a great and grand success, well organised and very attractive. Reverend Mother Joseph Helena, the present Mother General, and her devoted Assistant, Reverend Mother Sophie, deserve to be highly congratulated, and encouraged to continue their splendid work, A. M. D. G.

What is most consoling is to know that besides the education imparted to children in the Higher Elementary and High Schools, in the Junior and Senior Training Schools, already existing, Nursing and Hospital work are soon to be begun, following the example of Our dear Lord in His merciful ministry among the poor and the sick while He was on earth.

All of us Sisters of St. Joseph rejoice over the good work done by the Sisters of the Immaculate Conception in their fifty-three convents. Each and every one of them are very dear to us. Let us continue to toil with a loving heart for God's glory and the salvation of souls.

May our dear Benefactors in Heaven help us to thank God for all the graces received during these past fifty years, and to ask Him to grant us, with His choicest blessings, a deepening of our spiritual life, and growing sanctity.

The Sisters of St. Joseph of Lyons in India

20—5—1961

ஏகன் விதியை யெளிதி னிறைவேற்ற
வாகாஞ் சிநேகம் வழி.

இருதய நிறைவால் நாவுபேசும்

மூன்று நாள் பொன் விழா வைபவங்கள் இறைவன் அருளாலும், இடையறாது மன்றாடும் தேவ அன்னையின் சலுகாலும் இனிது முடிவுற்றன. எமது இதயத் தாழ்மையில் நிரம்பியோடும் நன்றியை இறைவனுக்கு முந்த சமர்ப்பிக்கின்றோம்.

இவ்விழாக் கொண்டாட அனுமதியும், ஆசியும், உதவிகளும் நல்கிய எம் அன்புத் தந்தை மதுரை அதிமேற்றிராணியாராகிய சேசு சபை மிக வந். ஜே. பி. லெயோனார்டு, ஆண்டகைக்கும், வருகை தந்து சிறப்பித்த மேன்மை தங்கிய திருச்சி, தூத்துக்குடி ஆண்டகைகளுக்கும் எம் நன்றியை அளிக்கின்றோம். இறுதியாக இவ்விழா நன்முறையில் நடைபெற மனம் உவந்து நன்கொடை அளித்த உபகாரிகளுக்கும், சொற்பொழிவு ஆற்றிய மேதைகட்கும், வருகை தந்து சிறப்பித்த குருமார், கன்னியர் ஏனைய பொது மக்கட்கும், ஆசிமொழி அனுப்பிய அன்பர்கட்கும், மற்றும் அன்புப் பணியாலும், பிற எவ்வகையாலும் உதவி புரிந்த அனைவருக்கும் எம் உள்ளம் நிரம்பிய நன்றி உரித்தாகுக!

சபை இன்றேல் விழா எங்கே? கன்னியர் இன்றேல் சபை எங்கே? இச்சபைக்கு, தம் தவப்புதல்வியரை, மனத் தாராளமாய்த் தத்தம் செய்த அன்புடைப் பெற்றோருக்கும் அவர் சுற்றத்திற்கும் எம் இனிய நன்றி என்றும் உரித்தாகுக. இம் மலர், கருத்திற்கும் கண்ணிற்கும் கவர்ச்சியளிக்கும் வகையில் மலர்ந்திட அன்புடன் உதவிய, தே நொபிலி அச்சக நிருவாகிகட்கும், அலுவலர்கட்கும் எம் மனம் உவந்த நன்றி.

அமலோற்பவ அன்னையின் அரவணைப்பு அனைவருக்கும் என்றும் இருப்பதாக!

விழாக் குழுவினர்



144423
சென்னை-600 008.

தேவையை முடிப்போம் முந்த; பயன்
ஈபவை தொடர்வோம் பிந்த; இன்பம்
மேவுவ கொள்வோம் இறுதி யாக.

உத்தம நேசம் உலையிற் றுரும்பெனக்
குற்ற மழிக்கும் குணத்து.

இளமை ததும்பும் எழில்மலர்!



1. 35 வயதுக்கு உட்பட்ட கன்னியர் : 180
2. 36 முதல் 60க்கு உட்பட்ட கன்னியர் : 256
3. 60 வயதுக்கு மேற்பட்ட கன்னியர் : 21



DE NOBILI PRESS MADURAI—8

ஐம்பது ஆண்டுகளில்

திருச்சி
கோயம்புத்தூர்
தஞ்சாவூர்
மதுரை
வங்காள விரிகுடா
கருங்குளம்
மாரம்பாடி
தேவகோட்டை
தென்காசி
மதுரைமா நகர்